பக்கங்கள் : 20+VIII=28

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 05 ஞாயிற்றுக்கிழமை (21.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :268

## 'உதயன் -சுடர் ஒளி' கிளைப் பணிமனை மீது வெள்ளவத்தையில் கைக்குண்டுத் தாக்குதல்!


கொழும்பு,ஓக.21

கொழும்பு, வெள்ளவத்தை காலி வீதியில் அமைந்துள்ள 'உதயன் - சுடர் ஒளி' கிளைப் பணிமனை மீது நேற்றுமாலை கைக்குண்டு(கிரனேட்) வீசி தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.


பணிமனையின் உள்ளே திடீரெனப் புகுந்த இளைஞர் ஒருவர் கைக்குண்டு ஒன்றை வீசிவிட்டுத் தப்பிவிட்டார். வீசப்பட்ட கைக்குண்டு அலுவலகத்தின் உள்ளே வீழ்ந்தபோதும் அது வெடிக்கவில்லை. அதனால் அங்கு பணியில் இருந்த ஊழியர்கள் மூவர் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பியிருக்கின்றனர்.


காலி வீதியில் டெல்மன் தனியார் மருத்துவமனைக் கட்டடத்துக்கு எதிர்ப் புறமாக அமைந்துள்ள கட்டடத்தின் மேல் மாடியில் 'உதயன் - சுடர் ஒளி' கிளைப் பணிமனை இயங்குகின்றது.

நேற்று மாலை 5.20 மணியளவில் மாடிப் படிகள் வழியாக மேலே வந்த இனந் தெரியாத இளைஞர் ஒருவர் பணிமனையின் வாயில் கதவைத் தட்டியிருக்கிறார். பின்னர் தானே அதனைத் திறந்து திடீரெனக் கைக்குண்டு ஒன்றை உள்ளே வீசிவிட்டு நொடிக்குள் தப்பித் தலைமறைவாகிவிட்டார்.



சம்பவம் தொடர்பாக பொலீஸார் விசாரணை செய்கின்றனர்.





வீசப்பட்ட கிரனேட்டின் 'கிளிப்'பையும் (வட்டமிடப்பட்டுள்ளது) பணிமனையின் உட்புறத் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

வீசப்பட்ட கைக்குண்டு பணிமனையின் உள்ளே வீழ்ந்து பணியாளர்கள் அமர்ந்திருந்த மேசைகளுக்குக் கீழாக உருண்டு ஓடியபோதும் அது வெடிக்கவில்லை. இதனால் அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த இரண்டு பெண் பணியாளர்களும் ஓர் ஆண் ஊழியரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். உடனடியாகவே அலுவலகத்திலிருந்து வெளியே வந்த அவர்கள் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

வெள்ளவத்தைப் பொலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்துவந்தனர். இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரும் (20ஆம் பக்கம் பார்க்க)

## மகளிர் அலுவலகம் மீது வவுனியாவில் குண்டு வீச்சு!

### 3 பெண் போராளிகள் காயம்

வவுனியா,ஓகஸ்ட்21

**வவுனியா வைரவப் புளியங்குளம் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறை அலுவலகம் மீது நேற்றிரவு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.**

**இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டு வீசித் தாக்கியதில் அங்கு தங்கியிருந்த பெண் போராளிகள் மூவர் காயமடைந்திருக்கின்றனர்.**

விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல்துறை அலுவலகத்திற்குப் பின்புறமாக மகளிர் அரசியல்துறை அலுவலகம் அமைந்திருக்கிறது.

நேற்றிரவு 10.55 மணியளவில் அந்த அலுவலகத்தை நோக்கி கைக்குண்டு வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அச்சமயம் அலுவலகத்துக்கு வெளிப்புறத்தில் தங்கியிருந்த பெண் போராளிகளில் மூவரே குண்டுச் சிதறல்களினால் காயங்களுக்குள்ளாகினர். அவர்கள் உடனடியாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(ஐ-164-3)

## பேரின்வாதிகளின் கையாலாகாத்தனம்

### ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

கொழும்பு,ஓக.21

தலைநகரில் 'உதயன் - சுடர் ஒளி' பணிமனை மீது நடத்தப்பட்ட தாக்குதல் கருத்துச் சுதந்திரத்தை மதிக்காத பேரினவாதிகளின் கையாலாகாத்தனம்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டி அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் .

'உதயன் - சுடர் ஒளி' கிளைப் பணிமனை மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதல் தொடர் பாக தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் நேற்றிரவு அறிக்கை ஒன்றை விடுத்தது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- (20ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் சுட்டுக்கொலை!

வவுனியா,ஓக.21

வவுனியா சமணங்குளம் பகுதியில் நேற்று மாலை 6.10 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஈ.பி.டிபி. உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான நடராசா கேசவர்மா(வயது 29) என்ற ஈ.பி.டி.பி. உறுப்பினரே கொல்லப்பட்டவராவார்.

வீதியால் சென்றுகொண்டிருந்த இவரை,மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் எனப் பொலீஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-13-164)

## பரீட்சை எழுதவிடாது மாணவி தடுக்கப்பட்டார்!

யாழ்ப்பாணம்,ஓக.21

நகரில் உள்ள பிரபல ஆரம்பப் பாடசாலை ஒன்றில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றச் சென்ற சிறுமி ஒருத்தி பரீட்சை எழுதவிடாமல் தடுக்கப்பட்டார் என்று முறையிடப்பட்டிருக்கிறது. அதே பாடசாலையின் அதிபரே சிறுமியை பரீட்சை எழுதவிடாமல் தடுத்து தனது அலு (20ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் வீச்சு!

மட்டக்களப்பு,ஓக.21

மட்டக்களப்பு நகருக்கு அருகே கல்வியங்காடு என்னும் இடத்தில் நேற்று நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

அந்தப் பகுதியில் உள்ள உலக உணவுத் திட்டத்தின் களஞ்சியத்தில் காவல் கடமையில் இருந்த சிப்பாய் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்த சிப்பாய் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-3)

## படைநிலைகளையும் புத்தர்சிலையையும் அகற்றுவதற்கு மக்கள் தயாராகின்றனர்

### திருமலை தமிழ் மக்கள் பேரவை எச்சரிக்கை

திருகோணமலை ,ஓக.21

திருகோணமலை நகரில் திடீரென நிறுவப்பட்ட புத்தர் சிலையை அகற்றவும் - சண்முக வித்தியாலயம்,சிறிமாபுர ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட இராணுவக் காவல் நிலயங்களை அகற்றுவதற்காகவும் களத்தில் இறங்கி நடவடிக்கை எடுக்கப் பொதுமக்கள் தயாராகிவிட்டனர். இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நாம் பொறுபேற்கமாட்டோம்.

- திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை மேற்கண்டவாறு யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரனுக்கும் கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்டத் தலைவர் ஆதர் ரிறைட்டனுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

சுமுக நிலையைத் தோற்றுவிப்பதற்காக ஆறு தடவைகள் கண்காணிப்புக் குழுவினருடன் பேச்சு நடத்தினோம். ஆனால், எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இப்போது பொறுத்துப் பொறுத்துச் சலிப்படைந்துவிட்ட மக்கள் தாமாகவே போராட்டத்தில் குதிக்கத் தயாராகி விட்டனர்.

இதன் விளைவாக ஏற்படும் விப்ரீதங்களுக்கு நாங்கள் பொறுப்பல்ல. - இவ்வாறு விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ஐ-3-151)

## கதிர்காமரின் அஸ்தி தொடர்பில் குடும்பத்தினரிடையே இழுபறி!


கொழும்பு,ஓக.21

படுகொலைசெய்யப்பட்ட அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் அஸ்தி தொடர்பாக அவ்ரது துணைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே இழுபறி ஏற்பட்டிருக்கின்றது.

லக்ஷ்மன் கதிர்காமரின் முதல் மனைவிக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காக அவர்கள் இருவரும் வெளிநாடு ஒன்றில் இருந்து கொழும்புக்கு வருகைதந்திருந்தனர்.

கதிர்காமர் இறக்கும்போது அவரது 2ஆவது (20ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை நேற்று நடைபெற்றது. நகரில் உள்ள பாடசாலையொன்றில் சிறுவர்கள் பரீட்சை எழுதிக்கொண்டிருப்பதை முதல் படத்தில் காணலாம். பரீட்சை எழுதுவதற்கு பிள்ளைகளை அனுப்பிவிட்டு பரீட்சை மண்டபத்திற்கு வெளியே பெற்றோர்கள் காத்துநிற்கின்றனர். பரீட்சை முடிந்த பின்னர் பிள்ளைகளை அணைத்து அழைத்துச்சென்றனர். இவ்வாறு பெற்றோர்கள் காத்துநின்ற காட்சிகளை அடுத்துள்ள படங்களில் காணலாம். *(படங்கள் : பிரபா)*

### ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது?

# முஸ்லிம் காங்கிரஸ் மூன்று நிபந்தனைகள்

கொழும்பு,ஓக.21

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் இரண்டு பிரதான கட்சிகளினதும் வேட்பாளர்களில் எவரை ஆதரிப்பது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூன்று முக்கிய நிபந்தனைகளை அறிவித்திருக்கின்றது. இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கின்ற வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்குவது என்று கட்சியின் தலைமைப்பீடம் தீர்மானித்திருக்கின்றது.

இரு பிரதான கட்சிகளும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்றும் கட்சி முடிவு செய்திருக்கின்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சியின் உயர்பீடக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து கட்சியின் தவிசாளர் பஷீர் சேகு தாவுத் தகவல் வெளியிடுகையில் கூறியதாவது :-

✱ ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுகளில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு அந்தஸ்து வழங்கப்படவேண்டும் -

✱ முஸ்லிம் மக்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டும் -

✱ வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம்களின் அபிலாஷைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மேற்படி மூன்று கோரிக்கைகளையும் ஏற்று அவற்றை தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறச் செய்யவேண்டும். அவ்வாறு செயற்பட முன்வரும் கட்சியின் வேட்பாளருக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கும்.

எமது கோரிக்கையை இரு கட்சிகளும் ஏற்காதபட்சத்தில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது - என்றார் அவர். (ஐ-3)

## ஆசிரியர் கூட்டம்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் விசேட கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவிலில் உள்ள சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் சா.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி கல்வி அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ள சந்திப்பில் பேசப்படவேண்டிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது என்று சங்கத்தின் செயலாளர் அ.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

(ஐ-9-13)

# போராளி கோபியை உடன் விடுவிக்க கோருகிறது விழிப்புணர்வுக் கழகம்

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்ப்பாணத்தில் பொலீஸாராலும் படையினராலும் கடத்திச் செல்லப்பட்ட போராளியான கோபியை உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 17.08.2005 காலையில் சுகயீன விடுமுறையில் வீட்டில் பெற்றோருடன் தங்கியிருந்த போராளி கோபி அவர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கடத்தப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் உள்ள காலப் பகுதியில் அதுவும் இதனைக் கண்காணிக்க யுத்த நிறுத்த காண்காணிப்புக் குழுவினர் இங்கு தங்கியுள்ள சந்தர்ப்பத்தில் இலங்கை அரசு தமக்குச் சாதகமான முறையில் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்திவிட்டு போராளிகளைக் கடத்துகின்ற செயற்பாட்டில் இறங்கியுள்ளது. ஒரு கையை ஏற்கனவே இழந்து சுகயீன விடுமுறையில் வந்து தங்கிநின்ற போராளி கடத்திச் செல்லப்பட்டமை ஓர் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும். புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலில் உள்ள போது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பிரசன்னமின்றி போராளிகளைக் கைதுசெய்ய முடியாது என்பதனாலேயே போராளி கோபி கடத்திச்செல்லப்பட்டுள்ளார். இவரை உடன் விடுவிக்க போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நடவடிக்கை எடுக்காதவிடத்து கண்காணிப்புக் குழுவினர் தொடர்ந்து யாழ்.குடாநாட்டில் தங்கியிருப்பது என்பது அர்த்தமற்ற ஒன்றாகவே நாம் கருதுகின்றோம். ஏனெனில் இவ்வாறான கடத்தல் சம்பவங்கள் தொடருமாயின் கண்காணிப்புக் குழுவினரின் பணி இங்கு என்ன என்ற கேள்வி தோன்றுகிறது.

கடந்த மூன்று தசாப்தகால வரலாற்றினை சிறிலங்கா அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் மறந்து மீண்டும் புலிகளையும், தமிழ் மக்களையும் சீண்டிப் பார்க்க எத்தனிக்கிறது. இதன் விளைவுகள் விபரீதமானவையாகவே இருக்கும் என சிறிலங்கா அரசுக்கும் இராணுவத்தினருக்கும் எச்சரிக்கை விடுக்கும் அதே நேரம் போராளி கோபி அவர்கள் உடன் விடுதலை செய்யப்படவேண்டும் . தவறும் பட்சத்தில் குடாநாட்டில் உள்ள ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்குள் இந்த ஆயுத இன வெறிப் படைகள் முடங்கி இருக்கவேண்டி வரும் என்பதனையும் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## மீட்புநிதி பெயர்ப்பட்டியல்

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர், விவரங்கள் நாளை முதல் உதயனில் தொடர்ந்து வெளியிடப்படும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

### சாள்ஸ் விஜயவர்த்தன கொலைச் சம்பவம்:

# அடையாள அணிவகுப்பில் போராளி நிறுத்தப்படுவார்

கொழும்பு,ஓக.21

பொலீஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜயவர்த்தனவின் கொலையுடன் தொடர்புடையவர் என்று தெரிவித்து கைதுசெய்யப்பட்டுள்ள புலிகள் இயக்கப் போராளி கோபி விரைவில் யாழ்.நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்காக நிறுத்தப்படவுள்ளார் என்று பிரதிப் பொலீஸ்மா அதிபர் லயனல் குணதிலக தெரிவித்துள்ளார்.

விஜயவர்த்தனவின் கொலைச் சம்பவத்துடன் மேலும் பத்துப் புலி உறுப்பினர்களுக்கு தொடர்பிருப்பதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். சந்தேகிக்கப்படும் புலி உறுப்பினர்கள் தமது வசிப்பிடங்களை விட்டு வெளியேறி தலைமறைவாகியுள்ளனர் என்றும் -

இதனால், அவர்களைக் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

விஜயவர்த்தனவின் கொலையுடன் சம்பந்தப்பட்டுள்ளார் என்பதை கைதுசெய்யப்பட்ட போராளி ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் பிரதிப் பொலீஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

### சிநேகபூர்வ உதைபந்தாட்டம்

# காலி மாவட்ட அணியை யாழ். அணி வென்றது!

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை காலி மாவட்ட அணிக்கும், யாழ்.மாவட்ட அணிக்கும் இடையில் இடம்பெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்ட அணி வென்றது.

காலி மாவட்ட அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வென்று வெற்றிக்கிண்ணத்தினை தனதாக்கிக் கொண்டது யாழ். அணி.

இப்போட்டியில் சிறந்த வீரர்களாக யாழ்.மாவட்ட அணித் தலைவர் ஜே.பிக்ளஸ், காலி மாவட்ட அணித் தலைவர் பி.எச்.நந்திக்க புஸ்பகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.



வெற்றிக் கிண்ணத்துடன் யாழ். மாவட்ட அணியினர்.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபையின் ஆணையாளர் க.குணராசா கலந்துகொண்டார்.

காலி மாவட்ட வீரர்கள் அறிமுகஞ்செய்துவைக்கப் படுகின்றனர்.



போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் காலி மாவட்ட ஆழிப்பேரலை எச்சரிக்கை நிலைய உறுப்பினர் ஒஸ்கார் செய்திருந்தார் என்று யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார்.

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக இ.ஆனல்ட், ஜே.யூட்மன், அ.கெபின், த.நித்திலநாயகம் ஆகியோர் கடமையாற்றினர்.

(ஐ-190)

## கரபந்தாட்ட இறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்.மாவட்ட கரபந்தாட்ட சங்கம் நடத்தி வரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு கல்வியங்காடு, சட்டநாதர் ஆலயத்துக்கு அருகில் உள்ள சங்க மைதானத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்துகொள்கிறார்.

இறுதியாட்டத்தில் மோதும் அணிகள் விவரம் வருமாறு:-

✱ பெண்கள் பிரிவு - பருத்தித்துறை ஐ.வி.க. எதிர் பல்கலைக்கழக விஞ்ஞான விளையாட்டு அலகு அணி.

✱ ஆண்கள் - ஆவரங்கால் மத்திய வி.க. அணி எதிர் அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க. அணி. (3-9)

## கைரேகைகள் அனைத்தும் ஒருவருடையதாம்

கதிர்காமரைக் கொலைசெய்த கொலையாளி தங்கியிருந்த வீட்டின் அறையிலிருந்து 63 விரல் அடையாளங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவை அனைத்துமே தனி ஒரு நபருடையவை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொலையாளி தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர் லக்ஷமன் தளையசிங்கம் தொடர்ந்தும் பொலீஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகிறார். அவரது வங்கிக் கணக்குகளும் பொலீஸாரினால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (ஐ-9)

## தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் தமிழ்த்தின விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பராம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர் கலாபூஷணம் செ.மெற்றாஸ் மயில் கலந்துகொள்கிறார். (9)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# இனத்தின் தனித்துவத்தைக் காக்க கலைஞர்களைக் கௌரவிப்போம்

எமது பிரதேசத்தில் வாழும் கலைஞர்களுக்கு உரிய மதிப்புக் கிடைப்பதில்லை. அவர்களைக் கௌரவிப்பதில் நாம் அக்கறை காட்டுவதில்லை-

தென்னிலங்கையில் வாழும் சிங்களக் கலைஞர்கள் அரசினாலும் மக்களினாலும் கௌரவிக்கப்படுகின்றனர். எமது கலைஞர்களை நாங்களும் சரி, அரசும் சரி கௌரவிப்பதில்லை - என்று கவலை வெளியிட்டிருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை.

அரசு தமிழ் மக்களை எல்லா வழிகளிலும் எல்லாத் துறைகளிலும் புறக்கணிப்பது நீண்டகாலமாகவே நடைமுறையில் உள்ளது. எமக்கு என்று ஓர் ஆட்சி அமையும் வரை, தன்னாட்சி ஒன்று உருவாகும்வரை, இத்தகைய புறக்கணிப்பு தொடரவே செய்யும் என்பதில் ஐயமுற வேண்டியதில்லை.

தெற்கின் அரசியல்வாதிகள் இன ஒற்றுமை, ஒருமைப்பாடு என்று கத்துவார்கள். ஆனால், தமிழர்கள் தங்கள் தனித்துவத்தைப் பேணக்கூடிய துறைகளில் அவர்களை ஓரங்கட்டியே செயற்படுவார்கள்.

அந்த வரிசையில், சிங்களக் கலைஞர்களைக் கௌரவிப்பது, அவர்களுக்கு ஆதரவளிப்பது, ஊக்கமளித்து முன்னேற்றமுறச்செய்வது போன்ற பணிகளை அக்கறையுடனும் மன விருப்பத்துடனும் அரசு செய்கிறது.

சுருக்கமாகச் சொல்வதாயின், கலைஞன் ஒருவன் வேறு துறை சாராமல் தன்னிடமுள்ள கலைத்திறனை ஆதாரமாக வைத்து வாழ்வதற்கான சகல வகை உதவிகளையும் அரசும் அதன் அதிகாரிகளும் தெற்கில் மனம் வைத்து, தாமாகவே முன்வந்து செய்கிறார்கள். இது இன்று நேற்று நடைபெறுவது அல்ல. நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த கையோடு சிங்கள மக்களின் கலை, பண்பாடுகளைப் பேணவும் வளர்க்கவும் வேண்டும் என்ற தெளிவான இலக்குடன் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர்.

ஒப்பீட்டளவில், தமிழ்க் கலைஞர்களுக்கான ஆதரவும் ஊக்குவிப்பும் கௌரவிப்பும் எள்ளளவுதான்! ஆகக் கூடுதலாகக் கஞ்சிக்குள் பயறுபோட்டது போல, அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாகச் சில உதவிகளும் ஆதரவும் நல்கப்படுகின்றன.

தென்னிலங்கையில் அரசு ஒருபுறமிருக்க, சிங்கள மக்கள் தாமே சுயமாகக் கலைஞர்களுக்கு உரிய மதிப்பைக் கொடுத்து, அவர்கள் தமது திறமைகளைக் கொண்டு சொந்த வாழ்க்கையை நடத்தக்கூடிய அளவுக்கு ஆதரவளிப்பதும் இயல்பாகவே உள்ளது.

சராசரியாக ஒரு சிங்களப் பொதுமகன், கலை ரசனை உடையவனாக இருப்பான். கலைகளுக்கு ஆதரவளிப்பான். கலைஞனை மதிப்பான், கௌரவிப்பான். வெறும் விழாக்காலங்களில் என்று மட்டுமல்ல; நிரந்தரமாகவே அந்தப் பெரும் குணம் அவனிடம் உண்டு.

ஒப்பீட்டளவில், தமிழ் மக்களிடம் அத்தகைய கலை நாட்டம் மிகவும் குறைந்த வீதம்தான்! கலைகளின் மகத்துவத்தை உணராதவர்களே எம்மில் பெரும்பாலானவர்கள் எனலாம். ஆட்டக்காரர், பாட்டுக்காரர் என்று கலைஞர்களைக் குறைத்து மதிப்பிடும் சாபக்கேடு எமது சமூகத்தின் மிகப்பெரிய குறைபாடு.

நாளாந்த வாழ்க்கையில் கலைஞர்களைக் கீழிறக்கி நோக்கும் தன்மையுடையோரே, எமது மக்களில் அதிக விகிதாசாரத்தினர். உத்தியோகக்காரரை உயர்த்திப் பார்க்கும் பாழ்பட்ட புத்தி இன்னும் எம்மை விட்டுப்போகவில்லை. அதனால், கலைஞர்கள் எனப்படுவோர் திறமைகள் குறைந்தவர்கள் என்ற மாயை எமது மக்களின் கண்களை இப்போதும் மறைத்துக் கொண்டே இருக்கிறது.

எமது மக்கள் மத்தியில் புரையோடிவிட்ட சாபக்கேடும் மாயையும் மறையவேண்டும். ஆற்றலும் திறமையும் இல்லாது கலைஞனாகி விடமுடியாது என்ற உண்மையை நாம் எல்லோரும் உணர்ந்துகொள்வது எப்போது?

கலைத்திறன் எல்லோருக்கும் இலகுவில் கைவரக் கூடிய ஒன்றல்ல. ஏனைய துறைசார் தொழில்களைவிட அது எந்தவிதத்திலும் குறைந்ததுமல்ல. இன்னும் சொல்லப்போனால் கலைஞனாவதற்கு ஆற்றல், ஆர்வம், முயற்சி, பயிற்சி என்பனவற்றோடு பிறப்பால் வந்த கொடையும் தேவைப்படுகிறது. அத்தகைய ஒரு கணக்கீட்டில் கலைஞன் எல்லோரையும்விட உயர்நிலைப் பட்டவனாகிறான்.

அவன் வாழ்ந்தால் மட்டுமே எங்கள் கலைகள் வளரும்; கலைகளை வளர்க்கமுடியும். இனத்தின் தனித்துவம் காப்பாற்றப்படுவதற்குக் கலைகள் வாழ்ந்து வளர வேண்டும். அதற்குச் சமூகத்தின் பேராதரவும் ஊக்குவிப்பும் கலைஞனுக்குப் பெருமளவில் தேவை.

அப்போதுதான், கலைஞனுக்குரிய வாழ்வு கிடைக்கும். அவன் திறமைகளைப் பாராட்டிக் கௌரவித்தால்தான், அவனுக்கு வாழ்வை வழங்க வழி பிறக்கும்.

எமது கலைகள் வாழ்வதற்காகக் கலைஞர்களை வாழ்விக்க மனங்கொள்ளவேண்டும். அதனை உணர்ந்து கலைஞர்களை மதிக்கவும் கௌரவிக்கவும் முன்வருவோமாக.

# நல்லூரில் குற்றச்செயல்களைத் தடுக்க சிறப்புத் தொண்டர் அணி சேவையில்

யாழ்ப்பாணம்,ஓக.21

நல்லூர் ஆலயச் சூழலில் உற்சவ காலத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தச் சிறப்புத் தொண்டர் அணியினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ் மாணவர் ஒன்றியம் இந்தச் சிறப்புத் தொண்டர் அணியைச் சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

இதுவிடயமாக மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் -

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுமல்லாமல் உலகத்தின் வேறு பாகங்களிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் வந்துசென்ற வண்ணமுள்ளனர். அந்த பக்தர்களுக்கான அவசர சேவைகளை மேற்கொள்வதற்காகப்பயிற்றப்பட்ட 75 தொண்டர்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மக்களுக்காக உதவிபுரியும் [illegible]ளுக்கு இடையூறு விளைவிக்கும் சக்திகளைக் கட்டுப்படுத்தவும் இந்தத் தொண்டர்கள் பயிற்றப்பட்டுள்ளனர்.

எனவே, மக்கள் உடனடித் தேவைகள் ஏற்படுகின்றவிடத்து அருகில் உள்ள அடையாளப்படுத்தப்பட்ட தமிழ் மாணவர் ஒன்றியச் சிறப்புத் தொண்டரிடம் தொடர்புகொள்ளலாம் - என்று அதில் உள்ளது.

(எ)

# யுத்தநிறுத்தத்தைப் பாதுகாக்க அரசு முன்வந்திருப்பது காலதாமதமான செயல்

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. கண்டனம்

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாத்து அதனை நடைமுறைப்படுத்த அரசு இப்போது முன்வந்திருப்பது காலதாமதமான ஒரு செயலாகும். இதை முன்கூட்டியே செய்திருந்தால் பல முக்கிய உயிர்களைப் பாதுகாத்திருக்கலாம்.

- இவ்வாறு கூறியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்.

அவர் தொடர்ந்து கூறுகையில் தெரிவித்ததாவது:-

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்காக ஜனாதிபதி புலிகளுடன் பேசமுன்வந்துள்ளார். விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் போன்றோர் கொலைசெய்யப்பட்ட சமயத்தில் ஜனாதிபதி இந்த முடிவை எடுத்திருந்தால் இது வரவேற்புப் பெறுவதுடன் பல உயிர்களையும் காப்பாற்றியிருக்கும்.

ஆனால் ஜனாதிபதியோ அமைச்சர் காதிர்காமரின் கொலையை அடுத்தே புலிகளுடன் பேசி யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பாதுகாக்க முன்வந்துள்ளார். இது காலங்கடந்த செயல் என்றே நாம் கருதுகிறோம். (எ-க)

# அரசு - புலிகள் சந்திப்பை வரவேற்கின்றார் ரணில்

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சந்திப்பும் பேச்சும் நிகழவேண்டும் என ஜனாதிபதி தெரிவித்திருந்ததை எதிர்க்கட்சித் தலைவர் வரவேற்றுள்ளார். அதற்குத் தாம் ஆதரவு எனவும் அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நானும் நான் சார்ந்த கட்சியினரும் எப்போதும் இதற்கு ஆதரவாகவே இருந்துவருகிறோம்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சந்திப்பு அவசியமானது. இந்தியாவும் இதே நிலைப்பாட்டில்தான் உள்ளது.

நாம் யுத்தத்தை விரும்பவில்லை. சமாதானம்தான் வேண்டும். இது தொடர்பில் குறைபாடுகள் இருப்பின் அவற்றைச் சரிசெய்து கொண்டு முன்னோக்கி நகரவேண்டும்.

இதற்கு நான் ஆதரவாக இருக்கிறேன். எனது கட்சியும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் எனத் தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. (எ-க)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் முருகன் ஆலயப் பெருந் திருவிழாக் காலத்தையொட்டி இளங் கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 12ஆம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை அருணந்தி ஆரூரனின் பாட்டு இடம்பெறும்.

அணிசெய் கலைஞர்கள்:- வயலின் - எ.ஜெயராமன், மிருதங்கம்- கே.கஜன், முகர்சிங் - எஸ்.செந்தூரன். (எ-203)

* * *

நல்லூர் முருகன் ஆலயப் பெரும் திருவிழா காலத்தையொட்டி, நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயமண்டப அரங்கில் தினமும் மாலை 6 மணிக்கு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா 'கந்தபுராணம்' தொடர் இசைச் சொற்பொழிவாற்றி வருகின்றார்.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'முருகோதயம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (எ-203)

## உதயவாக்கு

நல்ல மனிதனை ஏன் பார்க்கமுடிவதில்லை தெரியுமா? எல்லோரும் அந்த வேடத்தைப் போட்டுக்கொண்டிருப்பதால்தான். - ஹிலே.

## நாளை

ஆவணி 06
திங்கட்கிழமை
22.08.2005
திதி: திருதியை
மாலை 06.10 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி
பின்னிரவு: 03.36 வரை
சுபநேரம்: 12.05 - 01.35
ராகுகாலம்: 07.35 - 09.05
(யாவும் பழைய நேரப்படி)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

**பன்னிரண்டாம் நாள் உற்சவம்**

## நல்லூரான் திருவடி - 6



பரிதிகாயில் வாடாது
பவனம்வீசில் வீழாது
பரவைசூழில் ஆழாதடி - கிளியே!
படைகள் மோதில் மாயாதடி.
- யோகர் சுவாமிகள்.

## பெருமனம் வை!

கட்டளைக் கலித்துறை

அருமறை நாளும் ஒலிக்குநல் லூரி லமர்ந்தருளும்
திருமுரு காவுன்றன் சேவடி யேத்திநா மொன்று பட்டே
ஒருபொழு தும்மற வாழ லுனைத்தஞ்ச மாயடைந்தோம்
பெரும்மனம் வைத்தெம் தமிழினம் வாடாமல் பேணுவையே.
- கலாபூஷணம் வை.க.சிற்றம்பலம்.

## குறை போக்கி வரமருளும் வடிவேலன்

இறைவன் முருகனை எண்ணும் போதுளம்
நிறைமதி நாளில் பொங்கும் கடலென பூரிப்படையும்
நறைமலர் சூடிய நல்லெழிற் குமரன்
உறையும் குன்றுகள் ஒளிரும் அருள் மணம்
நிறையும் பக்தர்கள் நிம்மதி வேண்டியே
பறையும் குழலும் கொண்டாடுவர்; பாடுவர்
பிறை நில வணிந்த பெம்மான் மகனும்
குறையெலாம் போக்கி வரமெலாம் அருளுவான்
- பரமேஸ்வரி சிவராமலிங்கம்.



**ST.JOHN'S COLLEGE, JAFFNA**
**CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA**
**ADMISSION - 2006**
**FOR GRADE 1 AND GRADE 6.**

**தரம் 1, தரம் 6 இற்கான அனுமதி - 2006**

1. அ) விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2005முதல் 15.09.2005வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ) எக்காரணம் கொண்டும் 15.09.2005இற்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
   இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   ஈ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதிநாள் 20.09.2005 செவ்வாய்க்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
2. பிழையாக நிரப்பப்பட்டவையும் பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
3. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
4. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 400.00
6. வயதெல்லைகள்:
   அ) தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2000 இற்கும் 31.01.2001 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) தரம் 6 விண்ணப்பதாரி 01.02.1995 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
7. தரம் 6 இற்கான பிரவேசப் பரீட்சை 15.10.2005 சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

- அதிபர்கள்.

(சி-44495)(42-14-24)



சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஆவணித்திங்கள் 16 ஆம் நாள் (01.09.2005) வியாழக்கிழமை பூச நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 7.30 மணிக்குமேல் 8.45 மணி வரையுள்ள கன்னிலக்கின சுப முகூர்த்த வேளையில்

(தொண்டைமானாறு)
(அமரர்) இராஜதுரை
திருமதி இராஜம் தம்பதிகளின்
புதல்வன் திருநிறைசெல்வன்
**ரவிச்சந்திரன் (ரவி)**
(கனடா) அவர்கட்கும்



(குச்சம் வீதி,வல்வெட்டித்துறை)
திரு. பாலகுமாரன்
திருமதி. சுகுணாவதி தம்பதிகளின்
புதல்வி திருநிறை செல்வி
**துஷ்யந்தி (ஜெயந்தி)**
ஆசிரியை அவர்கட்கும்

இறைவன் திருவருளால் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி திருமணம் திருச்சி -1 இல் உள்ள பெமினா காவேரி மண்டபத்தில் நடைபெற்று, திருமணப் பதிவும், வரவேற்பு உபசாரமும், திருகோணமலை கஸ்கிசன் வீதியில் அமைந்துள்ள சுபலக்ஸ்மி திருமண மண்டபத்தில் 2005-09-14 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6மணிக்கு நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தி அருள வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திருமதி இராஜதுரை
இல. 16, பட்டேல் தெரு,
ஐயப்பநகர், திருச்சி- 21
T.P.:2455903

திரு.திருமதி. பாலகுமாரன்
இல.17A, திலகர் தெரு,
பாரதி இல்லம், ஐயப்ப நகர்,
திருச்சி -21
T.P.:2456730 (C/44518)(51-11-45)

இல. 64, தபாற்கந்தோர் வீதி,
திருகோணமலை.
T.P : 026-2220275
071-4182525



## சபிண்டீகரண அழைப்பு



அமரர் **செல்லையா கந்தசாமி**

கடந்த 23.07.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் சபிண்டீகரண நிகழ்வுகள் நாளை (22.08.2005) திங்கட்கிழமை எமதில்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
(சி/44592) (24-14)
T.P.: 0776612038

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.



## ஓராண்டு நினைவு அஞ்சலியும் திவச திதி அழைப்பும்

தோற்றம்
1967
-
10
-
18



மறைவு
2004
-
09
-
01

திருமதி **நேசராஜா இரத்தினா**

திதி: 2005-08-21

எம்முயிர்த் துணையே எங்கள் அம்மாவே!
உம்மை இழந்து ஓடியது ஓராண்டு
உம்மையே நினைத்து ஒவ்வொரு கணமும்
ஏங்கும் எமக்கு ஆசியைத் தாரும்.

*எமது இல்லத்தில் இன்று (21-08-2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் திவச திதியில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மதியபோசனத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

'இரத்தினா மகால்',
சுதுமலை தெற்கு,
சாவற்கட்டு. (39097) (24-14)

கணவர் - **நேசராஜா (தேவன்),**
**பிள்ளைகள்.**


## பயிற்சிப் பட்டறை

வலி.தென் மேற்கு,ஓக.21

சர்வதேச 'கெயர்' நிறுவனத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்கான உள்ளூர் ஆக்கங்களின் முன்னெடுத்தல் திட்டத்தின் கீழ் விவசாய வயல் பாடசாலை வறுமை ஒழிப்புத் திட்டக் குழு நடத்தும் மூளாய் - அராலி வயல் பாடசாலை உறுப்பினர்களுக்கான பயிற்சிப் பட்டறை நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

'கெயர்' நிறுவன வெளிக்களத் திட்ட அலுவலர் வை.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப்பட்டறையில் பிரதம அதிதியாக வலி.மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக 'கெயர்' நிறுவன 'லிவ்ற்' திட்டப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஜோய் ஞானேஸ்வரனும் கலந்துகொள்வார்கள்.

வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் ஜி.ரகுநாதன் 'கோழி வளர்ப்பு - அடிப்படைப் பராமரிப்பு முறைகளும் பயன்களும்' என்ற விடயம் பற்றியும், சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ச.சுப்பிரமணியம் 'இலாபகரமான ஆடு வளர்ப்பும், தொழுவமைத்தலும்' என்ற விடயம் பற்றியும், தெல்லிப்பழை கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் பொ.மகாதேவன் 'சிறந்த முறையிலான பாற்பசு பராமரிப்பு' என்ற விடயம் பற்றியும் உரையாற்றுவார்கள். (த-135)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் இலவச மருத்துவ சேவை

வலி.தெற்கு,ஓக.21

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவுடன் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் இலவச வைத்திய சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

வைத்திய கலாநிதி பொன்.சின்னத்தம்பி ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் ஆச்சிரம மண்டபத்தில் வைத்து நீரிழிவு நோயாளர்களுக்கான இரத்த, சல பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறார்.

நீரிழிவு நோய் இனங்காணப்பட்ட நோயாளர்களுக்கு ஆச்சிரமத்தின் மூலம் தேவையான மருந்துகளை இலவசமாகப் பெற்று வழங்கி வருகிறார்.

வைத்திய சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வருகைதரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாக ஆச்சிரமத்தின் இயக்குநர் அமுதகலாஜோகி செ.மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்துள்ளார். (த-152)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
17
-
10
-
1970



இறப்பு
21
-
08
-
2003

அமரர்
**அன்ரன் றோசாறி யோண்சன் கிறிஸ்ரி**

ஆண்டு இரண்டு மறைந்தாலும் என்றும் மறையாது
உங்கள் அன்பும் நினைவுகளும்.....

தற்காலிக முகவரி:
10ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

நிரந்தர முகவரி:
செட்டித்தெரு,
பருத்தித்துறை.

உங்கள் நினைவால் வாடும்:
அன்பு மனைவி, மாமா, மாமி,
மச்சான்மார், சகோதரர்கள்,
பெறாமக்கள்.

(39097) (24-14)



## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினம் இராஜேஸ்வரி



தொல்புரத்தை பிறப்பிடமாகவும் அராலி மேற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் இராஜேஸ்வரி அவர்கள் 19.08.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வட்டுக்கோட்டை மேற்கு நாகலிங்கம் நவரத்தினம் அவர்களின் மனைவியும் தொல்புரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பரமேஸ்வரன், லீலாதேவி (ஆசிரியை, யா/ அராலி வள்ளியம்மை ஞாபக வித்தியாசாலை), விமலாதேவி (பாரிஸ்), சந்திராதேவி (ஜேர்மனி), பாலச்சந்திரன் (சிறி - கொழும்பு), சறோஜினிதேவி (ஜேர்மனி), விஜயதேவி (ஜேர்மனி), ரவீந்திரன் (ஜேர்மனி), லதா, இந்திராதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் சிவசோதி, யோகநாதன், கணேசமூர்த்தி, நகுலாதேவி, பாலச்சந்திரன், கிருஷ்ணகோபால், பத்மநாதன், இரத்தினகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் கலீற்றிரஸ், கஜேந்திரன்,பிரதாப், காஞ்சனா, காலஞ்சென்ற கம்சா மற்றும் பிரசன்னா, பிரதீபன், பிரசாந், கம்சினி,கஜானி, கஜனி, பிரகாஷ், பிரசாந்தி, பிரகாஷ், மனோசீலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-08-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலங்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை. (39123) (24-14)

தகவல்:
ந.சிறி (மகன்).

# மீண்டும் பேச்சு......

## நாடு யுத்த விளிம்பில் இருந்து தப்பிப்பிழைக்க வழியேற்படுமா?

இலங்கைத் தீவில் மீண்டும் அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டு தமிழ்மக்கள் மத்தியில் பதற்றமான சூழல் உருவாகியுள்ள நிலையில், தமிழர் தரப்புக்கும் சிங்களத் தரப்புக்கும் இடையில் நேரடிப் பேச்சு ஒன்று அடுத்துவரும் வாரங்களில் இடம்பெறப் போகிறது.

போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து மூன்றரை வருடங்களாகியும் அந்த உடன்படிக்கையில் குறிப்பிட்டபடி இயல்புவாழ்க்கை ஏற்படாததால், விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள் கிளர்ந்தெழுந்து எழுச்சிப் போராட்டங்களை முன்னெடுத்தனர். மீண்டும் யுத்தத்தை ஆரம்பியுங்கள் என விடுதலைப் புலிகளின் தலைமைக்கு விண்ணப்பங்களை அனுப்பினர்.



2003 ஜனவரியில் தாய்லாந்தின் நொக்கம் பத்தோம் நகரில் அரசு - புலிகள் தரப்புகளின் பிரதிநிதிகள் நான்காவது சுற்றுப் பேச்சுகளில் கலந்துகொண்ட போது....

யுத்தத்தை எதிர்கொள்ள தற்பாதுகாப்புப் பயிற்சிகளை வழங்குங்கள் என தலைமைக்கு அழுத்தம் கொடுத்தனர் மக்கள்.

இலங்கையில் ஆட்சிக்குவரும் அரசுகளை நம்பிப் பயன் இல்லை. தனியரசை நிறுவுவதற்கான பயணத்தை மேற்கொள்வோம். இதை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்று மாவட்டங்கள் தோறும் ஒன்று கூடிப் பிரகடனங்களை வெளியிட்டனர் மக்கள்.

எந்த நேரத்திலும் யுத்தம் வெடிக்கலாம் என்ற நிலை காணப்பட்ட சூழலில், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நேரடிப் பேச்சு அடுத்த வாரங்களில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெறப்போகின்றது என்ற தகவல் வெளியாகியுள்ளது.

### ஆறுசுற்றுப் பேச்சுகள்

கடந்த அரசின் - ஐ.தே.கட்சியின் அரசின் - சிரேஷ்ட அமைச்சர்கள் அங்கம் வகித்த உயர்மட்டக் குழுவக்கும் விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் அங்கம் வகித்த உயர்மட்டக் குழுவுக்கும் இடையில் 6 சுற்றுப் பேச்சுகள் தாய்லாந்து, நோர்வே, ஜப்பான் என மாறிமாறி இடம்பெற்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீராக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் -



நான்காவது சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பமாகு முன்னர்....

மனித உரிமைகளை மேம்படுத்த கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் -

இறுதித்தீர்வாக சமஷ்டி ஆட்சிமுறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் -

இந்த ஆறுகட்டப் பேச்சுகளிலும் ஆராயப்பட்டன. முடிவுகள் எடுக்கப்பட்டன; குழுக்கள் அமைக்கப்பட்டன.

பேச்சுகளில் எட்டப்பட்ட முடிவுகளைச் செயற்படுத்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவும் இணக்கம் காணப்பட்டு, அதற்கான நகர்வுகளும் இடம்பெற்றன.

### இடைக்கால நிர்வாகம் குறித்த யோசனைகள்

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக அரசு முன்வைத்த யோசனைகள் விடுதலைப் புலிகள் தலைமையால் ஆராயப்பட்டன. அந்த யோசனைகளின் அடிப்படையில், விடுதலைப் புலிகளின் தலைமை 'இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை' வரைபு ஒன்றை சமர்ப்பித்திருந்தது.

ஜெனிவா சென்ற விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழு, தமது சர்வதேச ஆலோசகர்களுடன் ஆராய்ந்து இந்த வரைபைத் தயாரித்து, அரசுக்கு சமர்ப்பித்திருந்தது.

அந்தக் காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த ஐ.தே.கட்சி அரசின் முக்கிய மூன்று அமைச்சுகளைத் தம்வசம் எடுத்து, ஜனாதிபதி எடுத்த அதிரடி நடவடிக்கையால் உருவான அரசியல் நெருக்கடியால், விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபு அடிபட்டுப் போனது. இருந்த இடமே தெரியாது அது காணாமற் போய்விட்டது.

தொடர்ந்து நடந்த தேர்தலில், தமிழ் மக்களுக்கு எதிரான கொள்கையு டைய ஜே.வி.பியுடன் கூட்டுவைத்து, ஜனாதி பதி ஆட்சியைக் கைப்பற்றியதை அடுத்து, யுத்த நிறுத்த உடன்படிக்கை நடைமுறை யில் இருந்தபோதும், தமிழ்மக்களுக்கு எதி ரான செயற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டன.

ஜனாதிபதியின் அரசு ஆட்சி செலுத்தி வரும் கடந்த ஒருவருடத்தில் அரசின் பங்காளிக் கட்சியாக இருந்த ஜே.வி.பியின் வற்புறுத்தலில் தமிழர்களுக்கு எதிரான கெடுபிடிகள் தொடர்ந்தன.

### ஆழிப்பேரலை அனர்த்த பொதுக்கட்டமைப்பு

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களின் நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் விவகாரம் தெற்குப் பேரினவாதத்தின் கடும் எதிர்ப்புக்கு உள்ளாகியது.

அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் வீதிக்கு இறங்கிப் போராட்டம் நடத்தி தமிழ்மக்களுக்கு எதிரான தெற்கின் பேரினவாதக் குரலை உலகறியச் செய்தன. தமிழ்மக்கள் சார்பான நியாயப்பாட்டை சர்வதேச சமூகம் புரிய இந்தப் பேரினவாதிகளின் செயற்பாடுகள் அமைந்தபோதும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் நிம்மதி நிலை ஏற்படவில்லை.

கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கும், பொதுமக்களுக்கும் எதிரான நிழல் யுத்தம் ஒன்றை அரசின் ஆசீர்வாதத்துடன் - துணைப் படைகளின் உதவியுடன் படைத்தரப்பு அரங்கேற்றிவந்தது. இந்த நிழல் யுத்தத்தால் விடுதலைப் புலிகள் அமைப்பு தமது போராளிகள், தளபதிகள் எனப்பல முக்கியஸ்தர்களை இழந்தது. பெரும் இழப்புகளைச் சந்தித்தபோதும், சமாதானத்தில் பற்றுறுதியுடன் பொறுமை காக்கும் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் கைக்கொண்டதால், யுத்த நெருக்கடி மக்களைத் தாக்கவில்லை.

### விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள்

போர்நிறுத்த உடன்படிக்கையால் இயல்பு வாழ்க்கை திருப்பாத நிலையில், விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள் தமது எதிர்ப்புகளைக் காட்டத் தொடங்கிவிட்டனர்.

இராணுவ நெருக்குவாரங்கள், கெடுபிடிகள் அதிகரித்ததால், கொந்தளிப்பு நிலைக்கு வந்த மக்கள் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்குமாறு விடுதலைப் புலிகளுக்கு நெருக்கடி கொடுக்க ஆரம்பித்தனர்.

இதற்கிடையில், தமிழ்மக்களுக்கு எதிராக சர்வதேசத்தில் குரல்கொடுத்துவந்த லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பில் அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் அமைந்துள்ள அவரது வாசஸ்தலத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### அவசரகால நிலை பிரகடனம்

அதைத் தொடர்ந்து ஜனாதிபதி அவசரகால நிலையை உடனடியாகப் பிரகடனம் செய்தார். இந்த அவசரகால நிலை காரணமாக கொழும்பில் தேடுதல்கள் அதிகரிக்கப்பட்டன. பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

வடக்கு - கிழக்கிலும் தேடுதல்கள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. அவசரகால நிலை இந்த நாட்டில் நடைமுறையில் இருந்த நீண்ட யுகம் முடிவடைந்து, போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைகளுக்கு வந்த போது மக்கள் சந்தோஷம் அடைந்தனர். போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து நான்காண்டை எட்டும்போது, மீண்டும் அவசரகாலநிலை கொண்டுவரப்பட்டுள்ளது. இது மக்கள் மனதில் அச்சநிலையைத் தோற்றுவித்துள்ளது.

அவசரகால நிலையில் பாதிப்பை நேரடியாக அனுபவித்தவர்கள் தமிழ்மக்கள் தான். தேடுதல் என்ற போர்வையில் கைது செய்யப்பட்ட பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் குறித்து இன்னமும் தகவல் கிட்டவில்லை. மேலும், பெரும் எண்ணிக்கையானவர்கள் சிறையில் வாடுகின்றனர்.

கோர தாண்டவம் ஆடி தமிழ் இனத்தையே அழித்த அவசரகால நிலை மீண்டும் பிரகடனம் செய்யப்பட்டமையானது, தமிழ் மக்கள் மனதில் மீண்டும் அச்ச உணர்வு ஏற்படக்காரணமாகியுள்ளது.

### மீண்டும் சந்திப்பு

அவசரகால நிலையின் கீழ் இராணுவத்தின் பிரசன்னத்தைத் தீவிரமாக்கி, தேடுதல்களை அதிகரித்து தமது நோக்கத்தை நிறைவேற்ற அரசுத்தரப்பு திட்டமிட்டுக்கொண்டிருக்கும் நிலையில், அரசு - புலிகள் நேரடிச்சந்திப்புத் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

நெருக்கடி நிலைக்குள் சிக்கியுள்ள போர்நிறுத்த உடன்படிக்கையை எவ்வாறு செம்மையாக நடைமுறைப்படுத்தமுடியும்; என்ன வழிமுறைகளைச் செயற்படுத்தவேண்டும். இவை குறித்து ஆராய்வதற்காகவே இந்தப் பேச்சுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து இந்தப் பேச்சு இடம்பெறுமா என்பது குறித்து இப்போது எதுவும் கூற முடியாத நிலையே காணப்படுகின்றது.

இரு தரப்புகளிலும் நேரில் பேசவேண்டும் என்று ஜனாதிபதி நோர்வேக்கு தெரிவித்த ஆலோசனை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்டது. விடுதலைப் புலிகளின் தலைமை அதற்கு இணங்கியது.

இதன்படி அடுத்த இருவாரங்களில் ஒஸ்லோவில் சந்திப்பு இடம்பெறப்போகின்றது. இந்தப் பேச்சில் விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவில் முந்திய முகங்களே

**குகா**

இடம்பெறப்போகின்றன. அரசின் தரப்பில் இடம்பெறப்போகும் புதிய முகங்கள் குறித்துத் தகவல்கள் இதுவரை உத்தியோகபூர்வமாக வெளியாகவில்லை.

அரசின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளரும் ராஜதந்திரியுமான ஜயந்த தனபாலா குழுவின் தலைவராகச் செயற்படலாம் என்றும் - அமைச்சர்களான நிமால் சிறிபால டிசில்வா, டியூ குணசேகரா மற்றும் இராணுவத்தரப்பு உயர் அதிகாரிகள் அரச குழுவில் இடம்பெறலாம் என்றும் தகவல்கள் வெளியாகின்றன.

### ரஊப் ஹக்கீம் கலந்துகொள்வாரா?

முன்பு நடந்த பேச்சுகளில் அமைச்சராக இருந்த ரவூப் ஹக்கீம் முஸ்லிம் தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், அரசுக்குழுவில் இடம்பெற்றார்.

தற்சமயம் அவர் எதிர்க்கட்சியில் இருக்கிறார். அவர் அரசுக்குழுவில் இடம்பெறுவாரா? அல்லது வேறு ஒருவர் கலந்து கொள்வாரா? என்பது குறித்த உறுதியான தகவல்கள் வெளியாகவில்லை.

அரசுத் தரப்பின் குழு விவரம் ஓரிரு தினங்களில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் படவிருக்கின்றது.

நெருக்கடி நிலையில் உள்ள போர்நிறுத்த உடன்படிகையைச் செம்மையாக நடைமுறைப்படுத்தக் கூடிய வாய்ப்புகள் குறித்துப் பரிந்துரைக்கும் இந்தப் பேச்சில் எட்டப்படும் தீர்மானங்களை, அரசு விரைந்து நடைமுறைப்படுத்த முனையுமானால், நாடு யுத்த விளிம்பில் இருந்து தப்பிப் பிழைக்கும். அரசுக்குக் கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப் பத்தை அரசு உறுதியாகப் பற்றிப்பிடிக்குமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ✱

புலம்பெயர் வாழ் தமிழ் உறவுகளின் ஆதரவுடன் கொழும்பு மனித நேய அமைப்பும்
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் அவர்களின் முயற்சியாலும்
யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில்
சுனாமியால் பாதிக்கப்பட்ட மாமுனை வாழ்.மக்களிற்கான

**கடற்றொழில் உபகரணம் வழங்கும் நிகழ்வு**

காலம்: 21.08.2005
இடம்: மாமுனை பொதுமண்டபம்
நேரம்: தாயகநேரம் 10 மணி
தலைமை: வடமராட்சி கிழக்கு சமாசத் தலைவர் மு.தங்கவேலு

முதன்மை விருந்தினர்
கௌரவ திரு. நடராஜா ரவிராஜ்
(நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்கள்
1. திரு. வித்தியானந்தன் இன்பச் செல்வன் (கணனி பொறியியலாளர் - அமெரிக்கா)
2. திரு.அருணாசலம் கமலக்கண்ணன் (பொறியியலாளர் - லண்டன்)
3. திரு.க.சலீம் (தமிழீழ கடற்படையின் யாழ்.மாவட்டத் தளபதி)
4. திரு.வ.மோகன் (தமிழீழ கடற்படையின் கடற்றொழிலாளர் சம்மேளன மேலாளர்)
5. திரு.வே.தவச்செல்வம் (யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கத் தலைவர்)
6. திரு.V.கைலாசபிள்ளை (அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர்)
7. திரு.ஆ.சிவசுவாமி (மேலதிக அரச அதிபர் - யாழ்ப்பாணம்)
8. திரு.க.யாழமுதன் (சுனாமி செயலணி பொறுப்பாளர், வடமராட்சி கிழக்கு)

கௌரவ விருந்தினர்கள் உட்பட பல முக்கிய பிரமுகர்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து நிகழ்வைச் சிறப்பிக்க உள்ளனர். இந்நிகழ்வில் தாங்களும் கலந்து நிகழ்வைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாமுனை வாழ் மக்கள்.
(39105)(42-14-45)



**8ஆம் ஆண்டு நினைவலைகள்**

தோற்றம் 10 - 06 - 1932



மறைவு 20 - 08 - 1997

**அமரர் சின்னத்தம்பி சின்னையா**
(இராசையா)
(இளைப்பாறிய தபாலதிபர்,
Marine Radio officer Foreign ship)

அன்பால் எம்மை அணைத்து அறிவால் எமை உயர்த்த
பண்பால் பலர் போற்ற பாரினில் வித்திட்ட எம் தெய்வமே!
ஆண்டுகள் எட்டு ஓடி மறைந்தாலும் ஆறாதப்பா உங்கள் பிரிவு
என்றும் உங்கள் முகம் நெஞ்சினிலே நின்று நிலைத்திருக்கும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்,
வேம்பிராய்.

- குடும்பத்தினர்.
(38885)(42-14-45)


## கதிர்காமர் கொலை; ஓட்டோச் சாரதி கைது!

கொழும்பு,ஓக.21

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைப் படுகொலை செய்வதற்கான ஆயுதம் கொண்டு வரப்பட்டதாகக் கருதப்படும் ஓட்டோ கைப்பற்றப்பட்டுள்ளது எனப் பொலீஸார் கூறுகின்றனர். அதன்சாரதியான சிங்களவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெலிக்கடைப் பிரதேசத்தில் கடந்த புதன் கிழமை விசேட பொலீஸ் குழுவொன்றினால் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த ஓட்டோச் சாரதியே பை ஒன்றினுள் போடப்பட்டிருந்த துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் புல்லர்ஸ் வீதியில் வீட்டிற்குச் சமீபமாக இருந்த மாடி வீடொன்றிற்கு அருகே கொண்டுவந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பையை ஓட்டோச் சாரதியிடம் கொடுத்த இருவர் மோட்டார் சைக்கிளில் ஓட்டோ சாரதியைப் பின்தொடர்ந்து வந்தனர் என்பது பொலீஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. ஓட்டோ புல்லர்ஸ் வீதிக்கு வந்ததும் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் சாரதிக்கான பணத்தைக் கொடுத்துவிட்டுப் பையை எடுத்துள்ளனர் எனவும் பொலீஸ் வட்டாரத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (க-8)

## கத்திவெட்டுக்கு இலக்காகி இளைஞன் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஓக.21

வீட்டில் நின்ற இளைஞர் ஒருவர் கத்தி வெட்டிற்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தொல்புரம் மத்தி, தொல்புரத்தைச் சேர்ந்த சின்னத்துரை கணேசன் (வயது 36) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

கடந்த 18 ஆம் திகதி இரவு குறித்த இளைஞனின் வீட்டில் பூச்சாடிகளையும் பூக்கன்றுகளையும் ஒரு கும்பல் சேதப்படுத்தியதாகவும் அதனைத் தட்டிக் கேட்டதற்காகவே இந்த இளைஞர் கத்தி வெட்டிற்கு இலக்கானதாகவும் இளைஞரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் சங்கானை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (8-12)

## கலைக்குழுவின் ஜேர்மன் பயணம்

யாழ்ப்பாணம்,ஓக.21

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஜேர்மனியில் நடைபெறவுள்ள உலக கத்தோலிக்க இளைஞர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகத் திருமறைக் கலாமன்றத்தின் ஆறுபேர் கொண்ட கலைக்குழு ஜேர்மன் புறப்பட்டுச் சென்றுள்ளது.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார் தலைமையில் சென்றுள்ள இக்குழுவினர், ஜேர்மனியில் இயங்கும் 'கல்ஸ் பேக்' நாடகக் குழுவினருடன் இணைந்து கலை நிகழ்வுகளை நடத்த உள்ளனர் என யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் ஊடக இணைப்பாளர் கி.செல்மர் எமில் தெரிவித்தார். (ஒ-51)


**வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு அல்லது உடனடித் தொழில் வாய்ப்பொன்றிற்கு...**

**Foundation Degree Programme**

UK, Canada போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் இப்பாடநெறியைப் பயில்வதன் மூலம் எந்தவிதத் தடைகளுமின்றி வெளிநாட்டு உயர்கல்விக்கான Student Visa க்களை இலகுவாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

இக்கற்கை நெறியின் மூலம், நவீன தொழிற் சந்தையில் எந்தத் துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்கும் தகைமை கொண்டோராக உங்களை மாற்றிக்கொள்ள முடியும்.

பிரித்தானியாவின் முன்னணி கல்வி நிறுவனங்களின் நேரடி அங்கீகாரமும் சான்றிதழ்களும் இப்பாடநெறிக்குக் வழங்கப்படுவதால் உங்கள் உயர்கல்வி அல்லது உடனடித் தொழில்வாய்ப்பிற்கான இலக்குகள் வெற்றியளிக்கின்றன.

வெளிநாட்டில் (UK,Canada) உயர்கல்விக்கான Student Visa க்களைப் பெற்றுக்கொள்வதற்கு பூரண வழிகாட்டுதல்கள் London Institute இனால் மேற்கொள்ளப்படும்.

COURSE STRUCTURE
- Information Technology
- English (Reading, Writing, Listening & Speaking - Leading to IELTS)
- Personality Development

CERTIFICATES TO BE AWARDED
- International Computer Driving Licence (ICDL-Asia Pacific, UK)
- First Certificate in English (UK)
- Diploma in Information Technology
- Certificate in Programming
- Certificate in Website Development
- Diploma in English Proficiency

COURSE LENGTH
- 3 Months - Full Time (Week Days)



LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
25A, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788
Fax: 011 5515387 E-mail: edulife@sltnet.lk

எமது சர்வதேச இணைப்புகளும் அங்கீகாரங்களும்
THE UNIVERSITY OF BUCKINGHAM · Cornwall College · St James's Park College · Carmel College of Excellence - London



**எமது அதிகாரம் பெற்ற யாழ்ப்பாண விநியோகஸ்தர்களாக நியமிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.**

**LAVANIYA SUPER MARKET**

783, Hospital Road, Jaffna. Tel: 021 – 222 2841

**MAX**

சுற்றாடல் நட்பிற்குரிய பொருட்களின் உற்பத்தியாளர்கள்



*Dish Wash
*Guard
*Toilet Bowl Cleaner
*Vip Powder
*Cool Breeze
*Bleach
*Air freshener
*Tile cleaner
*Sanitol
*Hand Wash
*Glass Cleaner
*Washing Powder

**LA CEYKEM INTERNATIONAL (PVT) LTD**
P.O. BOX 22, MOUNTLAVINIYA.
TELEPHONE - 0714 - 260027

# மாற்றாரின் மண்ணை அபகரிப்போர் இலேசில் விட்டுக்கொடுக்கமாட்டார்கள்!

மாற்றார் மண்ணைப் பலவந்தமாக ஆக்கிரமித்துக் கொள்பவர்கள் அதனைக் கைவிட்டுச் செல்லவேண்டியேற்படும் போது எம்மாதிரியெல்லாம் எதிர்ப்புகளிலும் நியாயம் கற்பித்தல்களிலும் இறங்குவார்கள் என்பதற்குக் காஸாப் பகுதியிலிருந்து யூதர்களை அகற்றுவதற்கு இஸ்ரேலிய அரசு படும் பாட்டைப் பார்க்கையில் தெரியவருகின்றது.

காஸாப் பகுதியில் இஸ்ரேலியர்கள் 38 ஆண்டுகளுக்கு முன் பலவந்தமாகக் குடி காஸாப் பகுதியிலிருந்து வாகனங்களில் தனது பொருள்களையும் உறுப்பினர்களையும் ஏற்றிக்கொண்டு அவர் வெளியேறிக் கொண்டிருந்தார். அதேநேரம் குடியேற்ற வாசிகளில் கடும்போக்காளர்களின் எதிர்ப்பு மிக மோசமாக இருக்கப்போகிறது என்று அதிகாரிகள் கருதுகிறார்கள். குடியேற்றப் பகுதிகளுக்குள் ஊடுருவியுள்ள இவர்கள் வன்முறைகளில் இறங்கக்கூடும் என்றும் அஞ்சப்படுகின்றது.

## காஸாவில் நடப்பவை இதைத்தான் காட்டுகின்றன

யேறியபோது அவர்களுக்கு ஆதரவாக இருந்த இப்போதைய பிரதமர் ஏரியல் ஷெரோன், இஸ்ரேலியரின் வீரராகக் கருதப்பட்டார். இதே ஷெரோன் இப்போது அவர்களை அப்பிரதேசத்திலிருந்து வெளியேறும்படி வலியுறுத்துகிறார். அதற்காக நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றி குடியேற்ற வாசிகளைப் பலவந்தமாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கின்றார். அதனால், அந்த மக்கள் இப்போது துரோகி என்று அவரை அழைக்கிறார்கள்.

கடந்த திங்கட்கிழமை காஸாப் பகுதியில் குடியேறியுள்ள எண்ணாயிரத்து ஐநூறு மக்களுக்குத் தொலைக்காட்சியில் நிகழ்த்திய ஓர் உரையில்,

உங்கள் துன்பத்தில் நானும் பங்குகொள்கின்றேன். ஆனால், அந்தக் கரையோரப் பகுதியில் பத்து லட்சத்து 40 ஆயிரம் பலஸ்தீனியர்கள் படும்பாட்டையும் என்னால் புரிந்துகொள்ளாமலிருக்க முடியாது என்று கூறினார் - ஏரியல் ஷெரோன்.

காஸாவை நாங்கள் சதாகாலமும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

காஸாப் பகுதியிலுள்ள எல்லா 21 குடியிருப்புக்களிலும் மேற்குக் கரையில் 120 குடியிருப்புக்களில் நான்கிலுமுள்ள 9 ஆயிரம் பேருக்கு கடந்த ஞாயிறு நள்ளிரவோடு வெளியேறிவிடவேண்டும் என எச்சரிக்கப் பட்டிருந்தது. புதன்கிழமைக்குள் வெளியேறாதவர்கள் பலவந்தமாக அப்புறப்படுத்தப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆனால், எதிர்ப்புகள் அதிகரித்தது மட்டுமன்றி, நூற்றுக்கணக்கான குடியேற்றக்காரர்கள் வெளியேறுவதற்கு மறுத்து வருகின்றார்கள். அதனால், இஸ்ரேலிய இராணு

அதேவேளை, சட்டத்தை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் சாவுல் மொபாஸ் கூறியுள்ளார்.



### பலஸ்தீனர்கள் மகிழ்ச்சி

காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேலியக் குடியேற்றவாசிகள் வெளியேற்றப்படுவது தங்களுக்குக் கிடைத்துள்ள ஒருவெற்றியென்று பலஸ்தீனப் போராளிகள் கூறியுள்ளனர். அதேவேளை, இஸ்ரேலிய எதிர்ப்பாளர்கள் வன்முறைக்கு இஸ்ரேல் அரசு அடிபணிந்துவிட்டது. என்று வர்ணித்துள்ளனர்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை புதிய அமைதி முயற்சிகளை ஆரம்பிக்க இது ஓர் உந்து சக்தியாக அமையும் எனக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

ஏரியல் ஷெரோன் இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பேசிய போது, இஸ்ரேலியரின் வெளியேற்றம் எதிர்காலத்தில் இஸ்ரேலுக்கே நல்லது என்று கருதுகின்றோம். இருதரப்பிலும் நெருக்



காஸாப் பகுதியிலிருந்து வெளியேற மறுக்கும் யூதர்கள் வீதியில் தீ மூட்டி ஆர்ப்பாட்டம் செய்யும் காட்சி.

வம் குடியேற்றப் பகுதிகளுக்குள் நுழைந்து யூதர்களை வெளியேற்றுவதில் ஈடுபட்டது.

குடியேற்றவாசிகள் வீதிகளில் குப்பைகளையும் ரயர்களையும் போட்டு எரித்து இராணுவத்தை உள்ளே வராமல் தடுக்க முயன்றனர். வெளியேறுபவர்களைத் தடுக்க முயன்ற இளைஞர்களை இராணுவத்தினர் இழுத்து அப்புறப்படுத்துவதிலும் ஈடுபட்டிருந்தனர்.

அரச அறிவித்தலை ஏற்றுக்கொண்டு அநேக குடியேற்றவாசிகள் தங்கள் தட்டுமுட்டுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வெளியேறத் தொடங்கினார்கள். அழுது கதறியபடியும் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறியபடியும் அம்மக்கள் வெளியேறுவதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது என்று செய்தியாளர்கள் கூறினார்கள்.

### எங்கும் சோகம்

குடியேற்றப்பகுதிகள் முழுவதிலும் சோகம் நிலவுகின்றது என்று கூறினார் கிவாட் மெய்மொன் என்ற குடியேற்றவாசி.

கடிகளை நாளுக்குநாள் குறைத்து வருகின்றோம் - என்றார்.

இப்பொழுது பலஸ்தீனர்களின் கைகளில் பொறுப்பு போய்ச்சேர்ந்துள்ளது. அவர்கள் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராகப் போராடவேண்டும். அவைகளின் கட்டமைப்புகளைத் தகர்க்கவேண்டும். பேச்சு மேசையில் எங்களுடன் அமர்ந்து பேசுவதற்கு அமைதியில் உண்மையான அக்கறை காட்டவேண்டும்.

பலஸ்தீனியரின் பிரதிபலிப்பை உலகம் எதிர்பார்த்திருக்கின்றது. அமைதிக்கரம் நீட்டப்போகிறார்களா அல்லது தொடர்ந்து பயங்கரவாதம் தானா? அமைதிக்கரம் நீட்டப்பட்டால் நாங்கள் ஒலிவ் மரக்கிளையைப் பதிலுக்குக் காட்டி வரவேற்போம். ஆனால், ஆயுதத்தைத்தான் அவர்கள் தொடர்ந்தும் தூக்குவார்களானால் அதேவிதமாக முன்னரைவிட மிக மோசமான முறையில் நாங்கள் பதில் அளிப்போம் என்று கூறினார் ஷெரோன்.

### காஸாவைக் கைப்பற்றிய காலம்முதல்.....

உலக வலம் மேனா

**1967 ஜூன்:** ''ஆறு நாள் போர்'' என்ற வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட போரில் இஸ்ரேல் இராணுவம் கிழக்கு ஜெருசலம், காஸாப் பகுதி மேற்குக்கரை, சினாய் தீபகற்பம் மற்றும் கோலன் ஹைட்ஸ் பகுதிகளைக் கைப்பற்றியது.

தெற்கு ஜெருசலம் பகுதியில் யூதர்களைக் குடியமர்த்தும் பணியில் இஸ்ரேல் ஈடுபட்டது.

**1977 மே:** மேனஹம் தலைமையிலான அரசு குடியிருப்புகளை விரிவுபடுத்தத் திட்டமிட்டது. இதனால், காஸா மற்றும் மேற்குக் கரைப் பகுதியில் யூதர்கள் குடியமர்த்தப் பட்டனர்.

**1980 ஜூலை 30:** யூதர்களின் நாட்டுக்கு ஜெருசலம்தான். ஐக்கிய மற்றும் புனித தலைநகர் என்று அறிவிக்கப்பட்டது.

**1987 டிசெ. 9:** இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராக யஸீர் அரபாத் தலைமையில் பலஸ்தீனர்கள் போர்க்கொடி தூக்கினார்கள்.

**1994 பெப். 25:** மேற்குக்கரைப் பகுதியில் 29 பேரை யூத தீவிரவாதி பரூச் கோல்ட்ஸ்டெய்ன் கொன்றார்.

**1994 மே:** ஓஸ்லோ நகரில் நடந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் காஸாப் பகுதி மற்றும் மேற்குக்கரையில் ஜெரிகோவிலிருந்து இஸ்ரேல் தனது படையினரை விலக்க ஒப்புக் கொண்டது. இதனால், பலஸ்தீனர்கள் தங்கள் சுயாட்சி மண்டலங்களை நிறுவினார்கள்.

**1995 செப்.28:** பலஸ்தீனர்களின் சுயாட்சி மேற்குக் கரையில் நீடிக்க இஸ்ரேல் சம்மதித் தது. இது இஸ்ரேலியர்கள் படை விலக்கிக் கொள்ள ஏதுவாக அமைந்தது.

**1995 நவ:** யூத தீவிரவாதியால் இஸ்ரேல் பிரதமர் இட்சாக் ராபின் கொல்லப்பட்டார்.

**1996 ஆக:** படைவிலக்குவதைப் புதிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நிறுத்திவைத்தார்.

**1997 டிசெ.10:** பலஸ்தீனத்தில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பைக் கண்டித்து ஐ.நா., தீர்மானம் நிறைவேற்றியது.

**1999 மே 28:** நெதன்யாகு ஆக்கிரமிப்பு எல்லையை நீடிப்பதாக அறிவித்தார். 3 ஆண்டுகளில் 34 குடியிருப்புகள் உருவாக்கப்படும் என்றும் அறிவித்தார்.

**1999 ஜூலை:** புதிய பிரதமர் எகுட் பராக், புதிய குடியிருப்புகள் கட்டப்படமாட்டாது என்று அறிவித்தார்.

**2000 செப். 28:** பலஸ்தீனர்கள் மீண்டும் போராட்டத்தில் இறங்கினர்.

**2000 டிசெ.:** அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் அமைதித் திட்டம் உருவாக்கினார். புதிய பலஸ்தீன நாடு உருவாகவும் அதேசமயம் மேற்குக்கரையில் 80 சதவீத குடியிருப்புகளைத் தக்கவைத்துக்கொள்ளவும் அது வகைசெய்தது.

**2001 மார்ச்:** ஏரியல் ஷெரோன் பிரதமராகப் பதவியேற்றார். இதனால், குடியிருப்புப் பகுதிகள் அதிகரித்தன.

**2002 ஜூன் 16:** மேற்குக்கரையில் இஸ்ரேல் தடுப்புச் சுவரைக் கட்டியது.

**2003 மே 25:** சர்வதேச அமைதி நடவடிக்கைகளின்படி, குடியேற்றங்களை நிறுத்திவைக்கவும் புதிய பலஸ்தீன நாடு உருவாகவும் இஸ்ரேல் சம்மதம் தெரிவித்தது.

**2003 டிசெ. 18:** காஸாப் பகுதியில் வாழும் யூதர்களை வெளியேற்றச் சம்மதம் தெரிவிக்கும் திட்டத்தை இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் அறிவித்தார்.

**2004 ஜூன் 6:** காஸா மற்றும் மேற்குக் கரைப் பகுதியில் வசிக்கும் யூதக் குடியிருப்புகளை அகற்ற இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புதல் தெரிவித்தது.

**ஜூன் 25:** இதை எதிர்த்து யூதர்கள் மனித சங்கிலிப் போராட்டம் நடத்தினர்.

**ஒக். 26 :** ஷெரோன் திட்டத்திக்கு இஸ்ரேல் நாடளுமன்றம் ஒப்புதல் தெரிவித்தது.

**2005 ஜூன் 9:** யூதர் வெளியேற்றத் திட்டத்தை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்குகள் சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டன.

**ஜூலை 18:** வெளியேற்றத்தைக் கண்டித்து மீண்டும் போராட்டம் நடத்தப்பட்டது.

**ஓக. 8:** ஓகஸ்ட்17இற்குள் இடத்தைக் காலி செய்யாவிட்டால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவார்கள் என்று இராணுவத்தினர் அறிவித்தனர்.

**ஓக. 11:** டெல் அவிவில் 20 ஆயிரம் பேர் இதை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார்கள்.

**ஓக.17:** வெளியேற மறுத்த யூதர்களை இஸ்ரேல் இராணுவத்தினர் வலுக்கட்டாயமாக வெளியேற்றத் தொடங்கினார்கள்.

**ஓக. 18:** வெளியேற்ற நடவடிக்கை தொடர்ந்தது.

## போராட்டத்தைக் கைவிடும் ஆசே தீவிரவாதிகள்

### ஆசே தீவிரவாதிகள் போராட்டத்தைக் கைவிடுகிறார்கள்

ஐரிஸ் குடியரசு இராணுவம் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்த சில வாரங்களின் பின் இந்தோனேஷிய ஆசே தீவிரவாதிகள் தமது 30 வருட கால இரத்தம் சிந்தும் போராட்டத்தைக் கைவிடுவதற்கான ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டிருப்பது பற்றிய செய்தி வந்துள்ளது.

இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவுகளின் முனையில் அமைந்துள்ள ஆசே மாகாணம் முஸ்லிம் மக்கள் நிறைந்த பிரதேசம். ஆசேப் பகுதியில் உள்ள இயற்கை வளங்களை அரசு சுரண்டிக்கொண்டு அப்பகுதிமக்களைப் புறக்கணிக்கிறது என்று கூறி சுதந்திர இஸ்லாமிய ஆட்சி ஒன்றை நிறுவுவதற்காக 1976ஆம் ஆண்டு தீவிரவாதிகளால் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இப்போராட்டத்தில் பெரும்பாலும் பொது மக்களே அதிகமாகக் கொல்லப்பட்டனர். 16 ஆயிரம் பேருக்கு மேல் மரணமடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆசேப் பிரிவினைவாத - தீவிரவாத இயக்கத்தினருக்கும் இந்தோனேஷிய அரசுக்குமிடையில் பின்லாந்து தலைநகரான ஹெல் கிங்கியில் கடந்த 16ஆம் திகதி இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்தம் சரியாகச் செயற்படுவதைக் கண்காணிக்க ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் தென் ஆசிய நாடுகளின் சங்கம் (ஆசியன்) ஆகியவை ஒப்புக்கொண்டுள்ளன.

இந்தோனேஷிய வெளியுறவு அமைச்சர் அமித் அவாலுதின் அரசின் சார்பிலும் தீவிரவாதிகள் தரப்பிலும் தம்மைத் தாமே ஆசே மாகாணத்தின் பிரதமர் என்று அழைத்துக் கொள்பவரான மாலிக் மஹ்மூத் என்பவர் ஆசே மக்கள் சார்பிலும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

ஆசே மக்களுக்கெதிராகப் பல வருடங்களாக இடம்பெற்றுவந்துள்ள இராணுவக் கொடுமைகளின் பின்னர் இந்தக் கட்டத்துக்கு நாம் வந்திருக்கிறோம் என்று மஹ்மூத் கூறினார்.

இந்த ஒப்பந்தம் நிரந்தரமான அமைதிக்கு வழியேற்படுத்தும் என்று இரு தரப்பினரும் அவதானத்துடன் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். கடந்த டிசெம்பரில் ஆசே மாகாணம் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு ஒரு லட்சத்து 31 ஆயிரம் மக்கள் வரை கொல்லப்பட்டார்கள். இதையடுத்தே அமைதித் தீர்வுக்கான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன.

### ஒப்பந்த விவரம்

இந்த ஒப்பந்தத்தின் பின்வரும் அம்சங்கள் முக்கியமானவையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம்பார்க்க)

# சிங்கர் நீர் பம்பியினால் முடியாதது என்றோ....... செய்ய இயலாதது என்றோ..... எவருக்கும் கூற முடியாது.



வாங்குவதற்கு இலகு! விற்பனைக்கு பிந்திய சேவை!

பல மோடல்களில் வேண்டிய தெரிவு

**இப்பொழுது நாடு பூராவும் கிடைக்கும் அளவிற்கு.........**
ஆமாம்! நாடெங்கிலுமுள்ள சிங்கர் காட்சியறைகள், அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்கள் மூலம் நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் இது சாத்தியமாகின்றது.

**உதிரிப்பாகங்கள் வேண்டியளவிற்கு .......**
ஆமாம்! சிங்கர் பம்பிகள் இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்படுவதால் உதிரிப்பாகங்கள் பற்றிய அச்சமே உங்களுக்குத் தேவையில்லை. இவை தாராளமாக கிடைக்கின்றன.

**இலகு தவணை கொடுப்பனவுத் திட்டத்தில் .....**
ஆமாம்! இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டத்தில் சிங்கர் பம்பிகள் வழங்கப்படுவதனால் எத்தரத்தவரும் இதனை வாங்கிக் கொள்ள முடிகின்றது.

**தண்ணீர் பம்பிகள் என்றதும் எப்போதும் ஞாபகத்திற்கு வரவேண்டியது சிங்கர் பம்பிகள் !!!**

**இப்போது ISO 9002 சர்வதேச தரச் சான்றிதழ்களுடன்**

யாழ் குடாநாட்டில் இவற்றைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்....
சிங்கர் காட்சியறைகள்
இல.1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222-5408
இல.150, கண்டி வீதி, சாவக்கச்சேரி. 0773-174629
இல.538, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0776-679557

**SINGER®**
மாசற்ற மேன்மை

சிங்கர் (ஸ்ரீலங்கா) வரையறுக்கப்பட்டது
022-421462/3, 2430301
www.singersl.com

CREATIVE SERVICES


## விபத்தில் காயம்

பஸ்ஸிலிருந்து இறங்கி வீதியைக்கடக்கமுற்பட்ட வேளையில் மோட்டார் சைக்கிள் மோதி இளைஞர் ஒருவர் காயமடைந்தார். இச்சம்பவம் மீசாலை புத்தூர் சந்தியில் இடம்பெற்றது. மீசாலை கிழக்கைச் சேர்ந்த வீரசிங்கம் சுயந்தன் (வயது 21) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (9-117)


# திருமணக் கார் (குளிரூட்டியது)



## வாடகைக்கு

+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (38657)

தொடர்பு:
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



# பழுது பார்த்தல்

1975 ஆம் ஆண்டில் இருந்து சுமார் 30 வருடங்களாக அநுபவமிக்க, விஷேட சேவையுடன் மக்கள் மத்தியில் நன்மதிப்பையும்,பாராட்டையும் பெற்றுக் கொண்ட விசுவாசமிக்க சேர்விஸ் சென்டர்

திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் 40 பேர்களுடன். அதி நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு, ஒரே நாளில் கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட துரித சேவை. ஒரு வருட உத்தரவாதம்!

**கெமரா பழுது பார்த்தல்**



**மின்சார உபகரணங்கள் பழுது பார்த்தல்**



டிஜிட்டல், ஸ்டில் & வீடியோ கெமரா, லென்சஸ், ஸூம் கெமரா பிளேக்ஸ் சேர்கியுற், றீபிளேஸ்மன்ட்ஸ், ஸ்டுடியோ பிளாஷஸ், கொம்பியுடரைஸ்ட், ஃபிளாஷ் கன்ஸ்ஹைற-பை எம்பிலிபையர்ஸ், சற்டலைட்ஸ்.

LD, CD, VCD, DVD கெசட்ஸ், CD இயந்திரங்களை VCD யாக மாற்றுதல்
செலுலர் தொலைபேசிகள், பெக்ஸ்மெசின்கள், கோட்லெஸ், அனலொக் தொலைபேசிகள், இலக்றோனிக் டைப்ரைட்டர்கள்,மைக்றோவேவ்ஸ் ஒவன், பொலிஷர், பிளென்டர், மின்சார விசிறிகள், குளிரூட்டி, சலவை இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மோட்டார்கள்.

GRAYON

**DURST ELECTRONICS (PVT) LTD.**

364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. போன்: 2575480, 2565756
P.G மாட்டினுக்கும் H.N.B வங்கிக்கு எதிரிலும், ரேனுகா ஹோட்லுக்கு அருகிலும் (கடல் பக்கம்)



யேசு மரி சூசை துணை

# திருமண அழைப்பு





அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான 2005 ஆம் ஆண்டு ஆவணிமாதம் (22-08-2005)திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குச் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில்



எமது புத்திரன்
திருநிறைசெல்வன்
**அஞ்சலோ ஞானேஸ்வரன்**
அவர்களும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**கிறிஸ்ரீன் றோஸ்**
(Final year, Faculty of Law, University of Colombo)
அவர்களும்

இறைவன் துணைகொண்டு திருமணம் என்னும் அருட்சாதனத்தில் இணைய இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் சமுகம்தந்து திருப்பலியிலும், அதனைத் தொடர்ந்து யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் மதியவிருந்துபசாரத்திலும் பங்குபற்றி மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

24-08-2005 புதன்கிழமை மாலை 4 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

திருமதி ஜோர்ச்
பிள்ளைகள், மருமக்கள்,
சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
தொ.பே.: 021-222 5684

திரு.திருமதி பாக்கியநாதன்
பிள்ளைகள், மருமகன்
மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:0779235887.

(இரு வீட்டார் அழைப்பு)

(39092)(50)

# ....ரயில் பாதையில் 15 வருடங்கள் ஓடுகிறது வாழ்க்கை...!

கொடூர யுத்தத்தினால் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் தமது வாழ்விடங்களைத் தொலைத்து, உறவுகளைப் பறிகொடுத்து, உடைமைகளையும் கைவிட்டு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடிய மக்கள் நீண்டகாலமாக நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்து வாழ்கின்றனர்.

அவர்களின் இத்தகைய அவலவாழ்வு சமாதான காலத்திலும் சீர்செய்யப்படாமல் தொடர்கிறது. அவர்கள் ஊர் திரும்பமுடியாமல் சொந்த நாட்டிலேயே 'அகதி' என்ற அவப்பெயருடன் அவலங்களைச் சுமந்தவாறு வாழ்வை நகர்த்துகிறார்கள்.

இவர்கள் வாழ்ந்த வனப்பான கிராமங்கள் சோபையிழந்து பாலைவனமாக - உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் முடங்கியுள்ளன.

இதனால், இவர்களின் வாழ்வியல் 15 வருடங்களாக அகதிமுகாமில் ஓடிக்கொண்டிருக்கிறது.

இத்தகைய மக்களின் இன்றைய அவல நிலையினைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கில் "இவாகளின் வாழ்க்கை நிலை கேளீர்! பாரீர்!!" என்ற விசேட பகுதியில் வாரந்தோறும் வழங்கி வருகின்றோம்.

அந்தவகையில், இம்முறை மருதனார்மடம் புகையிரத நலன்புரிநிலையம், உரும்பிராய் செல்வபுரம் நலன்புரிநிலையம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களின் அவலநிலை குறித்து அங்குள்ள மக்களோடு உரையாடி, அவர்களின் நிலைமையைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

முதலில் மருதனார்மடம் புகையிரத நிலைய அகதி முகாமுக்குள் வசிக்கும் மக்களின் அவல நிலையை அறிய அங்கு போனபோது மனம் ஏதோ இனம்புரியாத துன்பத்தைத் தூக்கிச் சென்றது போன்ற உணர்வு என்னுள் ஏற்பட்டது.

ஏனெனில், முன்பொருகாலத்தில் ரயில் ஓடியபாதையில் இன்றைக்கு இவர்களின் வாழ்வு ஓடுகிறது என்று பார்த்தபோதுதான் அந்த இனம்புரியாத தவிப்பு.... என்னுள்ளே பிரவாகித்தது.

இந்த ரயில் பாதையில் காங்கேசன்துறையில் இருந்து இடம்பெயர்ந்த 31 குடும்பங்களைச் சேர்ந்த 170 பேரின் வாழ்க்கை ஓடுகிறது. இவர்கள் அன்றாடம் உழைத்து வாழ்க்கையை ஓட்டுபவர்கள் என்பதை அவர்களோடு உரையாடியபோது உணரமுடிந்தது.

இந்த நலன்புரி நிலையத்தில் ஒரு சிலர் கொட்டகை அமைத்து அவற்றிற்குள் வாழ்கிறார்கள். பலர் இப்புகையிரதப் பாதையில் பயணிகள் தரிப்பிடமும், ரயில் வண்டி தரிப்பிடமும் இருந்த கட்டடத்திற்குள் வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்களோடு பேசியபோது ஒவ்வொருவரும் வெவ்வேறுவிதமான மனவேதனைகளை முன்வைக்கிறார்கள்.

### அன்றாடம் உழைத்து காலத்தைக் கழிக்கின்றோம்

ஆறு பிள்ளைகளின் தந்தையான அருணாசலம் என்பவரின் கருத்து இப்படி உள்ளது ....

இந்த ஒற்றையடி ரயில் பாதையில்தான் நாங்கள் 15 வருடமாய் எங்கட வாழ்க்கையை நகர்த்திறம். வெயில் காலமென்றால் இதுக்குள்ள இருக்கேலாது. கொழுத்தும் வெயிலுக்க எங்கட சின்னப்பிள்ளைகள் படுகிற பாடு... (இது ஒரே வெட்டைவெளியான பிரதேசம்) ஊரில மூன்று நேர உழைப்பு உழைச்சு காணியள், வீடுகள் என்றெல்லாம் வாங்கி என்ன சந்தோஷமாய் வாழ்ந்தனாங்கள். இஞ்ச ஒன்றுமில்லாமல் அன்டண்டு உழைச்சுச் சாப்பிட்டுக் காலத்தைக் கழிக்கிறம். இப்படியே தொடர்ந்தால் எங்கட பிள்ளைகளின்ர எதிர்காலம் கேள்விக்குறிதான்.

இன்னொரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தன் முகாம் வேதனையை இபபடிக் கூறுகிறார்.

எனக்கு 4 பிள்ளையள். ஊரில கூலி வேலை செய்து சந்தோசமாக வாழ்ந்த எங்களைக் கொடிய யுத்தம் வந்து கலைச்சுப் போட்டுது. நாங்கள் இப்ப எங்காவது இரவல் காணி யாராவது தருவார்களா? என்று கையேந்தித் திரியிறம். அரசாங்கத்திட்ட, தொண்டு நிறுவனங்களிட்ட எங்களுக்கு அது தாங்கோ இது தாங்கோ என்று இரந்து நிற்கிறம். இப்படியெல்லாம் ஏன் நாங்கள் கையேந்த வேண்டும். எங்கட செழிப்பான பூமியில் வளமாக வாழவேண்டிய நேரத்தில் 15 வருடமாய் ஊரின்ர நிழல் கூடப் படாமல் திரியிறம். எங்கட அப்பு, ஆச்சி வாழ்ந்துபோன எங்கட பூமியில சிங்களப்படையினர் நின்று ஆளுகினம். இதுக்கெல்லாம் எப்ப நல்ல விடிவு காலம் பிறக்கப்போகுது என்று தெரியாமல் இருக்குது.

அடுத்து 65 வயது மதிக்கத்தக்கவரின் உள்ளக்குமுறல் என்ன தெரியுமா....?

தம்பி... ஒரு மனிசனுக்கு ஆடம்பரம் இல்லாவிட்டாலும் காசு, பொருள் இல்லாவிட்டாலும் நிம்மதியாய் வாழக்கூடிய ஒரு ஆரோக்கியமான அடிப்படை வசதிகள் பூர்த்திசெய்யப்பட்ட ஒரு சூழல் தேவை. ஆனால, எங்கட 15 வருட அகதிமுகாம் வாழ்க்கையில் அது துப்புரவாக இல்லையென்றுதான் சொல்லமுடியும்.

ரயில் ஓடிய பாதையில இன்றைக்கு மனுசர் வாழுறம் என்றால் பாருங்களேன். இந்த ரயில் மாதிரித்தான் வாழ்க்கை ஓடுது. அதுக்குக் கூட ஒருமுடிவிடம் இருக்குது. ஆனால், எங்களுக்கென்றொரு முடிவிடம் இல்லையே என்று நினைக்கும்போது துன்பமாயிருக்கு.

### மலசலகூடம் தேவை

இதுக்குள்ள சி.எச்.எவ். என்ற தொண்டு நிறுவனத்தின்ர புண்ணியத்தில அரைநிரந்தர வீடாவது கிடக்குது என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில, இன்னொரு பிரச்சனை... இதுக்குள்ள எந்தவொரு தொண்டு நிறுவனமும் மலசலகூடத்தைக் கட்டித்தர முன்வருகுதில்லை. எத்தனை பேரிட்ட இது சம்பந்தமாக நிறையக்கடிதம் எழுதிக் கேட்டாச்சு. ஆனால், யாரும் முன் வரேல...

இது ஒரு ரயில் தரப்பிடம் என்றபடியால் அவங்கள் கட்டின 2 மலசலகூடம்தான் எங்களுக்குத் தஞ்சம். 175 பேருக்கு இது போதுமா? ஒரு வீட்டில் 5 பேர் இருந்தாலே அங்குள்ளவர்களுக்கு ஒரு மலசலகூடம் போதாது என்ற நிலைப்பாட்டில இருக்கிற வேளையில எங்களுக்கு சுகாதார வசதிகள் ஏதுமில்லை. அது சம்பந்தமாய் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய அதிகாரிகள் எவரும் இங்கு வருவதில்லை - என்றார்.

மூன்று பிள்ளைகளின் தாயார் என்று கூறிய பெண்மணி ஒருவர் தன் வேண்டுதலை முன்வைக்கிறார்...

இஞ்ச வந்து பிள்ளையளப் படிப்பிக்கேலாது எங்களுக்கு படிப்பிக்கவேண்டும் என்ற ஆசை இருந்தாலும் இங்குள்ள சூழல் அதற்கு இடங்கொடுக்குதில்ல. ஒரு பிள்ளைக்கு படிக்க வேணுமென்ற நிலைப்பாடு, அதேநேரத்தில் மற்றப் பிள்ளையளுக்கு அந்த நிலைப்பாடு இல்லாமல் போகின்றபோது அத்தகைய சூழலில் உள்ள பிள்ளையால் எப்படிக் கற்கமுடியும்.

### முன்பள்ளி வசதி இல்லை

இஞ்ச 30 இற்கு மேற்பட்ட முன்பள்ளிப் பிள்ளையள் இருக்குதுகள். ஆனால், அதுகள் படிக்கிறதுக்கென்றொரு கொட்டில்கூட இல்லை. சின்னப் பிள்ளைகள இந்த வயதில படிப்பிக்காமல் எந்த வயதில படிப்பிக்கிறது. எங்களுக்கொரு முன்பள்ளி அமைச்சுத் தாருங்கோ தாருங்கோ என்று எத்தின நிறுவனங்களிட்டக் கேட்டாச்சு. ஆனால், எந்தவித பிரயோசனமும் கிடைக்கேல.

இப்படி எத்தனை... எத்தனையோ குறைகளை அங்குள்ளவர்கள் பல்வேறுபட்ட கோணங்களில் முன்வைத்தார்கள். இவர்களின் வாழ்வியல் எக்காலத்தில் மீட்சிபெறுவது. இவர்களின் மீள்வாழ்க்கையின் வசந்தகாலம் எப்போது என்று என்னுள்ளே கேள்வி கேட்டபடி அங்கிருந்து புறப் பட்டு உரும்பிராயிலுள்ள செல்வபுரம் நலன்புரி நிலையத்திற்குச் செல்கின்றேன்.

இவர்களின் வாழ்க்கை நிலை கேளீர்! பாரீர்!! 8

மருதனார்மடம் புகையிரத நிலைய முகாம்



### வாழ்க்கையில் சகிப்பு

முதலில் தென்பட்டவர் அந்த நலன்புரி நிலையத்தின் தலைவரும் ஆறுபிள்ளைகளின் தந்தையுமான கந்தசாமி என்பவர்தான்.

அவரிடம் முகாம் நிலைவரம் பற்றிக் கேட்டபோது -

15 வருடமாய்த் தானே எங்கட நிலைமையைப் பல பேரிட்ட சொல்லிக் கொண்டிருக்கிறம். யார்தான் தீர்வெடுத்தார்கள். எத்தனை மறியல் போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினோம்; என்னதான் பலனைக் கணடோம்.

இது அவரின் சலிப் புத்தன்மையின் வெளிபபாடு என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

மேலும் பேச்சுத்தொடுத்தேன். இஞ்ச 23 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேர் வசிக்கிறார்கள். தெல்லிப்பழை, குரும்பசிட்டியைச் சேர்ந்த இவர்கள் 90ஆம் ஆண்டு தமது ஊரைப பிரிந்து, உறவுகளைப்பிரிந்து ஏதிலிகளாக வாழ்கிறார்கள் - என்று கூறிமுடித்தார்.

முதியவர் ஒருவருடன் உரையாடினேன். தம்பி எனக்கு ஒரு உதவியும் வேண்டாம். என்னை என்ர சொந்த ஊருக்குவிட்டால் காணும். எத்தின நாளைக்குத்தான் மற்ற வயளிட்ட கையேந்தி நிற்கிறது. எங்களுக்கொரு வீடு இருக்குது, காணி இருக்குது என்ன மாதிரி கமம் செய்து சீவிச்சனாங்கள். அங்க போய் எங்கட பாட்டில எங்களை நாங்கள் காப்பாற்றும் வழியைப் பார்ப்பம். சும்மா எத்தனை நாளைக்குத்தான் இரவல் காணிக்குள்ள இருந்துகொண்டு இடிபடுகிறது.

இஞ்ச இருக்கிற 110 பேருக்கும் பொதுவாக பாவிக்கக்கூடிய நிலையில் 3 மலசல கூடந்தான் இருக்குது. பழுதுபட்ட மல சலகூடங்களைத் திருத்தித் தரச்சொல்லி எத்தனை பேரிட்ட கேட்டாச்சு. யாரும் அது தொடாபாய் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இங்கு 40 இற்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள். அதில 30 பேர் வரை முன்பள்ளி மாண வர்களாக இருக்கிறார்கள் அவர்களின்ர கல்வி தான் சீரழியுது. படிக்கிறதுக்கென்றொரு சூழல் இல்ல. அது மட்டுமில்லை அவர்கள் படிக்கிறதுக்கு ஒரு கொட்டில்கூட இல்லை. இவர்களுக்கென்றொரு முன்பள்ளி அமைச்சுத்தரச் சொல்லி பல நிறுவனங்களிட்ட கோரிக்கைகளை விடுத்துள்ளோம்.

இப்போது யு.என்.எச்.சீ.ஆர் நிறுவனம் முன்பள்ளியை அமைத்துத்தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது சொல்லளவில் இருககிறது. செயல் வடிவில் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை - என்றார்.

இத்தகைய மக்களின் அவலக்கதைகள் எத்தனை எத்தனை. இவற்றையெல்லாம் நாங்கள் பத்தி பத்தியாக எழுதிக்கொண்டே போகலாம.

அதிகாரிகளே! அவர்களுக்கென்றொரு அரை நிரந்தர வீடுகள் கட்டிக்கொடுத்தால் மட்டும் போதும் என்று நினைக்காதீர்கள். அவர்களின் வாழ்வியலை சுமூகமாகக் கொண்டு போகக்கூடிய அடிப்படை வசதிகளை நிறைவாகச் செய்து கொடுக்கவேண்டிய கடமைப்பாடும் உங்களின் கைகளிலேயே உள்ளது.

அவர்கள் எதிர்பார்ப்பது என்ன? சுகாதார வசதிகள், குடிதண்ணீர் பிரச்சனை, இத்தனைக்கும் மேலாக அவர்களின் வாழ்வில் புதியதொரு மாற்றத்தினை உருவாக்கக் கூடிய கல்வி. இவற்றையெல்லாம் பூர்த்தி செய்து தந்தால்போதும். இரவல் காணிக்குள் இருக்கும் இவர்கள் ஊர் போகும் வரைக்கும் நீங்கள்தான் அவர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டவேண்டும். ❖

**அபிமானன்**

# திருக்குறள் ஆய்வு மையம் ஓர் இனிப்பான நன்முயற்சி

திருக்குறள் உலகப் பொதுமறை என்று போற்றப்படுவது. உலகில் அதிக மொழிகளில் பெயர்க்கப்பட்ட சிறப்புடையது. இரண்டடிக் குறளுக்குள்ளேயே மனித வாழ்க்கைக்குத் தேவையான எல்லாவற்றையும் பொதித்து வைத்திருக்கிறது. அறம், பொருள், காமம் என மூன்று பாலுக்குள் இல்லறம், துறவறம், ஊழ், அரசு, அங்கம், ஒழிபு, களவு, கற்பு ஆகிய இயல்களுக்குள் 133 அதிகாரங்களுக்குள் ஆயிரத்து 330 தனிக்குறள்கள் கொண்டதாகத் திருக்குறள் அமைக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர் தமிழைத் தவிர வேறோர் அடையாளத்தையும் முன்வைக்காதவர். அவரை இந்துவாகவோ, பௌத்தனாகவோ, சமணராகவோ, எந்தக் குலத்தவராகவோ பார்க்கமுடியாது. தமிழ் வருடம் என்பது திருவள்ளுவர் ஆண்டே. இது உழவர் திருநாளை முதல் நாளாகக் கொண்டு அமைகிறது. சீனாவில் பென்பியூசியஸ் தத்துவம் ஒரு மதமாக உள்ளது. புத்தரின் போதனை பௌத்தத்தைத் தோற்றுவித்தது. வள்ளுவர் தமிழின் கடவுளாகக் கொண்டாடக் கூடிய அத்தனை சிறப்புகளும் தகுதிப்பாடுகளும் உள்ளவர். தமிழுக்கு எழுப்பும் சிலை என்பது வள்ளுவரின் சிலையாக இருப்பதே அதிகம் பொருத்தமாகும்.

வாழ்க்கைப் பாதையில் ஒவ்வொரு கட்டத்திலும் வள்ளுவரின் மதிநுட்பமான ஆலோசனைகள் ஒவ்வொருவருக்கும் கைகொடுக்கும் அரசன் முதல் நிர்வாகி, தொழிலாளர், சாதாரண வாழ்க்கை வாழ்பவன் வரை யாவரும் வள்ளுவரின் போதனைகளை உள்வாங்கிக் கருமமாற்றும்போது அது உயர்வைத்தரும்.

திருக்குறள் தொடர்பான அறிவை நமது இளஞ்சமுதாயத்தின் மனதில் ஊன்றுவது இன்றியமையாதது. அந்தவகையில், புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியினர் அக்கல்லூரியின் நிறுவுநர் அமரர் மழவராயர் கந்தையா நினைவாக யாழ். மாவட்டப் பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவரிடையே திருக்குறள் வினாடி வினாப் போட்டியினை நடத்தியமை வரவேற்கத்தக்கது.

அமரர் மழவராயர் கந்தையா ஆறுமுக நாவலர் போல அன்னசத்திரம் நிறுவியவர். தமிழ், சமயப் பணிகளை ஆற்றுவதற்கென்றே தமது செல்வத்தைப் பயன்படுத்தியவர். அத்தகைய புகழ்மிகு பெரியாரை நினைவுகூரும் வண்ணம் திருக்குறள் போட்டியை நடத்தியமை அதிகம் பயன்பாடான முயற்சியெனலாம்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் வழிகாட்டலுடன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையினரின் வளத்துணையுடனும் இக்கைங்கரியத்தைச் சிறப்புடன் ஆற்றிய பொறுப்பாசிரியர் ச.லலீசன் பாராட்டுக்கு உரியவராகிறார்.

புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியில் திருக்குறன் ஆய்வுமையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கென கல்லூரியின் பழைய மாணவரொருவர் உதவ முன்வந்திருக்கிறார். இவையெல்லாம் தமிழுக்கு இனிப்பான செய்திகள். திருவள்ளுவரின் கருத்துகளை ஆக்க பூர்வமாக முன்னெடுக்கும் வகையிலும் திருவள்ளுவரை அவரின் கருத்துகளை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்யும் வகையிலும் இந்த ஆய்வு மையம் செயற்படவேண்டியது முக்கியமானதாகும். கல்லூரிச் சமூகத்தினரின் இந்த முயற்சி வள்ளுவர் மொழியில் 'காலத்தினால் செய்த நன்றி' தான். ஆனால், கம்பனைப்போல வள்ளுவனையும் 'வணிகப் பண்டமாக்காது' பார்த்துக் கொள்ளவேண்டிய சமூகக் கடமையை அவர்கள் உறுதிசெய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். ⁕

**எஸ்.ஸ்ரீகுமரன்**




# கதிர்காமர் படுகொலை சமாதானத்தை பாதிக்குமா?

தற்போது மிக மிக பரப்பரப்பாக பேசப்படுகின்ற ஒரு விடயமாக கதிர்காமரது கொலை காணப்படுகிறது. இதைப்பற்றி நாம் பேச முன்னர் நாம் கதிர்காமரைப்பற்றி விளங்கிக் கொள்வது பொருத்தமானதாகும். 1994ம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க ஆட்சியமைக்கும் வரை கதிர்காமரை ஒரு சிலரைத்தவிர பெரிதும் யாரும் அறிந்திருந்ததில்லை. அறிந்திருந்த ஒருசிலரில் முக்கியமானவர்தான் நீலன் திருச்செல்வம்.

நீலன் திருச்செல்வம் ஒரு மிகப்படித்த மேதை. சட்ட வல்லுனர். அரசியல் யாப்புகளில் புகுந்து விளையாடக் கூடியவர். ஏன் சந்திரிக்கா அம்மையார் முன்வைத்த ' பக்கேஜ் ' திர்வுத்திட்டங்களுக்கு பின்னால் அவர் இருந்ததாகக் கூறுவார்கள். நீலன் திருச்செல்வம் சிங்கள அரசியல்வாதிகளின் நண்பர். சந்திரிக்கா அம்மையாரின் தோழன். ஆனால் அவர் ஒரு தமிழராக இருந்தும் தமிழர்களால் அவர் விரும்பப்படவில்லை. இது குறித்து விளக்கமாக ஏன், எதற்கு என ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல என்பதால் அதை விட்டுவிடுவோம்.

இங்கே கட்டுரைக்கு தேவைப்படுகின்ற விடயம் என்னவென்றால் இந்த நீலன் திருச்செல்வமே கதிர்காமரை சந்திரிக்கா அம்மையாருக்கு அறிமுகப்படுத்தினார் என்பதாகும்.

இனி கதிர்காமருக்கு வருவோம். கதிர்காமர் மெத்தப்படித்தவர். அதி புத்திசாலி. சட்ட ஆலோசகர். சட்டவாதி. அவரது சேவை நாட்டிற்கு தேவை என சந்திரிக்கா அம்மையார் அவரை தனது வெளிவிவகார அமைச்சராக அமர்த்தினார். தன்னை என்ன



நோக்கத்திற்காக அமைச்சராக்கினார்கள் என்பது கதிர்காமருக்கு நன்றாகத் தெரியும். ஒரு சட்டத்தரணி தனது கட்சிக்காரருக்கு என்ன செய்வாரோ அதனை கதிர்காமர் செய்தார். தனது கட்சிக்காரரான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்காக வாதாடினார். செயற்பட்டார். வெளிநாடுகளுக்கு பறந்தார். புலிகளுக்கு

- என்.ஜீவேந்திரன்

எதிராக பிரச்சாரம் செய்தார். பல நாடுகள் புலிகளை தடை செய்வதில் பெரும் பங்காற்றினார்.

நல்லது அவர் ஒரு உண்மை ஊழியனாக நடந்து கொண்டார். இங்குள்ள பிரச்சனை என்ன? கதிர்காமர் தமிழ் மக்களது நிலையை உணர்ந்தாரா? புலிகளை தடை செய்வதன் மூலம் இனப்பிரச்சனையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்குமா? தனது இனம் சார்ந்த தமிழ் மக்களுக்கு அவர் எதை வழங்கினார்? என்ற கேள்விகள் தமிழ்த் தரப்புக்களால் எழுப்பப்படுகின்றன. ஆனால் அவை தேவையற்ற கேள்விகள். காரணம் அவரை அமர்த்திய கட்சிக்காரர்கள் தமிழ்த்தரப்பல்ல. எனவே அவருக்கு எதிர்க்கட்சிக்காரர்களின் பிரச்சனை தேவையில்லை.

சரி, இப்போது கதிர்காமர் கொல்லப்பட்டிருக்கிறார். விடுதலைப் புலிகளின் குறியில் முதலாவதாக இருந்தவர் கொல்லப்பட்டிருக்கிறார். அரசாங்கம் புலிகளை நோக்கி சுட்டுவிரலை நீட்டுகின்றது. விடுதலைப்புலிகள் ஒன்று மறியாதவர்கள். 'ஐயோ நாம் இதனை செய்யவில்லை. தெற்கில் எது நடந்தாலும் எங்களை இழுக்கிறார்கள்.' என்கிறார்கள்.

இன்னொருபுறம் பார்த்தால் இந்த படுகொலையை பயன்படுத்தி தற்போதைய அரசியல் சிக்கல்களை ஆறப்போட காரியங்கள் ஆற்றப்படுவது போல் தெரிகிறது. தற்போது ஜனாதிபதி தேர்தல் சர்ச்சைகள், குறிப்பாக இந்த வருடமே ஜனாதிபதி பதவி விலக வேண்டும். ஜனாதிபதி தேர்தல் நடைபெற வேண்டும் என்ற ஐக்கிய தேசியக்கட்சியின் போராட்டத்தினை இந்த படுகொலை ஊடாக ஆறப்போட முயற்சிக்கலாம். ஆனால் இந்த படுகொலையின் சூடு இன்னும் எத்தனை நாளுக்கு நின்று பிடிக்கும் என்பது கேள்விக்குறி. மேலும் இதுபோன்ற இன்னுமொரு பரபரப்பான விடயம்' செய்தியில் முக்கிய இடம்பிடிக்கும்போது இப்போது கதிர்காமருக்காக கண்ணீர் வடிக்கும் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் அவரை மறந்துவிடும். எனவே கதிர்காமரது படுகொலையானது தற்போது அரசியல் அரங்கில் பரபரப்பாக பேசப்பட்டாலும், சில நாட்களில் நிலமை மாறிவிடும் என்றே தோன்றுகின்றது. குறிப்பாக இந்த படுகொலை காரணமாக சமாதானத்துக்கு பாதகம் ஏற்படுமென்ற கருத்து அத்தனை பொருத்தமானதல்ல. காரணம் அமெரிக்கா, இந்தியா முதல் அத்தனை நாடுகளும் இந்த படுகொலையை கண்டித்த அதேசமயம் இதன் காரணமாக சமாதான சூழல் குழம்புவதை அனுமதிக்க வேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளன. அதேபோல இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளை குற்றம் சாட்டினாலும் போர்நிறுத்தம் தொடரும் என அறிவித்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக நாடு இன்றிருக்கும் யதார்த்தத்தில் அரசியல் சிக்கல்கள் கால்களை சிக்கி கொண்டுள்ள இன்றைய சூழலில் அரசியல் கட்சிகள் தேர்தலிலும் - தேர்தலை தவிர்ப்பதிலும் அவதானத்தை செலுத்துகின்ற சூழலில் சுனாமியால் பாதிக்கப்பட்டு விடிவில்லாத, தீர்வில்லாத சூழலில், ஜனாதிபதி தேர்தல் குறித்து ஏகப்பட்ட பிரச்சனைகள் தீர்வில்லாமல் தொடர்கின்ற சூழலில் கதிர்காமர் படுகொலை ஒருபோதும் தற்போதைய சமாதான சூழலை பாதிக்க எவ்வித வாய்ப்பும் இல்லை என்றே தோன்றுகின்றது. அப்படி சமாதான சூழல் குழம்புவதானால் அதற்கும் கதிர்காமர் படுகொலைக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கப்போவதில்லை என உறுதியாக நம்பலாம்.

## இவ்வார விழிப்பில்...

- கதிர்காமரது கொலையும் அதன் தாக்கங்களும்.
- நாட்டின் தற்போதைய நிலை குறித்து மக்கள்.
- இன்றைய பார்வை.
- நீலன் இணையத்தளம்.

## சிந்தனைக்கு

உலகத்தை முழுக்க பார்க்காமலே, உலக வாழ்க்கை வெறுத்துவிட்டது என்று அலுத்துக் கொள்கிறோம். நாம் எத்தனை தூரம் பயணம் போகிறோமோ அந்தளவுக்கு நம் பார்வையும், ஞானமும் விரியும். எந்த அளவுக்கு புதிய புதிய நாகரிகங்களையும், புதிய புதிய கலாசாரங்களையும் தெரிந்து கொள்கிறோமோ அந்த அளவுக்கு நம் அறிவும், புரிந்து கொள்ளும் தன்மையும் மேம்படும்.

# நிழல் யுத்தத்துக்குள் இலங்கை

அணுவாயுத நாடுகளில் பலப்பரீட்சை நிறைந்த நூற்றாண்டாக கடந்த நூற்றாண்டை குறிப்பிடலாம். இரண்டு உலக மகா யுத்தங்களின் கோரமான அனுபவங்களின் பின்னர் நேரடியான அழிவுகளை ஏற்படுத்தும் யுத்தங்களில் வல்லரசுகள் இறங்குவதற்கு தயங்கினாலும் உலகில் தனது ஆதிக்கப்பலத்தை நிலைப்படுத்த பனிப்போர் மற்றும் நிழல் யுத்தங்களில் இறங்கியது. நிழல்



யுத்தம் என்பது சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் நேரடியான எந்த யுத்த நடவடிக்கையிலும் ஈடுபடாமல் துணைப் படைகள் அல்லது வேறுவழிகளினூடாக தமது பலத்தை நிரூபிப்பதற்காக அல்லது எதிரியை பலவீனப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற யுத்தமுறையாகும். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் அமெரிக்காவுக்கு சவாலாக எழுச்சி கண்ட சோவியத் ரஷ்யாவும், அமெரிக்காவும் மிகப் பெரிய பலப் பரீட்சையில் இறங்கியது. நேரடியான யுத்தத்தில் இறங்காமல் பல்வேறு துணைப்படைகளின் மூலமும் தமது இரகசிய உளவுப்படை மூலமும் தமக்கிடையிலான நீண்ட ஒரு பனிப்போரை மேற்கொண்டது. சுமார் அரைநூற்றாண்டுகளாக இடம்பெற்ற யுத்தத்தில் சோவியத் ஒன்றியம் பல கூறுகளாக பிரிந்து சென்றன. அதேபோல் தற்போது ஆசியாவிலும் இந்தியா, பாகிஸ்தானுக்கிடையில் இதே பாணியிலான யுத்தம் தொடர்ந்து காணப்படுகின்றது. பெரும்பாலும் இந்நாடுகள் அணுவாயுத வல்லமையை கொண்டுள்ள நேரடியான யுத்தத்தின் மூலம் தமக்கு ஏற்படும் பாரிய அழிவுகளை தவிர்ப்பதற்காக இத்தகைய யுத்த முறைகள் கைக்கொள்கின்றனர்.

ஒரு நாட்டிற்கு எதிராக வல்லரசுகள் நிழல் யுத்தங்களை மேற்கொள்கின்றபோது குறித்த அந்நாட்டை சூழ உள்ள அயல் நாடுகளை அந்நாட்டுக்கு எதிராக தூண்டி அவர்களுக்கு ஆயுதங்களை வழங்குதல் மற்றும் உள்நாட்டு யுத்தங்களை தோற்றுவித்தல் என்பன மூலம் எதிரியை பலவீனப்படுத்த முயற்சிக்கின்றனர். இதனால் குறித்த இந்நாடுகள் பல பாரிய அழிவுகளுக்கு முகங்கொடுக்க நேரிடுவதோடு பாரிய மனித பொருளாதார அழிவுகளையும்

- ஏ. உசாமா

சந்தித்துள்ளன. அதேநேரம் இந்த நிழல் யுத்தங்கள் சில வேளைகளில் வல்லரசுகளுக்கிடையிலான பாரிய யுத்தங்களை தோற்றுவிக்கும் சந்தர்ப்பங்களை கொண்டுள்ளது. அவ்வாறு நிகழுமானால், முன்னர் நிகழ்ந்த உலக மகா யுத்தங்களை விட பாரிய அழிவுகளை உலகம் சந்திக்க நேரிடும் என்பது உறுதியாகும்.

இன்று இலங்கையிலும் பரவலாக பேசப்படுகின்ற ஒரு விடயம் இந்த நிழல் யுத்தம் பற்றியதாகும். நீண்டகாலமாக அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற நேரடியான யுத்தம் சமாதான உடன்படிக்கையின் பின்னர் முற்றுப்பெற்றது. இப்புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் நாட்டில் நிலவிய அமைதிச் சூழல் பல்வேறு காரணங்களால் தற்போது சீர்குலைந்து போயுள்ளது. என்றாலும் மீண்டும் ஒரு நேரடியான யுத்தத்தில் இருதரப்பினராலும் இறங்க முடியாத நிலையில் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் தமது பலத்தை நிரூபிப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். துணைப்படைகள் மற்றும் தமது உளவுத்துறைகள் மூலம் மேற்கொண்டுவரும் தாக்குதகள், குண்டுவெடிப்பு சம்பவங்கள், தொடர் கொலைகள் இதை நன்கு உணர்த்துகிறன.

சமாதானத்தை முன்னெடுக்க பல்வேறு பிரயத்தனங்கள் மேற்கொண்டு தோல்விகண்ட நிலையில் சமாதானம் பற்றிய நம்பிக்கைகள் மக்களிடையே வலுவிழந்து கொண்டே செல்கின்றது. இதனால் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுமோ என்ற அச்சம் பலரிடம் எழுந்துள்ளது. எனவே இவ்வாறான நடவடிக்கைகளை கைவிட்டுவிட்டு நாட்டின் எதிர்காலத்தினைக் கருத்திற்கொண்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பொறுப்புடன் செயற்படுவது அனைவரதும் கடமையாகும்.

# கதிர்காமரின் படுகொலை குறித்து மக்களின் கருத்து

அண்மையில் இடம்பெற்ற வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையானது அரசியல் அரங்கில் பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணியுள்ளது. இவரது படுகொலைக்கு காரணமானவர்கள் யார்? படுகொலைக்கான காரணம் என்ன? போன்ற கேள்விகளுக்கு பதில் கூற முன் இந்தப் படுகொலையானது தற்காலிக சமாதானத்தை சீர்குலைத்து மீண்டும் யுத்தம் மூளுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் இதுகுறித்து மக்கள் தமது கருத்தினை விழிப்புக்குத் தெரிவித்தனர்.

**எம். செல்வராஜா**

பாரிய இழப்புத்தான். என்றாலும் இந்த படுகொலை சமாதானத்துக்கு பாதிப்பு என்று சொல்ல முடியாது. இதுபோன்ற படுகொலைகள் நடக்கும்போது நாட்டில் எல்லோரும் அமைதியைக் கையாளவேண்டும்.

**கே. முருகேசு**

படுகொலைகள் நடந்துகொண்டே இருக்கும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் எல்லோரும் சமாதானத்தை ஏற்படுத்த பாடுபடவேண்டும். இது சமாதானத்தை எவ்விதத்திலும் பாதிக்க மாட்டாது. நாங்கள் சமாதானம் என்ற எண்ணத்துடன் இருக்க வேண்டும். அதாவது எப்படியான நிலை வந்தபோதும் எமக்கு சமாதானம் வேண்டும். நாடு நல்ல நிலையில் முன்னேற வேண்டும். இதுபோன்ற இக்கட்டான நிகழ்வுகளால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. எனினும் மக்கள் அவற்றை நினைவில் கொள்ளாமல் சமாதானத்தை நிலையாக்க உழைக்க வேண்டும்.

**என். லீலாவதி**

லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலை சமாதானத்தை பாதிக்காது. ஏனெனில் அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் சமாதானத்தை முன்னெடுத்து செல்வதாக கூறியுள்ளார்கள். இதனால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்று நம்பலாம். அத்துடன் இந்த சமயத்தில் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு எல்லோரும் ஒற்றுமையாக பாடுபடவேண்டும்.

**மொஹமட் பாருக்**

அமைச்சரின் மரணமானது தற்போதைய சமாதானத்தில் எத்தகைய பாதிப்புக்களையும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளது. காரணம், 2002ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை அரசும், வீடுதலைப்புலிகளும் தொடர்ந்தும் பேணுவதாக தெரிவித்துள்ளனர். இந்நிலையில் தொடரும் இதுபோன்ற நிகழ்வுகளால் சமாதானம் பாதிக்கப்படும் என்று நான் நினைக்கவில்லை.

**மஞ்சுளா தம்மிக ரட்ண**

ஒரு அமைச்சரை நாடு இழந்திருக்கிறது. ஆனாலும் சமாதானத்திற்காக பாடுபட்ட அவரது பணியை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும். அதுவே அவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடன்.

**அஹமட் டில்ஷான்**

வெளிநாட்டமைச்சரின் இழப்பு நாட்டிற்கு ஒரு பாரிய இழப்பாகும். எனினும் நாட்டில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதன் மூலமே அவரின் ஆத்மா சாந்தியடையும். அரசும், விடுதலைப்புலிகளும் யுத்தநிறுத்தத்தை தொடர்ந்தும் கடைப்பிடிப்போம் என்று கூறியுள்ளதன் மூலம் அதனை நிறைவேற்றலாம்.

**மாலினி சண்முகரட்ணம்**

கதிர்காமரின் மறைவு மிகவும் கவலையை தருகிறது. என்றாலும் கூட நட்டின் நலன் கருதி போர்நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்தும் பாதுகாப்போம் என்று இருதரப்பு கூற்றும் மகிழ்ச்சியைத் தருகிறது. இதனால் நாட்டின் அமைதிக்கு களங்கம் ஏற்படாது என்று எண்ணும்போது நாம் நிரந்தர சமாதானத்தை காணும் காலம் வெகுதூரம் இல்லை என்ற எண்ணம் தோன்றுகிறது.

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு **7.30**மணிக்கும். TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு **7.25** மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# ஆங்கிலத்தைக் கட்டாயமாக்குவது மற்றுமொரு தரப்படுத்தல்தான்!

இந்த நாட்டில் காலத்துக்கு காலம் ஆட்சிப்பீடம் ஏறிய அரசுகள் தமிழர் கல்வியை திட்டமிட்ட முறையில் புறக்கணித்தே வந்திருக்கின்றன.

இவ்வாறான அரசுகளின் கல்விப்புறக்கணிப்புத் தொடர்பாக ஒருசில செயற்பாடுகளே நேரடியாக வெளித்தெரிந்தன. ஆனால், தமிழ் மாணவர்களின் கல்விக்கு ஆப்பு வைக்கின்ற பல செயற்பாடுகளை மறைமுகமாக - வெளித்தெரியாத வகையில் - சிங்கள அரசுகள் மேற்கொண்டு வந்திருக்கின்றன; இப்போதும் மேற்கொள்கின்றன.



இந்த நிலையில் தமிழர் கல்வி எந்தெந்த வகையில் புறக்கணிக்கப்படுகிறது, ஒடுக்கப்படுகிறது என்ற விடயங்கள் தொடர்பாக தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் உதயனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வி இது.

தமிழர் தாயகத்தின் கல்விநிலை விழ்ச்சியடைந்து கொண்டு செல்வதற்கான காரணங்களை தகுந்த ஆதாரங்களுடன் - புள்ளி விவரங்களுடன் விவரித்து வருகிறார் இளங்குமரன். இவரது செவ்வியின் நான்காம் பகுதி கடந்த 7 ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது.

### தமிழ் மாணவர்களின் கல்வியில் தரப்படுத்தலால் வீழ்ந்த அடி

*கேள்வி:* ஸ்ரீலங்கா அரசுகளின் திட்டமிட்ட கல்விப்புறக்கணிப்பு நடவடிக்கைகளின் ஆரம்பம் 1970களில் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறைதான் என்கிறீர்கள். தரப்படுத்தலைத் தொடர்ந்து தமிழ் மாணவர்களின் உயர் கல்வி நிலை எவ்வாறு வீழ்ச்சியடைந்தது என்று பட்டியலிடுவீர்களா?

*பதில்:* உயர் கல்வி பெறுவதற்கு தமிழர்களுக்கு இருந்த வாய்ப்பை 1971 இல் சிங்கள அரசு தரப்படுத்தல் மூலம் தடைசெய்தது. இதன உருவாக்கவோ சிங்கள அரசு முன்வரவில்லை. தமிழர் தாயகப் பகுதியில் இயங்கும் யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு, சம்மாந்துறை ஆகிய தொழில்நுட்பக்கல்லூரிகள் உரிய முகாமைத்துவ அணி இல்லாத நிலையிலும் போதனாசிரியர்கள், உதவியாளர்கள் மற்றும் கல்விசாரா ஆளணியினரின் பற்றாக் குறைபாடுகளினோடும் பௌதீகவள, கற்பித்தல் உபகரணப் பற்றாக்குறைகளோடும் நலிவடைந்த நிலையிலேயே இயங்குகின்றன.

தொழில்நுட்பக்கல்லூரிகளுக்கு அடுத்த படியாக தொழில்பயிற்சிக்கூடங்கள் பல கடந்த

**பல்கலைக்கழக அனுமதியில் இனவாரியான தரப்படுத்தல் - 1970**

| துறை | பல்கலைக்கழகம் | இனம் | அனுமதிக் கப்பட்டோரின் எண்ணிக்கை | அனுமதிக்கான ஆகக்குறைந்த இனவாரியான புள்ளி |
|---|---|---|---|---|
| பொறியியல் | பேராதனை | சிங்களவர் | 86 | 227 |
| | | தமிழர் | 60 | 250 |
| | கட்டுப்பெத்த | சிங்களவர் | 60 | 212 |
| | | தமிழர் | 53 | 232 |
| மருத்துவம் | பேராதனை, கொழும்பு | சிங்களவர் | 137 | 229 |
| | | தமிழர் | 103 | 250 |
| உயிரியல் விஞ்ஞானம், பௌதீகவியல் | அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் | சிங்களவர் | 111 | 175 |
| | | தமிழர் | 41 | 181 |
| கட்டடக்கலை | | சிங்களவர் | 16 | 180 |
| | | தமிழர் | 28 | 194 |

பின்னர் பல்கலைக்கழக அனுமதியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. தரப்படுத்தல் மூலம் சிங்கள மாணவர்களைவிட தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவிற்கு அதிக புள்ளிகளைப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டது. முழுக்க முழுக்கத் திறமை அடிப்படையில் இருந்த பல்கலைக்கழக நுழைவுமுறை இன ரீதியான அடிப்படையில் இடம்பெற்றது.

தமிழர் மீது சிங்களப் பேரினவாதிகள் மேற்கொண்ட மிகவும் பாரதூரமான ஒடுக்குமுறைகளில் ஒன்றாக கல்வித் தரப்படுத்தலைக் குறிப்பிடலாம். 1971 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மொழி ரீதியான தரப்படுத்தல் அனுமதி முறையினால் கிராமப்புறச் சிங்கள மாணவருக்கு நன்மை கிடைக்காததால் 1972 ஆம் ஆண்டு மாவட்டக் கோட்டாமுறை அறிமுகம் செய்யப்பட்டது. இந்த மாற்றங்கள் பல்கலைக்கழக அனுமதியில் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கையை எல்லாத்துறைகளிலும் அதிகரிக்கச்செய்தன. தமிழ் மாணவர்களின் அனுமதி வெகுவாகக் குறைந்தது.

1977 ஆம் ஆண்டு மொழிரீதியான பல்கலைக்கழக அனுமதிக்கொள்கை மாற்றப்பட்ட போதிலும் இந்தத் தரப்படுத்தலால் குறிப்பிட்ட - ஆண்டுகளில் 1970 - 1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் - தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது.

*கேள்வி:* தமிழ் மாணவர்கள் உயர் கல்வியில் எதிர்நோக்குகின்ற வேறு பிரச்சினைகள் ஏதேனும் இருக்கின்றனவா?

*பதில்:* வடக்குக் கிழக்கிலுள்ள பல்கலைக்கழகங்கள் போரினால் மிகவும் பாதிப்படைந்துள்ளன. அங்கு தேவைகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால், ஒதுக்கப்படும் நிதியோ மிகவும் குறைவாக உள்ளது.

இதனால் மாணவர்களுக்கு உகந்த கற்றல் சூழலை, கட்டுமான வசதிகளை தரமான பல்கலைக்கழகக் கல்வியை தமிழர் தாயகப் பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகங்களினால் வழங்கமுடியாதுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான புலமைப் பரிசில்களில் போதிய இடங்கள் தமிழ்ப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு ஒதுக்கப்படவில்லை. புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் சுற்று நிருபங்கள் உரிய காலத்தில் வந்தடைவதில்லை.

அத்துடன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடனான இணைப்புச் செயற்றிட்டங்களில் தமிழ்ப் பிரதேசப் பல்கலைக்கழகங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. இத்தகைய செயற்பாடுகள் மூலம் உயர் கல்வியில் தமிழர் பிரதேசப் பல்கலைக்கழகங்கள் புறக்கணிப்புக்கு உள்ளாகின்றன.

உயர்கல்வியில் ஓர் அங்கமான தொழிற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி போன்றவற்றிலும் தமிழ்மக்கள் திட்டமிடப்பட்டு ஒடுக்கப்பட்டுள்ளார்கள். வடக்கு - கிழக்கில் பல்கலைக்கழகங்களுக்கு நுழையமுடியாத மாணவர்களுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தகைமைகளைப் பெறக்கூடிய மாற்று வழிகளை வழங்கக்கூடிய தொழில்நுட்பக்கல்லூரிகள் தேவைக்கேற்ப தமிழர் தாயகப் பகுதிகளில் உருவாக்கப்படவில்லை. அத்துடன் தொழில் வாய்ப்புக்கு உகந்த பாடவிதானங்களைக்கூட இருக்கின்ற தொழில்நுட்பக்கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தவோ அதற்குத் தேவையான உட்கட்டமைப்புக்களை

காலங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சிக்கூடங்களில் பயிற்சிக்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களில் தமிழமொழி மூல மாணவர்கள் விரல்விட்டு எண்ணககூடியவர்களாகவே இருந்து வருகின்றனர். தொழிற்பயிற்சி என்று நடைமுறைப்படுத்திவரும் பல செயற்றிட்டங்களில் இன்றும் மரபுரீதியான முறையிலேயே எமது மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. நவீன துறைகளில் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கான பயிற்சிகளில் தமிழ்மாணவர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றனர்.

## பேரினவாதிகளின் திட்டமிட்ட சதியை அம்பலப்படுத்துகிறார் இளங்குமரன்

### மீண்டும் ஒரு தரப்படுத்தல்!

*கேள்வி:* அடுத்த வரும் முதல் க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட்டிருக்கிறது; உயர் தரத்தில் பொது ஆங்கிலத்தில் கட்டாய தேர்ச்சி இருக்க வேண்டும். அப்படியானால் இனிவரும் காலங்களில் பல்கலைக்கழக அனுமதி பெறுகின்ற தமிழ் மாணவர்களின் வீதம் மேலும் குறைவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறதல்லவா? இது குறித்து உங்கள் கருத்து என்ன?

*பதில்:* நிச்சயமாக இதனால் இனிவரும் காலங்களில் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி மேலும் குறைவடையும். தமிழ் மாணவர்களில் உயர் கல்வி, தொழில்நுட்பக் கல்வி தொடர்பான ஆங்கில மொழித் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கு ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை ஒரு தடையாக அமைந்திருக்கிறது. ஆரம்பக்கல்வியில் 80 வீதமும் இடைநிலைக்கல்வியில் 42 வீதமும் உயர்தரத்தில் 64 வீதமும் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. இந்த நிலையில் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலம் கட்டாயம், உயர்தரத் தேர்வில் பொது ஆங்கிலம் கட்டாய தேர்ச்சி போன்ற அறிவிப்புகள் அடுத்துவரும் ஆண்டுகளில் தமிழர் கல்விக்கு ஏற்படப்போகும் ஆபத்துக்களை உணர்த்துகின்றன.

அண்மைக்கால புள்ளிவிபரங்களின்படி உயர்தரத்தில் ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுக்கின்ற சிங்கள மாணவர்களின் தொகை அதிகரிப்பதையும் தமிழ் மாணவர்களின் தொகை குறைவடைவதையும் அவதானிக்க முடியும்.

**க.பொ.த உயர்தரத்தில் ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்த மாணவர்களின் இனரீதியான வீதம்**

| ஆண்டு | தமிழ் | சிங்களம் |
|---|---|---|
| 1994 | 5.98% | 40.03% |
| 1995 | 5.00% | 45.08% |
| 1996 | 4.65% | 51.23% |
| 1997 | 3.66% | 59.59% |
| 1998 | 3.93% | 54.47% |
| 1999 | 5.84% | 58.43% |
| 2000 | 6.42% | 56.25% |
| 2001 | 5.69% | 63.73% |

மாணவர்களுக்கு ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்குவதென்பது அரசின் திட்டமிட்ட ஒரு சதிவேலைதான். ஒருவகையில் இதுவும் ஒரு தரப்படுத்தல்தான். தமிழர் கல்வியைச் சீரழிப்பதற்கு அரசு மீண்டும் ஒரு 'தரப்படுத்தல்' செயற்பாட்டை 'கட்டாய ஆங்கிலக் கல்வி' என்ற பெயரில் திணிக்க முயல்கிறது - என்றே நான் கருதுகின்றேன்.

### பேரினவாத சக்திகளால் பாதாளத்தில் தமிழர் கல்வி!

*கேள்வி:* இதுவரை உங்களால் குறிப்பிடப்பட்ட அரசின் கல்விப் புறக்கணிப்புகள், கல்வி ஒடுக்குமுறைகள் என்பனவற்றின் மூலம் தமிழ் மாணவர்களின் கல்வித்தரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி பற்றிய சரியான விவரங்கள் இருக்கின்றனவா?

*பதில்:* ஆரம்பகாலத்தில் - அதாவது 19 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே இலங்கையில் மிகவும் உயர்ந்த கல்வித்தரம் உடைய இனமாக தமிழினம் இருந்திருக்கின்றது.

1880 ஆம் ஆண்டளவில் இலங்கையின் கல்வி நிலைப்புள்ளி விவரங்களின்படி மேல் மாகாணத்தில் 21 பேருக்கு ஒருவரும் தென் மாகாணத்தில் 68 பேரில் ஒருவரும் கல்வி கற்றவர்களாக இருந்திருக்கின்றனர். ஆனால், வடமாகாணத்தில் 14 பேருக்கு ஒருவரும் கிழக்கு மாகாணத்தில் 20 பேருக்கு ஒருவரும் கல்விகற்றவர்களாக இருந்தனர். நாட்டின் சகல மாகாணங்களிலும் கல்வி அறிவு வீதம் உயர்ந்த மாகாணங்களாக வடக்கும் கிழக்குமே இருந்திருக்கின்றன.

1911ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி 4.9 வீதமான தமிழர்கள் உயர்கல்வி கற்றவர்களாக இருந்துள்ளனர். ஆனால், சிங்களவர்களில் - கரையோரச் சிங்களவரின் கல்வி அறிவு வீதம் 3.5 வீதமாகவும் கண்டிச் சிங்களவரின் வீதம் 0.7 வீதமாகவுமே இருந்திருக்கின்றது. இந்தப் புள்ளிவிவரங்கள் அனைத்தும் அரசுகளால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட குடித்தொகை சம்பந்தமான நூலில் இடம்பெற்றிருக்கின்றன. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்த நிலை மாறவில்லை.

ஆனால், இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பிறகு சிங்கள இனவாத அரசுகள் மேற்கொண்ட பல்வேறு வகையான - திட்டமிட்ட புறக்கணிப்பு நடவடிக்கையால் தமிழர் கல்வி படிப்படியாக வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறது; இன்று வரைக்கும்.

குறிப்பாக தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகளை அண்மைக்காலப் புள்ளி விவரங்களை அடிப்படையாக வைத்து நோக்கினால், சித்தியடைகின்ற சிங்கள மாணவர்களின் வீதம ஏறத்தாழ ஒரே மட்டத்திலேயே இருக்க, தமிழ மாணவர்களின் வீதம் குறைவடைந்து செல்வதை அவதானிக்கமுடியும்.

இதேபோல க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களினதும் பெறுபேறுகளின் வீதம் குறைவடைந்தே வருகிறது. தரப்படுத்துதலுக்கு முன்னர் பல்கலைகழகத்துக்குத் தெரிவாகும் தமிழ் மாணவர்களின் வீதமும் சிங்கள மாணவர்களின் வீதமும் 50:50 என்ற நிலையிலேயே இருந்தன.

குறிப்பாக கணித, விஞ்ஞானத் துறைகளில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் தமிழ் மாணவர்களின் வீதம் மிகவும் உயர்வாகவிருந்தது. ஆனால், தரப்படுத்தலுக்குப் பிறகு - திட்டமிட்ட ஏனைய கல்விப்புறக்கணிப்புகளால் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவடைந்தது.

| ஆண்டு | சிங்களம் | தமிழ் | முஸ்லிம் |
|---|---|---|---|
| 1995/1996 | 74.27% | 20.32% | 5.19% |
| 1999/2000 | 77.25% | 18.45% | 3.99% |
| 2000/2001 | 79.50% | 16.02% | 4.04% |
| 2001/2002 | 86.99% | 10.43% | 2.37% |
| 2002/2003A | 87.14% | 09.25% | 3.06% |

*கடந்த சில வருடங்களாக பல்கலைக்கழகத்துக்கு திறமை அடிப்படையில் தெரிவாகிய மாணவர்களின் வீதம் இங்கே தரப்பட்டுள்ளது. இதில் சிங்கள மாணவர்களின் வீதம் அதிகரித்துச் செல்வதையும் தமிழ்மாணவர்களின் வீதம் வீழ்ச்சியடைந்து செல்வதையும் இது காட்டுகின்றது.*

குறிப்பாக 1995/96, 2000/2001, 2001/2002, 2002/2003 கல்வி ஆண்டுகளில் முறையே மருத்துவபீடத்துக்குத் தெரிவான சிங்கள மாணவர்களின் வீதம் 81.39%, 85.70%, 85.51%, 84.73% என்ற உயர்ந்த நிலையில் இருக்க தமிழ் மாணவர்களின் வீதம் 14.04%, 10.90%, 10.28% எனக் குறைவடைந்து செல்வதை அவதானிக்கலாம்.

அதேபோல பொறியியல் துறையில் சிங்களவரின் அனுமதி 72.37%, 75.49%, 78.13%, 85.34% என அதிகரித்துச்செல்ல தமிழரின் அனுமதி 24.31%, 21.38%, 19.20%, 14.65% என வீழ்ச்சியடைந்து செல்கிறது.

## தமிழர் பிரதேசத்தின் வீழ்த்தப்படும் கல்வி - 5

கட்டுமானத் துறையில் (Architecture) முன்னர் சிங்களவர்களைவிட அதிக அளவில் தமிழர்களே இடம்பிடித்தார்கள் அண்மைக்காலத்தில் அந்தத் துறைக்கு அனுமதிபெறும் சிங்கள மாணவர்களின் வீதம் 95.55%, 97.38%, 100%, 100% என்ற அதி உச்ச நிலையில் இருக்கின்றது. தமிழ் மாணவர்கள் ஒருவருக்குக்கூட இந்தத் துறையில் அனுமதி கிடைக்காத நிலையே காணப்படுகிறது.

**செவ்வி: அற்புதன்**

இவ்வாறுதான் ஏனைய பல துறைகளிலும் தமிழ் மாணவர்களின் அனுமதிபெறும் வீதம் குறைவடைந்து செல்வதை நாம் அவதானிக்கலாம். தமிழினத்தை வேரோடு அழிப்பதற்குத் திடசங்கற்பம் பூண்ட சிங்களப் பேரினவாதம் தனது அந்தச் செயற்பாட்டை இலகுவாக நிறைவேற்றுவதற்காக தமிழ் மாணவர்களின் கல்வி மீது கைவைத்தது. தமிழர் கல்வியை இல்லாதொழிப்பதற்கான - முடக்குவதற்கான கைங்கரியத்தை அரசுகள் காலத்துக் காலம் மேற்கொண்டு வந்தன. அந்தச் செயற்பாடுகளின் விளைவாக இன்று எமது பிரதேசத்தின் கல்வி நிலை வீழ்ச்சியடைந்திருக்கிறது.

(வளரும்)

**ACTION CONTRE LA FAIM**

**Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in Sri Lanka since 1997. Current activities ate based in Ampara, Battlcaloa, Jaffna and Tricnnialee districts.** *We require services of a Radio Operator/ Fleet Manager for JAFFNA.*

***RADIO OPERATOR / FLEET MANAGER***

- Experience in RADIO Management, mainlenance and procedures:
- Experience in VEHICLE Management and maintenance:
- Good skills in Team management.
- Good computer Literacy- especially (MS Word. Excel)
- Working Experience in INGO's
- Vehicle Driving licence require.
- Fluent Spoken and written English and Tamil.
- Good knowledge of Jaffna area.
- Ability to work in team:
- Good autonomy.
- Motivation for humanitarian work.

*Contact to:*

**Miss S.Pushparanjini, Action Contre la Faim/Jaffna,**
**No. 40 Rakka, Lane/Chundikuli, Jaffna.** (38988)(26)
Phone number: 222 2465 Application before the 31st August.



## ஆங்கிலம் கற்க வேண்டும் என்ற ஆசையா? இதோ?

**இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழி**
**E.L.I. யின் தபால் மூலம் பாடநெறிகள்**

**அழகிய குடை, டீசேட்டை இலவசமாக பெறுங்கள்**

* பாடநெறியைத் தொடரும் உங்களுக்கு இலவச குடை ஒன்று
* தொலைபேசி பதிவை உள்ளடக்கிய கீடெக் ஒன்று
இலவச 30 day's Easy Way English புத்தகம்
என்பன அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படும்



மேலதிக விபரங்களுக்கு 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

**THE ENGLISH LANGUAGE INSTITUTE**
**P.O. BOX 83, KANDY. Tel: 0777-220002, 802849**



S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

## தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்




**எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்த தவறாதீர்கள்**

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்
நிம்மதியான வாழ்வுக்கு

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுருக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741


## இரு வேறு விபத்துக்களில் மூன்று இளைஞர்கள் காயம்

யாழ்ப்பாணம், ஓக.21

இருவேறு இடங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துச் சம்பவங்களில் மூவர் காயமடைந்து யாழ்.போதனாவைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அளவெட்டிப் பகுதியில் மோட்டார் சைக்கிளின் குறுக்காக நாய் ஓடியதில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்தார்கள் என்று தெரிவித்து மறவன்புலோ, சாவகச்சேரியைச் சேர்ந்த குலேந்திரன் மனோரஞ்சன் (வயது-24), உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த பஞ்சலிங்கம் சுதர்சன் (வயது -24) ஆகிய இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் - உடுவில் வீதியில் இடம் பெற்றது எனக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் வந்தவர்களான ஊரெழு மேற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னராசா சிவகுமார் (வயது-30) என்ற இளைஞர் படுகாயமடைந்தார்.

(9-12)


**FIVE STAR**

CFLபல்புகளை மட்டும் வாங்குங்கள்
காரணம்:
* உண்மையான 80% மின்சார சேமிப்பு
* குறைந்த மின்சாரத்தில் அதிக பிரகாசம்
* 8000இற்குக் குறையாத ஆயுள்
* உலக தராதர சான்றிதழ், ஒருவருட உத்தரவாதம்
* வீட்டு உபகரணங்களைப் பாதிக்காது



அனுசரணை:-
**PRESIDENT CFL**
**0777 306549**



திருமணக் கார் (குளிரூட்டப்பட்டது)



**வாடகைக்கு**
★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்து சேவைகளுக்கும் புதிய குளிரூட்டிய நவீன கார் வாடகைக்குண்டு.
தொடர்பு:
**சிவா வீடியோ லைபிறறி**
இராமலிங்க வீதி, முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு. (39059)
(24-14)



**இசைக் கருவிகள்**

சகலவிதமான இசைக்கருவிகளையும் அவற்றின் உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள நாடுங்கள்




**சாயி சங்கீதா**

**UG53,** பீபள்ஸ் பார்க்
கேஸ்வேர்க் வீதி, கொழும்பு-11
தொலைபேசி: **2384222 2445102**
பக்ஸ்: **2445102**

# "...இந்த இடம் வேண்டாம்; சொந்த இடத்தில் செத்தாலும் பரவாயில்லை...!"

வடமராட்சியில் இடைத்தங்கல் முகாம களில் வாழ்ந்துவரும் வலி.வடக்கு மக்களின் நிலை பெரும் கவலைக்குரிய விடயமாகவே உள்ளது.

அவர்கள் நிம்மதியாக உழைத்து வாழ முடியவில்லை. போதிய உபகரணங்கள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. போதிய நிவாரண உதவிகள் உரியவர்களுக்கு எட்டப் படவில்லை.

அவர்களது அன்றாட வாழ்வுக்குத் தேவை யான குடிதண்ணீரில் இருந்து தற்காலிக வீடுவரை எல்லாமே பிரச்சனைதான்.

தற்போது வளலாய் காற்றாடிப் பகுதி யில் 500 வீடுகள் அரை வீட்டுத்திட்டமுறை யில் அமைக்கப்படவுள்ளன என்று யாழ். அரச அதிபர் தெரிவித்திருக்கிறார். இரா ணுவ அனுமதியும் கிடைத்துள்ளதாகத் தொ விக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பல இன்னல்களை முகாம களில் அனுபவித்துவரும் வலி. வடக்கு மக் கள் ஒட்டுமொத்தமாக வடமராட்சியை விட்டு வெளியேற விரும்புகின்றார்கள்.

## 65 குடும்பங்களுக்கு ஒரு கிணறு போதுமா?

**தேவசிகாமணி அந்தோனிப்பிள்ளை (வயது - 46)**



4 பிள்ளைகள், தொழில்: கடற்றொழில்.

சொந்த இடம்: வளலாய் பாம்பீச் வீதி,

தற்காலிக இடம் வளலாய் இடைத்தங்கல் முகாம் திக்கம்.

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை இழந்து வெளியேறி, வடமராட்சி வந்து இந்த இடைத் தங்கல் முகாமில் தங்கியுள்ளோம்.

எஞ்சியிருந்த உடைமைகளை விற்று போட், கட்டுமரம், வலைகள், இயந்திரங்கள் வாங்கி எமது தொழிலை ஓரளவு ஆரம் பித்த வேளையில் ஆழிப்பேரலை வந்து அனைத்தையும் அடித்துச் சென்றுள்ளது. இதனால், எமக்கு சுமார் எட்டு லட்சம் ரூபா பெறுதியான சேதம் ஏற்பட்டுள்ளது.

எமது முகாமில் எமது ஊரைச்சேர்ந்த 65 குடும்பங்கள். இத்தனை குடும்பங்களுக் கும் ஒரு கிணறு மட்டும்தான். மலசலகூட வசதிகள் போதாது. நிவாரணத்திற்கு வழங கப்படும் உலர் உணவுப் பொருள்களையும் எம்மிடமுள்ள சிறுதொகைப் பணத்தையும் வைத்துக்கொண்டு வாழ்கையைக் கொண்டு செல்கின்றோம்.

தொழிலுக்குரிய உபகரணங்கள் இன் னும் தரப்படாமையால் எவ்வித தொழிலும் இன்றி இருக்கின்றோம்.

மேலும் இங்கு பெரும் கஷ்டத்துடன் தான் காலம் கழிக்கின்றோம்.

எமக்கு காற்றாடிப் பகுதியில் வீடுகள் வேண்டாம். காரணம் ஒரே வெட்டைவெளி தொழில் வசதிக்கு ஏற்ற இடம்இல்லை. மேலும் அதி உயர்பாதுகாப்பு வலைய அச்சுறுத்தல் வேறு. இப்படிப்பட்ட இடத்தில் எப்படி நிம்மதியாக வாழமுடியும்? எனவே, நாம் எமக்கு மேற்படி காற்றாடி தொண்டை மானாற்றுப்பிரதேசத்தில் வீடு வேண்டாம் என்று எழுதிக் கொடுத்துள்ளோம்.

எங்களை, எமது சொந்த இடமான வள லாய்ப்பகுதியில் குடியிருக்க விடுங்கள் அல லது எமது தொழில்வளத்திற்கு ஏற்றவாறு கடற்கரை ஓரமாக எங்களுக்கு நிரந்தர வீட் டினை அமைத்துதரவேண்டும் என்று அரசை யும் அரசசார்பற்ற நிறுவனங்களையும் கேட டுக்கொள்கின்றோம்.

பூனை குட்டி போட்டுவிட்டு வீட்டுக்கு வீடு இடத்திற்கு இடம்பெயர்வது போல நாமும் மாறிமாறி இடம்பெயர்ந்து திரிகின்றோம். போதும் எம்மை இனியாவது நிம்மதியாக வாழவிடுங்கள்.

## நிரந்தரமற்ற இருப்பு

**அருளப்பு பொன்மலர் (வயது 40)**



மூன்று பிள்ளைகள்

சொந்த இடம்: வளலாய் 1990 ஆம் ஆண்டு கணவன் காணாமற போயுள ளார்.

தொழில்:கடற்றொழில்.

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை யின்போது சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதி யான போட், கட்டுமரம், எஞ்சின், வலைகள் போன்ற உடைமைகளை இழந்துள்ளோம்.

இந்நிலையில், வடமராட்சி வந்த நாம் இருந்த உடைமைகளை விற்று கட்டுமரம் வைத்து மீண்டும் கடற்றொழில் செய்து வரும் போதுதான் ஆழிப்பேரலை வந்து சுமார் 1½ லட்சம் ரூபா பெறுமதியான எமது உடைமை கள் யாவற்றையும் அள்ளிச்சென்றுள்ளது.

நிவாரண உலர் உணவுப் பொருள்கள் தரமற்ற நிலையில் உள்ளன. இருப்பினும் அவற்றை ஒருவாறு சுத்தப்படுத்தி பயன் படுத்துகின்றோம்.

தற்போது நாம் மூன்றாவது தற்காலிக காணியில் வீடு அமைத்து இருக்கின்றோம். இந்த வீடு நிரந்தர மற்றது. எந்த வேளை யிலும் காணிக்காரர் எழும்பச் சொல்லலாம்.

எனவே, நாம் எமக்கு நிரந்தரமான தொழில் வசதிகளுடன் கூடிய இடத்தில் குடியமர விரும்புகின்றோம்.

காற்றாடி தொண்டைமானாற்றுப் பகுதி யில் அனைத்து வசதிகளுடனும் எமக்கு நிரந்தர வீடு கிடைத்தால் சந்தோசப்படுவோம்.

மேலும் எமது தேவை அனைத்தையும் நன்கு உணர்ந்து அரசு எம்மைக் குடியமர்த்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

தற்போது நாம் அதிக அளவில் கூலி வேலை செய்துதான் எமது குடும்பத்தைச் சமாளிக்கின்றோம். எமக்கு ஒரு நிரந்தர வீடு மற்றும் அனைத்து வசதிகளுடனும் கிடைக்கு மாயின் நாம் ஒரு கடையாவது வீட்டுடன் போட்டுக்கொண்டு யாருக்கும் பாரமாக இருக்காமல் வாழலாம் என்கின்றா பொன்மலர்.

## வடமராட்சி கிழக்கு இடைத்தங்கல் முகாம் மக்கள் மனங்களில் இருந்து..........8

## அடிப்படை வசதிகள் அவசியம் தேவை

**திருமதி தவராசா மேரி வசந்தா (வயது-39)**



4 பிள்ளைகள்

கடற்றொழில்

சொந்த இடம்: வளலாய்

தற்காலிக இடம்: வளலாய் இடைத்தங்கல் முகாம திக்கம்

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக் கையின்போது சுமர் 10 ரூபா லட்சம் பெறுமதி யான கடற்றொழில் உபகரணங்கள், வீடுபோன்ற உடைமைக்ளை இழந்து வடமராடசிக்குவந்து பல இடங்கள் தங்கிய பின்பு இந்த இடைத் தங்கல் முகாமில் தங்கியுள்ளோம்.

இங்கு வந்த பின்பு எஞ்சியுள்ளதோடு கடன்பட்டும் போட், வலை எஞ்சின் போன்ற வைகளை வாங்கி தொழில் செய்யத் தொடங கிய வேளை ஆழிப்பேரலை வந்து அழித்துச் சென்றதில் சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த இழப்பின் பின்பு மீண்டும் உறவினர் ஒருவரால் கட்டிய வீட்டில் தங்கியுள்ளோம். ஆழிப்பேரலையால் சேதமடைந்தவர்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கான 2500 ரூபா நிவாரணம் எமக்கு வழங்கப்படவில்லை. இதனால் நாம் பெரும் பாதிப்படைந்துள்ளோம்.

2500 ரூபா நிவாரணப் பதிவுகள் உள்ள வர்களுக்கு மட்டுமே ஏனைய பொது நிறுவன நிவாரணங்கள் வழங்கப்பட்டன. இதனால் எமக்கு அந்த நிவாரணங்களும் கிடைக்க வில்லை.

எம்மை எமது வளலாய்ச்சங்கம் காற்றாடி தொண்டைமானாற்றுப் பகுதிக்கு செல்லுமாறு கேட்கின்றது. நாம் இங்கு கஷ்டப்படுவதை வட்டு அங்குபோகத் தயார். சராசரி ஒரு பொதுமகனுக்கு என்னென்ன அடிப்படை வசதிகள் தேவையோ அந்த வசதிகளை யாவது ஏற்படுத்தித்தரவேண்டும் எனப் பணி வாக உதவும நிறுவனங்களையும் அரசையும் கேட்டுக்கொள்கின்றேன் என்கிறார் மேரி வசந்தா.

## பாதுகாப்பும் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படவேண்டும்

**சுவாம்பிள்ளை மடுத்தீன் (வயது-63)**



ஒரு பிள்ளை

தொழில்: கடற்றொழில்

சொந்த இடம்: வளலாய்

தற்காலிக இடம்: வளலாய இடைத்தங்கல் முகாம திக்கம்.

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது சுமார் 1½ லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை இழந்துவிட்டு வெளியேறி வடமராட்சி வந் தோம். பின்பு 1996 ஆம் ஆண்டு இங்கிருந்து வன்னிப் பிரதேசம் சென்று பெரும் கஷ்டங் களை அனுபவித்து 2002 இல் மீண்டும் வடம ராட்சி திக்கத்துக்கு வந்துசேர்ந்தோம்.

இங்கு ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உடை மைகளை இழந்து மீண்டும் கஷ்டமடைந் துள்ளோம்.

தற்போது கடற்றொழிலில் கூலி வேலை செய்து சீவியம் போக்குகின்றோம்.

யாழ்.அரச அதிபரினால் கூறப்பட்டுள்ள இராணுவத்தினரின் அனுமதி உறுதியானதா என்பது எம்மக்கள் மத்தியில் கேள்வியாகவே உள்ளது.

அங்கு நாம் குடியேறினால் அனைத்து வசதிகளும் கிடைக்குமா கடலில் தொழி லுக்குப்பாதுகாப்பு, கடற்கரையில் தொழில் உபகரணங்கள் வைப்பதற்குப் பாதுகாப்பு, எமது தொழிலாளர்கள் கடற்கரைக்கும் தமது வசிப்பிடத்திற்கும் சென்றுவர ஆபத்தில்லாத பாதுகாப்பு வழங்கப்படுமா? இவைகளை உறுதிப்படுத்துவது யார்? இவற்றை அரசும இராணுவமும் உறுதிப்படுத்தினால் மட்டுமே அடிக்கடி இடம்மாறி இன்னல்படும் எங் களால் நிம்மதியாக வாழமுடியும்.

இவை ஏற்படுத்தித் தரப்படுமானால் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் அப் பகுதியில் குடியமர சந்தோசமாகச் செல் வோம் என்கிறார் மடுத்தீன்.

## வேதனைப்பட்டது போதும்

**சின்னையா கில்பேட் (வயது-68)**



முன்னாள் இணக்கசபைத் தலைவர், முன்னாள் வளலாய் கடற்றொழிலாளர் கூட்டுறவாளர் சங்கங்களின் சமாசத்தலைவர்.

8 பிள்ளைகள்

சொந்த இடம்: வளலாய்

தற்காலிக இடம்: வளலாய் இடைத்தங்கல் முகாம் திக்கம்.

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை யின்போது சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதி யான உடைமைகளை இழந்துள்ளேன். அத்து டன், எனது இரு மகள்மாரின் கணவர் மாரான ரங்கசாமி இராமகிருஷ்ணன் (வயது 32, 4 பிள்ளைகள்), அன்ரன் ஜெயக்குமார் (வயது 31, 4 பிள்ளைகள்) ஆகியோரை இழந்த நிலையில் குடும்பப்பாரத்துடன் வெளி யேறி வடமராட்சிக்கு வந்து சேர்ந்தோம்.

எஞ்சியிருந்த ஒரு படகுடன் திக்கம் கட லில் சிறிதாக தொழில் ஆரம்பித்தேன். ஒரு மாதம் வரை கடலில் தொழில் செய்துகொண டிருந்தபோது கடற்படையினர் எனது போட்டை மறித்து எனது மீன்களை அள்ளிக் கடலில வீசியதோடு எனது போட் எஞ்சினையும் கழற றிக் கடலில் போட்டுவிட்டார்கள். இருந்த படகை விற்றுவிட்டு கட்டுமரம், வலைகள் போன்றவை வாங்கி மீண்டும் சிறு தொழில் செய்தேன்.

அவ்வேளைதான் ஆழிப்பேரலை வந்து எஞ்சியவை அனைத்தையும் அள்ளிச் சென் றது. எனக்கு சுமார் 10 லட்சம் ரூபா வரை நஷ்டம் ஏற்படுத்தி விட்டது.

குடிதண்ணீர் ஒழுங்காக இல்லை நாம் குடும்ப அங்கத்தவர் தொகை கருதி ஒரு வச தியான வீட்டைத் தற்காலிகமாகவேனும் அமைக்க முடியவில்லை.

காரணம் இங்குள்ள மக்கள் நாம் வீடு கட்ட அனுமதிப்பார்கள் பின்பு கட்டி ஓரிரு மாதத்துக்குள் காணி எமக்கு வேண்டும் இடத்தை விடுங்கோ என்று சொல்கின்றார்கள. இப்படி இங்கு இதுவரை 4 வீடுகள் அமைத்து இடம்மாறியும் வீட்டினைப்பிரித்தும் உள்ளோன.

நாம் உயிர்கள், உடைமைகள் போன்ற வற்றை இழந்து துயருறுகின்றோம்.

இவற்றின் மத்தியில் இருந்து நித்தம் நித்தம் வேதனைபடுவதைவிட நாம் எமது சொந்த இடத்தில் போய் நிம்மதியாக இறப் பதை விரும்புகிறோம் என்றார் கில்பேட்.

## பாதுகாப்பு வலயத்துக்கு அருகில் குடியிருக்க அஞ்சுகின்றேன்

**தருமதி புஸ்மலர் வீக்ரர் (வயது-32)**

4 பிள்ளைகள், கடற்றொழில்



சொந்த இடம்: வளலாய்

தற்காலிக இடம்: வளலாய் இடைத் தங்கல் முகாம திக்கம்.

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது கடற்றொழில் உபகரணங்கள் உட்பட சுமார் 10 லட்சம் ரூபா உடைமைகளை இழந்த நிலை யில் இடம்பெயர்ந்து வடமராட்சி வந்து இந்த இடைத் தங்கல் முகாமில் தங்கியுள்ளோம். இங்கு மலசலகூட வசதி போதாது பலர் வெட் கத்தையும் விட்டு பற்றை மறைவுகளையும், கடற்கரையையுமே பயன்படுத்துகின்றார்கள்.

தண்ணீர் ஒழுங்காக இல்லை சுத்தமாக வும் இல்லை. சில வேளைகளில் உப்புத் தண ணீரையும் பவுசர்கள் மூலம் ஊற்றி விட்டுச் செல்கின்றார்கள். அத்தோடு சுகா தாரச் சீர்கே டான முறையில் நீர் வழங்கப் படுகின்றது.

மேலும் எமது இருப்பிடங்களில் நிம்மதி யாக இருக்கமுடியவில்லை. காரணம் காணிச் சொந்தக்காரர்கள் அடிக்கடி எம்மை எழும்பச் சொல்லி நிற்பந்திக்கிறார்கள். இதனால் எமது கல்விகற்கும் பிள்ளை களின் கல்வி பெரும் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றது.

இந்நிலையில், எமக்காக வளலாய் காற் றாடிப்பகுதியில் இருப்பிட வசதி ஏற் படுத்தித்தருவதாக அரச அதிபர் வாக்குறுதி அளித்துச் செயற்பட்டுவருகின்றார்.




மேற்படி இடம் இராணுவ உயர்பாது காப்பு வலையத்தின் வேலியுடன் கூடிய இடம. இதனால், எமது பிள்ளைகள் உளவியல் ரீதி யாக பெரும்பாதிப்பைச் சந்திக்க வேண்டி ஏற்படும் என அஞ்சுகின்றேன். காரணம் இராணுவத்தினரின் பயிற்சி வேட்டுச் சத தங்கள், ஹெலி, விமானங்களின் சத்தங்கள் இராணுவக் கெடுபிடிகள் போன்றவையே.

இதறகு மத்தியில் எமது கடற்றொழிலுக் கான போக்குவரத்துப் பாதைகள் நிரந்தரமாக இருக்காது எனக் கருதுகின்றேன்.

மேலும் ஆழிப்பேரலையால் இருந்த சுமா 5 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை யும் இழந்த நிலையில் உள்ளோம்.

காற்றாடிப்பகுதியில் சராசரி ஒரு மனித தேவைக்கான நீர், மலசலகூடம் வைத்திய வசதி, கடைகள், பாடசாலை, போக்குவரத்து வசதி பிள்ளைகளுக்கான விளையாட்டு மைதா னம், எமது தொழிலுக்கான கடலில் - கரை யில் பாதுகாப்பு வசதி. இதற்கும் மேலாக எமக்கு வழங்கப்படும் வீடு, காணிகள் எமக்கே சொந்தமாக வழங்கப்படவேண்டும். இவைகள் உறுதி செய்யப்பட்டால் மட்டுமே எம்மால் நிம்மதி யாக வாழமுடியும் என்கின்றார் புஸ்ப மலர்.

**சி.சுந்தரலிங்கம்**



# மதுரை மீனாட்சி அம்பாள்

## அருள்வாக்கும் ஜோதிடமும்

**K.V. கோவிந்தசுவாமி & ஸ்ரீ லட்சுமி**

இந்தியாவிலிருந்து கணவன், மனைவி இருவரும் வருகைதந்துள்ளார்கள். இவர்கள் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிக்குப் பரிகாரம் கூறுவார்கள். ஒருமுறை சந்தித்து பாருங்கள். [காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை]

தொடர்பு:- 50, Navalar Road, Jaffna. (Near Manohara Theartre Back side).
T.P:- 0776446525. (38376) (54-34-18)


## 33 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 14 - 01 - 1936

உதிர்வு 20 - 07 - 2005

திருமதி
### பாலரத்தினம் சிவக்கொழுந்து

எமை இரு கண்கள் போல் அணைத்து வளர்தவளே -
இன்று
எம் நெஞ்சினிலே நினைவாகி சென்றனையோ- உம்
ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்
பரன் அவன் பாதத்தில்....

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி, தபால் மற்றும் பிரசுரம் மூலமும் துயர்பகிர்ந்து உதவிகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மற்றும் அன்னார் நோயுற்று இருந்தவேளை வைத்திய உதவிகள் புரிந்து ஆறுதல் அளித்து அன்பாகக் கவனித்த யாழ்.போதனாவைத்தியசாலை மற்றும் சாவகச்சேரி வைத்தியசாலை வைத்திய பெருந்தகைகளுக் கும் தாதிமார் மற்றும் ஊழியர்களுக்கும் வைத்தியசாலை மற்றும் வீட்டிலும் வந்து ஆறுதல் கூறிய அனைத்து உள்ளங்களுக்கும் எம் உள்ளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று(21.08.2005) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருந்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை. (39071)(2114.45)

கணவர், பிள்ளைகள்,
பெறாமக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

## நீங்காத நினைவில்...

### 3 ஆம் ஆண்டு



ஆயுள்வேத வைத்தியர் (நவாலி- மயிலிட்டி)

### அமரர் தெய்வேந்திரசிங்கம் அருள்நந்தி

அன்னை மடியில் 20-07-1949

ஆண்டவன் மடியில் 28-08-2002

திதி: 21-08-2005

காலத்தின் கட்டாயத்தில் - நீங்கள்
காலனின் பிடியில் சிக்கிய போதும்
வேரறுந்த ஆலமரத்தில்- நாங்கள்
விழுதுகளின் அரவணைப்பில் தளராது நிற்கின்றோம்
காலங்கள் கடந்துதான் செல்கின்றன - ஆனாலும்
காயங்கள் தான் ஆறமறுக்கின்றன!

நீங்கா நினைவுகளுடன்:
அன்பு மனைவி,
மகன், மகள்

கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13. (39067)(21.14.45)

## காலாவதியான பொருள்கள் அழிப்பு

வலி.தென் மேற்கு,ஓக.21

இணுவில் பகுதியிலுள்ள கடைகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த வாரம் மேற்கொண்ட திடீர் பரிசோதனை ஒன்றின்போது திகதி காலாவதியான பெரும் எண்ணிக்கையிலான பிஸ்கற் பைக்கற்றுகள், போத்தலில் அடைக்கப்பட்ட பழச் சாறுகள், ஜஸ் வகைகள் என்பன கண்டு பிடிக்கப் பட்டன.

கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற இத் திடீர்ச் சோதனையின்போது கண்டு பிடிக்கப் பட்ட காலாவதியான மேற்படி பொருள்கள் அவ்விடத்திலேயே அழிக்கப்பட்டன. இணுவில் பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ். மனோகரன், உடுவில் பொது சுகாதாரப் பரிசோதகர் பொ.சிவரூபன் ஆகியோரால் இச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. (8-135)

## கிராமங்களை மேம்படுத்த 'வெண்புறா' திட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ். மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள் வாழுகின்ற கிராமங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இத்தகவலை அந்நிறுவனத்தின் அதிகாரி சிவராஜினி தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களை உள்வாங்கியுள்ள கிராமங்களைத் தெரிவு செய்து அங்கு எமது சேவையினை வழங்கி ஐந்து வருடங்களில் அவர்களின் வாழ்வில் மாற்றத்தைக் கொண்டு வருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்கென காக்கை தீவு ஜே.132 கிராம சேவையாளர் பிரிவும், அரியாலை ஜே.96 கிராம சேவையாளர் பிரிவும் முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த இரண்டு கிராமங்களிலும் முதற் கட்டமாக மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படும்.

அடுத்து இங்குள்ள மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் பொருட்டு மேலதிக மாலைநேர வகுப்புகளை நடத்தவுள்ளோம்.

அத்துடன், அவர்களுக்குரிய கற்றல் உபகரணங்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகளையும் ஆரம்பிக்கவுள்ளோம்.

இங்கு எமது நிறுவனத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஐந்து வருடங்களுக்குத் தொடர்ந்து நடைபெறும். இப்படி அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (9-13)


## Wanted

Medical Laboratory Technologist for Locum/Permanent Employment from 01.09.2005.

**Medical Director,**
Central Nursing Home (PVT) Ltd,
350, Palali Road,
Thirunelvely.
(39014)(42.21.14.45)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 07 - 04 - 1919

அரன் அடியில் 22 - 07 - 2005

### திருமதி அருந்தவஈஸ்வரி இரகுநாதன்

22.07.2005 அன்று சிவபதமடைந்த எனது அன்னையின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (21.08.2005) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனமும் நடைபெறும்.

இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
**உற்றார், உறவினர், நண்பர்கள்**
மகள்: செல்வி செந்திற்செல்வம் இரகுநாதன்
(இளைப்பாறிய அதிபர்)

'உடையார் வீடு'
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (38968) (21.14.45)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 - 02 - 1920

மறைவு 21 - 08 - 2003

### அமரர் நடராசா ஆறுமுகதாசன்

(இளைப்பாறிய துணை அதிபர், புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி)

*திதி: நவமி*


ஆண்டுகள் இரண்டு மறைந்தாலும்
ஆறுதில்லை எம் இதயம்!
மீண்டும் ஒரு முறை உமது திருமுகத்தைக்
காண ஏங்குதே எம் மனம்!

ஆத்மா சாந்திபெற ஆண்டவனை இறைஞ்சுகிறோம்.

- குடும்பத்தினர்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (37380) (21.14.45)

## பதினாறாம் ஆண்டில் ஈரவிழிகளுடன்...







அமரர் **கதிர்காமத்தம்பி இரவீந்திரதாஸ்** (ரவி) 14-01-1958

அமரர் **கதிர்காமத்தம்பி இராதாகிருஸ்ணன்** (கண்ணன்)

அமரர் **நாகமணி தில்லைநாதன்** (நாதன்) 30-03-1959

ஆண்டவன் படைப்பில்: 22-03-1962

அந்நியன் அழிப்பில்: 21-08-1989

திதி: 24-08-2005 (அபரபக்க பஞ்சமி)

முத்தெனவே முச்சுடர்களாய் மூவுலகம் போற்ற வாழ்ந்தவர்களே!
பார் போற்றும் இனிய குணம் கொண்ட வித்தகர்களே!
பண்பான உம் குணத்தால் தரணியிலே உயர்ந்துநின்றீர்களே!
மண்ணுலக வாழ்க்கை போதுமென்றெண்ணியா விண்ணுலகம் சென்றீர்கள்.
எங்கள் இதயத் தெய்வங்கள் ரவி, கண்ணன், நாதனுக்கு என்றும் எம் இதய அஞ்சலிகள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வத்தனை,
புலோலி மேற்கு, பருத்தித்துறை. (38993)(50)

தங்கள் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

# பல்முனைத் தளங்களும் மும்மொழியில் புலமையும் கொண்ட பண்டிதர் சச்சிதானந்தன் ஐயா

## விபுலானந்த அடிகளாரின் நெருங்கிய சகபாடி

## மதுரை மீனாட்சி அம்மன் கோவில் தூண்கள் சங்கீதம் பாடுகின்றன என்கிறார்

**சிறப்புச் செவ்வி (பகுதி ஒன்று)**

**பண்டிதர் க.சச்சிதானந்தன் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமைமிக்கவர். மதுரைப் பண்டிதர். ஆங்கிலத்தில் கலைமாணி, முதுதத்துவமாணி பட்டங்களைப் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டத்தை இவருக்கு வழங்கிப் பெருமை பெற்றுள்ளது.**

**தமிழிலும், ஆங்கிலத்திலும் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், ஆய்வுகள் ஆகியனவற்றை எழுதியுள்ள இவர் நமது சூழலின் மாமேதையாகத் திகழ்கிறார் என்றால் மிகையல்ல.**

**யாழ்ப்பாணக் காவியம், இலங்கைக் காவியமான 'பருவப் பாலியர் படும்பாடு' ஆகியவை இவரது இருபெரும் காவிய நூல்களாகும். மஞ்சுகாசினியம்; இயங்கு தமிழியல் என்ற இலக்கண நூல்கள், மஞ்சு மலர்க்கொத்து சிறுவர் பாடல்கள், ஆனந்தத்தேன் கவிதைத் தொகுதி - ஆகியனவும் தமிழில் வெளிவந்துள்ள இவரது நூல்களாகும். தமிழ் யாப்பிலக்கணத்தின் அடிப்படைகள் எந்தையரின் அடிச்சுவட்டில் Fundamentals of Tamil Prosody, Foot Prints of Our Fathers ஆகிய இரு பெரும் ஆங்கில நூல்களையும் இவர் ஆக்கியுள்ளார். ஓவியர், வானியல் வல்லுநர், ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர், தமிழரசுக்கட்சியின் ஸ்தாபகர்களுள் ஒருவர் என்ற பன்முனைத் தளம் கொண்டவர் பண்டிதர் சச்சி ஐயா என்று அன்புடன் அழைக்கப்படும் இந்த வித்தகர். நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத திறம் மிக்க ஒரு மகா ஞானியாக - தமது 86 வயதில் உள்ள அவரை நீண்ட முயற்சியின் பின்னர் நேர்காணலுக்குச் சம்மதம் பெற வைத்தோம்.**

✱ **கேள்வி:** நீங்கள் மும்மொழிப் புலமை மிக்கவர், கவிஞர், எழுத்தாளர், வானியல் வல்லுநர், ஓவியர், கல்வி உளவியலாளர், இவ்வாறு பல்துறை மேதைமை மிக்க உங்களது பிறப்பு, குடும்பம் மற்றும் வாழ்க்கைப் பின்புலத்தை அறிய விரும்புகிறோம்.

• *பதில்:* நான் 1921 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி மாவிட்டபுரத்தில் பிறந்தேன். என்னுடைய தாயார் தெய்வானைப்பிள்ளை. தந்தையார் கணபதிப்பிள்ளை. என்னுடன் கூடப்பிறந்த ஒரே சகோதரி ஈஸ்வரியம்மா. இதுதான் எங்களது குடும்பம்.

எனது தந்தையார் பஞ்சாங்க கணிதராக, வானியல் சோதிட வல்லுநராக விளங்கினார். ஏழு பரம்பரையாக அவரது மூத்த தலைமுறையினர் பஞ்சாங்க கணிதர்களாக இருந்து வந்துள்ளனர். அப்படியே நானும் கணித்து வருகிறேன்.

ஆரம்பக் கல்வியை நடேஸ்வராக் கல்லூரியில் பெற்றேன். பின்பு பருத்தித்துறையில் தந்தையார் இருந்தபோது, ஹாட்லிக்கல்லூரியில் பயின்றேன். பின்பு மாவிட்டபுரத்தில் வாழ்ந்தபோது திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரியில் (இப்போதைய பல்கலைக்கழகம்) பயின்றேன். புகையிரதம் மூலமாகவே அப்போது பாடசாலைக்கு வந்துபோவேன். இந்த மூன்று கல்லூரிகளுமே எனது கல்வியிலேயே பிரதானமான பங்கு வகித்தவை.

✱ *கேள்வி:* அதன் பின் பண்டிதர் படிப்பை இந்தியாவில் மேற்கொண்டீர்களா?

• *பதில்:* பரமேஸ்வ ராக் கல்லூரியில் படிக்கும் போது வித்துவான் கார்த்திகேசபிள்ளை, நவநீதகிருஸ்ண பாரதியார், சு.நடேச பிள்ளை ஆகியோரிடம் கற்று, அங்கிருந்து கொண்டே 1941 ஆம் ஆண்டு மதுரைச் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றினேன். அப் போது இந் தியா மற்றும் இலங்கையில் இருந்து தோற்றிய மாணவர்களுள் நானே முதலாவதாகச் சித்தியடைந்தேன். இது பற்றி இந்துசாதனம் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏக காலத்தில் ஆங்கிலமும்,சமஸ்கிருதமும் படித்தேன். லண்டன் பீ.ஏ.பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தேன்.



✱ *கேள்வி:* சமஸ்கிருதம் படித்ததாகக் கூறுகிறீர்கள் அதை யாரிடம் படித்தீர்கள்?

• *பதில்:* நான் அந்தணர்களிடமே சமஸ்கிருதம் படித்தேன். சிவப்பிரகாசதேசிகரிடம் முதலில் சமஸ்கிருதம் படித்தேன். பின்னர் சுப்பிரமணிய சாஸ்திரிகரிடம் பயின்றேன். மாவிட்டபுரம் பாலசுந்தரக் குருக்கள், இராமஐயர் ஆகியோரிடமும் பயின்று சமஸ்கிருத மொழியில் புலமை பெற்றேன். நான் சுப்பிரமணி சாஸ்திரிகளிடம் படித்த போது நடந்த சம்பவம் என்மனதில் நீங்காதுள்ளது. சாஸ்திரிகள் எல்லோருக்கும் வேதம் படிப்பித்துக்கொண்டிருந்தார். அப்போது என்னைப்பார்த்து 'நீ சூத்திரன் நீ வேதம் படிக்கக் கூடாது, நீ அங்காலை திண்ணையிலை போய் இரு' என்று கட்டளையிட்டார். நானும் அவ்வாறே வெளித்திண்ணையில் அமர்ந்து, அவர் பிராமண மாணவர்களுக்குச் சொல்லித் தருவதை செவிவழியாகக் கேட்டு அறிவு பெற்றேன்.

✱ *கேள்வி:* அப்படியானால் நீங்கள் ஒரு ஏகலைவனாக இருந்துள்ளீர்கள். இல்லையா?

• *பதில்:* ஓம்... அப்படித்தான். வேதத்தை எப்படி ஓதுவதென்பது எனக்குத் தெரியும். (சில வேத ஸ்லோகங்களை ஓதிக் காட்டுகிறார்).

அப்போது சமஸ்கிருத காவியங்கள் பலவற்றையும் படித்தேன். சமஸ்கிருதத்தில் கவிதைகளையும் எழுதுவேன். சமஸ்கிருத அறிவு எனது கவிதை ஈடுபாட்டிற்குத் தூண்டுகோலாக இருந்தது.

### ஆங்கில இலக்கியங்கள் கவிதை எழுதத் தூண்டின

✱ *கேள்வி:* உங்களது படைப்பாக்கத்துறையில் கவிதை என்பது பிரதானமானது. கவிதையின் பால் உங்கள் நாட்டம் எவ்வாறு ஏற்பட்டது?

• *பதில்:* எனக்குக் கவிதையின்பால் ஆர்வத்தை உண்டாக்கியது ஆங்கில இலக்கியங்கள்தான். நான் ஹாட்லிக்கல்லூரியில் படிக்கும்போது கேம்பிறிட்ஜ் சீனியர் பரீட்சைக்கு ஆங்கில இலக்கியத்தை ஒரு பாடமாக எடுத்தேன். ஆங்கில இலக்கியத்திலே ஷேக்ஸ்பியருடைய நாடகம், சாள்ஸ் டிக்கின்ஸின் Tale of Two Cities நாவல், 300 Years of English Poetry என்ற கவிதைத் தொகுதி, எடிசனுடைய கட்டுரைகள் என்பனவற்றைப் படிக்க வேண்டியிருந்தது.

ஆங்கில இலக்கியத்திலே இருக்கிற எழுத்தாளர்களின் மீது எனக்கு விருப்பம் அதிகம். நான் படிக்கிற காலத்தில் இவர்களது எழுத்துக்களை விரும்பிப் படிப்பேன். இப்பவும் கூட ஷேக்ஸ்பியரின் ஜூலியர் சீஸரையும், மக்பெத்தையும் படித்துக்கொண்டுதானுள்ளேன். மில்ரனின் ஒரு நாடகத்தை 70 தடவைகளுக்கு மேல் படித்துவிட்டேன். கீற்ஸ் என்ற ஆங்கிலக் கவிஞன் தான் எனது அபிமானப் புலவன். ஷெல்லியும் அப்படித்தான். ஆங்கில இலக்கியங்கள் வழியாகவே - அந்த மூச்சோடுதான் - தமிழில் கவிதைகளை எழுதும் உந்துதல் எனக்கு ஏற்பட்டது.

✱ *கேள்வி:* தமிழ் மொழியுணர்வுக் கவிதையான 'சாவிற் தமிழ் படித்துச் சாக வேண்டும்' என்ற அருமையான கவிதையுட்பட பல சுவையான கவிதைகளை எழுதி 'ஆனந்தத் தேன்' தொகுதியில் தந்துள்ளீர்கள். அந்தக் காலத்தில் இத்தகைய உணர்வுக் கவிதைகளைப் படைக்க உங்களைத் தூண்டியவை எவை?

• *பதில்:* தமிழில் இருக்கும் சுவைதான் அக் கவிதையைப் படைக்க என்னைத் தூண்டியது. கம்பராமாயணம், திருக்குறள் போன்றவற்றைப் படித்து, இன்புற்று, தமிழின் சுவையை அறிந்துகொண்டதாலேயே இதனை எழுதினேன்.

### 'கல்கி'யின் வீட்டில் தொங்குகிறது கவிதை

✱ *கேள்வி:* ஏனைய கவிதைகள் பற்றிக் கூறுங்கள்?

• *பதில் :* அந்தக் காலத்தில் இங்கிருந்து எழுதுகிறவற்றை இந்தியப் பத்திரிகைகள் வெளியிடுவதில்லை. அப்போது நான் எழுதிய பாட்டொன்றுதான் 'சக்தி' என்ற பத்திரிகையில் வெளிவந்தது. ஏ.கே. செட்டியார் என்பவரால் வெளியிடப்பட்ட பெரிய பத்திரிகை அது. அதை நான் நல்லதோர் அங்கீகாரமாகக் கொண்டேன்.

பிறகு 1938 ஆம் ஆண்டில் 'கல்கி' பருத்தித்துறைக்கு வந்தபோது, நான்தான் அவருக்கு வரவேற்புப் பாமாலை பாடிக்கொடுத்தேன். அவருடன் பிரபல ஓவியர் மாலியும் வந்திருந்தார்.

அப்போது எனக்கு 17 வயது. கல்கிக்கு அந்தப் பாட்டின் மீது நல்ல விருப்பம். அவர் அதனைப் 'பிறேம்' போட்டு, தனது வீட்டில் தொங்கவிட்டிருந்தார். தனது சரித்திரப் புத்தகத்திலும் அதனை வெளியிட்டுள்ளார்.

நான் அண்மையில் இந்தியாவுக்கு ப் போனபோது என்னை வந்து பார்த்த கல்கியின் மகன், அது இப்போதும் வீட்டில் மாட்டப்பட்டிருப்பதாகக் கூறினார். என்னைச் சிறுகதைகள் எழுதுமாறு தூண்டியவர் கல்கிதான்.

✱ *கேள்வி:* ஈழத்து முன்னோடிச் சிறுகதையாளர்களுள் ஒருவராக ஆனந்தன் என்ற பெயரில் நீங்கள் பல சிறுகதைகளைப் படைத்துள்ளீர்கள். உங்கள் சிறுகதைகளின் பின்னணி என்ன?

• *பதில்:* தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களைப் பார்த்தே 'ஹரிஜனங்களின் கண்ணீர்' என்ற சிறுகதையை எழுதினேன்.

அதேபோல ஒரு தாழ்த்தப்பட்ட சிறுமி தாகத்துக்குத் தண்ணீர் கேட்டபோது, அதைக் கொடுக்காமல் விட்டார்கள். அதனால் எழுந்ததே 'தண்ணீர் தாகம்' என்ற கதை . இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொரு பின்னணியிலேயே எழுதப்பட்டன.

### சிறுகதை எழுதுவதை குறைத்துவிடக் காரணம்...

✱ *கேள்வி:* சொற்ப காலத்துக்குள் சொற்ப கதைகளையே படைத்துள்ளீர்கள். பின்னர் கதைகளை எழுதவில்லை. இதற்கு என்ன காரணம்?

• *பதில்:* தி.சதாசிவ ஐயர் என்று ஒருவர் இருந்தார். அவர் பெரிய சமஸ்கிருத வித்துவான். அவர் எனது 'சாவிற் தமிழ் படித்துச் சாகவேண்டும்' பாடலைச் சிறப்பானதெனப் பாராட்டி, 'கலாநிதி' என்ற பத்திரிகையில் வெளியிட்டார்.

அவர் இலக்கியங்களை மூன்று விதமாகப் பிரித்துச் சொன்னார். வாசிக்கும் நூல்கள், படிக்கும் நூல்கள், கற்கும் நூல்கள் என்பதே அந்தப் பிரிப்பு. வாசிக்கும் நூல்கள் என்பது படித்துவிட்டு உடனே எறிந்துவிடும் தன்மையானது. படிக்கும் நூல்களும் அவ்வாறுதான். நீர் இதுகளை எழுதவேண்டாம். உம்முடைய படைப்பாற்றலுக்கு என்றும் நிலைத்து நிற்கக் கூடிய படைப்புகளைச் செய்வதே நல்லது. சிறுகதைகளைமற்றவர்களை எழுதவிடும். நீர் உயர்ந்த இலக்கியங்களைப் படைப்பதில் ஈடுபடும் என்று சொன்னார் சதாசிவ ஐயர்.

அவ்வாறே நானும் கவிதைத் துறையில், காவியம் ஆக்குவதில் ஈடுபட்டேன். க.தி.சம்பந்தனும் அவ்வாறுதான். சிறுகதைகளை எழுதியவர் பின்னர் அதைவிட்டு விலகி சகுந்தல காவியம் இயற்றினார்.

### நல்ல கவிதைக்கு ஓசை நயம் தேவை

✱ *கேள்வி:* நீங்கள் ஒரு மரபுக் கவிஞர். மரபுக் கவிதை,புதுக்கவிதை என்று பேதப்படுத்துவது தொடர்பாக உங்களது அபிப்பிராயம் என்ன?

• *பதில்:* புதுக்கவிதை என்று பெயர் வைத்ததே தங்களுக்கு ஒரு புகழ் தேடுவதற்காகவே. ஆங்கிலத்தில் டி.எச்.லோறன்ஸ் முதலானவர்கள் இவ்வாறான கவிதைகளை எழுதியுள்ளனர். அது கட்டற்ற, வடிவற்ற (Formless Poetry) என்பதுதான். இந்தியாவுக்குப் போனபோது சண் ரி.வி. பேட்டியின்போதும் இக்கேள்வியைக் கேட்டனர். ஆங்கிலத்தில் டி.எச்.லோறன்ஸின் "The Snake" என்ற கவிதை முக்கியமான வடிவமற்ற கவிதை. ஆங்கிலத்துக்கும் தமிழுக்கும் வித்தியாசமுண்டு. ஆங்கிலம் ஒரு Actioned Language உச்சரிப்பில் அழுத்தம் கொடுக்கப்படவேண்டும். (சில சொற்களை உச்சரித்துக் காட்டுகிறார்) ஆங்கிலத்தில் வசனமாக எழுதினாலும் சொல்லும்போது ஒரு ரிதம் இருக்கும். தமிழில் அப்படியில்லை.

✱ *கேள்வி:* கவிதைக்கு ஓசை முக்கியம் என்று கருதுகிறீர்களா?

• *பதில்:* நான் இப்போது ஆங்கிலத்தில் ஒரு நூலை எழுதியுள்ளேன். Fundamentals Of Tamil Prosody (தமிழ் யாப்பிலக்கண அடிப்படைகள்) என்பது அந்நூலின் பெயர். அதில் தமிழ்க் கவிதையின் அடிப்படை என்ன? என்பது பற்றிக் குறிப்பிட்டு உள்ளேன். தமிழில் செப்பலோசை, அகவலோசை என்ற இருவகையான ஓசைகள் உள்ளன. அகவலோசையிலிருந்து வஞ்சி பிறந்தது. செப்பலோசையிலிருந்து கலி பிறந்தது. இது பற்றி இந்நூலில் விரிவாகச் சொல்லியிருக்கிறேன்.

இந்த ஓசைகள் இல்லாமல் இருக்கிற பாட்டுகள் கவிதையாக இருக்கமுடியாது. கட்டற்ற கவிதைகளைப் பலரும் எழுதுவதற்குக் காரணம் அவர்களுக்குச் சொற் களஞ்சியம் போதாமையே.

அண்மையில் 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் ஓர் ஆங்கிலக் கட்டுரை பார்த்தேன். அதில் சிங்களக் கவிதை இறந்துவிட்டதாக எழுதியிருந்தார் கட்டுரையாளர். அதேநிலைதான் இங்கும் உள்ளது. வடிவமற்ற கவிதையை எழுதும் வல்லமைகூட உயர்ந்த கவிஞர்களால்தான் முடியும். எண்ணமும் சொற்களும் இல்லாதவர்களால் நல்ல கவிதையைப் படைக்கமுடியாது. எழுதப்படும் கவிதைகள் காலங்காலமாக அழியாவரம் பெற்றவையாக நின்று நிலைக்கும் போதே அவை சிறந்த கவிதைகளாக இருக்கும்.

கவிதைமட்டு மல்ல, சங்கீத மும் அடிப் படித்தான். எம்.எஸ்.சுப்பு லட்சுமி, அரியக்குடி ராமனுஜ ஐயங்கார், முசிறி சுப்பிரமணிய ஐயர் போன்றோரின் பாடல்கள் இப்போது சுவை தருகின்றன. இப்போதைய பாட்டுகள் ரிஷி பிண்டம் இராத் தங்காது என்பது போல - சில நாள்களிலேயே மறந்துவிடுகின்றன.



### முத்தமிழ் வித்தகர் விபுலானந்தருடன்

✱ *கேள்வி:* முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தருடன் நெருக்கமான தொடர்பைப் பேணியவர் நீங்கள். எவ்வாறு அவருடனான தொடர்பு ஏற்பட்டது?

• *பதில்:* விபுலானந்தர் 'யாழ் நூல்' ஆராய்ச்சியில் ஈடுபடும்போது யாழ்ப்பாணத்திற்குவந்தார். வந்து அம்பிகைபாகன், நவரத்தினம் ஆகிய நண்பர்களைச் சந்தித்தார். அப்போது அவர்களிடம் தனக்குத் தமிழும் விஞ்ஞானமும் தெரிந்த ஒரு பண்டிதர் வேண்டுமென்று கேட்டார். அவர்கள் என்னையும் வேறு சிலரையும் அனுப்பிவைத்தனர். யாழ்ப்பாணத்தில் கலா நிலையம் என்ற இடத்தில் நேர்முகப்பரீட்சை நடத்தினார் விபுலானந்தர். அவரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் நான் விடையளித்தேன்.

அதன் பின் தான் கடிதம் அனுப்புவதாகவும் கொழும்பில் தன்னுடன் வந்து பணியாற்றுமாறும் சொல்லி என்னைத் தெரிவுசெய்தார். அந்தக் கடிதம் இப்போதும் என்னிடம் உள்ளது. அப்போது அவர் கொழும்பில் பேராசிரியராக இருந்தார். சு.வித்தியானந்தன், க.சதாசிவம் போன்றோர் அவரிடம் படித்துக்கொண்டிருந்தனர். என்னை அழைத்து கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில் தங்குவதற்கு இடம் ஏற்பாடுசெய்து தந்தார். அங்கிருந்து அவரது ஆராய்ச்சிக்குத் தேவையானவற்றை எழுதினேன். அவருடன் இந்தியாவுக் கும் போனேன்.

திருக்கொள்ளம் பூதூர் என்ற இடத்தில் பெருந்தனவந்தர் ஒருவரின் மாளிகையில் தங்கியிருந்து, பல கோயில்களுக்கும் சென்று ஆராய்ச்சி செய்தேன். குழல், யாழ் என்பவற்றின் அளவு, அவற்றின் ஒலி, வகை போன்றவற்றைப் பற்றி அறிந்து குறிப்புகள் எழுதினேன். மகர யாழ் பற்றிய விடயங்களை அறிந்து படமாக வரைந்தேன். விபுலானந்தரின் யாழ் நூலில் உள்ள மகர யாழ் நான் வரைந்ததே.

ஆராய்ச்சியின் நிமித்தம் மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கும் போனேன். அங்கு மூன்று தொகுதியான தூண்கள் இருக்கின்றன. வெறும் கல் தூண்கள் தான். ஆனால், அவற்றில் முதல் தொகுதியை விரலால் சுண்டும் போது 'ஸரிகமபதநி' என்கிற ஏழு சுரங்களும் கீழ் ஸ்தாயியில் ஒலிக்கும். அடுத்த தொகுதி மத்திய ஸ்தாயியிலும், மற்றத் தொகுதி உயர் ஸ்தாயியிலும் ஒலிக்கும். அந்த மாதிரி அதனை அமைத்துள்ளார்கள்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

**செவ்வியும் படங்களும் இயல்வாணன்**

## யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம்,ஓக.21

ஊரெழு சக்தி புரம் சிவபூரணி முத் தமிழ்மன்ற அற நெறிப் பாடசாலை யின் அனுசரணை யுடன் அப்பகுதி யில் உள்ள இளை ஞர் மற்றும் யுவதி களுக்கான யோகா சனப் பயிற்சி வகுப்பு கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆண், பெண் என இருபாலா ருக்கும் நடத்தப்படு கின்ற இந்த யோகா சனப் பயிற்சி வகுப்புகளை யோகா சனப் போத னாசிரி யர் சிவனேசராஜன் நிகழ்த்தி வருகின் றார்.

(த-13)


யாழ் நகரில் இருந்து குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவை (PARCEL SERVICE)

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்காரப் பொருள்களைக் குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்தில் எம்மால் பொதி செய்து அனுப்பிவைக்கப்படும்.

கட்டணவிவரம் விமானமூலமான

ஐரோப்பிய நாடுகள் (பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், சுவிஸ், பிராங்போட், இத்தாலி.) } 650/= 1kg

கனடா - 1050/=

குறிப்பு:- எம் மூலமாக அனுப்பப்படும் பொருள்கள் அந்த அந்த நாட்டில் அவர்களது வீடுகளில் ஒப்படைக்கப்படும். வேறு எது விதமான மேலதிகக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

தொடர்புகளுக்கு:- (சி-44045)

RAIN BOW TRAVELS & TOURS

T.P.: 0777328219, 021-222 3237.

32½, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

ராஜா கிறீம் ஹவுஸ் அருகில்

அபிநயா நகை மாடத்திற்கு மேல்.



* சோர்வுத் தன்மை அகற்ற
* மிதமிஞ்சிய சக்தி தரவல்ல
* கடின உழைப்பாளிகளுக்கு
* உடல் இயக்கத்தை துரிதப்படுத்த
* ஆரோக்கியத்தை மேன்மைப்படுத்த
* சோர்வையும் களைப்பையும் போக்கி மேலதிக சுறுசுறுப்பையும் சக்தியையும் கொடுக்க

கொழுப்புத் தன்மை அற்றது

இயற்கை மூலிகைகளான 19 அமினோ அமிலங்களில் 10 அத்தியாவசியமான அமிலங்கள் உள்ளடக்கிய

BODY TONE
PROTEIN COMPLEX TABLETS

இள நரையா? முகப்பரு தொல்லையா? முகத்தில் கரும்புள்ளிகளா? தலை மயிர் உதிர்கிறதா?

இவைகளைத்தவிர்த்திட 15உயிர்ச்சத்துக்கள் உயிர்ச் சத்து E, பயோட்டின், கல்சியம் பென்தெனேடியும் அடங்கிய

Hair Formula
Supplement Capsules

ஒன்றால் மட்டுமே முடியும்

Importers & Distributors

K.S.P. International Pharmacy Colombo - 11. Tel : 2449766

யாழ்மாவட்டத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறக் கூடிய ஒரேஇடம்

Wesco Pharmacy 470, Hospital Road, Jaffna. Tel: 2223188, 22233335

(சி-44581)

உலகில் லட்சக்கணக்கானோர் பாவித்துப் பலன் கண்டுள்ளார்கள். பக்கவிளைவு அற்றது. இப்போது நாடு பூராவும் உள்ள பிரபலமான பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


## உதவிக் கொடுப்பனவுகளை பெறுமாறு கோரிக்கை

நல்லூர்,ஓக.20

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயல கப் பிரிவுகளைச் சேர்ந்த உதவிப்பணம் பெறுவோர் 25 ஆம் திகதி வியாழக்கிழ மைக்கு முன்னர் தமக்கான கொடுப்பனவு களைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆனைப் பந்தி உப தபாலதிபர் உரியவர் களைக் கேட் டுள்ளார். (8-111)

## மாற்றாரின் மன்னை....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

✱ ஒப்பந்தம் கைச்சாத்தானதுடன் எல்லா விதமான அடிபாடுகளும் முடிவுக்கு வர வேண் டும்.

✱ 2005ஆம் ஆண்டின் இறுதியளவில் இந்தோனேஷிய அரசு ஆசேயிலுள்ள உள் நாட்டவரல்லாத படையினர் மற்றும் பொலீ ஸார் அனைவரையும் திருப்பி அழைத்துக் கொள்ளும்.

✱ அதேவேளை, சமாந்தரமாகப் புரட்சி வாதிகள் தமது படைகளின் ஆயுதங்களைக் களைவதிலும் தமது 3 ஆயிரம் படைகளைக் கலைப்பதிலும் ஈடுபடுவார்கள்.

✱ ஆசேயிலுள்ள அரசியல் கட்சிகள் ஒரு வருடத்துக்குள் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள இந்தோனேஷிய அரசு உதவும்.

✱ ஆசே மாகாணம் புதிய சட்டம் ஒன்றின் கீழ் நிர்வகிக்கப்படும். 2006ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி அச்சட்டம் அறிமுகப் படுத்தப்படும்.

✱ அப்பிரதேசத்தின் இயற்கை வளங் களில் 75 வீதம் அப்பகுதிகளுக்கே பயன் படுத்தப்படும்.

✱ தீவிரவாத இயக்க உறுப்பினர்களுக் குப் பொதுமன்னிப்பு வழங்கப்படும். ஒப்பந்தம் கையெழுத்தான இரு வாரங்களுக்குள் கைதி கள் விடுவிக்கப்படுவர்.

✱ வெளிநாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு மற்றும் நிதி விடயங்கள் மத்திய அரசிடமே இருக்கும். அதேசமயம் உள்ளூர் தேவை களுக்காக வரிகள் அறவிட ஆசே அனுமதிக் கப்படும்.

ஆசே மாகாணத்துக்கான அமைதித் தீர்வை இந்தோனேஷிய ஜனாதிபதி சுகிநோ பாம் பாங் யுதோயோனோ கடந்த 16ஆம் திகதி அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் அறிவித்து அத்தீர்வு முறையாகச் செயற்படுத்தப்படும் என்று உறுதியளித்தார்.

இந்தோனேஷியாவின் 60 ஆவது ஆண்டு விழாவைக் குறிக்கும் விதத்தில் நாடாளு மன்றத்தின் வருடாந்த மாநாட்டில் அவர் பேசினார்.

ஆசே மாகாணம் தொடர்பாக ஒப்பந்தத் தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள அனைத்து அம்சங்களும் செயற்படுத்தப்படும் என்று அவர் அறிவித்தார். கடந்த பல வருடங் களாகத் துன்பம் அனுபவித்துவருகின்ற ஆசே மக்களுக்கு இந்த ஒப்பந்தம் ஒரு வெற்றி யாகும் என்று யுதோயோனோ கூறினார்.

பிரிவினை கோரிவரும் பப்புவா பிரதேச பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது பற்றியும் யுதோனோயோ பேசினார். முன்னர் கிரி யான் ஜாயா என்றழைக்கப்பட்ட இப்பிதேச மக்களும் பிரிவினை கோரிப் போராடுகின்ற னர். அம்மக்களுக்குப் பிரிவினைக்கு இடம் கொடுக்கமுடியாது. ஆனால், அதிக சுயாட்சி வழங்கும் விதத்தில் இப்பிரச்சினை தீர்க்கப் படவேண்டும் என்று அவர் கூறினார். ✱


G.C.E. O/L
மனைப்பொருளியல்
99 முதல் 2004 - 6 வருட வினா -விடை
விலை 100/-
கிடைக்கும் இடம்:
திகழ் பதிப்பகம், K.K.S.வீதி, இணுவில். (39114)


## பதவி வெற்றிடம்

1.அலுவலக உத்தியோகத்தர் (Office Staff)
2.களஞ்சியக் காப்பாளர் (Store Keeper)

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

இதற்கான தகைமைகள்:

**அலுவலக உத்தியோகத்தர்:**

1. விண்ணப்பதாரி தமிழ், ஆங்கில மொழித்திறன் மிக்க வராக இருத்தல்வேண்டும். சிங்கள மொழி தெரிந்தி ருத்தல் வரவேற்கத்தக்கது.
2. கணக்கியல், கணனி, நிர்வாகத்திறன் கொண்டிருத் தல் வேண்டும்
3. சாரதி அனுமதிப்பத்திரம், சாரதி அனுபவம் இருத்தல் வேண்டும்.
4. 5வருடம் அரச சார்பற்ற நிறுவனங்களில் அல்லது வேறு நிறுவனங்களில் கடமையாற்றிய அனுபவம் இருத் தல் அவசியம்.

**களஞ்சியக் காப்பாளர்:**

1. சரளமாக ஆங்கிலம், தமிழ் பேச, எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் அவசியம்.
2. 5வருடம் களஞ்சியக் காப்பாளராக அல்லது அது தொடர் பான பணியில் கடமையாற்றிய அனுபவம் இருத் தல் வேண்டும்.
3. சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் அவசியம்.
4. வவுனியா, யாழ்ப்பாணம் பகுதிகளில் பணியாற்றக் கூடியவராக இருத்தல் அவசியம்.

**விண்ணப்பத்திற்கான முடிவுதிகதி:**
**31-08-2005**

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

**To: Liaison Officer,**
The Japan Center for Conflict Prevention,
342, Mannar Road,
Paddanichoor, Vavuniya.
Tel.: 024 - 4588090
Fax: 024 - 2224301.

(சி-44593)(26-14-17)

ACTION CONTRE LA FAIM

## OFFICE MOVING:

Action contre la faim in Jaffna has moved to new location
The new Office is based now at.
40, RACCA LANE,
CHUNDIKULI,
JAFFNA.
Tel.- 021 222 2465/021 222 6993
Fax /021 222 2465.

(38889)(26-14-17)

## மரண அறிவித்தல்

### திருமதி பரராஜசிங்கம் கிருஷ்ணவதி



புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் இந்துமகளிர் ஒழுங்கை, கந்தர்மடத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் கிருஷ்ணவதி 17.08.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான தர்மலிங் கம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பரராஜசிங்கம் (Jaffna Traders) யாழ்ப்பாணம் அவர் களின் அன்பு மனைவியும் ஸ்ரீகாந்தன் (கனடா), ஸ்ரீறஜனி (Australia), ஸ்ரீகரன், ஸ்ரீமுகுந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும் கௌரி (Canada), சிவபாலன் (Australia), தயராஜினி, அனுசூயா ஆகி யோரின் அன்பு மாமியும் நிருஜா, நிவேதா, பிரவீணன், பிரதாபன், ஜாகவன், ஜாகுலன், அட்சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி, சண்முகராஜா, நாகரெத்தினம் மற்றும் இராசையா, சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனி யும் காலஞ்சென்றவர்களான நாகேஷ், சிவநாமம் மற்றும் சரஸ்வதி, ஞானம்பாள், விஜயலஷ்மி ஆகியோரின் அன்புச் சகலி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2005) ஞாயிற் றுக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவு டல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் பத்து மணியளவில் யாழ்ப்பாணம் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

27/7, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 3205 (சி/44553)(24-14-17-26)

தகவல்:
*மக்கள்,*
*மருமக்கள்.*


Mother board சிறப்புச் சலுகை




Intel processor
I865GVM7
for New P4/Celeron D
FSB 800/533
3 x DDR400/333/266
6 Channel Audio
8X AGP
8 x USB, & SATA
3 x PCI, 10/100 LAN
intel

AMD processor
KVT 600X-L
for AMD-K7 CPU
FSB 533/400
2 x DDR 400
2 channel Audio
8x AGP slot
8 x USB, & SATA
3 x PCI, 10/100 LAN
AMD

Intel processor
I845GLM-AGP
for P4/Prescott
FSB 533/400
2 x DDR SDRAM266
6 Channel Audio
8X AGP
6 x USB, & SATA
3 x PCI, 10/100 LAN
intel

Mercury
Empowering your PC
ஆசியா-பசிபிக்கில் 70வீதாசார சந்தையைக் கொண்டுள்ளது
இந்தியாவின் 1ஆவது மதர் போர்ட்
இலங்கைமுழுவதும் பரந்த 256 முகவர் சந்தை நிலையங்களில் பராமரிப்பும் விற்பனையும்

MiPAQ PC Series
Intel Prescott/HT P4 Celeron AMD Duron Athlon Sempron




ரூ 48,600/= தொடக்கம்
2.4 Intel Celeron, 15" Monitor
Intel 845 Mother board, 64MB VGA
128 DDR, 80GB HDD, 52X CD ROM
1.44 MB FDD, PS2 MM Keyboard
Optical mouse, Casing, Sound+Speaker

Free faxmodem & 25 hours internet & E-mail.

(சி-44598)

MICRO PC SYSTEMS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 175/3 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் தொலை: 021 2225893, 077 3126712 |
| நெல்லியடி | பிரதான வீதி, (நெல்லியடி, பொலிஸ் நிலையம் அருகில்) தொலை: 077 3039536 |
| வவுனியா | 73C, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா, தொலை 024 4588339, 0777308417 |
| கொழும்பு - 06 | 15, 36வது ஒழுங்கை, வெள்ளவத்தை தொலை: 011-4516764 |
| கொழும்பு - 13 | 310 ,ஜோர்ஜ் ஆர். டி. சில்வா மாவத்தை கொட்டாஞ்சேனை தொலை 4619673 |
| திருகோணமலை | 148, பிரதான வீதி, திருகோணமலை. தொலை: 026 222 1054, 078 8720639 |

# பாதிப்புற்றோருக்கான நிவாரணப் பணிகளில் அசமந்தப்போக்குக் காட்டும் சில நிறுவனங்கள்

## ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட திருமலை மக்களின் அவலம் தீருமா?

திருகோணமலை மாவட்டத்தில் ஆழிப்பேரலைகளின் தாக்கத்தின் விளைவாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக ஒரு சில தன்னார்வத தொண்டுநிறுவனங்கள் அக்கறையுடன் செயலாற்றுகின்ற அதேவேளை வேறு சில நிறுவனங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட மக்களை மென்மேலும் கவலை அடையச் செய்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளப் போகிறோம் என போட்டி போட்டுக்கொண்டு வந்த இந்த நிறுவனங்களில் ஒரு சில நிறுவனங்களின் அசமந்தப் போக்கினாலும் ஏனோதானோ என்ற செயற்பாட்டினாலும் பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு சாரார் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டவர்களாகவே இருந்து வருகின்றனர்.

இதுதொடர்பாகப் பாதிக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட உயர்மட்ட அதிகாரிகளிடம் முறையிடச் சென்றாலோ 'சாமி விடை கொடுத்தாலும் பூசாரி விடை கொடுக்காத கதையாக' பாதிக்கப்பட்ட மக்கள் இந்த அதிகாரிகளைச் சந்திக்க முடியாத நிலையும் நிலவி வருகின்றது பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் தொடர்பாக மாவட்டச் செயலகத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் பேச்சுகள் மேற்கொள்ளப்பட்டவேளை இந்த நிறுவனங்கள் பல்வேறு வாக்குறுதிகளையும் வழங்கி வந்துள்ளன. இதற்கு அமைவாக ஒரு சில நிறுவனங்கள் தங்கள் பணியினை வெகு கச்சிதமாகவே நிறைவேற்றி வருகின்றன இது பாராட்டுக்குரிய விடயம் தான். ஆனால் அசமந்தப்போக்குடன் நடந்துகொள்ளும் நிறுவனங்களைப் பொறுத்தவரை இத்தகைய நிறுவனங்களின் செயற்பாட்டினால் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது

குறிப்பாக, திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை மாரிகாலம் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் தோன்றத் தொடங்கியுள்ளன. இந்தநிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிக இருப்பிடங்கள் மற்றும் தொழில் வாய்ப்புகளையும் உறுதி அளித்த தன் பிரகாரம் இந்த நிறுவனங்கள் செய்து தரவேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் எதிர் பார்க்கின்றனர்

ஒரு சில நிறுவனங்கள் இத்தகைய குடும்பங்களின் சுயதொழில் வேலைவாய்ப்பு தொடர்பாக விவசாயம் கைத்தொழில மீன்பிடி போன்ற தொழில்களுக்கு உதவுவதாக வாக்குறுதி அளித்தபோதிலும் இதற்கான முழுமையான உதவிகள் இதுவரை வழங்கப்படவில்லை என வும் கவலை தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை நகரிலிருந்து பத்துக் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வேலூர் கிராமம் ஆழிப்பேரலைகளின் தாக்கத்தினால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட கிராமமாகும். பாரிய உயிரிழப்புகளும் இங்கு இடம்பெற்றுள்ளன. இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களில் 48 குடும்பங்கள் பெரியகுளம் பகுதியில் தற்காலிக இல்லங்களில் குடியேற்றப்பட்டுள்ளன. ஆனால், இந்த மக்களுக்கான அடிப்படை வசதிகளோ அன்றி தொழில் முயற்சிக்கான உதவிகளோ உரியமுறையில் வழங்கப்பட வில்லை என இந்த மக்கள் கவுலை தெரிவித் துள்ளனர்

இதேவேளை - நிலாவெளி, கும்புறுபிட்டி, கோபாலபுரம் கிராமங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக உணவு உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கோதுமை மாவில் புழுபூச்சிகள் காணப்பட்டுள்ளதாகவும் இவை பாவனைக்கு உகந்ததாக இல்லை எனவும் இந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து சுகாதார அதிகாரிகள் இந்த மாவை சோதனையிட்டு இதன் மாதிரிகளை களுத்துறையில் உள்ள உணவு மருந்து பகுப்பாய்வாளரின் பரிசீலனைக்கென அனுப்பி வைத்துள்ளனர். இவ்வாறு விநியோகிக்கவென நிலாவெளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள 360 மூடைகள் கோதுமை மாவினை சுகாதார வைத்திய அதிகாரிகள் விநியோகம் செய்ய விடாது தடுத்து வைத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களானால் எதனையும் சாப்பிட்டு விடலாம் என்ற எணணத்தில் இத்தகையோர் இருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

**திருமலையிலிருந்து சங்கீத்**

குறிப்பாக மாரிகாலம் ஆரம்பித்து விட்டால் தங்கள் கதி என்ன என்றே பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் நெஞ்சில் நெருப்பைக் கொட்டிக் கொண்டு வாழ்ந்து வருகின்றன.இத்தகைய மக்களின் துன்பங்களையும் துயரங்களையும் இத்தகைய நிறுவனங்களும் அதிகார மட்டங்களில் உள்ளோரும் முழுமையாக உணர்ந்து கொள்ளவேண்டும் மனிதாபிமானத்துடனும் சேவை உணர்வுடனும் செயற்படுவதன் மூலமே இத்தகையோரின் குறைபாடுகளை ஓரளவாவது தீர்த்துவைக்க முடியும்.

இதனை உரியவர்கள் செய்வார்களா?✱

# ஆறுமாதம் கடந்தும் இயல்புநிலைக்கு திரும்பாத வடக்கு-கிழக்கு கல்விப்புலம்

✱ பாதிக்கப்பட்ட 67 பாடசாலைகளில் ஒன்றுதானும் மீளக்கட்டியெழுப்பப்படவில்லை!

✱ பலியான 37 ஆசிரியர்களின் குடும்பத்திற்குக் கிடைத்த நிவாரணம் என்ன?

✱ 3 ஆயிரத்து 322 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை!

✱ மாணவனின் உளநிலை திரும்பியுள்ளதா?

✱ 3 ஆயிரத்து 689 மாணவர் பெற்றோரை இழந்துள்ளனர்!

✱ தொண்டர் ஆசிரியர் நிரந்தரமாக்கப்படுவார்களா?

ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று சுமார் எட்டு மாதகாலமாகின்றது. இந்த அனர்த்தத்தால் வடக்கு- கிழக்குப் பிராந்தியம் ஆடிப் போயுள்ளது. சேதத்தை மீளக் கட்டியெழுப்பும் பணியில் வடக்கு- கிழக்கைவிட தெற்கில் அதிகூடிய கவனம் செலுத்தப்படுவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

ஆழிப்பேரலையால் ஆழிந்துபோன வீடுகளில் ஒரு வீடுதானும் இதுவரை மீள நிரந்தரமாகக் கட்டிமுடிக்கப்படவில்லை. அதேபோன்று அழிந்த 67 பாடசாலைகளில் ஒரு பாடசாலைதானும் கட்டியெழுப்பப்படவில்லை. இந்தநிலையில் கூட்டத்திற்கு மேல் கூட்டம் நடத்துவதும் அதிகாரிகள் தமது அலுவலக இருக்கைகளுக்கு விடைகொடுத்து கொழும்புக்கு அலைவதும் தான் எஞ்சியுள்ளது. மாறாக இது விவகாரத்தில் எந்த முன்னேற்றத்தையும் காணவில்லையென வடக்கு- கிழக்குக் கல்விச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

**மூருவிழா**

வடக்கு- கிழக்கில் 1995 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் 142 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. கடந்த கால போர் மற்றும் ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக இவை மூடப்பட்டுள்ளன.

வடக்கு- கிழக்கின் 8 மாவட்டங்களில் 24 கல்வி வலயங்கள் ஏற்படுத்தப்பட்டு அதனூடாக நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது ஆயிரத்து 853 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் ஆயிரத்து 595 தமிழ் மொழிமூலப் பாடசாலைகளாகும். ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக வடக்கு-கிழக்கில் 125 பாடசாலைகள் சேதமுற்றபோதிலும் 67 பாடசாலைகள் முற்றாக சேதமடைந்திருக்கின்றன. இதில் அம்பாறை மாவட்டம் முதன்மை வகிக்கிறது. கரையோர கல்முனை வலயத்தில் 15 பாடசாலைகள் முற்றாகவும் 8 பாடசாலைகள் பகுதியாகவும் அக்கரைப்பற்று வலயத்தில் 23 பாடசாலைகள் முற்றாகவும் 11 பாடசாலைகள் பகுதியாகவும் சேதமாக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அதே இடத்தில் 19 பாடசாலைகளும் புதிய இடத்தில்19 பாடசாலைகளும் அமைக்கப்பட வேண்டியுள்ள து.

இலங்கையில் ஆழிப்பேரலை காரணமாக 176 பாடசாலைகள் சேதமடைந்ததாகவும் 91 ஆயிரத்து 234 மாணவர்களும் 3 ஆயிரத்து 687 ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டதாகத் தேசிய நடவடிக்கை மத்தியநிலையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

வடக்கு- கிழக்கில் 67 பாடசாலைகளில் இரு பாடசாலைகளைத் தவிர இதுவரை ஒரு பாடசாலைதானும் கட்டியெழுப்பப்படவில்லை என்பது சிந்திக்கவேண்டிய விடயம்.

எட்டுமாதமாகின்றபோதிலும் தொடர்ந்தும் அவை வேறு பாடசாலைகளிலும் அரைகுறைக் கொட்டில்களிலும் காலை, மாலை நேரப்பாடசாலையாக வாடகை மனநிலையில் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் ஏனோதானோ என்று இயங்கி வருகின்றன.

அத்தனைக்கும் அரசசார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. அது தொடர்பாகப் பாரிய திட்டம்கூடத் தயாரிக்கப்பட்டுவிட்டது. காணிப்பிரச்சினை இல்லாத பாடசாலைகூட இன்னும் கட்டப்படவில்லை. ஏனென்று புரியவில்லை.

புதிய இடத்திலோ, பழைய இடத்திலோ பாடசாலைகள் எழுப்பப்பட்டு ஒருநேரப் பாடசாலையாக எப்போது இப்பாடசாலை முறைமை மாறுகின்றதோ அப்போதுதான் ஓரளவு நிலைமை வழமைக்குத் திரும்புமென எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை பாதிக்கப்பட்ட பாடசாலையோ அது தற்காலிகமாக இயங்கும் மற்றப் பாடசாலையோ சீராக இயங்கமாட்டாது.

**கல்விச் சமூகம் சீரான உளநிலையில் இல்லை**

ஆழிப்பேரலை பாடசாலையை மட்டும் பாதிக்கவில்லை. மாறாகச் சமூகக் கட்டமைப்பையே சீரழித்துள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர், ஆசிரியர், பெற்றோர் முறையான சீரான உள நிலையில் இல்லை. ஆழிப்பேரலையில் ஏற்பட்ட உயிரிழப்பு, சொத்து இழப்புகளைவிட உளப்பாதிப்புப் பாரதூரமானது. இலங்கையில் 2கோடி மக்களுக்கு ஆக 30 உளவள மருத்துவர்களே இருப்பதாக ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

ஆழிப்பேரலை பாதிப்புகளிலிருந்து பாடசாலைகளையும் அதனுடன் இணைந்த சமூகப் பின்னணியையும் பொருத்தமான முறையில் முன்னேற்றுவதற்கு உவப்பான மனிதவளம் தேவைப்படுகிறது. உதாரணமாக செவிலித்தாய், பாடசாலை ஆளணியினர், பல்கலை மாணவர், சமூக நிறுவன உறுப்பினர் , பாடசாலை மட்ட உளவள ஆளணியினர் என அடுக்கிக்கொண்டு போகலாம்.

## தென்பகுதி பாடசாலைகளுக்கு பல்வேறு உதவிகள்; எங்களுக்கும் கிடையாதா என ஏங்கும் எம்மவர்கள்

ஆழிப்பேரலையால் 5 ஆயிரத்து 785 சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளனர். அவர்களில் 3 ஆயிரத்து 689 பேர் வடக்கு- கிழக்கைச் சேர்ந்தவர்கள், தாயை மட்டும் இழந்தவர்கள் ஆயிரத்து 288 பேர் தந்தையை மட்டும் இழந்தவர்கள் அயிரத்து 995 பேர், தாயையும் தந்தையையும் இழந்தவர்கள் 406 பேர்.

**அரவணைப்பு உளவியல் அவசரம் தேவை**

இத்தகைய சிறுவர்களுக்கு ச் செவிலித் தாயின் (Community Mother) அரவணைப்பு உளவியல் ரீதியில் அத்தியாவசியமாகும். அவர்களே இவர்களுடன் நெருங்கிப் பழகி உரிமையுடன் அன்பு செலுத்தி வழிக்குக் கொண்டு வரமுடியும். மாணவனது உளநிலையைச் சீராக்காதவரை எந்தப் பாடசாலை முகாமைத்துவமும் வீணாய்ப்போகுமென்பது தெரிந்ததே.

**ஆசிரியர் பற்றாக்குறை**

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 23 ஆயிரத்து 195 ஆசிரியர்களுக்கு ஆளணிக் கோப்பு (Cadre) இடமளிக்கிறது. ஆனால், இருப்பதோ 19ஆயிரத்து 873 ஆசிரியர்கள் மட்டுமே. எனவே, மேலும் 3322 தமிழ்மொழிமூல ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இவற்றைப் பட்டதாரிகள் 2ஆயிரத்து 400 பேரை நிரந்தரமாக உள்ளீர்ப்பதன்மூலம் தீர்க்கமுடியும் என கல்வியமைச்சு கூறுகிறது.

இதேவேளை, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கூறுகையில், உலக வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட மூவாயிரம் ஆசிரியர் நியமனங்களை 2000ஆம் ஆண்டில் செய்திருந்தால் இம்மதிப்பீடு சரியாக இருந்திருக்கும். ஆனால், அதனை 2005 வரை இழுத்தடிக்க அதனிடையில் 2 ஆயிரத்து 500 பேர் ஓய்வில் சென்றுவிட்டனர். ஆதலால் ஆசிரியர் தட்டுப்பாடு ஆறாயிரம் பேர் என்று கூறுகின்றார் அவர்.

எனவே, ஆசிரியர்களை அந்தந்த வருடத்தில் நியமிக்கும் பட்சத்தில் பற்றாக்குறை என்பது பெரிதாகக் காட்டமாட்டாது.

**தொண்டர் ஆசிரியர்**

நாட்டிலுள்ள தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பிலுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்வார்களாகவிருந்தால் அவர்களை நிரந்தர ஆளணிக்குள் உள்வாங்குவது நியாயமான ஒரு காரியமாகும். கஷ்டம், அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளில் பணியாற்றிய தொண்டராசிரியர்களுக்கு நடைபெற்று வந்த நேர்முகப் பரீட்சை நிறுத்தப்பட்டுள்ளது. இது உடனடியாக நடத்தப்படுவதுடன் எஞ்சியுள்ள தொண்டராசிரியர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் அவசியமாகும். இதேபோன்று, 2001 இல் பணியாற்றிய 203 ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்கியது போன்று எஞ்சிய 561 ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களையும் நிரந்தரமாக்கினால் வடக்கு - கிழக்கில் நிலவும் இரண்டாயிரம் ஆங்கில பாட ஆசிரியர் தட்டுப்பாடு ஓரளவு நிவர்த்திக்கப்படலாம்.

நாட்டில் பதில் கடமைபுரியும் அதிபர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் சமாசாரம் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. போர்ச்சூழல் மற்றும் ஆழிப்பேரலை போன்ற அனர்த்த நிலைமைகளில் உயிரைத் துச்சமென மதித்து தொண்டாற்றிய இவ்வணியினர் உரிய நேர்முகப்பரீட்சை மூலம் நிரந்தரமாக்கப்படவேண்டும்.

வடக்கு - கிழக்கின் பெரும்பாலான கிராமப் பாடசாலைகள் பதில் அதிபர்களாலே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அதிபர் பரீட்சை வைக்காதது அரசின் தவறு. எனவே, அவர்களை நிரந்தரமாக்குதல் பொருத்தமாகும்.

வடக்கு - கிழக்கில் கடந்த 8-10 வருடங்களாக இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் பதவிகள் நிரப்பப்படாமலே இருந்துவந்துள்ளன. வடக்கு - கிழக்கிலுள்ள 24 கல்வி வலயங்களிலும் சுமார் 320 கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் கடந்த 10 வருடங்களாகச் சேவையாற்றி வருகின்றனர்.

கடந்த 10 வருடங்களாக எதுவித மேலதிக கொடுப்பனவும் வழங்காமல் சேவையைப் பெற்றுவிட்டு இன்னமும் அவர்களை நிரந்தர நியமனம் வழங்காமல் அலைக்கழித்து வருவது ஆரோக்கியமான கல்வி மேம்பாட்டுக்கு வழி வகுக்காது. எனவே, தகுதியுடையவர்களை உரிய நேர்முகப்பரீட்சை மூலம் நிரந்தரமாக்க வேண்டியது இன்றைய சூழலில் அவசியமானதாகும்.

இதேவேளை, இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் I அதிகாரி வடக்கு - கிழக்கில் ஒருவரே உள்ளார். அண்மையில் பதவியுயர்வு பெற்ற தரம் I ஐச் சேர்ந்த 28 அதிகாரிகளுள் ஒருவர் கூட வடக்கு - கிழக்கில் இல்லை. எனவே, 46 அதிகாரிகளையும் தரம் Iஇற்கு இணைத்தல் அவசியம். இலங்கை தரம் I அதிகாரிகளது ஆளணி 200 ஆகும். ஆனால், இருப்பது ஆக 6. அதாவது, இன்னும் 194 தரம் I கல்வி அதிகாரிகள் பற்றாக்குறையாகவுள்ளனர்.

**மட்டக்களப்பிலிருந்து வி.ரி.சகாதேவராஜா**

தரம் III இல் நிலவும் 625 வெற்றிடங்களும் நிரப்பப்படல் வேண்டும். அதிபர் சேவை தரம் I ஐச் சேர்ந்த 96 பேருக்கு சேவைமூப்பு திறமை என்ற அடிப்படையில் கல்வி நிர்வாக சேவைக்கு பதவியுயர்வு வழங்கும் முறைமை துரிதப்படுத்தப்படவேண்டும். இலங்கை கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்ற 72 பேருக்கான நியமனமும் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

**ஆழிப்பேரலை நிவாரணம்**

ஆழிப்பேரலையில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 37 ஆசிரியர்கள் பலியாகியுள்ளனர். ஆயிரத்து 567 மாணவர்களும் பலியாகினர். இவர்களுக்கு கல்வித் திணைக்களம் சார்பாக எந்தவொரு நிவாரணமும் இதுவரை வழங்கப்படவில்லையெனக் கூறப்படுகிறது. இதைவிடப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு ஒரு வருட ஆழிப்பேரலை முற்பணமோ சொத்துக்கடனோ எந்தக் கடனும் இதுவரை வழங்கப்படவில்லை. ஆனால், அரசின் ரூ.5000 விசேட கொடுப்பனவு, உணவு நிவாரண பங்கீட்டு அட்டை என்பன நிறுத்தப்பட்டுள்ளன. 'யுனிசெவ்' சேகரித்த விண்ணப்பப்படிவங்களுக்குக்கூட நிவாரணம் வழங்கப்படவில்லை. கல்விக் கட்டமைப்பில் பிரதான கூறு என்று சொல்லப்படும் ஆசிரிய சமூகம் நிவாரணமின்றி அல்லற்படுவதை அரசு பாராமுகமாக விட்டு விடக்கூடாது.

எனவே, மொத்தத்தில் வட-கிழக்கு கல்விப் புலம் வழமை நிலைமைக்குத் திரும்ப குறைந்தது இருவருட காலமாவது எடுக்குமென்பது சொல்லாமலே புரிந்திருக்கும் சம்பந்தப்பட்டவர்கள் அக்கறையுடன் நடப்பின் கால அளவை குறைக்க முடியுமென்பது நம்பிக்கை. ✱

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

6 Roller Pouch Laminating mecine - Bio - 330 New model இரண்டு மாதம் மட்டும் பாவிக்கப்பட்டது விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 3126464, 021 222 5609. (39068)

சொந்தப் பாவனையில் உள்ள E.L.F றக் 250 ISUS Model. சிங்கிள் வீல் விற்பனைக்கு உண்டு தொடர்பு: க.இரத்தினம், மகாத்மா வீதி, நெல்லியடி. T.P.NO:3104 (41 சிறி 7 XXX) (39120)

புதிய டிஜிற்றல் வீடியோ JVC Model No - 160 x, டிஜிற்றல் கமெரா Casio Qv-R40, கையடக்கத் தொலைபேசி motorola V 545, கையடக்கத் தொலைபேசி NOKIA 8310 என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 234, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி. 021 222 2573. (சி-44554)

Love Birds மற்றும் இங்கிலீஷ் நண்ஸ், பியூட்டி ஹோமர், ரேஸில் ஹோமர், ஜக்கோப்பியன், ஜேர்மன் அவுல், நண்ஸ் இஜிப்ஷன், பான்ரெல் போன்ற பலவகையான புறாக்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு K.ரட்ணம் இல.1, மஹாத்மா வீதி, நெல்லியடி 0777 - 779975. (39128)

யாழ்ப்பாணம், முஸ்லிம் கல்லூரி வீதியில் ஒஸ்மானியா கல்லூரிக்கு எதிரே 274 இல் அமைந்திருக்கும் மாடிக்கட்டடம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 602396 27,C.P.De சில்வா மாவத்தை, மொறட்டுவ. (சி-44533)

## காணி விற்பனைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் 33, அராலி வீதியில் 3 பரப்பு 4 குளியில் அமைந்துள்ள தற்போதைய நிலையிலுள்ள வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ.முத்துலிங்கம் 109, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். T.P: 222 3130.(39086)

Jaffna,Navatkuli (யாழ்.நாவற்குழி) A9 பிரதான வீதிக்கு அருகில் 32 பரப்பு காணி விற்பனைக்கு. கூடிய விலை கோருபவருக்கு வழங்கப்படும்.T.P.: 011 4516633 பி.ப. 4 p.m. மணிக்கு பின் தொடர்புகொள்க. (சி-44547)

பருத்தித்துறை,அத்தியடியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்புகளுக்கு 021-226 3431. (சி44703)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் சந்தி, மருதனார்மடம் வீதியில் 100 மீற்றர் தூரத்தில் காணி வலது ஒழுங்கையில் வீட்டுடன் இரண்டு பரப்பும் 5.5 குழியுமுடைய விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் சனி, ஞாயிறு காலை 9 மணி - மாலை 4 மணி வரை. தொடர்பு: ச.சிவராஜா (இலங்கை) T.P.: 021 222 5922, P.தர்மநாதன் (ஆஸ்திரேலியா) T.P.: 0061298633 660. (39047)

மானிப்பாய், மென்னியார்பிட்டி ராஜகாரிய வீதியில் 5 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0777 313261. (38735)

## வீடும் காணியும் விற்பனைக்கு

ஊரெழு பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ஆறு பரப்புடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 618 0694. (38973)

யாழ்ப்பாணம் 344, கண்டிவீதியில் A-9 வீதியில் கச்சேரியிலிருந்து ½ மைல் தூரத்தில் 8 பரப்பும் 16¾ குழியும் உள்ள காணி வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 2597664. (சி-44505)

## வாடகைக்கு உண்டு

நல்லூர், செட்டித்தெரு (கடவை அருகில்) சகல வசதிகளுமுடைய புதிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: தர்மரட்ணம், 349, கோயில் வீதி, நல்லூர். தொ.பே.இல. 077 3055837 மாலை 5 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். (39004)

## நாய்க்குட்டி விற்பனை

குறைந்த விலையில் Great Dane நாய்க் குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-44552)

நல்ல இன பொமினேரியன் குட்டிகள் விற்பனைக்குண்டு. அத்துடன் இரண்டு வயது, 18 மாத ஜேர்மன் செப்பேட் அல்சேசியன் ஆண் நாய்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்லையா உருத்திரா, கேணியடி, கொக்குவில் மேற்கு. (39122)

## இறைச்சிக் கோழி விற்பனை

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-44491)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1975, சித்திரை, கன்னி ராசி, உயரம் 5'7'' கிரக பாவம் 6½, B.A. பட்டதாரி அரச திணைக்களத்தில் பணிபுரிபவருக்கும், 1968 உத்தராடம், தனுசு ராசி, 7இல் செவ்வாய் 56¾ கிரகபாவம் B.Sc. ஆசிரியருக்கும் படித்த, அழகான 5 வயது குறைந்த பணிபுரியும் மணப்பெண் தேவை. தொடர்பு 'சிவாலயா' 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். T.P.NO:021 222 7844. (39118)

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சார்ந்த, வயது 30, 32 நிரந்தர வதிவிடமை உடையவர்கள் லண்டன், கனடா, கொழும்பில் நிற்கிறார்கள். ஸ்பொன்சர் செய்வார்கள். தொடர்பு:- நல்லூர் மணியம் 82 - 2/1, ஆட்டுப்பட்டித் தெரு, 346-1/1, காலிவீதி, வெள்ளவத்தை. 55/2, அம்மன் வீதி, கந்தர்மடம், நல்லூர். T.P:- 2381299,4610815, 2360733, 077 9509207. (C/44590)

யாழ்.இந்து 1977, பரணி, யாழ். அரச நிறுவனத்தில் சாரதியாக கடமையாற்றும் மணமகனுக்கு ஓரளவு படித்த அழகான மணமகள் தேவை. ஜாதகம், புகைப்படத்துடன் முழுவிவரமாக விண்ணப்பிக்கவும். திருமண சேவைகளும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல. 2676,மே/பா உதயன் (பொருத்த மற்றவை திருப்பி அனுப்பப்படும். T.P:- 077 6503137 (39071)

அமெரிக்காவில் நிரந்தர வசிப்பிடம் வயது 44 பாதுகாப்பு உத்தியோகத்தரான மணமகனுக்கு ஏழு, பன்னிரண்டு வயது வித்தியாசமுள்ள மணமகள் தேவை. நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும் தொடர்பு: சண்முகராஜா, மதிப்பாளர், 387, கோயில் வீதி, நல்லூர் (இராணுவ முகாமிற்கு முன்பாக) (39094)

இந்து கௌரவ, 1969ஆம் ஆண்டு பிறந்த 5' 5'' உயரம், ரேவதி 4ஆம் பாதம் 12 இல் செவ்வாய் உள்ள கனடிய குடியுரிமை உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: வி. இல. 2674 மே/பா உதயன். (39046)

யாழ்.இந்து கௌரவ குடும்ப, பிரித்தானிய குடியுரிமை உடைய, மூலம் தனுசு ராசி, உயரம் 5'5'', கிரக பாவம் 38, U.K. பல்கலைக்கழகத்தில் கம்பியூட்டர் எஞ்சினியரிங் முடித்து எஞ்சினியராக பணிபுரியும் மணமகனுக்கு அழகான பட்டதாரி மணமகள் தேவை. அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 'சிவாலயா' T.P.NO:021 222 7844. (39124)

## மணமகன் தேவை

திருகோணமலை இந்து கௌரவ குடும்பம், 1962 புனர்பூசம், கடகராசி 8இல் செவ்வாய் 5 அடி உயரம் 32 கிரகபாவம் ஆசிரியர் மணமகளுக்கு சுயதொழில், வியாபாரம் செய்யும் மணமகனும், 1972 ரோகினி இடபராசி 5 அடி உயரம் 16¾ கிரகபாவம் B.A (Music) ஆசிரியைக்கு படித்த, உத்தியோகம், ஆசிரியர் தொழில் புரியும் மணமகன் தேவை. தொடர்பு: 'சிவாலயா' 68/15 சட்டநாதர் வீதி, நல்லூர். T.P.021 222 7844. (39117)

இந்து கௌரவ குடும்ப, 32 வயதுடைய 5'5'' உத்தரம் 4ஆம் பாதம் உதயத்துச் செவ்வாய் 21½ கிரகபாவம் உள்ள சாதாரண கல்வி அறிவு உடைய மணமகளுக்கு மணமகன் தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: விளம்பர இல. 2673 மே/பா உதயன். (39045)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், B.A. படித்து தொழிலை எதிர்பார்த்து இருக்கும் செவ்வாய் தோஷம் அற்ற சுவாதி 4ஆம் பாதம், பாவம் 32, வயது 33 உடைய மணமகளுக்கு அரச தொழில் பார்க்கும் வரனை எதிர்பார்க்கின்றனர். சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். 077-6673078 க.குமாரதாசன் குமிழடி, அல்வாய். (39001)

## திருமண சேவை

கொஞ்ச நஞ்சமல்ல! முழுவிவரங்கள் அடங்கிய 630 மணமகள்மாரின் கடிதக் கோப்புகள் பிரபல திருமண ஆற்றுப்படுநர் குரும்பசிட்டியூர், மாயெழுவேல் அமுதனிடம் கைவசமுண்டு! இன்னும் கவலை ஏன்? மனம் விரும்பும் மணமகளைச் சுகமாகச் சுயதெரிவு முறையில் இன்றே தெரிவு செய்ய வேல் அமுதனைச் சந்தியுங்கள்! மேலதிக விவரங்களுக்கு மாலை 4.30 இற்கு மேல் வேல் அமுதனுடன் தொடர்புகொள்க! தொலைபேசி:2360488, 4514396. (சி-44548)

## ஜோதிடம்

கைரேகை ஜாதகம் கொண்டு உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்து கொள்ளவும் உங்கள் வாழ்வில் வெற்றி பெறவும் ஆலோசனை பெற்றுக்கொள்ளவும் ஒருமுறை நாடுங்கள். இந்தியப் பரம்பரை ஜோதிடர் அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (39091)

## கோழிக்குஞ்சு, கோழித்தீன் விநியோகம்

Original Prima Broiler குஞ்சுகள் 42/= பேட்டுக்குஞ்சுகள் 22.08.2005 மாலை விநியோகிக்கப்படும். அத்துடன் Original Prima கோழித்தீன்பெற்றுக்கொள்ளலாம். சிவகலை களஞ்சியம் - கோப்பாய், உடுவில் பாம் சென்ரர் (கமநல சேவைகள் சுற்றுவட்டம்) ஆலடி, உடுவில். நல்லூர் பாம் சென்ரர் - இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை, நல்லூர். (39072)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்டOriginal Prima Broiler குஞ்சுகள் 42/=, பேட்டுக்குஞ்சுகள் 22.08.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி,நல்லூர். (38679)

## கடைகள் விற்பனைக்கு/ வாடகைக்கு

சாவகச்சேரி நகரின் மத்தியில் கண்டி வீதியில், நவீன சந்தை கட்டடத்திற்கு முன்பாக கடைகள் விற்பனைக்கு/வாடகைக்குண்டு. தொடர்பு: 0112 718341. (சி-44701)

## கணக்காளர் தேவை

பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு A/L கணக்கியல் படித்த 35 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தேவை. (39125) (21.11.17)

தொடர்புகளுக்கு:
**55,57 ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.**

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சீம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**
10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

முள்ளி வீதி, அரியாலையில் புனித யூதாததேயு ஆலயத்திற்கு அருகில் வீடு, கிணற்றுடன் கூடிய 4¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (39042) (21.11.17)

தொடர்பு:-
**S.J. அன்ரனி**
ஜோய் கணனிப் பதிப்பகம்
394, பிரதான வீதி,யாழ்ப்பாணம்




## பழைய மாணவர் மன்ற ஒன்றுகூடலும் வருடாந்த பொதுக்கூட்டமும் யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

*பழைய மாணவர் மன்றத்தின் ஒன்று கூடலும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் 18.09.2005 ஞாயிற்றுக்கிழமை நடைபெறஇருப்பதால் அங்கத்துவத்தைப் புதுப்பிப்போரும் புதிதாக சேர விரும்புவோரும் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.*

*1. பிரேரணைகள் இருப்பின் 31.08.2005 இற்கு முன்னர் செயலாளருடன் தொடர்புகொள்ளவும்.*

*2. ப.மா.மன்றம் தொடர்பில்லாத பழையமாணவரும் அங்கத்தவர்கள் அனைவரும் தங்கள் தற்போதைய விலாசத்தைத் தந்துதவவும்.*

**ப.காண்டீபன்**
செயலாளர்
ப.மா.மன்றம்.

வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(39121)(42.11.21.17)

## காணி விற்பனைக்கு

நல்லூர் -பருத்தித்துறை வீதியில் அமைந்த 6 பரப்புக் காணி முழுமையாகவோ பகுதியாகவோ விற்பனைக்குண்டு. தனி வீடு, அடுக்குமாடி வீடு அமைப்பதற்கு உகந்தது.

தொடர்பு:- 0777325545
(சி-44599) (21.11.17)

## வீடு விற்பனைக்கு

**சுண்டுக்குளியில் 4 பரப்புக் காணியில் அமைந்த 7 படுக்கை அறைகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு,**

தொடர்பு:- 0777325545
(சி-44600) (21-11.17)

## மணப்பெண் அலங்கார வகுப்புகள்

• வெள்ளவத்தை Nature Way இல் மணப்பெண் அலங்காரம், Facials, Wedding Structures, Rich Cakes, B'day Cakes, தையல் Flower Decorations என்பவற்றிக்கான Orders ஏற்றுக் கொள்ளப்படும். இவற்றுக்கான வகுப்புகள் சான்றிதழுடன் நடைபெறுகின்றன. T.Luxmy 18/B, Station Road, Wellawatte. Tel. 2505325. (39119)(21.11.17)

## அரியாலையில் மண் அகழ்வு தடையின்றித் தொடர்கிறது

யாழ்ப்பாணம்,ஓக.21

அரியாலைப் பகுதியில் சட்டவிரோத மண்அகழ்வு எதுவித தடையுமின்றி தொடர்ந்து நடைபெறுவதாக அப்பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் பெரும் எண்ணிக்கையான டிராக்டர்கள், லான்ட்மாஸ்டர்கள் என படையெடுத்து வந்து இந்த நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும், போட்டி போட்டுக்கொண்டு இரவு வேளையில் இந்த டிராக்டர்கள் இரைச்சலுடன் செல்வதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதுடன் மாணவர்கள், நோயாளர்கள், வயோதிபர்கள் எனப் பலரும் சிரமமடைகின்றனர்.

உரிய தரப்புகளிடம் இவ்விடயம் தொடர்பாக எத்தனையோ தடவைகள் முறையிட்டபோதும் எதுவித முன்னேற்றமும் இதுவரை எட்டப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர். (த-12)

## போலி நாணயத்தாள் அச்சிட்ட வீட்டைப் பொலீஸார் முற்றுகை!

கொழும்பு,ஓக.21

மெதிரிகிரியவிலுள்ள வீடொன்றில் இருந்து போலி ஆயிரம் ரூபா நோட்டுகளும் அதனை அச்சிடப்பட்ட கணனி உபகரணங்களும் பொலீஸாரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டன.

மெதிரிகிரிய பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து விரைந்து சென்ற பொலீஸார் இவற்றைக் கைப்பற்றினர்.

இது தொடர்பாக சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட வீட்டில் இருந்து போலி ஆயிரம் ரூபா நோட்டுக்கள் மற்றும் அதனை அச்சிடப் பயன்படுத்தப்பட்ட கணனி உப கரணங்கள் உட்படப் பணம் அச்சிடப் பயன்படுத்தப்பட்ட வெற்றுத் தாள்கள் மற்றும் தாள்களை வெட்டும் இயந்திரங்கள் போன்றன கைப்பற்றப்பட்டன என மெதிரிகிரிய பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர் ஹிங்குராங் கொடை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளார் எனவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருகிறார்கள் எனவும் மெதிரிகிரிய பொலீஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (க-8)

## கைதடி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் மகாவிஷ்ணு ஆலய பிரதிஷ்டை

மேற்படி தேவஸ்தானத்தில் கைதடி கிழக்கு ஆறுமுகம் முத்துக்குமாரு குடும்பத்தினர் அவர்களின் பண உதவியோடு முன்னர் தமிழ் நாட்டிலிருந்து மகாவிஷ்ணு பெருமான் தருவிக்கப்பெற்று கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. தற்போது அவர்களின் உதவியோடு அதற்குரிய ஆலயம் நிர்மாணிக்கப்பெற்று, ஆவணி மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை (22.08.2005) 7.15 மணிக்குள் வரும் சிங்கலக்கினத்தில் ஆலய கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது என்பதை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

**சி.சுப்பிரமணியம், செயலாளரும் நிர்வாகியும்,**
**நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலனசபை,**
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்
முதலாய கோயில் லேன், கைதடி.

(39126)(38-18-15)

## இனிய இல்லற வாழ்வில் பொன்விழாக் கண்ட எமது பெற்றோரை வாழ்த்துகின்றோம்



## திரு.திருமதி மாசிலாமணி பத்மாவதி

இன்று (21.08.2005) ஞாயிற்றுக்கிழமை புத்தூர் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் எமது பெற்றோரின் இல்லற வாழ்வின் 50 ஆவது ஆண்டு பூர்த்திக்கான விசேட பூஜையும் அன்னதானமும் நடைபெறும். இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பத்மகிரி, மணற்பகுதி, புத்தூர்.** (39141)(38-18-15) **பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

உங்களது ஆங்கில அறிவை விருத்திசெய்யவேண்டுமா?
இதோ உங்களுக்காக வடிவமைக்கப்பட்ட பாடநெறி...

**Diploma in English**
(Weekend Class)

ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டவர்கள் 28-08-2005 இற்கு முதல் உறுதிசெய்யவும்.

| Learning Skills | New Batches | Weekend Classes |
|---|---|---|
| - Listening<br>- Speaking<br>- Reading<br>- Writing<br>- Language structure | Start on:<br>03-09-2005<br>(3 months)<br>(150 Hours) | Sat. 8.30 - 12.30 a.m.<br>Sun. 8.30 -12.30 a.m. |

(C/44707)

LONDON ENGLISH COLLEGE
NO:105, Arasady Road, Jaffna. T.P: 021-2225889, 0777252180
BCNS
No: 229A, Mitcham Road, Tooting, London, SW 17910 UK

## திருமண அழைப்பு

விநாயகர் தர்மசாஸ்தா துணை நிற்க ஸ்ரீகண்ணகா பரமேஸ்வரி அம்பாள் திருவருளோடு ஆவணி மாதம் 6 ஆம் திகதி (22.08.2005) திங்கட்கிழமை பழைய நேரம் காலை 6 மணி முதல் 7.30 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில்

அச்சுவேலி
சிவஸ்ரீ வை. விருத்தகிரீசக் குருக்களின் ஜேஷ்டகுமாரி
**சௌ. மங்களேஸ்வரிக்கும்**

எமது கனிஷ்ட குமாரன்
**சிரஞ்சீவி**
**ஸ்ரீ வத்சாங்க சர்மாவிற்கும்**

அச்சுவேலி, பத்தமேனி வட பத்ரகாளியம்பாள் ஆலயத்தில் நடைபெற இருக்கும் சுப முகூர்த்தத்திற்கு வருகை தந்து சிறப்பாக நடத்திதரும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

**விரதசமாவர்த்தனம்**
**இன்று (21.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கும்**
**வதூவர கிருகப்பிரவேசம்**
**திங்கட்கிழமை மாலை**
**3 மணிக்கும் நடைபெறும்.**

உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சிவஸ்ரீ
கு.வை.விருத்தகிரீசக்குருக்கள்
ஸ்ரீமதி வி.சரோஜினி
தம்பதிகள்.

சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்
(காயத்திரிபீடம் இணுவில்)
ஸ்ரீமதி ம.புவனாம்பிகையம்மா
தம்பதிகள்.

(39135)(31-14)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
**தாஸ்** (ரீகல்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
(அ-4118) (அ-43380)

**மனோகரா** யாழ்ப்பாணம்
விக்ரம், சதா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த
**அந்நியன்**
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
(அ-44110)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
**பெப்ரவரி 14**
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்
சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்
**இங்கிலீஸ்காரன்**
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)
(அ-43363)

## பல்முனைத் தளங்களும்...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

✱ *கேள்வி:* விபுலாந்தருடன் பழகிய வகையில்,அவரைப்பற்றி அவரது குணாம்சங்கள் பற்றிக் கூறுங்கள்?

● *பதில்:* அவர் ரொப்பப் படித்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் சமஸ்கிருத்தத்திலும் அவர் எல்லோரையும்விட வல்லுநர். மாலை வேளை தெகிவளை வீதியால் அவர் நடைபயிலும் போது என்னையும் அழைத்துச் செல்வார். தனது 'கங்கையில் விடுத்த ஓலை' கவிதையை முதன்முதல் அவர் எனக்கு அவ்வாறு நடந்துகொண்டிருக்கும் போது சொன்னார். அவருடைய நண்பன் அண்ணாலை பல்கலைக்கழகத்து இலக்கண வித்துவானான கந்தசாமியார் இறந்த துயரில் அதனைப் பாடினார்.

சில காலம் சுவாமி விபுலானந்தர் ஹிமாலயா நிறுவனத்தில்வேலை செய்தார். அப்போது 'பொன்மல் இமயம்' போன்ற கவிதைகளை எழுதியும் படங்களை வரைந்தும் உள்ளார். '' பிரபுத்த பாரத'' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் அவரிருந்தார். அவர் நன்றாகக் கவிதை எழுதுவார். ஷேக்ஸ்பியரின் ஜூலியர் சீசரை மொழிபெயர்த்து அவர் எழுதிய 'அஞ்சினார்க்குச் சத மரணம்...' என்ற கவிதை அருமையானது. அவரது 'மதங்க சூளாமணி' நாடகநூல் மதுரைப் பண்டித பரீட்சைக்குப் பாடநூலாக இருந்தது. அவர் ஒரு பெரிய மனிதன்.

பிற்காலத்தில் ஒருமுறை அவருக்கு நெருப்புக் காய்ச்சல் ஏற்பட்டது. அப்போதுநான் அவரைக் கவனித்துக்கொண்டிருந்தேன். இப்போது இராமகிருஸ்ண மிஷன் கட்டடம் இருக்கும் இடத்தின் மறுபகுதியை அப்போது இராணுவத்தினர் பொறுப்பேற்றிருந்தனர். மறுபக்கத்தில் நானிருந்தேன். இராமகிருஸ்ண மிஷன் முழுவதற்கும் பாதுகாவலனாக நான்தானிருந்தேன். ஒரு நாள் ஹம்டன் வீதியில் ஓரிடத்தில் சாப்பிட்டுவிட்டு வந்தேன். வரும்போது தலை சுற்றத் தொடங்கியது. முழுகாதது பித்தமாக இருக்கும் என்று நினைத்துவிட்டு கடைக்குப் போய் சீயாக்காய், வெந்தயம், அரப்பெல்லாம் வாங்கிக் கொண்டு வந்தேன். வரும்போது ஒரு தடவை தலை சுற்றியது. கொண்டுபோன பொருள்களை வைத்துவிட்டுச் சிறிது நேரம் சாய்ந்து படுத்தேன். அப்போதும் கட்டிலை ஆட்டுவது போல இருந்தது. மறுநாள் விடிய எண்ணெய் தேய்த்து முழுகிக் கொண்டிருக்கும் போது 'டெய்லி நியூஸ்' பத்திரிகை வந்தது. அதன் தலைப்புச் செய்தியாக சிறிய தொரு நில நடுக்கம் கொழும்பில் ஏற்பட்டதாக அத் திருந்தது. இது நடந்தது 1943 ஆம் ஆண்டிலென்று நினைக்கிறேன்.

✱ மிகுதியை வாசிக்கப் பொறுத்திருங்கள்.

(வளரும்)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நிர்மலாதேவி மகாதேவா



உடுவில் முதலாம் கட்டையைச் சேர்ந்த திருமதி நிர்மலாதேவி (மாதேவி) மகாதேவா அவர்கள் கனடா, ரொறென்டோவில் 18.08.2005 வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் மகளும் சோமசுந்தரம் மகாதேவா (லைன்ஸ் மென்) அவர்களினது அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணேசலிங்கம் (P.M.), குகதாசன் (ஓய்வுபெற்ற பொலீஸ் பரிசோதகர்), ஜெயனொளிபவன் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரது சகோதரியும் காலஞ்சென்ற பரமேஸ்வரி (முள்ளானை), பத்மரஞ்சினி (சீரணி), அரியமலர் (கொக்குவில்) ஆகியோரது மைத்துனியும் ரஞ்சினி (உடுவில்), பாமா (ஆஸ்திரேலியா), சாந்தி (ஆஸ்திரேலியா), சுதா (கனடா), உமா (கனடா), மஞ்சுளா (பிரதேச செயலகம், வவுனியா) ஆகியோரது அன்புத் தாயாரும் மகேந்திரன் (உடுவில்), ராஜாஜி (ஆஸ்திரேலியா), ராஜநாதன் (ஆஸ்திரேலியா), சிறீதரன் (கனடா), யோகநாதன் (கனடா), சிறீரங்கதாஸ் (U.K.) ஆகியோரின் மாமியாரும் சிறீகுமரன், பிறேமிலா, ஐந்தூரன் (உடுவில்),கரிகரன், நர்மதா, விக்ரம் (ஆஸ்திரேலியா), கஜா னன் (ஆஸ்திரேலியா), தட்சனா, நர்மதா, சஞ்சீவன் (கனடா), லதிக்கா, கோபிகா, சாயீசன் (கனடா)ஆகியோரது பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கனடா ரொறென்டோவில் நாளை (22.08.2005) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*T.P.: 416 2640802 -சுதா, 416 2871200 -உமா, 024 20692 - மஞ்சுளா.* (39129)(38-18-15)

தகவல்: **மகேந்திரன் ரஞ்சினி, முதலாம் கட்டை உடுவில்.**

## திருமதி தங்கநாயகி மார்க்கண்டு



கொழும்புத்துறை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற மார்க்கண்டுவின் மனைவி தங்கநாயகி நேற்று (20.08.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா, தங்கச்சியம்மா, சின்னம்மா, காலஞ்சென்ற செல்வரத்தினம், காலஞ்சென்ற சிவப்பிரகாசம், சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வசந்தராணி, சந்திரராணி, ரகுநாதன் (சுவிஸ்), சந்திரநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ரஞ்சிதநாதன், கமலநாதன், விஜயநாதன், ஜெகநாதன் ஆகியோரின்சிறிய தாயாரும்சிவகுருநாதன்,புவனேந்திரன்,மணிமாலா, சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.08.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: *கொழும்புத்துறை.* (39149)(38-18-15) **மா.கமலநாதன் (மகன்).**

## கந்தப்பு பார்வதி

புளியடி வீதி, கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு பார்வதி (இளைப்பாறிய ஆசிரியை, விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி) நேற்று (20.08.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ரேவதி (ஆசிரியை, யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்), பாமா (D.O. கமநல சேவைகள் திணைக்களம், யாழ்.), பவானி ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகலிங்கம், மனோகரன், ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜீவாகர், சுஜந்தன், ரகீசன், லக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சோனப்பு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-44714)(25-18-15)

தகவல்: *புளியடி வீதி, கரவெட்டி மத்தி.* **குடும்பத்தினர்.**

## சுப்பிரமணியம் இராஜேஸ்வரன்

புலோலியைப் பிறப்பிடமாகவும் வோல்டன் பிளேஸ், தும்பளையை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராஜேஸ்வரன் 19.08.2005 வெள்ளிக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இலக்கணநாயகி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - இராசரத்தினம் தம்பதியரின் மருமகனும் கிருஸ்ணவேணியின் (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் - ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை) அன்புக் கணவரும் திருமதி சே.ரோகினி (ஆசிரியை, யா/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி), அமரர் ஐங்கரன், திருமதி மைதிலி (லண்டன்) ஆகியோரின் தந்தையும் பா.சேகர் (பருத்தித்துறை), செ.சிறீதரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் கோபிகா, ஜனகன் (லண்டன்) ஆகியோரின் பேரனும் திருமதி ஜெ.குலசிங்கம் (ஓய்வுபெற்ற வடமராட்சி ஆங்கிலக் கல்வி ஆசிரிய ஆலோசகர்), அமரர் திருமதி பு.சுபத்திராதேவி, சாம்பசிவம் (கனடா), திருமதி ச.சிறிசோமசேகரம் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்), திருமதி க.கணேசலிங்கம் (கொழும்பு), திருமதி சிவாஜினி, சிவக்குமார், திருமதி கிருஸ்ணவேணி, பகவான் (அனைவரும் கனடா) ஆகியோரின் மூத்த சகோதரரும் திருமதி பா.இராஜேஸ்வரி (அமரர்), சி.வாமதேவன் (உத்தரவுபெற்ற நில அளவையாளர், இணுவில்), திருமதி க.இராஜலக்சுமி (ஆஸ்திரேலியா), சி.சிதம்பரநாதன் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்), திருமதி.ஜெ.பானுமதி (ஆசிரியை, யா/இணுவில் மத்திய கல்லூரி),சி.சிறிஸ்கந்தராசா (தொ.நு. உத்தியோகத்தர், புல்மோட்டை), சி.இராமஜெயம் (விளம்பர நிறைவேற்றுநர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (21.08.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கோரியடி மயானத்துக்குஎடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-44713)(25-18-15)

தகவல்: *வோல்டன் பிளேஸ், தும்பளை, பருத்தித்துறை.* **குடும்பத்தினர்.**

## கிழக்கில் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு,ஓக.21

அவசர காலச்சட்டம் நாட்டில் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதை யடுத்து கிழக்கு மாகாணத்தில் படையினர் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் பிரதான நகரங்களில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் படையினரின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுகின்றது.

படையினருடன் பொலீஸாரும் விசேட அதிரடிப்படையினரும் கூட்டாக இணைந்து விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளையும் வீதி ரோந்துகளையும் மேற்கொண்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் இடையிலான சோதனைச் சாவடிகளில் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகரில் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்ததுடன் சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் நிறுத்தப்பட்டும் பயணிகள் வெளியே இறக்கப்பட்டும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மோட்டார் சைக்கிளில் பயணம் செய்வோர் மீதும் தீவிர கவனம் செலுத்தப் பட்டது.

திருகோணமலை நகரிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் மேலதிக படையினரும் கடற்படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவசரகாலச் சட்டம் மீண்டும் நாடளாவிய ரீதியில் பிரகடனம் செய்யப்பட்டதை யடுத்து கிழக்கில் முப்படையினரும் பொலீஸாரும் முழு அளவிலான உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## இளைஞர் காயம்

முல்லைத்தீவு,ஓக.21

தண்ணீர் பவுஸர்களுக்கிடையில் அகப்பட்டு நசியுண்டு இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். தண்ணீரூற்றுப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் மணலாற்றைச் சேர்ந்த குழந்தைவடிவேல் புவனேஸ் (வயது 23) என்பவரே கால் எலும்புகள் முறிந்த நிலையில் முல்லைத்தீவு மருத்துவமனைக்கு உடனடியாக கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் .போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். (9-12)

SKY COMPUTERS (PVT) LTD
No.89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel.:0214590325 Fax:0214590325
மிகக் குறைந்த கட்டணத்தில்
On Line Courses
MS Office XP Only 2000/=
Desk Top Publishing 3 Months
Affiliated with Irish International University (U.K.)
தகுந்த முறையில் பயிற்சிநெறி
தங்கள் வசதிக்கேற்ப நேர ஒதுக்கீடு
தவணைமுறைக் கட்டணம்
Unlimited Practical Hours
E- mail: skycom@wow.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead
(அ-44711)(25-18-15)

On-LineClasses
எமது நிறுவனத்தில் D.T.P கற்கை நெறியானது Online மூலமாக நடைபெறுகின்றது.

| Subjects | Duration | Fees |
|---|---|---|
| Page Maker -7.0 | 25 hours | 1000/= |
| Coreldraw -12 | 25 hours | 1000/= |
| Photoshop -7.0 | 25 hours | 1000/= |

நீங்கள் விரும்பிய நேரத்தில் கற்கலாம்.
இக் கற்கைநெறிக்குப் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.
Theory, Practical Books வழங்கப்படும்.
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

## தே.அ.அட்டைக்கு மீள் விண்ணப்பிக்க உரிய படிவம் வந்து சேரவில்லை

தேசிய அடையாள அட்டை சேதமடைந்தோ அல்லது தொலைந்தோ போயிருப்பவர்கள் புதிய தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் இதுவரை யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இம் மாதம் முதல் ஆட்பதிவுத் திணைக்களம் வர்ணப் புகைப்படம் கொண்ட புதிய வடிவிலான தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதற்கான விண்ணப்பப் படிவங்களையும் பிரதேச செயலகங்களுக்கு யாழ். மாவட்ட செயலகம் ஊடாக அனுப்பிவைத்திருந்தது. ஆனால், ஏற்கெனவே தேசிய அடையாள அட்டையைப் பெற்றுப் பல்வேறு காரணங்களால் புதிய அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம் இதுவரை இங்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரியவருகின்றது. இதனால் தமது தேசிய அ.அட்டையைத் தவறவிட்டவர்கள் புதிய தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க சிரமப்படுகின்றனர் என்றும் கூறப்படுகிறது. (135)

## பேரினவாதிகளின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகையின் கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள கிளைக் காரியாலயம் மீது கிரனேட் வீசப்பட்டமையானது தமிழ் ஊடக நிறுவனங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் விடுக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தலாகும். இதனை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்தச் சம்பவம் மிலேச்சத்தனமானது. நாகரிகமில்லாத, கருத்துச் சுதந்திரத்தை மதிக்காத பேரினவாதிகளின் கையாலாகாத்தனம் எனவும் குற்றஞ்சாட்டுகிறது.

இந்தவிடயம் தொடர்பாக உடனடியாக விசாரணை செய்து சம்பந்தப்பட்டோர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் ஊடகத்துறை அமைச்சர் டிலான் பெரேரா அவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம். வீசப்பட்ட கிரனேட் வெடிக்காத போதும் இந்தச் சம்பவம் திட்டமிடப்பட்டு வேண்டுமென்றே நடத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை யுத்தம் நடைபெற்ற காலங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளியுலகுக்கு பட்டவர்த்தனமாக வெளிப்படுத்திவந்துள்ளது. இலங்கை அரசாங்கத்திற்கும் யுத்தத்தினால் தமிழ் மக்கள் படும் அவலநிலைகளையும் வெளிப்படுத்தி வந்ததோடு, நேரடியாகக் கண்டித்தும் இருந்தது. அந்தக் காலகட்டங்களில் கூட உதயன் பத்திரிகையின் ஆசிரியர் இராணுவ புலனாய்வுத்துறையினரால் கடுமையான விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள 'உதயன்' பத்திரிகைக் காரியாலயத்தின் மீதும் குண்டுத் தாக்குதல் நடத்தப் பட்டது. இவ்வாறு தொடர்ச்சியாக இந்தப் பத்திரிகை நிறுவனம் மீது தாக்குதல் இடம்பெற்று வருகின்றமை எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அது மாத்திரமல்ல வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் கொழும்பிலும் தமிழ் ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் இராணுவத்தினராலும் இராணுவப் புலனாய்வுத்துறையினராலும் பொலீஸாரினாலும் பல்வேறு விதமான தாக்குதல்களுக்கும் இன்னல்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். பல தமிழ் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டும் இருக்கின்றனர்.

இவ்வாறான தொடர்ச்சியான நடவடிக்கைகள் பற்றி பல சந்தர்ப்பங்களில் அரசிற்கும் எமது ஒன்றியம் எடுத்துக்கூறியபோதும் அது தொடர்பாக இதுவரை எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை அது குறித்தும் எமக்கு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

ஒட்டுமொத்தமாக தமிழ் ஊடகத் துறையை நசுக்கிவிடுகின்ற செயற்பாடாகவே நாங்கள் இதனைப் பார்க்கவேண்டியிருக்கின்றது. யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் உள்ள வேளையில் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றமை சமாதான நடைமுறைகளுக்கும் ஆபத்து விளைவிக்கும் என்றே கருதமுடிகின்றது.

ஜனநாயக சுதந்திரம், கருத்து வெளிப்பாடு என்பவை பற்றி சிரேஷ்ட அமைச்சர்கள் அடிக்கடி பேசிவரும் நிலையில் இவ்வாறான சம்பவங்கள் வெட்கித் தலைகுனிய வைக்கின்றன.

ஆகவே, இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்திலும் இடம்பெறாத வகையில் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்வதுடன் ஏதேனும் சாக்குப் போக்குகள் கூறி குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளாத வகையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கேட்டுள்ளது. - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## 'உதயன் -சுடர் ஒளி' கிளைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவழைக்கப்பட்டனர். வெடிக்காத நிலையில் காணப்பட்ட கைக்குண்டு அங்கிருந்து பாது காப்பாக அகற்றப்பட்டது.

கைக்குண்டில் இருந்து கழற்றப்பட்ட அதன் 'கிளிப்'பை பணிமனை வாயிலில் இருந்து பொலீஸார் மீட்டெடுத்திருக்கின்றனர். குற்றப் புலனாய்வுப் பொலீஸார் அங்கு கைவிரல் அடையாளங்களைப் பதிவுசெய்த னர். அத்துடன் கடமையில் இருந்த பணியா ளர்களின் வாக்குமூலங்களும் பதிவு செய் யப்பட்டன.

பெரும் எண்ணிக்கையான பொலீஸா ரும், படையினரும் அந்தப் பகுதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். நேற்று முன்னிரவுவரை இந்த நடவடிக்கைகள் அங்கு இடம்பெற்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக தாங்கள் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருவதாகவும் இது தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் வெள்ளவத்தைப் பொலீஸார் நேற்றிரவு தெரிவித்த னர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணி தொடர்பாக எதுவும் தெரியவில்லை என்றும் பொலீஸ் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் இராணுவப் பேச்சா ளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்கா தெரிவித் திருக்கின்றார்.

சம்பவம் பற்றி அறிந்தவுடன் பெரும் எண்ணிக்கையான ஊடகவியலாளர்கள் பணிமனைப் பகுதிக்கு விரைந்து வந்தனர். ஊடக அமைப்புகளைச் சார்ந்தவர்களும் அங்கு வந்து கூடினர். சம்பவம் தொடர்பாகத் தங்கள் கண்டனங்களை அவர்கள் அங்கு வெளியிட்டனர்.

தலைநகரில் 'உதயன் - சுடர் ஒளி' கிளைப் பணிமனை மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்கு தல் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்திகளின் ஒன்றின் நாசவேலையாகவே இருக்கும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இதேவேளை -

'உதயன் - சுடர்ஒளி' கிளைப் பணிமனை மீது கிரனேட் வீசப்பட்ட சம்பவத்தை அடுத்து கிராண்ட்பாஸ், ஜயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தையில் அமைந்திருக்கும் 'சுடர் ஒளி' பத்திரிகையின் தலைமைப் பணிமனைக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.(ஐ)

## பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலகத்தினுள் பூட்டிவைத்தார் என்று சிறுமியின் தாயார் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்திருக்கின்றார். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரிடம் இன்று தகவல் பெறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-13)

## கதிர்காமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணைவியாரான சுகந்தி கதிர்காமருடன் வசித்துவந்தார்.

கதிர்காமரின் உடல் தகனம் செய்யப்பட்ட பின்னர் அவரது அஸ்தியை இங்குள்ள அவரது இரண்டாவது துணைவியாரே பொறுப்பேற்றார் எனக் கூறப்படுகின்றது.

ஆனால், அஸ்தியைப் பெற்றுக்கொள்வதற்கு அவரது முதல் மனைவியின் இரு பிள்ளைகளும் விரும்பியபோதும் அவர்களால் அஸ்தியைப் பெற்றுக்கொள்ளமுடியாமல் போனது என்று கூறப்படுகிறது.

கதிர்காமரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை கொழும்பில் உள்ள தேவாலயம் ஒன்றில் நேற்று நடைபெற்றது. அந்தப் பிரார்த் தனையின் பின்னர் அவரது பிள்ளைகள் இருவரும் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அதனையடுத்தே குடும்பத்தினரிடையிலான இந்த முரண்பாடு வெளியே தெரியவந்திருக்கிறது.

தமது தந்தையாரின் அஸ்தியைப் பொறுப்பேற்று ஆத்மசாந்திக் கிரியைகளைச் செய்யத் தாங்கள் விரும்பியதாகவும் ஆனால், தங்களது சிறியதாயார்(கதிர்காமரின் இரண்டாவது துணைவி) அஸ்தியைத் தர மறுத்து அதனை அழித்துவிட்டார் என்றும் பிள்ளைகள் இருவரும் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தத் தகவல் கொழும்பு ஊடகம் ஒன்றின் ஊடாக அம்பலமாகி இருக்கிறது.

தந்தையின் அஸ்தியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக நீதிமன்றத்தின் உதவியை நாட பிள்ளைகள் முயற்சிப்பதாகவும் கூறப்பட்டது. (ஐ-3)

ELECTRONIC REPAIRS
Analog & Digital Monitors
Inkjet / Laser / Dot matrix Printers
Power Supply
Scanners
Laptop & Mobile PCs
UPS
VCD/DVD players
Hi-fi systems
மற்றும் அனைத்து இலத்திரனியல் உபகரணங்கள்
MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை செல்வநாயகம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவில் உள்ள மிசிசாகா (**Mississauga**) நகரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை செல்வநாயகம் 18.08.2005 வியாழக்கிழமை கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் செல்வநாயகம் அவர்களின் அன்பு மனைவியும் சிவசாந்தி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற திலகவதி மற்றும் குமாரநாயகம் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), கனகநாய கம் (ஆங்கிலப் பேராசிரியர், றொரன்ரோ பல்கலைக்கழ கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாராயணசுவாமி (இளைப்பாறிய அதிபர், ஆசிய அபிவிருத்தி வங்கி, மணிலா), ஜெயந்தி (ஆஸ்திரேலியா), திருமகள் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ் சென்ற பாலசிங்கம், கௌசல்யா மற்றும் நீலா, நகுலா, ஆகியோரின் அருமைச் சகோதரியும் பாமதி, கலைமதி, **Dr.**சங்கரி, ஜெகன், ரமணா, லஷ்மணா ஆகியோரின் பேரன்புக்குரிய பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.08.2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6696 Harlow Road,**
**Mississauga, ONT**
**L5N 4T3**
**Canada.**
**T.P.No: 905-824-7611**

தகவல்:
செ.கனகநாயகம்
(மகன்).

(39152)(25-18-15)


EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசியசகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
21.08.2005

பல்வேறு தேவைகளின் பொருட்டு கொழும்புக்கும் ஏனைய பகுதிகளுக்கும் செல்வதற்காக 13.08.2005 அன்று அதிகாலையிலேயே அவசர அவசரமாகப் புறப்பட்டு மிருசுவில் வரை சென்றவர்களுக்குப் பெரிய அதிர்ச்சி. நீண்ட வரிசையில் வாகனங்கள் ஒரு புறமாகவும் பாரவூர்திகள் இன்னொரு புறமாகவும் அணிவகுத்து நின்றன. வீதியெங்கும் கூட்டம் கூட்டமாக மக்கள் ஏதாவது பாரிய விபத்து நேர்ந்துவிட்டதோ? என நினைத்தவாறு பேருந்தால் இறங்கி விசாரித்ததில்தான் சேதி தெரியவந்தது. குறிபார்த்துச் சுடுவோரின் கைவரிசையால் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக் கொல்லப்பட்டாராம். வீதியெங்கும் இதே பேச்சாகக் காணப்பட்டது. சரியென்று இறங்கி முன்னணிக் காவல் நிலை வரை போய்ப் பார்ப்போம் என்று போனால் நீட்டிய துப்பாக்கியுடன் இராணுவத்தினர் கண்கள் சிவக்க நின்றிருந்தனர். மோட்டார் சைக்கிள்களில் பத்திரிகைக் கட்டுகளுடன் பத்திரிகை விநியோகிப்போரும் முன்னணியில் அப்பால் செல்வதற்காகக் காத்திருந் தனர். ஒருவாறாக பேப்பர் கட்டிலிருந்த தலையங்கங்களை வாசித்து முடித்து விடயம் உண்மைதான் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.



# சமாதான காலக் கொலைகளை

# தடுக்காததன் விளைவு இது





கொழும்பில் நடந்த இந்தக் கொலைக் கும் முகமாலைப் பாதைக்கும் என்ன சம்பந்தம்?

கொலை நடந்த நேரம் 12.08.2005 இரவு 11மணி 15நிமிடம். யாழ். - கொழும்பு விமானசேவை இரவில் நடைபெறுவ தாயிருந்தால் கூட ஒருவேளை கொலையைப் புரிந்த கொலையாளிகள் இரவிரவாக விமானமேறி யாழ்ப்பாணம் வந்து அதன் பின்னர் கண்டி வீதியூடாகச் சென்று படையினரின் பிடியிலிருந்து தப்புவதற்காகப் புலிகளின் பகுதிக்குள் செல்லக்கூடும் என்று எதிர்பார்க்கலாம். அப்படியுமில்லை. விமான சேவைகள் யாவும் காலை 8மணிக்குப் பின்னரே ஆரம்பமாகின்றன. அப்படியாயின் பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இராணுவம் தன்னிச்சையாக இவ்வாறான முடிவை எடுத்ததற்கான காரணம் என்ன? பதில் வெளிப்படையானதுதான். தமிழ் மக்கள் மீது இயல்பாகவே சிங்கள வர்க்கத்திற்கு இருக்கின்ற காழ்ப்புணர்வின் வெளிப்பாடே இந்தச் சம்பவம்.

சிங்கள தேச அரசியல் பல காலமாகவே ஒருவகைக் குழப்பமான இடர்பாடுகளுக்குள் காணப்படுகின்றது. அங்கு மனிதப் படுகொலை என்பது சர்வ சாதாரணமானது. ஆளுங்கட்சியினர் பழிவாங்குவதற்காக எதிர்க் கட்சியினரைக் கொலை செய்வதும் எதிர்க் கட்சியினர் ஆளும் கட்சியினரைக் கொலை செய்வதும் இன்று நேற்றல்ல பல காலமாகவே இடம்பெற்று வருகின்றன. பிரபல பத்திரிகையாளர் றிச்சர்ட் டி சொய்ஸா தனிப்பட்ட காரணங்களுக்காக ஜனாதிபதி பிரேமதாஸாவின் தூண்டுதலின் பேரில் கொல்லப்பட்டார். பிரபல கோடீஸ்வரர் உபாலியின் மரணம் பற்றிய மர்மங்கள் இன்னும் துலங்கவில்லை. 1994இல் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரத்தின் போது காமினி திஸநாயக்கா கொலை செய்யப்பட்டார். லலித் அத்துலத் முதலியும் சுட்டுக் கொல்லப்பட்டார். எல்லாவற்றுக்கும் மேலாக 2001ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தை தலைமையிலான குழுவினர் கண்டி உடத்தலவின்ன பகுதியில் 13 முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த உறுப்பினர்களைச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதாக வழக்கு நடைபெறுகிறது. அதற்காக அவர் சிறை சென்று மீண்டு இன்று பல்லுப் பிடுங்கப்பட்ட பாம்பாகத் திரிவது உலகறிந்த செய்தி.

## நீளும் கொலைப் பட்டியல்

எனவே, கொழும்பில் படுகொலைகள் என்பது ஒரு சாதாரண நிகழ்வுகளாகி விட்டன. படுபயங்கரமான பாதாள உலகக் கும்பல் ஒன்று அரசியல்வாதிகளின் பின்புலத்துடன் அங்கு இயங்குவதும் கொலைகளைப் புரிவதும் ஒன்றும் இரகசியமான செய்தியல்ல. மூத்த பத்திரிகையளார் டி.சிவராம் பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்திற்கு முன்னால் வைத்தே கைது செய்யப்பட்டார். அவரின் சடலம் கூட உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலேயே காணப்பட்டது. மூத்த அரசியல்வாதி மாமனிதர் குமார் பொன்னம்பலம் கடந்த 2000 ஆம் ஆண்டு ஜனவரி 05ஆம் திகதி வெள்ளவத்தைப் பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இவ்வாறாகப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். கொழும்பில் கொலை செய்யப்பட்டவர் களின் பட்டியலென்பது மிக மிக நீண்டதொன்றாகும். அந்த வகையிலே தான் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரது கொலையும் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நாட்டின் முக்கிய பிரமுகர்கள் வசிக்கும் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்த அவரது தனிப்பட்ட இல்லத்தில் வைத்து குறித்த தினம் 11 மணியளவில் அவர் சுடப்பட்டார். அவரது வீட்டின் அருகிலிருந்த மாடியிலுள்ள குளியலறையிலிருந்து தான் சினைப்பர் துப்பாக்கி மூலம் அவர் குறிவைத்துச் சுடப்பட்டிருக்கிறார். துப்பாக்கிதாரிகள் உடனடியாகவே அவ்விடத்தை விட்டு அகன்று சென்றிருப்பார்கள். சந்தேகத்தின் பேரில் பல பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுவதாக அறியக் கிடக்கின்றது.

அமைச்சர் கதிர்காமர் பல்வேறு காரணங்களுக்காகத் தமிழ் மக்களினால் வெறுக்கப்பட்டு வந்தார் என்பது உலகறிந்த சேதி. குறிப்பாகத் தமிழீழ மக்கள் தங்கள் ஏகப் பிரதிநிதிகளாகக் கருதும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக உலகளாவிய ரீதியில் சென்று பிரசாரம் செய்து அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற மிக முக்கிய நாடுளைக் கொண்டு தடை செய்வித்தார். இதற்காக அபாண்டமான பொய்க் குற்றச் சாட்டுகளை விடுதலைப் புலிகள் மீது சுமத்தி அவர்களை ஓர் பயங்கரவாத இயக்கமாக உலகின் முன் சித்திரித்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் இனத்தவரான கதிர்காமர் சொல்வதை உலகம் மிக இலகுவாகவே நம்பி வந்தது. அவர் பெயரளவில்தான் ஒரு சிறுபான்மை இனத்தவர் என்பதோ முற்றுமுழுதாகச் சிங்களப் பேரினவாதத்தின் சலுகைகளைப் பெற்று அதன் மூலம் முழு வாழ்க்கையையும் கொண்டு நடத்தினார் என்பதோ ஒருவேளை உலகிற்குப் புலனாகாத செய்தியாக இருக்கக்கூடும். அதன் நன்றிக் கடனாகத் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கதிர்காமர் முன்னெடுத்ததன் காரணமாகத்தான் தமிழீழ மக்களின் வெறுப்பிற்கு அவர் ஆளாக வேண்டி நேர்ந்தது.

எது எவ்வாறிருந்த போதிலும் கொலைகளைத் தமிழீழ மக்கள் வெறுக்கின்றனர். ஏனெனில், அவர்களுக்கு அதன் கொடூரம் தெரியும். நீண்டகாலமாக அவர்கள் கொலைகள், பாலியல் வல்லுறவுகள், அங்க இழப்புக்கள், சொத்தழிவுகள் என்பவற்றுடன்தான் வாழ்கின்றனர். இதே லக்ஷ்மன் கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராக இருந்த காலத்தில்தான் செம்மணியில் 400மேற்பட்ட இளைஞர்களைக் கொலை செய்து புதைத்துவிட்டு அதை உலகிற்கு மறைப்பதற்குப் பிரயத்தனப்பட்டனர். இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டுவிட்ட காலத்திலும் கூட அந்த நிலைமைதான் தொடர்கின்றது. கொலைகள் என்பது வடக்கு - கிழக்கில் இன்று நாளாந்தச் செய்திகள். இவற்றைத்தடுத்து நிறுத்துமாறு அரசாங்கத்திடம் பல்வேறு தரப்பினரும் பல்வேறு விதமாக விடுத்த கோரிக்கைகள் எவையும் கருத்தில் எடுக்கப்படவில்லை.

முன்னர் இடம்பெற்ற சமாதானகாலக் கொலைகளுக்கும் அமைதியாக இருந்த அரசாங்கம் (அவை தமிழ் மக்களைப் பாதிக்கும் கொலைகள் என்பதால்) கதிர்காமரின் கொலையுடன் அவ்சரகால நிலையைப் பிறப்பித்துள்ளது. இது ஏற்கனவே வடக்கு - கிழக்கில் இடம் பெறும் அரச படைகளின் ஆதரவுக் கொலைகளைத் தீவிரப்படுத்தி யுத்தத்தை ஆரம்பிக்கும் நோக்கம் கொண்டதேயன்றி கதிர்காமரைச் சுட்டவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையாகத் தெரியவில்லை. ஏனெனில் கதிர்காமரைச் சுட்டவர்களைப் பிடிப்பதானால் கொலை நடந்தவுடன் கொழும்பை மூடி அங்குதான் அவசர நிலைப் பிரகடனப்படுத்தப்பட்டு தேடுதல் இடம்பெற்றிருக்கவேண்டும். இங்கு முகமாலையை மூடியதால் கண்ட பயன் என்ன? சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் இருப்பதன் காரணமாக, அரசு தான் நினைத்ததை முற்று முழுதாக சாதிக்க முடியவில்லை. இன்றேல் ஏ-9 நெடுஞ்சாலை வடக்கே முகமாலையுடனும் தெற்கே ஓமந்தையுடனும் 13.08.2005 அன்றே மூடப்பட்டிருக்கும். பொருளாதாரத் தடையும் வந்திருக்கும். எனவே அரசிற்கு இப்போது இருக்கின்ற ஒரே இடைஞ்சல்காரர் இந்தச் சர்வதேசக் கண்பாணிப்பாளர்கள்தான். ஒருவாறு இவர்களை அப்புறப்படுத்தி தமிழ் மக்களை ஒடுக்கும் தனது கொள்கையை மீண்டும் முன்னெடுப்பதற்கு அது தயாராகிவிட்டது. அதன் பிரதிபலிப்பே அவசரகால நிலைமை.

**சுவேதன்**

ஏற்கனவே அரச படைகளின் அடாவடித்தனங்கள் அதிகரித்துவிட்ட இச்சூழலில் அவர்களிற்கான அதிகாரமும் இச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுவிட்டது. இனி அவர்கள் காரணமின்றி எதையும் செய்யலாம். கொலைகள், கைதுகள், காணாமற்போதல்கள் சர்வ சாதாரணமாகத் தமிழ் மண்ணில் மீண்டும் அரங்கேற வாய்ப்பு உண்டு. இவற்றை எதிர்கொள்வதற்காகவும் தமிழ்த் தேசம் தயாராக வேண்டிய நிலையிலுள்ளது.

கதிர்காமரின் கொலை எவ்வளவு கொடூரமானதோ அதனைவிடக் கொடூரமானது. இந்த அவசரகாலச் சட்டமென புதுடெல்லியைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் ஆசிய மனித உரிமைகள் அமைப்புக் கூடக் கண்டித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(VIII பக்கம் பார்க்க)

# சிங்களப் பேரினவாதத்தின் மேன்மைக்கு

## தன் சேவையை அர்ப்பணித்தவர்

# கதிர்காமர்



வெளிவிவகார அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமர் துப்பாக்கிச் சூட்டினால் கொல்லப்பட்டுள்ளார். மானிப்பாயைச் சேர்ந்த கதிர்காமர் ஒரு தமிழராவார். நன்கு கற்றுத்தேர்ந்த ஒரு கல்விமான். சட்டநுணுக்கங்களையும் கரைகண்டவர். மிகுந்த ஆங்கில மொழிப்புலமை கொண்ட ஒரு நாவன்மையாளன். அறிவாளி என்றும் அறிவுஜீவி என்றும் அறியப்பட்டவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மட்டுமல்ல, இங்கிலாந்தின் புகழ்வாய்ந்த ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலும் படித்து பட்டங்களைப் பெற்றவர். அவருடைய விவாதத் திறமையை 'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக்கழக பேராசிரியர்களும் வியந்து பாராட்டினார்கள். கதிர்காமர் பணியாற்றிய சர்வதேச நிறுவனங்கள் பலவாகும்.

Internationa Labour Organisation (ILO) World Intellectual Property Organisation, (WIPO), SAARC போன்ற அமைப்புக்களில் அவர் ஆலோசகராகவும், இயக்குநராகவும், தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். வணிகம், முகாமைத்துவம், அறிவுசார் இயல்பு, தொழிற்றுறை, அரசியல் யாப்பு மற்றும் சர்வதேச சட்டவியல் போன்ற துறைகளையும் கற்றுத்தேர்ந்தார்.

இப்பேர்ப்பட்ட ஒரு மனிதரின் முழுத் திறமைகளையும், சேவைகளையும் முழுமையாகப் பெற்றுக்கொண்ட சிங்களப பேரினவாதம் இன்று துக்கத்தில் ஆழ்ந்து போயிருக்கிறது. அதன் வருத்தம் நமக்குப் புரிகின்றது. சரியாகச் சொல்லப்போனால் சிங்களப் பேரினவாதத்தின் இந்த வருத்தத்தையும், சோகத்தையும் தமிழர்களால்தான் சரியாகப் புரிந்துகொள்ளவும், உணர்ந்து கொள்ளவும் முடியும்.

லக்ஷ்மன் கதிர்காமர் என்கின்ற தமிழரின் 'தனிமனிதச் சாவு' குறித்து சில தர்க்கங்களை நாம் முன்வைப்பதற்கு முதல், சில கேள்விகளை முன்வைக்க வேண்டிய அவசியத்தையும் நாம் உணர்கிறோம். அது லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களின் கொலையின் பின்னணி குறித்து எழுந்துள்ள சந்தேகங்களாகும்.

### பொலீஸ்மா அதிபரின் கூற்று

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை நேரம் பின்னிரவு வேளையின் போது சுடப்பட்டு சனிக்கிழமை காலை வேளையிலே லக்ஷ்மன் கதிர்காமர் வைத்தியசாலையில் காலமாகியபோது, பல சர்வதேச ஊடகங்கள் அவரது சாவு குறித்துச் செய்திகளை வெளியிட்டிருந்தன. சனிக்கிழமை அதிகாலை சுமார் 1.30 மணியளவில் கதிர்காமரின் சாவு குறித்துச் செய்தி வெளியிட்ட சர்வதேச ஊடகமான ரொய்ட்டர்ஸ் (Reuters) செய்தி நிறுவனம் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, 'விடுதலைப் புலிகளே இக்கொலையைச் செய்துள்ளார்கள்' என்று குற்றம் சாட்டியதாக குறிப்பிட்டிருந்தது.

"It is the Tigers" – Inspector General of Police, Chandra Fernando told reporters early on Saturday. என்று கதிர்காமர் அவர்களின் உயிர் பிரிந்தவுடனேயே உலகளாவிய ரீதியில் கருத்தொன்று பரப்பப்பட்டுவிட்டது.

"கதிர்காமரின் சாவுக்கு விடுதலைப் புலிகள் காரணமாக இருக்கக் கூடும்" என்றோ, அல்லது கதிர்காமரின் சாவுக்கு விடுதலைப் புலிகளை நாம் சந்தேகிக்கின்றோம் என்றோ, பொலீஸ் மா அதிபர் கூறவில்லை! மாறாக விடுதலைப் புலிகளே "இச்சாவுக்கு காரணம்! அவர்கள் தாம் இந்தக் கொலையைச செய்தார்கள்!" என்று அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டுக்குரிய ஆதாரங்களையோ, சந்தேகங்களையோ இந்தக் கட்டுரை எழுதப்படும்வரை, அவர் தெரிவிக்கவில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

லக்ஷ்மன் கதிர்காமரின் உயிர் பிரிந்த உடனேயே கொலை சம்பந்தப்பட்ட விவரங்களை பொலீஸ்மா அதிபர் அறிந்துவிட்டார் என்றால் அதற்குரிய அடிப்படைப் புலனாய்வுத் தகவல்களை இந்தக் கொலை நடப்பதற்கு முன்பதாகவே அவர் அறிந்திருக்கக் கூடும் என்ற எண்ணம், என்ற ஐயம் எமக்கு எழுவதை எம்மால் தடுக்க முடியவில்லை.

அப்படியென்றால் அதாவது இக்கொலை நடக்கப்போவது குறித்து அவருக்கு அதாவது இந்தப் பொலீஸ்மா அதிபருக்குத் தெரிந்திருந்தால், அவர் ஏன் இதனைத் தடுக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என்ற கேள்வியும் பெரிதாக எழுகிறது. தெரிந்திருந்தும் அவர் பேசாமல் இருந்திருக்கின்றார் என்றால் இந்தக் கொலைக்குக் காரணமானவர்கள் அவர் பக்கத்து ஆள்களோ என்ற சந்தேகம் எழுவதைத் தவிர்க்கமுடியுமா?

அப்படி இல்லையென்றால் அவர் அவசரப்பட்டு இப்படிப்பட்ட அறிக்கையை அறிவித்திருக்கக்கூடாது! ஏனென்றால் இப்படிப்பட்ட உடனடியான அவசரமான அறிக்கைகள் எதனையும் பொலீஸ்மா அதிபரோ, அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ முன்னர் ஒருபோதும் அறிவித்திருக்கவில்லை.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் கொலை செய்யப்பட்டபோது கொலைகாரர்கள் யார் என்பது குறித்து அரசு அவசரப்பட்டோ அல்லது ஆறுதலோ தெரிவிக்கவில்லை. இதே நிலைதான் றிச்சட் டீ சொய்ஸா உட்பட்ட ஊடகவியலாளர்களுக்கும், ஏன் சந்திரிகா அம்மையாரின் கணவரான விஜயகுமாரதுங்கவிற்கும் நேர்ந்தது. பொலீஸ் மா அதிபரின் இந்தக் குற்றச்சாட்டை மேற்கூறிய சம்பவங்களின் அடிப்படையில் நாம் தர்க்கிக்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளதோடு மட்டுமல்லாமல் இந்தக் குற்றச்சாட்டை- வன்மையாகக் கண்டித்திருக்கின்றார்கள். அதற்கு அவர்கள் கூறியுள்ள காரணங்களும் மிகவும் வலுவானவையாகும்.

ஆனால், இந்த மறுப்பை அரசாங்கப் பேச்சாளர் நிமால் சிறீபால டி சில்வா நிராகரித்துள்ளார். அவரும் பொலீஸ் மா அதிபர் போன்றே எந்தவிதக்

> **பொதுக்கட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு சிங்கள, முஸ்லீம் மக்களுக்கும் தீமை செய்தவர்.**

காரணத்தையோ அல்லது ஆதாரத்தையோ காட்டாமல் தமிழீழ விடுதலைப் புலிகளின் மறுப்பை நிராகரித்துள்ளார். நன்றாக ஒத்திகை பார்க்கப்பட்ட நாடகம்தான். ஆனால், கதைப்பொருள்தான் பலவீனமாக உள்ளது.

இந்தத் தர்க்கங்களின் அடிப்படையில்தான் லக்ஷ்மன் கதிர்காமர் என்பவரின் தனி மனிதச்சாவு குறித்து மேலும் சில தர்க்கங்களை நாம் முன்வைக்க விரும்புகின்றோம்.

### மண்ணோடு ஒட்டாதவர்

லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களுடைய தகைமைகள் குறித்தும் அவரது ஆற்றல் குறித்தும் இக்கட்டுரையின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தோம். ஆனால், வருந்தத்தக்க வகையில் இவருடைய இந்தத் தகைமைகளும், ஆற்றலும் தமிழின மக்களுக்கு எதிராகவும் அவர்களது நாளாந்த இயல்பு வாழ்க்கைக்கு எதிராகவும், தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிராகவும் செயற்பட்டுவந்துள்ளன. அடிப்படையில் இவர் மண்ணோடு ஒட்டாதவர். அதன் மக்களோடு உறவாடாதவர். தன் இன மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமலேயே ஒரு நியமன நாடாளுமன்ற உறுப்பினராக சிங்களப் பேரினவாதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

இன்னுமொரு விடயத்தையும் நாம் இங்கே சுட்டிக் காட்டியாகவேண்டும். லக்ஷ்மன் கதிர்காமர் என்பவர் 'தமிழினத் துரோகி' - என்ற ரீதியில் பலராலும் குற்றம் சாட்டப்பட்டு வந்தவர்தான். ஆனால், அவருடைய 'உலகம் இதனை விடப் பெரியது' ஆகும். அவர் தன்னுடைய தலைவியான சந்திரிகா அம்மையாரின் தனிப்பட்ட நலனுக்காகவும், அவருடைய அரசியல் நலனுக்காகவும் தன்னுடைய அறிவையும், உழைப்பையும் அர்ப்பணித்தவர் ஆவார்.

### பொதுக்கட்டமைப்பை எதிர்த்தவர்

ஆழிப்பேரலை அழிவுகள் காரணமாக உருவாக்கப்படவேண்டிய பொதுக்கட்டமைப்பு தனியே தமிழ் மக்களுக்கான கட்டமைப்பு மட்டும் அல்ல. இப் பொதுக்கட்டமைப்பின் செயற்பாடுகள் ஊடாக தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் பயனடைவதாக இருந்தனர். ஆனால், சந்திரிகா அம்மையாரின் தனிப்பட்ட அரசியல் விருப்பு - வெறுப்பு காரணங்களுக்கு அமைய லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களை முடுக்கிவிட்டிருந்தார். இந்தப் பொதுக்கட்டமைப்பு எல்லோருக்கும் பொதுவான ஒன்றாகும். அதனைக்கூட சட்டை செய்யாதவகையில் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் தமிழர்களுக்கு மட்டுமல்ல முஸ்லிம் மற்றும் சிங்களப் பொதுமக்களுக்கும் தீமை செய்தவர் ஆவார். இவர் தமிழ் மக்களுக்கு எதிரிதான். ஆனால், மற்றவர்களுக்கும் உண்மையான நண்பர் இல்லை. ஏனென்றால், சந்திரிகா அம்மையாரின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயலாற்றிய ஒரு தனி மனிதர்தான் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள்.

அடிப்படையில் சமாதானத்திற்கு விரோதியாகத்தான் கதிர்காமர் செயற்பட்டு வந்துள்ளார். தமிழ்த் தேசியவாதத்திற்கு மட்டும் அவர் எதிரியாகச் செயற்படவில்லை. எந்த வகையான சமாதானத் தீர்வுக்கும் அவர் முட்டுக்கட்டையாகவே இருந்துவந்துள்ளார். நோர்வே நாட்டின் சமாதான முன்னெடுப்புகளுக்கு எதிராக, கதிர்காமர் மிகக்காட்டமான கருத்துக்களை வெளியிட்டு வந்துள்ளார்.

லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் படித்தவர்தான்! சட்டம் தெரிந்தவர்தான்! ஆனால், ஆக்கபூர்வமாகச் செயற்படாதவர். அவர் திறமையாகச் செய்ததுதான் என்ன? ஜனநாயக மரபுகளை சட்டரீதியாக மீறுவது எப்படி? என்று ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு ஆலோசனை வழங்குவதுதான் இவரது முக்கிய வேலையாக இருந்திருக்கிறது. அதனை கதிர்காமர் மிகத்திறமையாகவே செய்து வந்திருக்கிறார்.

### அன்று ஐ.நாவை எதிர்த்தவர்

உலக நாடுகளினதும், உலக நிறுவனங்களினதும் நியாயமான கரிசனைகளைக்கூட கதிர்காமர் மதித்ததில்லை. 1999ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதியன்று சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சுத் தாக்குதலால் புதுக்குடியிருப்பில் 22 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளி உலகிற்கு உறுதிசெய்தது. இதனை ஐக்கிய நாடுகள் சபை கண்டித்தபோது லக்ஷ்மன் கதிர்காமர் பதிலுக்கு ஐக்கிய நாடுகள் சபையைக் கண்டித்தார். அன்று அவர் சொன்னதை அநேகர் மறந்திருக்கமாட்டார்கள்.

"ஐக்கிய நாடுகள் சபை, உள்நாட்டுப் போரில் ஏற்படும் இழப்புக்கள் குறித்து தலையிடவேண்டியதில்லை. மலேரியா மற்றும் நுளம்புப் பிரச்சினைகளையும் சமூக பொருளாதார வளர்ச்சிகளையும் குறித்தே ஐக்கிய நாடுகள் சபை அக்கறை காட்ட வேண்டும்." என்று மிகக் கடுமையாக கதிர்காமர் அன்று கண்டித்திருந்தார். அவர் கருத்துபடி நுளம்பு அடிக்கவேண்டிய இந்த அமைப்புக்கள் இன்று நுளம்படிக்காமல் அவருக்கு அஞ்சலிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன.

தன் இனத்து மக்கள் போர் காரணமாகவும், பொருளாதாரத் தடை காரணமாகவும் இன்னல் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கையில் கதிர்காமர் அவர்கள் தன்னுடைய மனைவியுடன் உலக நாடுகள் பலவிற்கும் விஜயம் செய்ததால் ஏற்பட்ட செலவு சுமார் ஆறுகோடி ரூபாய்களுக்கும் மேலானதாகும். இச் செலவுகள் குறித்துக் கேள்விகள் எழுப்பப்பட்டபோது அவர் கிஞ்சித்தும் அலட்டிக்கொள்ளவில்லை. ஏனென்றால், இந்த மனிதர் தன் மண்ணோடு ஒட்டாதவர். தமிழ் மக்களின் சாதாரண வாழ்வு முறை குறித்துக்கூட எதையும் அறியாதவர்தான் இவர்.

சந்திரிகா அம்மையாரின் தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்காவின ஆட்சிக் காலத்தில் மண்ணோடு ஒட்டாத இன்னொரு மனிதரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா என்பவர். சிறிமாவோ அம்மையா ருக்கு ஆலோசகராக இருந்தார்.

(VIIபக்கம் பார்க்க)

# “சுய பலத்தில் நாங்கள் வாழ்ந்தால் வெற்றி என்றும் எங்களுடையதே....”

பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் இன்று சமூகத்தில் புரை யோடிப்போய் உள்ளன. புற்றுநோயாகப் பீடித்துள்ள இந்த வன்முறைகளை எதிர்நோக்கும் பெண்கள் தினம் தினம் வேதனைகளையும், சோதனைகளையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

சமூகத்தின் முதுகெலும்புகளாக விளங்கும் பெண்கள், சிறுவர்களின் உளமேம்பாடு குறித்து இன்று பல்வேறு தரப்பிலும் சிந்தனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது, பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான சேவைகளை வழங்க பல்வேறு நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இந் நிறுவனங்களின் சேவைகள் பாதிக்கப்பட்டவர்களை உரியமுறையில் சென்றடைகிறதா என்பது இற்றை வரை கேள்விக்குறியாகவே உள்ளது.

பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள் சுய ஆற்றலுடனும் தன்னம்பிக்கையுடனும் வாழ சட்ட ரீதியான உதவிகள், வழிகாட்டல்கள், உளவள ஆலோசனைகள் என்பவற்றை வழங்கி வழிகாட்டி வருகிறது 'வின்' (Woman in Needs) – தேவை நாடும் மகளிர் – அமைப்பு.

இந்த அமைப்பு கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு யாழ்ப்பாணம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு இடங்களிலும் இயங்கிவருகிறது. இந்த அமைப்பின் செயற்பாடுகள் குறித்து கொழும்பு பிரதான இடர் நிவாரண மையத்தைச் சேர்ந்த திருமதி சந்திரா தியாகராஜாவுடன் கலந்துரையாடினோம். அவரது கருத்துக்கள் செவ்வி வடிவில்.

## சார்ந்து இருத்தலே பிரச்சினைகளுக்கு மூலகாரணம் என்கிறார் 'வின்' அமைப்பாளர்

❁ மகளிரின் தேவையறிந்து உதவும் 'வின்' அமைப்பில் பணியாற்ற முன்வந்தமைக்கான காரணம்?

➢ நான் 1997ஆம் ஆண்டு வரை அரசசார்பற்ற நிறுவனங்களில் மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றினேன். இந்த நிறுவனப் பிரதிநிதிகளுடன் சமூகத்திலுள்ள பலவேறுபட்டவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது.

ஒவ்வொரு பெண்ணும் ஏதோ ஒரு வகையில், பிரச்சினைகளைச் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். தமது மனக்கிடக்கைகளைப் பூட்டிவைத்து தினம் தினம் உளநோயாளிகளாகிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தமது உரிமையை உணர்ந்துகொள்ள வேண்டும், தாம் ஆட்பட்டுள்ள பிரச்சினைகளிலிருந்து வெளிவர வேண்டும், தகுந்த வழிகாட்ட வேண்டும் என்ற எண்ணம்தான் என்னை இந்த அமைப்பில் இணைந்து பணியாற்ற வைத்தது எனலாம்.

❁ இல்லத்து வன்முறை என்பது பெண்கள், சிறுவர் வளர்ச்சியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது?

➢ பெண்கள் தெரிந்தோ தெரியாமலோ, வன்முறைக்குட்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடக்குமுறை என்பது குடும்பத்தின் ஓர் அங்கத்தவர் இன்னொரு அங்கத்தவரை அடக்கி ஆக்கிரமிப்பதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இதற்கு பல்வேறு வடிவங்கள் கொடுக்கப்படுகின்றன. கணவன் என்கிற வட்டம், அப்பா என்கிற அன்பு, அண்ணா என்கிற கவனிப்பு. இவ்வாறு ஒவ்வொரு பெண்கள் மீதும் காட்டப்படும் செயல்கள் பெண்களை உளவியல் ரீதியாகவும் உடலியல் ரீதியாகவும் பாதிக்கிறது. பாதிக்கப்படும் பெண்கள் நாளடைவில் சமூகத்திலிருந்து தனியாக விலகி நோயாளிகளாக மாற்றம் பெறுகிறார்கள்.

அதுமட்டுமன்றி பதற்றம், மனச்சோர்வு, தன்னம்பிக்கை இழத்தல், கோபம், வெட்கப்படல், பயம் போன்ற உணர்வுகள் ஏற்பட்டு நாளடைவில் சமூகத்திலிருந்து தானாகவே ஒதுங்கி வாழ முற்படுகிறாள். இது அவளது ஆரோக்கியமான வாழ்வுக்கு நல்லதல்ல.

இல்லத்து வன்முறைகளுக்கு முகங் கொடுக்கும் சூழலிலுள்ள பிள்ளைகளும் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே பிளவு, கருத்துவேற்றுமை என்பன ஏற்பட வாயப்பளிக்கிறது. இது ஆரோக்கியமற்ற குடும்பச் சூழலை உருவாக்குகிறது. இந்நிலை மாற்றப்படவேண்டும்.

❁ இல்லத்து வன்முறைகளிலிருந்து விடுபட விரும்பும் பெண்களுக்கு கூற விரும்புவது?

➢ பெண்கள்தான் சமூகத்தின் முதுகெலும்புகள். இவர்களது விருப்பங்கள், உணர்வுகள் மதிக்கப்படவேண்டும். அவர்களது உரிமைகள் வழங்கப்படவேண்டும்.

ஒரு தாய் பூரணமானவளாகவும் ஆரோக்கியமானவளாகவும் இருக்கும் போதுதான் அவள் சார்ந்த குடும்பம் பூரணத்துவம் அடைகிறது.

பெண்களே நீங்கள் சாதிக்கப் பிறந்தவர்கள். உங்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளை மௌனத்தின் மூலம் அங்கீகரிக்காதீர்கள். மன உணர்வுகளுக்கு விடுதலை கொடுங்கள்; மௌனத்தை கலையுங்கள் அப்போது தான் உங்கள் சமூகம் விடுதலை பெறும்.

பெரும்பாலும் சார்ந்து வாழ்தல்தான் பெண்கள் மீதான அதிகாரங்களை வலுப்படுத்தி நிற்கின்றது. பலம் மிக்க பெண்கள் இன்று தனித்துவமாக வாழப் பழகியுள்ளனர்; வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கான சுய பலத்தில் நில்லுங்கள். வெற்றி என்றும் உங்களுக்குத்தான்.



❁ உதவிக்கரம் வழங்கும் 'வின்' னின் சேவைகள் குறித்து?

➢ 'வின்' தேவை நாடும் மகளிர் அமைப்பு பெண்களுடனும் சிறுவர்களுடனும் தொடர்புடைய சகல வன்முறைகளுக்கு எதிராகவும் பணி புரிகிறது.

பாதிக்கப்படும் பெண்கள் சிறுவர்களை இனங்கண்டு தேவையான உதவிகளையும் ஆற்றுப்படுத்தல்களையும் வழங்குகிறது.

குடும்பப் பிரச்சனைகளில் சிக்கித் தவிப்போருக்கு சட்ட ரீதியான ஆலோசனைகள், உதவிகள் வழங்கப்படுகின்றன. சிநேகபூர்வமாக அங்கத்தவர்களிடையே கலந்துரையாடப் பட்டு தீர்வுகள் வழங்கப்படுகின்றன. பெரும்பாலும் கணவன் – மனைவி பிரிவைப் பொறுத்தவரை விவாகரத்தை ஊக்குவிப்பதில்லை. இந்தச் சேவையை 'வின்' அமைப்பு இலவசமாகவே வழங்கி வருகிறது.

பாதிக்கப்படும் சிறுவர்களின் கல்வியைத் தொடர வழிகாட்டுவதுடன் தன்னம் பிக்கையை ஏற்படுத்தும் செயற்பாடுகளையும் மேற்கொண்டுவருகிறது.

செவ்வி கண்டவர்:
மதியழகி

தற்காலிக தங்குமிட வசதிகளை ஏற்படுத்தி மனிதனாக வாழ வேண்டும் என்ற நம்பிக்கை ஊட்டப்படுகிறது.

தமக்குள் புதைந்துள்ள துக்கங்களை வெளிக்கொணர்ந்து சந்தோசங்களையும் துக்கங்களையும் பகிர்ந்து புத்துயிர் பெற எமது அமைப்பு வழிகாட்டுகிறது.

என்நேரமும் நாம் உங்களுடன்தான்.
எங்கள் சேவையைப் பெற நாடுங்கள்.
'வின்', 22/1, றக்கா லேன்,
சுண்டுக்குழி.
தொ.பே. 071 4182469



## கழுத்தின் கருமை மறைய



சிலரின் முகம் பளிச்சென்று அழகாக இருக்கும். ஆனால் கழுத்து மட்டும் கருமையாக இருக்கும்.

இதை நீக்குவதற்கு கோதுமை மாவில் வெண்ணையைக் கலந்து கழுத்தைச் சுற்றிப் பூசவும். 20 நிமிடங்கள் கழித்துக் குளிக்கவும். இப்படி தினசரி செய்து வந்தால் கழுத்துக் கருமை நீங்கிவிடும்.

## வெற்றிக்கான முதலீடு

தோழிகளே நாம் என்றும் வெற்றியாளர்கள்தான். எப்பொழுது? வெற்றியை நோக்கி அடியெடுத்து வைக்கும் போதும் வெற்றிக்காகத் திட்டமிடும் போதும்தான் நாம் வெற்றியாளர்கள்.

வெற்றி இலக்கை அடைவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும். இதோ சில டிப்ஸ்.....

- செய்ய விருமபும் காரியங்களைத் திட்டமிடுங்கள்.
- இன்று நாம் செய்யவுள்ள காரியங்களை முதல் நாள இரவே அட்டவணைப்படுத்தி எழுதிவையுங்கள்.
- திட்டமிட்ட ஒரு காரியத்தை வீணாகப் பிறபோடாதீர்கள்.
- கஸ்ரமான ஒரு காரியத்தைச் செய்வதற்கு சநதோசமான ஒரு பொழுதில ஆரம்பியுங்கள்.
- நாம் செய்யப்போகும் காரியததின் எதிர்மறை எணணங்களை உதறித் தள்ளுங்கள்.
- வெற்றியின் போது உங்களை நீங்களே தட்டிக் கொடுங்கள்.
- நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**அர்த்தமுள்ள வாழ்விற்கு...**

*உறவுகளை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளாமல் வெற்றிகளைப் பெறுவது சாத்தியமில்லை.*

## சந்தியாவின் கடிதங்கள்



**பிரியமுள்ள பிரியா,**

இன்று என்னிடமும், உன்னிடமும் நம் தோழியர் அனைவரிடமும் ஒரு வேண்டாத குணம் ஒழிந்துள் ளது. அதை விரட்டுவது மிகக் கஷ்டமான காரியம்தான். ஆனால், அதை ஒழித்து விட்டால் நம் வாழ்வில் என்றும் சந்தோஷம் தான்.

அது எதுவென்று தானே கேட்கிறாய்.

அதுதான்...... 'அதிருப்தி' – அடுத்த வருடன் நம்மை ஒப்பிட்டுப் பார்த்தால் இது நம்மை நாமே வெறுக்கும் அளவுக்கு மாற்றிவிடும்.

எனக்குத் தெரிந்த ஒரு அன்ரி இருக்கிறார். அவர் கணவன் அரசாங்கவேலையில் இருக்கிறார். அழகான இரு குழந்தைகள், கணவரும் மிக நல்லவர்.

ஆனால், அவர் ஒரு நாள்கூட சந்தோசமாக இருக்கமாட்டார். யாரையாவது பார்த்து, ஒப்பிட்டுத் தன்னைத் தானே குட்டிக் கொள்வார். அதாவது பக்கத்து வீட்டுப் பையனைக் காட்டி "சுதாவின் மகள் ரொம்ப சுட்டி. வகுப்பில் முதலாம் பிள்ளை. இதுகளும் இருக்கே 2ஆம் 3ஆம் பிள்ளைகளாகத்தான் எந்த நாளும் வருங்கள்" என்பார்.

பக்கத்து வீட்டு அன்ரி கடன்பட்டு ஒரு பொருளை வாங்கினால், கடனில் வாங்கினார் என்பதை விட அவர் பொருள் வாங்கியதுதான் அவரின் மனதில் நின்று ஏக்கத்தை உருவாக்கும்.

இதே நிலைதான் நம் ஒவ்வொருவருக்கும். நம்மிடம் உள்ளவற்றை விடுத்து இல்லாதவற்றுக்காக ஏங்குவோம்.

காலில் செருப்பணியாத ஒருவன் வீதியால் சென்று கொண்டிருந்த சப்பாத்து அணிந்த ஒருவனைப் பார்த்து மனதில் புழுங்கினானாம், என்னால் செருப்புக் கூட அணிய முடியவில்லையே என்று. சிறிது தூரம் சென்றான். அப்பொழுது எதிர்ப்பட்ட ஒருவனைக் கண்டதும் அவன் மனம் சமாதானம் அடைந்தது. ஏனெனில் எதிர்ப்பட்டவன் ஒரு கால் இல்லாமல் ஊன்றுகோலின் உதவியுடன் மிகச் சிரமப்பட்டு நடந்து வந்தான். " எனக்கு செருப்பில்லாவிட்டாலும் பரவா யில்லை. காலாவது உள்ளதே" என்று அமைதியானான்.

ஒவ்வொருவருக்கும் கடவுள் ஏதோ ஒரு தனித்துவத்தைக் கொடுத்திருக்கின்றார். அந்தத் தனித்துவத்தை நாம் புரிந்து கொள்வதில்லை. அதைப் புரிந்து கொண்டால் வாழ்வு சிறப்படையும்.

நமக்கு ஒரு சிறு கஷ்டம் ஏற்பட்டவுடன் எனக்குத் தானே இந்தத் துன்பம் எல்லாம் என்ற சலிப்பு எற்படுகின்றது. ஆனால், எம்மை விட நூறு மடங்கு கஸ்ரத்தை அனுபவிப்பவர்கள் இந்த உலகத்தில் நிறைய உள்ளார்கள். எனவே, அதை நினைத்து ஆறுதலடைவதுடன் துன்பப்படுபவர்களுக்காகக் கடவுளை வேண்டுவோம்.

**பிரியமுடன் சந்தியா**

# "...மரணத்தை வெல்ல முடியாது ; ஆனால் ஆயுள்வேதம் ஆயுளைக் காக்கும்..."



ஆயுள்வேத வைத்தியம் மிகப் பழைமையானது. நவீன முறைகளிலான ஆங்கில வைத்தியம் வளர்ச்சியடைந்திருந்தாலும் பக்கவிளைவுகள் ஏதுமின்றி நோய்களை பூரணகுணமடையச் செய்யும் சக்தி ஆயுள் வேத வைத்தியத்துக்கு உண்டு. அதனால் அது இன்றும் நம் மக்களிடையே பிரசித்தம் பெற்று விளங்குகின்றது.

ஆயுள்வேத வைத்தியத்தில் நீண்ட கால அனுபவமும் ஆற்றலும் பெற்றவர் சுன்னாகம் வைத்தியர் அருளப்பு. 83 வயது நிரம்பிய அவர் ஆயுள்வேத வைத்தியம் தொடர்பான பல பயனுள்ள தகவல்களை எமது முத்தான மூத்தவர்கள் பகுதிக்கு வழங்கியுள்ளார்.

அருளப்பு அவர்கள் செவ்வியில் வழங்கிய தகவல்களை வாசகர் களுடன் இங்கு பகிர்ந்து கொள்கிறோம்.

## முத்தான மூத்தவர்கள் – 21

## சுன்னாகம் வைத்தியர் அருளப்பு

## அனுபவத்தில் கண்டதைப் பகிர்கிறார்

செவ்வி கண்டவர்:
வி.பி.சர்மா

• வைத்தியத் தொழிலில் உங்களுக்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது?

★ எனது தகப்பனார் ஒரு வைத்தியர். வறுமையான குடும்ப சூழ்நிலை. தகப்பனார் தனது இடத்துக்கு என்னை ஆளாக்க விரும்பினார். அவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வைத்தியத்தில் ஈடுபட்டேன். தகப்பனார் இறந்த பின் டாக்டர் ஏ.வி. ராஜரட்ணம் எனது தொழிலுக்கு ஊக்கமளித்தார்.

• வைத்திய அறிவை எவ்வாறு வளர்த்துக்கொண்டீர்கள்? வைத்தியத்தில் உங்கள் முத்திரை - அடையாளம் என்னவாக அமைந்தது?

★ லங்கா ஆயுள்வேதக் கல்லூரியில் நான்கு வருடங்கள் படித்தேன். படித்தும் தகுதியான அறிவை பெற்றேனோ என்பது சந்தேகம்தான். வைத்தியத்தில் சில விளக்கக்குறைவுகள் இருந்தபடியால் கொழும்பு சுதேச வைத்தியக் கல்லூரியில் நான்கு வருடம் படித்து ஒரு வருட பயிற்சியும் பெற்றேன். ஆயுள் வேத மாத சஞ்சிகைகளைப் படிப்பேன். அதில் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை - அந்தக் காலத்தில் ஞானிகள் சித்த வைத்தியத்தில்தான் நரம்பு மண்டலங்களை அளவெடுத்தனர். ஆயுள் வேத வைத்தியத்திலும் ஆராய்ச்சிகள் நடந்துதான் உள்ளன. இறந்த ஒருவரின் உடலை ஓடிக் கொண்டிக்கும் ஆற்று நீரில் நிறுத்தி, அதன் மீது அலைஅடித்து அடித்து செல்ல சுமார் ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடத்தின் பின்பு நரம்பு மண்டலம் தெளிவாகத் தெரியும். சித்த வைத்தியர்கள் ஞானத்தால் சொன்னவற்றை ஆயுள்வேத வைத்தியர்கள் ஆராய்ச்சிகள் மூலம் உறுதிப்படுத்தினர். ஆராய்ச்சி மூலம் நரம்பு மண்டலத்தை எண்ணிக் கணக்கிட்டனர் - என அதில் கூறப்பட்டுள்ளது.

எனது தகப்பனார் நாடி வைத்தியம் செய்வதில் மகாதிறமைசாலி. நாடி பிடித்துப் பார்த்து ஒருவருடைய நோய், ஆயுள் நிலை என்பவற்றை தெளிவாக கூறிவிடுவார். அட்டாவதானம் மிக்க ஒரு ஞானி. வைத்தியத்துறையில் உள்ளதை உள்ளபடி செய்யவேண்டியதுதான். ஏமாற்ற முடியாது.

• வைத்திய அனுபவத்தின் போது குறிப்பிட்டுக் கூறக் கூடிய சம்பவங்கள் நிகழ்ந்துள்ளனவா?

★ ஓர் இளந்தாரிப் பையன் ஓரிரவு நடுச் சாமத்தில் வந்து தனது தாய்க்கு வருத்தம் கடுமை வாருங்கள் என்றான். நான் அங்கே சென்றபோது அப் பெண் இறந்து விட்டதாக கூறி மரண வீட்டுக்கான பந்தல் வேலைகள் நடைபெறுகின்றன. நோயாளி இறக்கவில்லை. வேலைகளை நிறுத்துங்கள் என நான் கூறியபோது என்னை ஏளனமாகப் பார்த்தனர். நாடி ஓட்டம் குறைந்திருந்த நிலையில் நோயாளிக்கு மகா ஏலாதியை மிளகு அவித்த நீரில் உரைத்து நாக்கில் பூசினேன். பென்சிலின் ஊசியும் ஏற்றினேன். உடல் விறைக்காமல் இருந்ததால் காலை மாலை என அதே மருந்தை வழங்கினேன். இரண்டு நாள்கழிய அப்பையன் வந்தான். அம்மாக்கு பசிக்கிறதாம் என்றான். நான் அதனை பகிடி என நினைத்து அங்கு சென்று பார்த்தபோது அப்பெண் எழுந்திருப்பதைக் கண்டு ஆனந்தப்பட்டேன். அவருக்கு நெல்லுப் பொரி தண்ணீர் கொடுத்து, மகா ஏலாதியுடன் கல்சியம், குளுக்கோஸ் ஊசி ஏற்றினேன். அப்பெண் பின்னர் 78 வயது வரை வாழ்ந்துள்ளார்.

• உங்கள் தகப்பனாரை போல நாடி வைத்தியத்தில் நீங்கள் சிறப்புப் பெறவில்லையா?

★ நாடி வைத்தியம் ஒரு ஞானத்தில்தான் வரவேண்டியுள்ளது. எனக்கு நாடியில் வாதம், பித்தம், கபம் விளங்குகிறது. மரணக் குறியும் விளங்குகிறது. ஆனால், அப்பாவைப் போல அட்டாவதானம் இல்லை. அவரைப் போன்ற நிபுணத்துவம் உள்ள ஞானி எவரும் இல்லை. அவருடைய அறிவு எனக்கு இல்லாமல் போய்விட்டதே (தேம்பித் தேம்பி அழுகிறார்) மரணக்குறி, மரணநேரம் எல்லாம் நாடி பார்த்து என்னால் கூறமுடியும். நாடியோடு சம்பந்தப்பட்டது நாடி வாதம். வாதத்தில் 80 விதங்கள் உள்ளன. நாட்பட்ட வாதம், ஆம வாதம் போன்றவற்றிலும் எனக்கு நல்ல சிறப்புத் தேர்ச்சி உண்டு.

• ஆயுள் வேதத்தில் தூசி விஷம் பற்றி கூறப்படுகிறதே. அதனை விளக்குவீர்களா?

★ ஆயுள் வேதத்தில் நாட்பட்ட நோய்களைக் கூட இனம் காணலாம். நோய்க்கான அடிப்படைக் காரணத்தையும் இனம் காணலாம். தூஷி விஷம் பற்றி கூறுவதானால் -

ஒரு விஷமானது மிகப் பழைமையாக போனாலும், விஷத்துக்குரிய ஔஷதங்களால் அதன் வீரியம் அடிபட்டுப் போனாலும் காற்று, தீ, வாயு, வெயில் இவற்றால் வரண்டு விட்டாலும் அதன் விஷத்தன்மை உணரப்படுவதில்லை. காலம் செல்ல, நோயாளி பலவீனப்பட அதனுடைய துர்க்குணங்கள் வெளிவரும். இந்த நோய்க்கு " விஷ அமிர்தம்" என்றொரு சூரணம் மருந்து. முதலில் பேதியாக சித்தாந்தி எண்ணெய் கொடுத்து விட்டு விஷஅமிர்தம் மருந்தை கொடுத்தால் நோயின் 75 வீதம் சுகமடையும்.

இருமிக்கொண்டு வந்த ஓர் ஆசிரியருக்கு தூஷிவிஷம் இருப்பதாக கூறினேன். இருமலுக்காக பல முறை ஆங்கில வைத்தியம் மேற்கொண்ட அவருடைய மகனும் ஓர் ஆங்கில டாக்டர். நான் கூறியதை அவர் மகனுக்கு கூறியுள்ளார். ஆயுள்வேத வைத்தியர்கள் ஆங்கில குளிகைகளை மாவாக்கிக் கொடுப்பார்கள். அது ஒவ்வாமையை (அலேர்ஜி) ஏற்படுத்திவிடும் எனக் கூறினாராம். அவர் தனது மகனின் கூற்றை வஞ்சகமில்லாமல் என்னிடம் கூறினார். விஷ அமிர்த சூரணத்தை அவருக்கு அனுப்பி அதில் ஆங்கில மருந்து ஏதும் இல்லை என அந்த டாக்டர் உறுதி செய்த பின் சூரணத்தை தகப்பனுக்கு கொடுத்து நோயை கட்டுப்படுத்தி சுகமாக்கினேன். தூஷி விஷம் பற்றிய விடயத்தை ஆயுள்வேத வைத்தியர்கள் தற்போது கவனத்தில் எடுப்பதில்லை.


தூஷி விஷம் பற்றி ஆதாரமான நூல்களில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது. 'விஷத்துக்குரிய அறிகுறிகளை தொடர்ந்து காட்டும். வயது போய் உடல் பலவீனப்பட விஷத்துக்குரிய குணம் குறிகள் தோன்றும். இருமல், தொய்வு, முட்டு போன்ற நோய்கள் ஏற்படும். நாடி வைத்தியம் மூலம் தூஷி விஷத்துக்கு ஆதாரமான நாடியை கண்டுபிடிக்க முடியும்.' தூஷி வைத்தியம் தான் எனக்கு வைத்தியன் என்ற பெயரை வாங்கித்தந்தது.

• ஆயுள்வேத வைத்தியரான நீங்கள் பென்சிலின் போன்ற ஆங்கில மருந்துகளையும் பாவித்ததாகக் கூறினீர்கள். இரண்டும் முரண்பாடான வைத்தியமல்லவா?

★ நான் கொழும்பு சுதேச வைத்தியக் கல்லூரியில் படித்தேன் அங்கு சில நோயாளிகளுக்கு ஆங்கில மருந்து ஊசி மூலம் போடுவதை பார்த்துள்ளேன் அதனடிப்படையில்தான் நானும் ஆரம்ப காலத்தில் ஊசி மருந்துகளைப் பாவித்தேன். பின்னர் முற்று முழுதாக ஆயுள்வேத மருந்துகளையே வழங்கிவந்துள்ளேன். இறந்து போனதாகக் கருதப்பட்ட பெண் நோயாளியை பென்சிலின் ஊசியும் மகா ஏலாதியும் கொடுத்து சுகமாக்கினேன். ஆயுள்வேத மருந்துகளால் அந்நோயை மாற்றமுடியும் என்ற துணிவும் ஆற்றலும் அன்று எனக்கு இருக்கவில்லை. அன்றைய அவசர தேவையாலும் அதனைக் கடைப்பிடிக்க நேரிட்டது. ஆனால், ஆயுள்வேத வைத்தியத்தால் அவரை குணப்படுத்தி இருக்க முடியும் என தற்போது கருதுகிறேன்.

• நீங்கள் ஆயுள் வேதம் படித்த காலத்தில் அல்லது வைத்தியம் பார்த்த காலத்தில் உங்கள் மனதை நோகவைத்த சம்பவங்கள் நடந்ததுண்டா?

★ நான் படித்துவந்த பல வைத்திய நூல்களை, படித்துவிட்டு தருவதாக வாங்கிச்சென்ற பலர் அவற்றை திரும்ப ஒப்படைக்காது விட்டது மனதைநோக வைப்பதாகும். மேர்க்குறி (பாதரசம்)யை சுத்தி செய்து மணியாக்கி அதனை வாயில் வைத்துக்கொண்டு போனால் நினைத்த இடத்துக்கு செல்லலாம் என்பதை ஒரு நூலில் படித்துக்கொண்டிருந்தேன். அந்த நூலை வாங்கி சென்ற இன்னொரு வைத்தியர் அதனைத் திரும்பத் தரவில்லை. "பஞ்சகுணதிரவியம்" என்ற ஒரு வைத்திய நூல். ஒரு பொருளின் நிறம், குணம், சுவை இவற்றைக்கொண்டு உண்டாகிற வாதம். பித்தம் போன்றவற்றின் விளக்கங்களைக் கொண்டது அப்புத்தகம். அப்புத்தகத்தை ஆதாரம் காட்டி எனக்கு படிப்பித்த ஓர் ஆசிரியருக்கு சில விளக்கங்களை எடுத்துக் கூறினேன். மாணவருக்கு படிப்பித்துவிட்டு தருவதாக கூறி அப்புத்தகத்தை வாங்கிய ஆசிரியர் அதனைத் திரும்ப ஒப்படைக்கவில்லை. தகப்பனாருடைய 'உளநூல்' என்ற புத்தகத்தை அறிமுகமில்லாத ஒருபையன் வாசிக்க கேட்டு கொடுத்தேன். அவன் அந்த நூலுடன் ஓடியே விட்டான். இப்படியான ஏமாற்றங்கள் என்னை நோக வைத்துள்ளது.



• ஆயுள்வேத வைத்தியத்தின் மூலம் குணப்படுத்தக்கூடிய நோய்கள் பற்றிக் கூறுவீர்களா?

★ பொதுவாக எல்லாவித நோய்களையும் குணப்படுத்தலாம். பக்க விளைவுகள் இன்றி குணப்படுத்தலாம். ஆனால், உடனடியாக பலன் ஏற்படாது. சிறிது காலம் பொறுமையோடு வைத்தியம் செய்யவேண்டும். வாதம், பித்தம், சன்னி, செங்கண்மாரி, மங்கண்மாரி இப்படி பல நோய்களை மாற்றி உள்ளேன். செங்கண்மாரிக்கு 15 நாள் வைத்தியம் போதும். கோப்பி போன்ற பான வகைகள் கூடாது. நெல்லு பொரிதண்ணீரே சிறந்தது. மயங்கிய நிலையில் இருந்த பலரை சுகமாக்கி உள்ளேன்.

கந்தரோடையில் செங்கண்மாரி நோயாளி ஒருவரின் நாடியைப் பார்த்தேன். உயிர்தப்புவதற்கான நாடி அடையாளம் காட்டவில்லை. அவருக்கு வைத்தியம் செய்யாது ஆஸ்பத்திரிக்கு அனுப்பினேன். அவர் அங்கு இறந்து விட்டார். இதனை எனக்கு ஏற்பட்ட தோல்வியாகக் கருதவில்லை. வாதரோகம், இருமல், சளி என்பவற்றுக்கு நிறைய மருந்துகள் உள. செந்தூரம் போன்றவை கடும் பத்தியத்துடன் கூடியவை. செந்தூரத்தில் வைரச் சரக்குகள் (பாஷாண சரக்கு) அடங்கி உள்ளன. முறையாக வைத்தியம் கடைப்பிடித்தால் நூறு வீதம் வெற்றி பெறலாம்.

• ஆயுள் வேத வைத்தியத் துறையில் வாரிசுகளை உருவாக்கி உள்ளீர்களா?

(V பக்கம் பார்க்க)

# இந்திய வல்லாதிக்கத்தின் குரூர முகத்தைக் காட்டிய வல்வைப் படுகொலைகள்...!

அடக்கு முறைகளினாலோ அல்லது ஆயுத பலத்தினாலோ ஈழத்தமிழினத்தை அடிமைப்படுத்தி விட முடியாது என்ற உண்மையை இந்திய - இலங்கை அரசுகள் புரிந்து கொண்டுள்ள இன்றைய சூழ்நிலையில் ஈழத்தமிழினம் அன்னிய ஏகாதிபத்தியவாதிகளின் குரல் வளையை நெரித்து சுதந்திரக்காற்றை நுகரும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

''ஒன்றுபட்ட இனத்தின் எழுச்சியானது அடக்கு முறைகளை ஓட விரட்டிவிடும்'' துயரத்தின் பின்னணியில் நிகழும் உண்மைகள் புகட்டும் பாடம் இது! ஆம்! ...... வல்வெட்டித்துறைப் படுகொலைகள் நாளை புகட்டவிருக்கும் பாடமும் இதுதான்.

ஈழத்தில் தமிழினத்தைப் பாதுகாப்பதற்கென்று கூறிக்கொண்டு வந்த இந்திய அமைதிப்படையினர் ஈழத்தை கபளீகரம் செய்து சின்னாபின்னப்படுத்தி அமைதியற்ற பிராந்தியமாக விட்டுச்சென்றனர்.

அவர்களது படுகொலைகளின் உச்சக் கட்டமாக நிகழ்த்திய வல்வைப் படுகொலை நிகழ்ந்து 15 வருடங்களின் பின் இன்றும் கூட நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்குகின்றது.

ஈழத்தமிழினத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வரலாற்றுப் பேர்பெற்றுவிட்ட துயரம் நிறைந்த கொலைகளின் வரிசையில் 'வல்வைப் படுகொலை' நீங்காத இடத்தைப் பெற்றுக்கொண்டது என்பதை எவரும் எக்காலமும் மூடிமறைத்து விடமுடியாது.

வல்வைப் படுகொலைகளை நிகழ்த்திய இந்திய இராணுவத்தையும் அவற்றை அனுப்பிய ராஜீவ் காந்தியையும் தமிழ் மக்களால் மறக்கவேமுடியாது.

அமைதியையும் ஆன்மீக நெறியையும் நேசிக்கும் வீரம் செறிந்த வல்வெட்டித்துறை மக்கள் - 1989ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

தமக்கு நேரப்போகும் ஆபத்தை அறியா வண்ணம் வல்வை மாநகர் களைகட்டியிருந்தது. முற்பகல் 11மணியிருக்கும் வல்வெட்டித்துறை துப்பாக்கி வேட்டுக்களால் அதிரத் தொடங்கியது.

மக்கள் தமது வீடுகளுக்குச் சென்றனர். அதனைத் தொடர்ந்து 12 மணியளவில் பல்லாயிரக்கணக்கான இந்திய இராணுவத்தினர் வல்வெட்டித்துறையைச் சுற்றி வளைத்தனர்.

இராணுவச் சீருடைக்குள் புகுந்திருந்த மிருகங்கள் இயந்திரத்துப்பாக்கிகளின் விசைகளை எழுந்தமானதாகத் தட்டி விட்டதில் பல அப்பாவி உயிர்கள் துடிதுடித்து அடங்கிப் போயின.

தமது வெறியாட்டத்தைத் தொடங்கிய இந்தியப் படை வீடுகளுக்குள் புகுந்து மக்களை கண்டபடி சுட்டுத் தள்ளினார்கள்.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு வெளிஉலகிற்கு எந்தச் செய்தியும் வெளிவராதபடி தொடர்ந்து மூன்று நாள்கள் நடத்திய கொடூரமான வெறியாட்டத்தில் வல்வை மண்ணில் செங்குருதி பெருக்கெடுத்தது.

உயிர்களை மட்டுமல்லாது வீடுகள், வீட்டுத்தளபாடங்கள், வாகனங்களுக்குத் தீ வைப்பு எனத் திட்டமிட்டு ஒரு நகரத்தை சுடுகாடாக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஒன்றரை வயதுப்பாலகன் தொடக்கம் 70 வயது வயோதிபர் வரையான உயிர்கள் ஈவு இரக்கமற்ற மிருகங்களின் துப்பாக்கிக் குண்டுகளிற்கு துடிதுடித்துப் பலியானார்கள்.

வல்வெட்டித்துறையில் ஒவ்வொரு வீடுகளாகப் புகுந்து வீட்டிலிருந்தவர்களைச் சுட்டுத்தள்ளியும் வீடுகளுக்குத் தீ வைத்தும் தமது வீரத்தை அப்பாவி மக்களின் குருதியில் கண்டார்கள்போல!

உலகின் எந்தவோர் இராணுவமும் பொதுமக்கள் மீது நடத்தியிராத கொடூரமான சித்திரவதைகளை மேற்கொண்டும் வைத்தியசாலைக்குள் புகுந்து மிலேச்சத்தனமான தாக்குதல்களை நிகழ்த்தியும் தாம் உலகின் நான்காவது பெரிய இராணுவம் என்பதை




உலகிற்கு நிரூபித்தார்கள்.

இறந்தவர்களைத் தகனஞ்செய்யவே அவகாசம் வழங்காது மூன்று நாள்களும் தமது வெறியாட்டத்தைத் தொடர்ந்தனர்.

இந்திய இராணுவத்தினர் பாரதத்தின் தேசபிதா மகாத்மா காந்தி உள்ளிட்ட மூத்த அரசியற்தலைவர்களின் சிலைகளையும், படங்களையும் அடித்துநொறுக்கி பாரதத்தின் தலைவர்களுக்கு எவ்வாறு மதிப்பும் கௌரவமும் கொடுத்திருந்தனர் என்பதை அறியலாம்.

பாரதத்தின் தலைவர்களின் உருவப்படங்களுக்கே இந்த நிலைமை என்றால் வல்வை மக்கள் பட்ட துயரத்தை அறிந்து கொள்ளமுடிகிறது.

கணவரின் உடலை மனைவியும் தந்தையின் உடலை மகளும் மகனின் உடலைத் தாயும் தம் வீட்டு முற்றத்திலேயே போட்டு எரித்த அந்தக் கொடூரமான நெஞ்சை உருக்கும் நிகழ்வுகள் அரங்கேறின வல்வைப் படுகொலையில்!

வல்வைப்படுகொலையில் ஏற்பட்ட மொத்த அழிவுகளாக 1989ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2ஆம் , 3ஆம் ,4ஆம் திகதிகளில் இந்தியப்படையினரால் திட்டமிட்டு நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலில் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், ஆண்கள், முதியவர்கள் என 63 அப்பாவி உயிர்களைக் கொன்றும் பல அப்பாவிப் பெண்களை பாலியல் வல்லுறவு புரிந்தும் 123 வீடுகளை முற்றாக எரித்து நாசமாக்கியும்,50 இற்கு மேற்பட்ட போக்குவரத்து வாகனங்களையும், 12 இயந்திரப்படகுகளையும், 176 மீன்பிடிவலைகளையும் எரித்து நர்த்தனம் ஆடியும் எழில்நிறைந்த வல்வை மாநகரைச் சுடுகாடாக்கினார்கள்.

இந்திய அமைதிப்படையினரின் அத்துமீறிய அட்டகாசங்களினால் நிலைகுலைந்து விடிழந்து, சொத்து சுகங்களை இழந்து இத்தனைக்கும் மேலாக அறுபதுக்கும் அதிகமான உடன்பிறப்புகளையும் இழந்தனர் வல்வைமக்கள்.

தாம் நடத்திமுடித்த கொலைகளுக்காக அனுதாபமோ கவலையோ தெரிவிக்காத இந்திய அரசு அதனை மூடி மறைப்பதற்காக தனது பிரசார சாதனங்கள் மூலம்



பொய்பிரசாரங்களை மேற்கொண்டு வந்திருக்கிறது. ஆனால், உண்மைகள் நீண்ட நாள்கள் உறங்கப் போவதில்லை!

இன்றும் கூட இந்தியா, இலங்கை அரசுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றும் நடவடிக்கைகள் மூலம் ஈழத் தமிழர்களுக்கு எதிராகவே செயற்பட்டு வருகிறது என்பது வெளிப்படை!

வல்லரசு நாடுகள் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்கள் சிறிய நாடுகளில் உரிமைக்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற இனத்திற்கு தங்கள் தார்மீக ஆதரவை வழங்கவேண்டுமேயொழிய இவ்வாறு நசித்து அடிமைப்படுத்த முயலக்கூடாது.

ஆம்...... வல்வைப் படுகொலைகள் என்ற துயரத்தின் பின்னணியில் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் மிகக்கூர்மையாக வளர்ச்சியடைந்து இன்று முப்படைகளையும் கொண்ட மரபு வழி இராணுவத்துடன் பலமாக எழுந்து நிற்கிறார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற விடுதலைப் போராட்டமானது தமிழீழ மக்கள் இயக்கமாக இருப்பதால் இந்திய இராணுவத்தால் மட்டுமல்ல உலகின் வேறு எந்த வல்லரசாலும் அடக்கி ஒடுக்கமுடியாது என்பதனை தற்போதைய சூழ்நிலைகள் எடுத்துக்காட்டுகின்றன.

''இந்திய இராணுவம் எங்களுடைய மக்களைச் சுட்டுக் கொன்றும் எமது உடைமைகளைத் தீவைத்து அழித்தும் தனது இராணுவ அராஜகத்தை உலகுக்கு காட்டிக்கொண்டிருக்கிறது..... நாளை இந்தியா இதற்கு பதில் சொல்லியே ஆகவேண்டும்''

இது வல்வைப் படுகொலையின் முடிவில் எழுந்த மனக்குமுறல்.

மிக விரைவில் சுதந்திரத் தமிழீழம் மலரும் போது ஈழத்தில் நடத்திய படுகொலைகள் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும் இந்தியா.

தர்சா

## நாம் எங்கே........?

அந்திப் பொழுதென்றால் சந்தி
சிரிக்குமங்கே
மந்திபோல் குந்தியிருந்து குலவுகின்ற
சங்கதிகள் இங்கு எங்குமுண்டு!

ஐயரே மணி அடித்து மந்திரம் சொல்லி
சொற்ப நேரத்தில்
மூன்று முறை கைதட்ட
முடிந்தது ஓர் பூஜை!
சோகம் துடைக்கவென சாமியிடம் போய்
சரணமிட்டு மன்றாடல் வழக்கமன்றோ?
இப்போ........
சாமியே அழுகிறார்.
துடைப்பதற்கு யாருமின்றிப் போன
துயரம் எங்கும் நடக்கிறது!
பல நாள் பசி துறப்பார்!
பயங்கர நோன் பென்பார்!
எண்ணி எண்ணி நாள் முடிப்பார்!
முடித்தவுடன் பல மிருகம் சேர்த்து
பகலுணவு!
அழுத தொந்தி சிரிக்கிறதாம்!
போன தெம்பு பிறக்கிறதாம்!
கதை விடுவார்!
கானலாய் நோன்பு போன கதை எங்கும்
கேட்டதில்லை! இங்கு கேட்டதுண்டு!
கோயிலுக்குப் போவார்
சாமியை மறந்திடுவார்
தேடுதல் வேட்டையில் சுழன்றடிப்பார்
இருபுறமும்!
மூன்று நிமிடத்தில் மூபத்து வலம் முடிக்க
கோயிலென்ன வேக நடை பயில்வோரின்
விளையாட்டு மைதானமா?
கோயிலுக்குள் திருமணங்கள்
எங்கும் நடக்கிறது!
பெண் பார்க்க கோயில் பொறியான விந்தை
இங்குதான் நடக்கிறது!
ஒரு கல்லில் இருமாங்காய் அடிக்கின்ற
இவர் வித்தையினை பாடுவதா? அன்றி
வீழ்கின்ற இந்துவின் விடியலுக்காய்
பாடுவதா?
சந்தி சிரிக்கும் இந்த நிலைமாற,
சாபக்கேடு மாறிச் சாதிக்க,
சரித்திரத்தை மாற்றிடுவோம்!
சிந்திப்போம் இன்று நாம் எங்கே என்று....?

சி.கௌசிகன்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி.

## "......மரணத்தை வெல்ல முடியாது ஆனால்......"

(IVபக்கத் தொடர்ச்சி)

★ எனது மகள் திரேசா ஆயுள் வேத வைத்தியம் படித்து சுன்னாகத்தில் வைத்தியம் செய்து வருகிறார். எமது குடும்பத்தில் ஆங்கில வைத்தியம் படிப்பதற்கேற்ற வாய்ப்பு வசதிகள் இல்லை.


• இந்த வயதிலும் நீங்கள் சுகதேகியாக இருக்கக் காரணமாக இருப்பவை எவை? வைத்தியத்தைத் தவிர வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபடவில்லையா?

★ மரணத்தை எனது மருந்துகளால் வென்று விடலாம் எனக் கூறமாட்டேன். அது இறைவன் செயல். இறைபக்தி, ஆன்மீக சிந்தனைகள், வழிபாடுகள், மரக்கறிச் சாப்பாடுகள், ஒழுக்கம் போன்றவைதான் 83 வயதிலும் என்னை சுகதேகியாக வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. அடிப்படையில் நாம் வறுமையானவர்கள். தகப்பனார் வைத்தியத்துடன் நெசவுத் தொழிலும் செய்வார். நானும் நெசவுத் தொழிலில் தேர்ச்சி பெற்றவன்தான். ஆனால், வைத்தியத்துறை ஆர்வத்தால் நெசவுத்தொழிலை கைவிட்டு விட்டேன். நெசவுக்கான தறிகள், இயந்திரங்கள் இருந்தபோதிலும் அவற்றை பயன்படுத்தத் தவறி விட்டேன். வைத்தியத்தில் முன்னேற்றம் இருப்பினும் நெசவுத் தொழிலையும் செய்திருந்தால் எமது பொருளாதார நிலைக்கு பிரயோசனமாக இருந்திருக்கும் என இப்போது உணருகிறேன்.

# தொலைபேசி எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது?

நம்மைவிட்டுப் பிரிந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் நம் நண்பர்களுடனும் உறவினர்களுடனும் பேசுவதற்கு ஏற்ற சாதனமே தொலைபேசி. இன்றைய வாழ்வில் அது இனறியமையாத சாதனமாகிவிட்டது. தொலைபேசி தொழிற்கூடங்கள், வியாபார நிலையங்கள், அலுவலகங்கள், வீடுகள எலலாவறறிலும் பயன்படுகிறது. தொலைபேசி எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது என்று தெரியுமா?

'தொலைபேசி' என்ற சொல் 'தூரம்' என்ற பொருளமைந்த 'தொலை' மற்றும் 'ஒலி' என்ற பொருளமைந்த 'பேசி' ஆகிய இரண்டு கிரேக்கச் சொற்களால் அமைந்ததாகும். ஆக தொலைபேசி என்பதற்கு ஒலியை மிகத் தொலைவுக்கு எடுத்துச் செல் லும் சாதனம் என்று பொருளாகும்.



தொலைபேசிக் கருவி கண்டுபிடிக்கப்பட்ட வரலாறு சுவையானது . அலெக்ஸாண்டர் கிரஹம் பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்தார் என்பதை அறிவோம். 1875ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2ஆம் திகதி கிரஹம்பெல தன்னுடைய உதவியாளர் தாமஸ் வாட்ஸன் என்பவருடன் தந்தி முறையில் எழுந்த சிக்கல் ஒன்றைத் தீர்ப்பதில் ஈடுபட்டிருந்தார்.

தந்தி பெறும் அறையில் பெல்லும் மறறொரு அறையில் அவரது உதவியாளரும் இருந்து செயல்பட்டனர். ஒரு இரும்புத் தகட்டில் வாட்சன் சில அதிர்வொலிகளை எழுப்பினார். உடனே பெல் அவருடைய அறைக்கு ஓடினார். அங்கு காந்தத்தின் துருவங்களுக்கிடையில் இருந்த இரும்புத் துண்டு அதிர்வதால் உடன் இருநத கம்பியில் மினசாரம் பாய்வதைக் கண்டார். இதுவே தொலைபேசி உருவாகக் காரணமாயிருந்தது.

1876ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி அவர் தொலைபேசி மூலமாக உரையாடலை நடத்திக் காட்டினார்.

தொலைபேசி எப்படி இயங்குகிறது என்பது தெரியுமா?

தொலைபேசியில் இரண்டு முக்கியமான உறுப்புகள் உள்ளன. ஒன்று - பேசும்பகுதி. மற்றொன்று-கேட்கும் பகுதி. பேசும் பகுதி ஒலிபரப்பியைப் போல இயங்குகிறது. கேட்கும் பகுதி ஒலி வாஙகியைப் போல் இயஙகுகிறது. இரண்டும ஒரே சாதனத்தில் வைக்கப்பட்டு மின் கம்பியினால் இணைக்கப்பட்டுள்ளன. பேசும் பகுதியில் பேசும்பொழுது அதில் இருக்கும் ஒரு உலோகத் தகடு அதிர்கிறது. இந்த அதிர்வுகளுக்கு ஏற்ப மின்சார ஓட்டம் ஏற்படுகிறது. இந்த மின்சாரம் கம்பியின் ஊடாகக் கேட்பவர் கையிலிருக்கும் ஒலி வாங்கியை அடைகிறது.

இந்த ஏற்றத் தாழ்வான மின்சார ஓட்டம் அதே போன்ற மாற்றத்தை ஒலி வாங்கியில் உள்ள உலோகத் தகட்டில் ஏற்படுத்தி அதை அதிரச்செய்கிறது. இவ்வதிர்வுகளின் காரணமாக முதலில் ஏற்பட்ட ஒலி அலைகளை உண்டாககுகின்றன. இதனால் பேசுபவரின் குரலை கேட்பவர் நன்கு கேட்க முடிகிறது. இதேபோல் மறுமுனையில் உள்ள பேசும் பகுதிக்கும் நம் முனையில் உள்ள கேட்கும் பகுதிக்கும் இடையில் நடக்கிறது. இவ்வாறு இரண்டு நபர்கள் தொலைபேசியில் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிறார்கள்.

இன்று எல்லா நாடுகளிலும் - மூலைமுடுக்குகளிலும் தொலைபேசி பாவனை வந்துவிட்டது. இதனால் உலகம் மிகவும் சுருங்கிவிட்டது.

- கவிதா

## கும்பகோணம்

| கு | ம் | ப | கோ | ண | ம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

- மனதுடன் தொடர்புடையது - 156
- வாழ்வுக்கு அத்தியாவசியம் எனக் கருதப்படுவது - 356
- மூக்குக்கு மேல் சிலருக்கு வருவது - 432
- 12 இராசிகளில் ஒன்று - 1236
- மங்களகரமான நிகழ்வுக்ளுக்கு வைப்பது - 1236
- இந்தியாவின் ஓர் இடம் - 123456

வி.கீர்த்தனா
தரம் 10A, மானிப்பாய் மகளிர் கல்லூரி.




### தம்பி, தங்கைகளே!

'சிறுவர் பொழில்' பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அவை தரமாக இருப்பின் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

## குரங்கார் கூட்டத்தோடு வாறார்!



குரங்கார் வாறார்
கூட்டத்தோடு வாறார்
தம்பி ஓடி வா
தங்கை ஓடி வா

கல் எறியாதீர்
கரங்களால் கீறிடும்
இங்கே வாருங்கள்
எட்டவே நில்லுங்கள்

விழிகளை உருட்டி
பற்களைக் கடித்து
வெருட்டுவதைப்
பார்த்தீரோ!
எம்மை வெருட்டுவது
பார்த்தீரோ!

குட்டிகளை அணைத்தே
கொப்புக் கொப்பாய்
தாவுது பார்த்தீரோ
குரங்குகள் தாவுது பார்த்தீரோ

முல்லை முருங்கை இலைகள்
எல்லாம் உருவுது பாருங்கள்
மாங்காய் வாழை கொய்யாக்
காய்கள் பிடுங்குது பாருங்கள்

வெடிச் சத்தம் கேட்டதும்
வந்த குரங்குகள்
பாயுது பாருங்கள்
பாய்ந்தோடுது பாருங்கள்

மீசாலையூர் கமலா

## பழங்களும் அதன் பிறப்பிடங்களும்

| | |
|---|---|
| திராட்சை | - கஸபியன கடறபகுதி |
| அனனாசி | - பிறேசில |
| வாழை | - தென்கிழக்கு ஆசியா |
| கொய்யா | - மத்திய அமெரிக்கா |
| பப்பாளி | - மெக்சிக்கோ |
| முந்திரிகை | - பிறேசில் |
| மாம்பழம் | - தெனகிழககு ஆசியா |
| பலாபபழம் | - இந்தியா |
| தோடமபழம | - சீனா |
| நெல்லி | - இந்தியா |
| எலுமிச்சை | - இந்தியா |

சிவசுபபிரமணியம வாமதீபன,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## பொறாமை பொல்லாதது

சுதந்திரன் இரு புறாக்களை அன்பாக வளர்த்து வந் தான். அவனுடைய மாமா ஒரு கிளியைக கொண்டு வந்து அவனுக்குப் பரிசாகக் கொடுத்தார்.

அந்தப் பச்சை வர்ணக்கிளி மிகவும் அழகாக இருந்தது. சுதந்திரன் அதற்குப் பழங்கள் கொடுத்து அதனுடன் பேசி மகிழ்ந்தான்



அவன் தங்களுடன் முன்புபோல் அன்பாகப் பழகவில்லையென புறாக்கள் எண்ண ஆரம் பித்தன. அதனால், ஒரு புறாக்குக் கிளியின் மீது பொறாமை ஏற்பட்டது. அந்தப் புறா பக் கத்து வீட்டுப் பூனையை அழைத்து, கிளியைக் கொல்லத் திட்ட மிட்டது.

இதை அறிந்த மற்றப்புறா "அந்தப் பூனையை இங்கே அழைக்காதே. பூனை பறவைகளுக்கு எதிரி. கிளியை மட்டுமல்ல எல்லாப் பறவைகளையும் கொலலும். அதை இங்கே அழைப்பது எமக்கும் ஆபத்தாக முடியலாம்" என்று கூறியது.

கிளியின் மீது பொறாமை கொண்ட புறாவுக்கு கிளி யைக் கொன்றொழிப்பதே நோக்கமாக இருந்தது. அது ஏனையவற்றைப் பற்றிச் சிந்திக்கவோ, மற்றப்புறா கூறிய அறிவுரைகளை கேட்கவோ விரும்பாத நிலையில் இருந்தது.

அது பக்கத்து வீட்டுப் பூனையிடம் சென்றது. தங்கள் வீட்டுக்கு வந்து, கிளியைக் கொன்று உண்ணுமாறு கேட் டுக் கொண்டது.

பூனை வந்து கிளியைக் கொன்று தின்றது. சில நாள்களின் பின் பூனைக்குப் பசியெடுத்தது. வேறு உணவு கிடைக்காததால் புறா ஒன்றைக் கொன்று சாப்பிட்டது. மீண்டும் ஒருநாள் வந்து மற்றப் புறாவையும் கொன்று உண்டது.

"பொறாமை அழிவையே தரும்"

- யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

## தகவற் பெட்டி

### கடலின் மணிக்கல்



மிகவும சிககலான - நோத்தியான - தோறறத்திலுள்ள கண்ணாடி ஓடுகளுக்குள் தங்களை மறைத்துக் கொண்டிக்கும் நுண் பாசித் தாவரங்களே கடலின் மணிக்கல் என்று அழைக்கப்படுகிறது.

இவை உலகின் அனைத்துக் கடல்களிலும் ஏராளமாகக் காணப்படுகின்றன.

பூமியில் நிகழும் ஒளிச்சோககைக்கு இந்த நுண்ணிய ஒற்றைக் கலத் தாவரங்கள் பெரும் பங்களிக்கின்றன.

கண்ணாடி ஓட்டில் உள்ள சிலிக்கா, தண்ணீரிலுள்ள போது இரசாயன மாற்றங்களை நிகழ்த்தி ஒளிச் சேர்க்கைக்கு உதவுகிறது. இதன் மூலம் பெருமளவு ஒட்சிசனை வெளிவிடுகிறது. புவி சூடடைவதால் இவ்வகை உயிரினங்கள் வேகமாக அழிந்துவருகின்றன.

### வரிக்குதிரை



வரிக்குதிரைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? தாவர உண்ணிகளான இவை ஆப்பிரிக்காவில் மட்டும்தான் வாழ்கின்றன.

இந்தக் குதிரைகள் Equidae குடும்பத்தைச் சேர்ந்தது. குதிரையும் கழுதையும் இதன் உறவினங்கள்.

இவை நோய் எதிர்ப்புச் சக்தி மிக்கது எனக் கூறப்பட்ட போதிலும் அறிவியல் அடிப்படையில் இது ஏற்கபபடவிலலை.

இதன் ஆயுள காலம சராசரி 20ஆண்டுகள். தோலுக்கு அடியில் அதிகக கொழுப்பைச் சேமித்துவைக்கிறது. இதன் இறைச்சி என்றால் சிங்கத்திற்குப் பெரிதும் விருப்பமாம்.

### பண்டாக்கரடி



'ஹான்' என்று செல்லமாக அழைக்கப்படும் இந்தப் பண்டாக்கரடி சீன மக்களின் அன்புக்குரிய விலங்காகத் திகழ்கின்றது.


மூங்கில் இலையை உணவாகக் கொள்ளும் இந்த விலங்கினம் தற்போது அழிந்து வருகிறது.

இதன்தோலை விற்று பணம் சம்பாதிப்பதால், இந்த இனம் விரைவில் அழிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'சீனாவில் சிச்சுயான பகுதியில் மட்டும் இந்த வகைக் கரடிகள் ஆயிரம் உள்ளன.

இந்த வகைக் கரடிகளை அழியவிடாது காப்பாற்ற சீன நாடு முத்திரைகளை அசசடித்து வெளியிட்டுள்ளது.

### ஆர்மடில்லோ




இரும்பு போனற பாதுகாபபுக் கவசத்துடன் உளள அதிசய விலங்கினம் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

ஆர்மடிலலோ என்ற விலங்கினம தான இவ்வாறு கவசததுடன் விளங்குகிறது. தென்அமெரிக்காவில இது அதிகளவில் வசிக்கின்றன.

முகம், உடல், வால் போன்ற எல்லாப் பகுதியும் உறுதியாக அமைந்துள்ளன. இந்த இனம் பார்ப்பதற்கு எலி போனறு காணபபடும். இது எறும்புகளைத்தான் உணவாக உட்கொள்கின்றன. எறும்புகள் கிடைக்காதபோது புழு பூச்சிகளை உணவாக்கிக் கொள்ளும்.

வலிமை மிக்க தோலையுடைய இதனை எந்த விலங்கினமும் இரையாக்க முடியாதாம்.

### தீக்குச்சி



இதனை முதன்முதலில் ஜான் வாக்கர் என்ற ஆங்கிலேயர் 1826 ஆம் ஆண்டு உருவாக்கினார்.

இதன் முனையை உப்புத்தாளின் மீது தேய்த்தால் அது வெடித்துக் கொண்டே எரியும். எரியும் போது ஒருவித கெட்ட நாற்றம் வீசும்.

பின்னர் 1930 ஆம் ஆண்டில் சார்லஸ் சவுரியா என்ற பிரஞ்சுக்காரர் எதில் தேய்த்தாலும் எரியக் கூடிய தீக் குச்சியை உருவாக்கினார்.

தொகுப்பு: தயா



# "பொன்முட்டை வாத்து"

வாய்ப்பொன்று தேடிவரும் வேளை, அதனை உரிய வகையில் பயன்படுத்தத் தெரிந்தவன் புத்திசாலியாகக் கருதப்படுவான் - என்கிறது பஞ்ச தந்திரக் கதைகளில் ஒன்று.

அவர் என்னைவிட ஆறு வயது மூத்தவர். இருவரின் வீடுகளும் அருகருகே அமைந்தவை என்பதோடு, நாமிருவரும் ஒரே பாடசாலையில் படித்தமை காரணமாய் எங்கள் நட்பு மிக நெருக்கமானது.

நாம் மணமுடித்த பின்னர் அவர் தனது மனைவியின் ஊரிலும், நான் எனது மனைவியின் ஊரிலும் நிரந்தரமாக வசிக்க நேர்ந்ததால், இடையில் எமது நட்பின் நெருக்கம் அருகிப் போயிற்று.

பின்பொரு சமயம் நாம் இருவரும் ஒரே அலுவலகத்தில் தொழில் பார்க்க நேர்ந்ததால் மீண்டும் எமது நட்பு நெருக்கமானது.

அரச சேவையில் என்னை விட அவர் நான்கு ஆண்டுகள் சேவை மூப்புக் கொண்டவர். அவர் பிரிவுத் தலைவராயும், நான் விடய எழுது வினைஞராயும் ஒரே அலுவலகத்தில் தொழிலைத் தொடர்ந்தோம்.

நகரின் மத்தியில் அமைந்த அலுவலகத்துக்கும் அவர் வதியும் ஊருக்கும் இடையே தூரம் நீண்டதொன்று. நான் வதிவதோ நகருக்கு அண்மித்த கிராமமொன்றில். அவர் வதியும் ஊரிலிருந்து தினமும் நீண்ட தூரம் - சிரமம் மிக்க பயணம் மேற்கொண்டே - அலுவலகம் வந்தாக வேண்டும். அவரது பிரிவுத் தலைவருக்கான கடமைகளில், அப் பிரிவில் கடமை புரியும் ஊழியர்கள் உரிய நேரத்தில் கடமைக்குச் சமூகம் அளிப்பதைக் கண்காணித்து உறுதிப்படுத்துவதும் முக்கியமான தொன்றாய் அமைந்திருந்தது. பாவம்..... அவராலேயே உரிய நேரத்தில் கடமைக்கு சமூகமளிக்க இயலாத போக்குவரத்துச் சிரமத்தால் அவதியுற்றார். அத்தோடு நகரத்துப் பாடசாலைகளில் கல்வி கற்கும் அவரது பிள்ளைகளுக்கும் அதேவித போக்குவரத்துச் சிரமம் இருந்தது. நகரத்தில் வாடகை வீடொன்றில் குடியிருப்பதே சிரமங்களைத் தவிர்ப்பதற்கான மாற்று வழியென நான் ஆலோசனை தெரிவித்தேன்.

அவரது மனைவி பெற்றோருக்கு ஒரே பிள்ளை. பல ஆண்டுகளுக்கு முன் மனைவியை இழந்துவிட்ட நண்பரது மாமனார், நண்பரின் குடும்பத்துடன் - மகளின் ஆதரவில் தங்கிவாழ்ந்தார். போதாததற்கு பாரிசவாதத்தால் எழுந்து நடமாட முடியாத நிலையில் உள்ள நோயாளி அந்த முதியவர். மாமனாரை அக்கறையாகக் கவனித்துப் பராமரிக்க வேண்டிய கடமை தமக்கிருப்பதால் நகரத்தில் வாடகைக்கு வீடெடுத்துத் தங்குவது வசதியாய் அமையாதென மறுத்துவிட்டார். அவரது நிலைப்பாடு நியாயமாய் தோன்றியதால் நான் மேற்கொண்டு அவரை வற்புறுத்த முயலவில்லை.

சொந்தக் குடும்பப் பொறுப்பு, வேலைப்பழு, பிரயாணச்சிரமம் இவை காரணமாய் நண்பரின் வீட்டுக்கு எப்போதாவது ஒரு தடவை மட்டுமே என்னால் சென்று வர முடிந்ததுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் நண்பரது மாமனார் - அந்த முதியவருடன் அளவளாவும் வாய்ப்பு எனக்குக் கிட்டியதுண்டு. அந்த முதியவர் தனது மருமகனான எனது நண்பர் மீது பெருமளவு மதிப்பும் மரியாதையும் வைத்திருந்ததை அவ்வேளைகளில் நான் அவதானித்ததுண்டு. தமக்கு இத்தகைய நல்லதொரு மருமகன் வாய்த்திருப்பதன் மூலம், தமது மரணத்தின் பின்னர் தமது அந்திமக் கிரியைகளை நிறைவேற்ற மகனொருவன் இல்லையே என்ற தமது நீண்டகால மனக்குறை அற்றுப் போய் விட்டதாக அந்த முதியவர் என்னிடம் பல தடவைகள் தெரிவித்ததுண்டு. அந்த அளவுக்கு அந்த முதியவர் தமது மருமகனை - எனது நண்பனைத் தமது மகனாகவே கருதிவந்தார். சும்மா சொல்லக்கூடாது. எனது நண்பர் கூட காலையில் அலுவலகம் புறப்படுமுன் - தாமாக இயங்கமுடியாத அந்த முதியவரின் அத்தனை அவசிய தேவைகளையும் - சுடு நீரில் குளிப்பதற்கு வசதி செய்து கொடுப்பது உட்பட - தானே முன்னின்று, எந்தவித சலிப்புமின்றி நிறைவேற்றி வந்ததையும் நான் நேரில் கண்டிருக்கிறேன்.

கல்லூரிப் படிப்பு முடிந்து - நாமிருவரும் அரச தொழிலில் இணைவதற்கு முன்னர் - வேலையற்ற இளைஞர்களாய் ஊரில் காலம் கழித்த நாள்களில், தனது பெற்றோரின் சின்னஞ்சிறு தேவைகளில் ஒன்றுக்காவது உதவி ஒத்தாசை செய்ய முன்வராத - அலட்சியப்போக்குடன் நடந்து கொண்டதன் மூலம் அயலவர்களால் விமர்சிக்கப்பட்ட அந்த நண்பனா இப்போது, இத்தனை பொறுப்புடனும் அக்கறையுடனும், தனது மாமனைக் கவனித்துக் கொள்கிறான் என நான் பல தடவை ஆச்சரியப்பட்டதுண்டு. அந்த வயதில் வயதான உறவுகளுக்கு அன்பாய், ஆதரவாய் உதவவேண்டுமென்று எண்ணாத எனது நண்பனின் இன்றைய மாற்றம் வாழ்க்கை அனுபவம் வழங்கிய பாடமென எனக்கு நானே சமாதானம் கூறிக்கொண்டதுண்டு.

கடந்த மாதத்தில் ஒரு நாள் இருந்தாற்போலிருந்து எனது நண்பனின் மாமனார் - அந்த முதியவர் மரணமடைந்தார்.

அலுவலக ஊழியர்களுடன் நானும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டேன்.

நண்பரும் குடும்பத்தவரும் கடும் துயர் அடைந்திருப்பதாக உணர முடிந்தது. அதே சமயம், இறுதிக்கிரியைகள் ஆடம்பரம் அதிகமின்றி, கட்டுமட்டான செலவுகளுடன் இடம்பெறுவதையும் அவதானிக்கமுடிந்தது.

எனது நண்பர் அளவுக்கு அதிகமாகக் கவலையை வெளிப்படுத்துவதாக சக ஊழியரொருவர் அபிப்பிராயப்பட்டார்.

"பெற்ற தகப்பனை இழந்து விட்டது போலல்லவா கவலைப்படுகிறார்?"

இது மற்றொரு சக ஊழியரின் விமர்சனம்.

"நீர் ஒன்று; பெற்ற தகப்பன் இறந்தபோது அவர் ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டதில்லை. இப்போ வருவோர் போவோரிடமெல்லாம் கண்கலங்கியல்லவா கதைக்கிறார்"

இது எங்களூரில் இருந்து மரணச்சடங்குக்கு வந்திருந்த ஒருவரின் வர்ணனை.

"பழுத்த பழம்; போதாததற்கு இத்தனை நாளும் பாயில் கிடந்து கடும் சிரமமல்லவா கொடுத்துவிட்டார். இந்த அளவுக்கு இப்போதாவது ஆறுதல் கிட்டியதே என்று திருப்திப்பட வேண்டாமோ?"

இது எம்முடன் கடமையாற்றும் பெண் ஊழியர் உதிர்த்த வார்த்தைகள்.

சரி; ஆயிற்று, தகனக்கிரியைகள் முடிந்த பின் நண்பரிடம் விடைபெற்று அவரவர் ஊர் திரும்பினோம்.

ஒரு வாரம் கழித்து அலுவலகம் வந்த அவரைத் தனிமையில் சந்திக்க நேர்ந்தபோது "இப்போதுதான் பொறுப்பெல்லாம் முடிந்துவிட்டதே! இனி இங்கு நகரில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துத் தங்கினால் உங்களுக்கும் சரி, பிள்ளைகளுக்கும் சரி பிரயாணச் சிரமம் குறையுமல்லவா?" என்று பேச்சுக் கொடுத்தேன்.

என்னுடைய அரசாங்கச் சம்பளத்தில் அதெல்லாம் கட்டுபடியாகுமா? இது வரைநாளும் வாத்து பொன்முட்டை இட்டதால் வாழ்க்கைச்செலவைச் சமாளிக்கமுடிந்தது. இனிமேல் அதுவே சிரமமாய் ஆகிவிட்டபோது, இங்கு வாடகைக்கு வீடு எடுத்து எப்படியப்பா சமாளிக்கமுடியும்?

நண்பரின் இந்தப் பதில் என்னைக் குழப்பமுறவைத்தது.

"மாமா ஒரு சிங்கப்பூர் பென்சனியர் என்பது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. மாதாமாதம் அவருக்குக் கிடைத்த கொழுத்த ஓய்வூதியத் தொகையே இத்தனை நாளும் குடும்பத்துக்குக் கைகொடுத்தது. இதுக்காகத்தானே இத்தனை தூரம் வருந்தி வருந்தி - பொத்திப் பொத்திப் பாதுகாத்தேன்...."

மாமனின் மரணம் குறித்த நண்பரின் அதீத கவலைக்கான காரணம் அப்போது தான் எனக்குப் புரிந்தது. பல ஆண்டு காலமாய் எனது நண்பனின் குணஇயல்புகளைத் தெரிந்திருந்த நான் - 'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்று நண்பனின் பிற்கால நடவடிக்கைகள் கண்டு மனதில் சந்தேகப்பட்ட நான், இத்தனை தூரம் ஏமாந்துவிட்டதை எண்ணி வெட்க முற்றேன்.

கிட்டும் வாய்ப்பைப் பயன்படுத்த வல்லவன் புத்திசாலி என்பது எத்துணை உண்மையோ அதுபோல 'பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்' என்ற முதுமொழியும் யதார்த்தமானதொன்றே.

வாராந்தம் வெளியாகும் இப்பத்தியில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் எவையும், தனிப்பட்ட முறையில் எவரையும் குறிப்பிடுவதில்லை. [ஆ-ர்]

— பொன்வேளன்

# இருபது வருட அம்மாவும்.....
# இரண்டு மாதக் காதலியும்

"ஹலோ....! ஹலோ!!"
"ஹலோ....!யார் கதைக்கிறீர்கள்?"
"அது நான் அருளடா"
"சொல்லுமச்சான் எங்கை நிக்கிறாய்?"
"கொழும்புக்கு வந்திட்டன். ஒரு மாதிரி எல்லா அலுவலும் முடிஞ்சுது
செவ்வாய்க்கிழமை 'ஃபிளைற்'"
"சந்தோசம் இடையிலை வந்திட்டுப் போகேலாதோ?"
"கஷ்ரம் இன்னுமென்ன மூண்டு நாள்தானே கிடக்குது"
"மச்சான் எனக்கொரு உதவி செய்வியே???"
"சுத்திவளைக்காமல் சொல்லு..." "இந்த நம்பரை ஒருக்கால் குறி..."
"சைவர் ஏழு ஏழு...கடைசியிலை ஒன்பது சரியே..."
"இதை என்ரை ஆளிட்டைக் கொடுத்து கதைக்கச் சொல்லு; எதிர்பார்ப்பன். அவள்
ஓமெண்டு சொல்லி இரண்டுமாதம் கூட ஆகவில்லை. கதைக்க ஆவலாய் இருக்கு"
"எங்கையடா நான் காணறதும் கொடுக்கிறதும்?"
"மூண்டு மணிபோல போனியெண்டாள், அண்ணிக்காறி
நேசறிக்குப்பிள்ளையளை ஏத்தப் போயிடுவா. தகப்பனும்
தமையனும் கடையாலை வந்திருக்க மாட்டினம்.
தங்கச்சியார் ரியூசனுக்குப் போயிடுவாள்"
"....சரியே..." "சரியடா..."
"உங்கடை அம்மாவோடை கதைச்சனியே...?"
"விடியத்தான் எடுக்கப்போறன்
சரிவேறையென்ன...???"
"ஒண்டுமில்லை நம்பரைத்தான் மறக்காமல் கொடுத்திடு"
"ஹலோ....! ஹலோ...!" (இண்டைக்கு நித்திரைகொண்ட மாதிரித்தான்)
"ஹலோ....! குடுக்கிறனெண்டு சொல்லிப்போட்டன் தானே பிறகேன் எடுகிறாய்..."
"ஹலோ நான் அருளின்ரை அம்மா பேசுறன்" (அம்மாளாச்சி)
"சொல்லுங்கோ அம்மா"
"எனக்கென்னமோ பயமாய்க் கிடக்குது தம்பி கொழும்பிலை பழையபடி
கெடுபிடியாம். நேற்றும் ஆறு தமிழ்ப் பெடியளைப் பிடிச்சுப் போட்டாங்களாம்.
அருள் என்ன பாடோ தெரியாது
ஒரே யோசினையாய்க் கிடக்கு நித்திரையும் வருகுதில்லை
உமக்கு எடுத்தாரோ தெரியாது....? அதுதான் கேக்கலாமெண்டு எடுத்தனான்"
"எடுத்தவரோ ????"
"சொல்லுவமோ விடுவமோ...."
மனம் தடுமாறுகிறது. என்மன நிலையை உணர்ந்த தொலைபேசி தானாகவே
துண்டிக்கப்பட்டு விட்டது.

-ந.வினோதரன்

## எனக்கேயான சொர்க்கம்

எனக்கே உரித்தான
சொர்க்கத்தில்
நான் மட்டும்
ரம்மியமான கனவுகளுடன்
மிதந்தபடி இருக்கிறேன்

அருகில் எவருமில்லாத
அமைதி!
எங்கும் வீசும்
பசுமையான காற்று!
எங்கோ ஓர் தொலைவில்
பூவானது மலரும் நிசப்தமான
சப்தம்!

என்னை ஒருங்கே மகிழ்வூட்டியது
அந்தத் தனிமை
என்னை
ரசிக்கவைத்தது!

எனக்கு இந்த
மகிழ்வு ஒன்றே போதும்
தயவு செய்து
யாரும் என் சொர்க்க
வாழ்க்கையைக் கலைத்து விடாதீர்கள்.

ச.ஜனனி
சங்கத்தானை.

## சிங்கள பேரினவாதத்தின் மேன்மைக்கு......

(IIபக்கத் தொடர்ச்சி)

சிறிமாவோ அம்மையாரின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அவர்கள் அன்று வழங்கிய ஆலோசனைகள் சாதாரண மக்களுக்குப் பெரும் துன்பத்தை வழங்கின. அந்த வகையில் இங்கே ஒரு வரலாற்று ஒற்றுமையையும் நாம் காண்கின்றோம்.

### சட்டரீதியான வன்முறை

இந்த வேளையில் பின் நவீனத்துவ சிந்தனை ஒன்றை நாம் எமது வாசகர்களுக்கு முன்வைக்க விரும்புகின்றோம். வன்முறை என்பது ஆயுதத்தாலோ அல்லது போரினாலோ வருவது மட்டும் அன்று! அரசியல் ஊடாகவும், சட்டங்கள் ஊடாகவும் வன்முறையை பிரயோகிக்கலாம். உதாரணத்திற்கு ஓர் இனத்தின் மீது விதிக்கப்படுகின்ற பொருளாதாரத் தடை என்பது ஒரு வன்முறையான செயலாகும். அதேபோல் கருத்து வன்முறை, பிரசார வன்முறை என்று பல வன்முறைகளைப் பேரினவாதிகள செய்து வருவது கண்கூடு.

அந்தவகையில் மெத்தப் படித்தவரும், கல்விமானும் அறிவுஜீவியுமான லக்ஷ்மன் கதிர்காமரும் ஒரு வன்முறையாளரே! இவருடைய வன்முறைகள் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் இறக்க வேண்டி வந்துள்ளதோடு, பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்னல் நிறைந்த வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டியும் வந்தது. இவற்றிற்கு லக்ஷ்மன் கதிர்காமர்தான் பொறுப்பேற்க வேண்டும்.

இன்று இந்தத் தனி மனிதச்சாவைப் பூரண அரச மரியாதைகளுடன் அடையாளப்படுத்துகின்ற சிங்களப் பேரினவாதம் நாளை லக்ஷ்மன் கதிர்காமரை முழுமையாக மறந்து போய் விடும். ஆனால், சிங்களப் பேரினவாதத்தின் மேன்மைக்குத் தன் சேவையை அர்ப்பணித்த லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களை ஈழத்தமிழினம் என்றுமே மறக்காது!

— ஆஸ்திரேலியாவிலிருந்து ஈபேசன்

நன்றி : தமிழ்நாதம்

# "...நாள் கணக்கில நடக்க வேணும் சாப்பாடு தண்ணி ஒழுங்கா கிடைக்காது..."

விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண்புலிகள் இன்று உலகம் வியக்கத்தக்க பல சாதனைகளைப் புரிந்திருக்கின்றார்கள்.

உலகின் பல்வேறு நாடுகளின் இராணுவங்களில் விடுதலை அமைப்புகளில் பெண்கள் இணைந்து செயற்பட்டார்கள். செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனாலும் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெண்களின் பங்கு என்பது முற்றிலும் வித்தியாசமானது; வியக்கத்தக்கது.

அடிமைத் தளையை உடைத்தெறிந்த பெண் தனக்குள் இருக்கின்ற முழுவீச்சையும் வெளிக் கொணர்ந்த வரலாறு ஈழத்தில் மட்டுமே நடந்திருக்கிறது; நடந்து கொண்டிருக்கிறது.

பூப்போல மென்மையாக வீட்டினுள் இருந்த பெண், வீட்டை விட்டு வெளியே வந்து தனது தேசத்தின் மீட்சிக்காக வீறுகொண்டு போராடினாள். அந்தச் சமூக மாற்றத்துக்கு வித்திட்டவர் தலைவர் பிரபாகரன்.

தனது உடலிலே வெடி குண்டைச் சுமந்து சென்று எதிரி மீது மோதி வெடித்துச் சிதறுகின்ற தற்கொடையாளர்களாகக் கூட பெண்கள் துணிந்து எழுந்த வரலாறு உலகில் வேறு எங்கும் கிடையாது. பெண்புலிகள் கடந்த 20 வருட காலத்திலே படைத்த வியத்தகு சாதானைகள் ஏராளம்.

இன்று ஒரு மரபு வழி இராணுவமாக வளர்ச்சி பெற்றிருக்கின்ற தமிழர் படையிலே மகளிர் அணிகள் பல்வேறு கட்ட வளர்ச்சிகளை எட்டியிருக்கின்றன. பெண்புலிகளின் முதலாவது அணி பயிற்சி முடித்து வெளியேறி கடந்த 18ஆம் திகதியுடன் 20 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கின்றன.

இந்த நிலையில் பெண்கள் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட ஆரம்பகாலத்தில் இருந்த சமூக புறக்காரணிகள் எப்படியிருந்தன? ஆரம்பத்தில் எவ்வளவு சிரமங்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டு பெண்கள் நாட்டுக்கான தமது விடுதலைக் வேள்வியில் குதித்தார்கள்? இதுவரை காலப் போரியல் வரலாற்றில் பெண் புலிகளின் களச் சாதனைகள் எப்படி வளர்ந்தன? போன்ற விடயங்களை முழுத்தமிழினமும் அறிந்து வைத்திருக்கவேண்டியது அவசியம். அந்த வகையில் புலிகளின் மூத்த பெண்புலிகள் சிலரைச் சந்தித்து உரையாடியிருந்தோம். அவர்களின் அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.



மூத்தபோராளி **திருமதி தாரணி**
(படப்பிடிப்பு:- பிரபா)

முதலில் தனது அனுபவங்களை எங்களோடு பகிர்ந்து கொள்கிறார் மூத்த போராளி திருமதி தாரணி. தான் ஒரு போராளியாக இணைந்து கொள்வதற்கு எவ்வளவு சிரமங்களை அனுபவித்தார் என்பதை அவர் விவரித்தார். நீங்களும் கேட்டுப் பாருங்களேன்.....

நான் இயத்திலே சேர்ந்ததே ஒரு பெரிய கதை. நானும் என்ர சிநேகிதியும் இயக்க அக்கா ஒருவரைச் சந்திச்சு விசயத்தைச் சொன்னம்.

"சொல்லுறதைக் கேளுங்கோ பிள்ளையள்...அங்க ஒரே காடுதான். முள்ளுகள் கால், கையெல்லாம் கீறித்தள்ளும். அதுக்குள்ளால கன தூரம் நடக்க வேணும்... நடக்கிறதெண்டால் சும்மா இல்லை... எக்கச்சக்கமான பாரத்தைத் தோளில் சுமந்து கொண்டு நடக்கவேணும்... சாப்பாடு, தண்ணி ஒழுங்கா கிடைக்காது... குளிக்கத்தண்ணியே இல்லை...கிணறு வெட்டித்தான் தண்ணி குடிக்கவேணும் ...அது உங்களாலை ஏலாது... பேசாமல் வீட்டை போங்கோ..."
"அக்கா இவ்வளவையும் தாங்கிறதுக்கு உங்களால முடியுது தானே.."
"...ஓம்...அது எங்களுக்குப் பழகிப்போச்சு..."
"...அதேமாதிரி நாங்களும் பழகுவம்...எங்களாலையும் ஏலும் தயவு செய்து கூட்டிக்கொண்டு போங்கோ..."
"சரி...அடம் பிடிக்கிறீயள் வாங்கோ வந்து அண்ணாக்களோட கதையுங்கோ... " ஒருமாதிரி நானும் என்ர சிநேகிதியும் அந்த அக்காட்டை விடாப்பிடியா நிண்டதால் வேற வழியில்லாமல் அவா எங்களைக் கூட்டிக்கொண்டு போனா.
வல்வெட்டித்துறைக் கடற்கரைக்குப் போய்ச்சேர்ந்தம். அங்க ஒரு 'போட்' தயாரா நிண்டிச்சு சில அண்ணாமாரும் நிண்டினம்.
"...தங்கச்சி நீங்கள் நிண்டு பிடிக்க மாட்டியள்... அங்க போனா திரும்பி வரேலாது. நாங்கள் உங்களைக்கொண்டுபோய் பாதுகாப்பா உங்கட வீட்டில விடுகிறம்." இது அங்கு நின்ற அண்ணாக்களில் ஒருவர் .
"...இல்லை அண்ணை நாங்கள் திரும்பிப் போகமாட்டம். வரத்தான் போறம்....."
"சரி, நில்லுங்கோ 'போட்' வரவேணும்.........."
'போட்' வந்து நின்றது எல்லோரும் அதில் ஏறினார்கள். நாங்களும் ஏறினோம்.... அந்த நேரம் பாத்து ஓர் அம்மா ஓடி வந்தா "பிள்ளையள் அங்க சரியான கஷ்ரமாம் நீங்கள் போகாதேங்கோ..."
"இல்லையம்மா அது பரவாயில்லை. நாங்கள் போறதெண்டு முடிவெடுத்திட்டம்"

படகு புறப்பட்டது. கொஞ்சத்தூரம் போனாப் பிறகு நிலைமை அவ்வளவு சரியில்லை எண்டு சொல்லி திரும்ப வந்திட்டம். அன்றைக்கு மட்டுமல்ல 5நாள்கள் போய்ப்போய்த் திரும்பி வந்திட்டம்.

ஆறாவது நாள்தான் பயணம் சரி வந்தது. அந்தக் கரையில இறங்கி நடக்கத் தொடங்கினோம்.

நீண்ட தூரம் எங்களைக் கூட்டிக் கொண்டு போச்சினம். இடையில் ஓர் இடத்தில வேலவன் (அவர் பின்னர் கிட்டு அண்ணாவுடன் வீரச்சாவடைந்தார்.) என்பவரிடம் கையளிக்கப்பட்டோம்.

".... என்னத்துக்கெடி வந்தனீங்கள். போராடப்

## மூத்த பெண்புலிகளின் அனுபவப் பகிர்வுகள் 01

போறீங்களோ...... ஆக்களைப் பார்.....கெதியா வெளிக்கிட்டு வந்த பாதையால திரும்பிப் போங்கோ.... பக்குவமாக் கொண்டே வீட்டை விடலாம். இல்லையெண்டு அடம் பிடிக்கிறீயளோ. ரண்டு பேரையும் சுட்டுக் போடுவன்"

அதட்டலான அவரது வார்த்தைகள்... கைகள் நடுங்கியது... பயத்தால் நெஞ்சு படபடத்தது. .... பேசாமல் நிண்டிட்டம். கொஞ்சம் நேரம் அமைதி.....

"சரி; பயப்பிடாதேங்கோ....... நான் பகிடியாகத்தான் உங்களை வெருட்டிப் பாத்தனான். வாங்கோ போவம்" என்று கூறி விட்டுச் சிரித்தார். போன உயிர் திரும்பி வந்த மாதிரி இருந்தது.

காடுகளுக்குள் எமது நடைப் பயணம் தொடர்ந்தது. இடையில் ஓரிடத்தில் சில சிறிய கொட்டகைகள். அங்கு நிறுத்தப்பட்டோம்.

ஒரு கொட்டிலுக்குள் இருந்து தாடி வளர்த்த உயரமான ஓர் ஆள் வந்தார். அவரைப்பாத்தவுடன் திரும்பவும் பயம் தொட்டுட்டுது.

ஏன் இஞ்ச வந்தனீங்கள்.... அந்தத் தாடிக்காரரின் அதட்டலான குரலைக் கேட்டதால கதிகலங்கிப்போனம். நாங்கள் ஒண்டுமே பேசேல்ல.

"சாப்பிட்டீங்களா......? ....தாடியின் குரலில் இப்போது இரக்கம் தெரிந்தது. ".... இல்லை....." (தலையாட்டினோம்)

இதுகளுக்குச் சாப்பாடு குடுங்கோ..... சொல்லிவிட்டு அவர் மீண்டும் உள்ளே போய்விட்டார். அந்தத் தாடிக்காரர் ஆர் தெரியுமே.... சொர்ணம் அண்ணை. (பெரிதாகச் சிரித்தார்.........) அவற்ற பேரை முதல்லயே கேள்விப்பட்டனாங்கள். அவர்தான் சொர்ணம் அண்ணையெண்டு பிறகுதான் தெரியும்.

சாப்பிட்டிட்டு இருக்க காந்தரூபன் எண்டவனைக் கூட்டிபிட்டு அவரோட எங்களை அனுப்பினார் சொர்ணம் அண்ணை.

காந்தரூபன் வேகமாக நடந்து போக அவருக்குப் பின்னால நாங்களும் நடந்தம் இல்லை... ஓடினம்.

என்ர கால் பெருவிரல் நகம் வெடித்து ரத்தம் சீறியது. நான் சொல்லேல்ல... தொடர்ந்து நடக்க முடியாமல் கால் வலிக்கத் தொடங்கி விட்டுது. ஆனாலும் வலிக்கதெண்டு சொன்னா திருப்பிக் கலைச்சுப் போடுவினம் எண்டு போட்டு பேசாமல் நடந்து போனம்.... நீண்ட தூரம் நடந்தபிறகு ஓர்



இடத்தில சில கொட்டில்களைக் கண்டம். அங்கபோய்ச் சேர்ந்தாப்பிறகுதான் நிம்மதி வந்தது. ஏன் தெரியுமே.....? அங்க கனபேர் நிண்டினம். அதில் முப்பது பேர் பொம்பிளையள்.

அந்த அக்கமார் செய்து கொண்டிருந்த வேலையைப் பார்த்த உடனையே முதல்ல எங்களுக்குச் சொல்லப்பட்ட எல்லாம் உண்மைதான் எண்டு தெரிஞ்சிட்டுது. ஓர் அக்கா எங்களிட்ட வந்தா.

".... நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதேங்கோ உங்களால செய்ய முடியும்...." கேட்டதும் எங்களுக்குப் புது நம்பிக்கை பிறந்தது.

"...இண்டைக்கு உங்களைத் தலைவர் சந்திக்கிறார்....." அந்த அக்காதான் சொன்னா. எங்களுக்குப் பயம் வந்திட்டுது. நான் தலைவரைச் சந்திக்க மாட்டன். எனக்குப் பயமாக்கிடக்கு.

தலைவரை அதுவரை காலமும் படத்திலதான் பாத்தனாங்கள். அவர நேரில பாக்க எனக்குப் பயம். நான் மறுத்திட்டன். இவ்வளவு தூரம் காட்டுக்குள் ளால நடந்து தலைவற்ற இடத்துக்குத்தான் வாறமெண்டது எங்களுக்குத் தெரியாது. திடீரென்று சொன்னதால நெஞ்சிடிக்கத் தொடங்கிவிட்டது.

".... இல்லைப் பிள்ளையள் உங்கட சொந்த விவரங்களை அவர் மட்டும்தான் எடுப்பார்.... பயப்படாமல் போங்கோ."

## சந்திரமதனா

அங்குபோனதும் எங்கள் இருவருடன் மேலும் நாலு பிள்ளையள் வந்திச்சினம். ஆறுபேரும் ஒவ்வொருதராக அண்ணையைச் சந்திக்கப் போனம். நான் தான் கடைசி. அவரைக் கண்டவுடன் பயம் போட்டுது.

எங்களைப் பற்றின எல்லா விவரத்தையும் கேட்டார். மனம் விட்டுப் பேசினோம். "... நீங்கள் சாதிப்பீங்கள். எனக்கு நம்பிக்கையிருக்கு......" என்று கூறி அனுப்பினார். அந்த உரமான வார்த்தைகள்தான் இண்டைக்கும் எங்கள இந்த மண்ணுக்கான போராட்டத்தில உறுதியாக வைச்சிருக்கு.....

புலிகள் போராட்டத்துக்கு ஆக்களை வற்புறுத்திச் சேர்க்கினம் எண்டு கனபேர் சொல்லுகினம். ஆனால் நாங்கள் இயக்கத்தில சேர்றதுக்கு எவ்வளவு கஸ்ரப்பட்டனாங்கள் எண்டு எங்களுக்குத்தான் தெரியும் (சிரிக்கிறார்).

"சரி இவ்வளவு சிரமப்பட்டு இயக்கத்தில் சேர்ந்தே தீரவேண்டும் என்று நீங்கள் முடிவெடுத்ததற்கு என்ன காரணம்?"
அது ஒரு பெரிய கதை.

(அடுத்தவாரம் )

## சமாதான காலக் கொலைகளை

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

இலங்கை அரசின் இந்த நடவடிக்கை , மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது. மக்களிடையே விரோத மனப்பான்மையைத் தோற்றுவிக்கவல்லது என்பதுடன் இந்தப் பிரகடனம் இலங்கை அரசும் பங்கேற்றுள்ள மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான சர்வதேச அமைப்பின் விதிகளிற்கும் எதிரானது என மேற்படி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் ஜனாதிபதிக்கோ அல்லது பிரதமரிற்கோ வழங்கப்படுகின்ற கௌரவத்துடன் கதிர்காமரின் இறுதிச் சடங்குகளும் துக்க தினம் பிரகடனப்படுத்தப்பட்டு சோக கீதம் ஒலிக்க நடந்து முடிந்துள்ளன. அவர் பேரினவாதிகளுக்கு செய்த பேருதவிக்காகச் சிங்கள தேசம் அவருக்கு வழங்கிய கௌரவம் அது. ஆனால், இது போன்ற கொலைகள் தொடராமல் இருக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

தமிழ் மக்களுக்கு உரிய தீர்வினை வழங்கி அவர்களை நிம்மதியாக வாழவிடுவதில்தான் இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது. யதார்த்தச் சூழலை நோக்கும்போது அவ்வாறான எந்தப் புறநிலைகளையும் காணவில்லை. எனவே சமாதான முயற்சிகளில் இணைத் தலைமை வகிக்கும் நாடுகள் இலங்கையரசின் மீது உரிய அழுத்தங்களைப் பிரயோகித்து நாட்டின் அமைதியையும் தமிழ் மக்களின் உரிமைகளையும் உடனடியாக உறுதிப்படுத்தவேண்டும். தவறினால் இரத்தக்களரியே இலங்கைத் தீவுக்கும் சாபக்கேடாகிவிடும். கதிர்காமரின் கொலையைச் சாட்டாக வைத்து இலங்கையரசு தொடங்க முயற்சிக்கும் போரை எதிர்கொள்வதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு தெரிவுகளும் இருக்கப்போவதில்லை.

# சர்வதேச பல்கலைக்கழக அனுமதி பெற்றுக்கொடுப்பதில் COLLEGE VIEW International முன்னணியில்

கடந்த வருட நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட COLLEGEVIEW International நிறுவனம் தற்போது இலங்கை மாணவர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றுக்கொடுத்து அவர்களை வெளிநாட்டுப்பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பிவைப்பதில் முன்னணியில் திகழ்கிறது. இந்தத் துறையில் COLLEGEVIEW International மிக இளைய நிறுவனமாகவிருந்த போதிலும் தனது தன்னிகரற்ற சேவைகளினூடாக மிக முதிர்ந்த சேவை வழங்குநராகக் கணிக்கப்படும் அளவிற்கு வளர்ந்துள்ளது.

இந்தக் குறுகிய காலத்தினுள் COLLEGE-VIEW International இன் அதிவேக வளர்ச்சிக்கு வழிகோலிய காரணிகள் யாவை என்ற இரகசியத்தை இந்நிறுவனத்தின் திட்டமிடல் மற்றும் வியாபார அபிவிருத்தி முகாமையாளர் ஹஸன் முபாறக் வெளியிட்டார்.

எமது நிறுவனம் இத்தகையதொரு சேவையினை வழங்கும் திட்டத்தை உள்வாங்கியபோது முதலிலே நாங்கள் இது தொடர்பான ஆராய்ச்சிகளைப் பல்வேறு மட்டங்களிலும் மேற்கொண்டோம். எமது ஆராய்ச்சிகளினூடே நாங்கள் அறிந்துகொண்ட ஒரு விடயம் என்னவெனில் தற்போதைய சூழலில் இலங்கை மாணவர்களது சர்வதேசப் பல்கலைக்கழகங்களை நோக்கியதான ஆர்வம் அதிகரித்துள்ளமை என்பதாகும்.

இதற்கான காரணங்களை பின் வருமாறு வகைப்படுத்த முடியும்.

1. க.பொ.த.(சா/த) தகைமைகளின்றி இலங்கையில் மேற்படிப்புக்கான வாய்ப்புகள் குறைவு/ சாத்தியமற்றுப்போதல்.

2. க.பொ.த. (உ/த) தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்களில் கனிசமான பகுதியினர் (ஏறத்தாழ 85 வீதம் ஆனோர்) உள்வாரியான பல்கலைக்கழக அனுமதி பெறத்தவறுதல்.

3. இன்றைய தொழிற்றுறையில் சர்வதேச தரத்திலான கல்வித்தகைமைகளுக்கான அவசியம் / தேவைப்பாடு.

4. இலங்கையை நோக்கியதான சர்வதேசப்பல்கலைக்கழகங்களின் நிருவாக உத்தியோகத்தர்களுடைய அதிகரித்த வருகையும் மேம்பாட்டு நடவடிக்கைகளும்.

5. தகவல் தொழில்நுட்பத்துறையின் அபரிதமான வளர்ச்சிப் போக்கு.

எனவே, மேற்போன்ற காரணிகளால் ஈர்க்கப்படும் நமது மாணவர்கள் வெளிநாட்டுப்பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்க முற்படுகிறார்கள் என்பதையும் நாம் அறிந்துகொண்டோம். இதிலே மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதும் கவலை தரக்கூடியதுமான விடயம் யாதெனில், குறிப்பாக கிராமப்புற மாணவர்கள் பல்லாயிரம் ரூபா பணத்தைச் செலவுசெய்து பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கின்ற போதும் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பதாகும். குறிப்பாக –

1. பல்லைக்கழக அனுமதி மறுக்கப்படுதல்.

2. வீசா நேர்முகப்பரீட்சையில் தவறுதல்.

இவற்றுக்கான காரணங்களையும் நாம் கண்டறியத் தவறவில்லை. இதற்கான காரணங்களாவன –

1. பல்கலைக்கழகத் தெரிவில் தவறு.

2. மேற்படிப்புக்கான துறையைத் தெரிவு செய்வதில் விடும் தவறுகள்.

3. முறையான வழிகாட்டலின்மை.

4. திட்டமிடப்படாத எதேச்சையான விண்ணப்ப முறைமை.

5. போதியளவு ஆங்கிலப்புலமை இன்மை.

6. வீசா நேர்முகப்பரீட்சை தொடர்பான அவசியமற்ற பயம் என்பனவற்றை குறிப்பிடலாம்.

மேற்சொல்லப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு எமது நிறுவனம் திட்டங்களை வகுத்தது. அதில் குறிப்பிட்டுச்சொல்லக்கூடியது சர்வதேசப் பல்கலைக்கழகங்களுடனான நெருங்கிய தொடர்புகளை தொடர்ச்சியாகப் பேணுவது மட்டுமன்றி நமது மாணவர்களுக்கும் யதார்த்த நிலையைக் கூறி நெறிப்படுத்துகிறோம். இதனடிப்படையில் எமது நிறுவனத்தில் பதிவுசெய்யும் சகல மாணவர்களுக்கும் நாங்கள் முதலிலே முறையான ஆங்கிலப் பயிற்சி மற்றும் வீசா நேர்முகப்பரீட்சைக்கான தயார்படுத்தல்களை மேற்கொள்கிறோம். இதனூடாக மாணவர்கள் வீசா நேர்முகப்பரீட்சையை தைரியத்துடன் எதிர்கொள்வதற்கான இயலுமையை வளர்த்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பைப்பெற்றுக் கொள்ள முடிகிறது.

அது மட்டுமல்லாது, சரியான பல்கலைக் கழகத்தெரிவு மற்றும் மாணவர்களின் கல்வித்தகைமைகளுக்கேற்ப சரியான கற்கை நெறிகளைத் தெரிவுசெய்தல் என்பன எமது வளர்ச்சிக்கான அடிப்படைகளாகும்.

இறுதியாக நாம் எமது மாணவர்களுக்கு அறிவுறுத்த விரும்புவது யாதெனில், தவறான வழிகாட்டல்களில் உங்களது பணத்தையும் காலத்தையும் வீணடிக்காது புத்திசாலித்தனமான தீர்மானங்களை இன்றே மேற்கொள்ளுங்கள் என்பதாகும். – என மிக யதார்த்தமான முறையில் தமது வளர்ச்சி பற்றி விளக்கிக் கூறினார் ஹஸன் முபாறக்.

COLLEGEVIEW International இன் வளர்ச்சி குறித்து அந்நிறுவனத்தின் ஸ்தாபகரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான முபாறக் அலி கருத்து வெளியிடுகையில் –

"நான் எனது மேற்படிப்பை லண்டனில் முடித்துவிட்டு இலங்கை திரும்பியபோது பல மாணவர்களை சந்தித்து உரையாடும் வாய்ப்புக்கிடைத்தது. அவர்களில் பலரின் குறையாக இருந்தது யாதெனில், தவறான வழிகாட்டல்களில் தங்களின் பணத்தையும் நேரத்தையும் வீணடிக்கின்றமையாகும். அப்பொழுது எனது அனுபவம் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழக நிருவாகிகளுடன் எனக்கிருந்த தனிப்பட்ட தொடர்புகளைப் பயன்படுத்தி கடந்த எட்டு மாத காலப்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட எமது மாணவர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் அனுமதியைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருந்தது என்றார்.

STUDY IN LONDON
MALAYSIA & INDIA

Why COLLEGEVIEW?

- மும்மொழிகளிலுமான இலவச ஆலோசனை சேவைகள்
- ஆண்டு முழுவதுமான விண்ணப்ப நடைமுறைகள்
- விரைவான பல்கலைக்கழக அனுமதி
- நூற்றுக்குமதிகமான தரமான பல்கலைக்கழகத் தெரிவுகள்
- பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு வசதிகள்
- பதிவு செய்யும் சகல மாணவர்களுக்கும் இலவச ஆங்கில வகுப்புக்கள்
- வெளியிட மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள்
- சர்வதேச தரத்திலான ஆலோசனை சேவைகள்
- பகுதிநேர வேலைவாய்ப்புக்கள் ஏற்பாடு செய்து தரப்படும்

மேலும் பல சேவைகள்.......

Basic Qualifications
G.C.E. (O/L)
Pending A/L results also may apply

1000 £ Scholarship for UK University



Available Courses

Management, Business Ad. (BBA, MBA, Phds), Marketing, HRM, Accounting, Finance, Economics, Law, Computer Science, IT Networking, Pattern Designing & Textile, Hotel Management, Travel & Tourism, Engineering (Aerospace, Electrical & Electronical etc..,) Medicine, Dental, Fine Arts, Beauty Culture, Shipping Courses, Nursing ..
All Courses are available in any field.

September Semester க்கான பதிவுகள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

COLLEGEVIEW International
(Professional Overseas Educational Consultants & Promoters)
No. 142-1/2, Galle Road, Wellawatta, Colombo 06, Sri Lanka.
Tel : 0094 114 512175 Fax : 0094 112 732294
E-mail : collegeview@visualnet.lk
Mr. A.R.M.Fowgy:0773 113156 Mr..Hassan Mubarak:0714 909670
Yes, we show you the path
(Next to Wellawatta Police Station)

# 'ஏழைகளுடனான வங்கி' வலையமைப்புக்கு சந்துள அபயவிக்ரம தலைவராகத் தெரிவு



சந்துள அபயவிக்ரம

ஹற்றன் நஷனல் வங்கியின் தனிப்பட்ட வங்கிப் பிரிவின் பிரதிப் பொதுமுகாமையாளர் சந்துள அபயவிக்ரம "ஏழைகளுடனான வங்கி" என்ற வலையமைப்பின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற வங்கியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தின் போதே இவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கான அமைப்புடன் இணைந்து 'ஏழைகளுடனான வங்கி' வலையமைப்பு ஒரு முக்கியமான ஒன்றென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கட்டான சூழ்நிலையில் சிறிய நிதித்திட்டத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஹற்றன் நஷனல் வங்கியும் இலங்கை மத்திய வங்கியும் இணைந்து உருவாக்கிய திட்டத்திற்கு விசேட அழுத்தம் கொடுக்கப்பட்டு இதன் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டது.

'ஏழைகளுடனான வங்கி' (BWTP) என்பது 20 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு ஆசிய அமைப்பாகும். இந்தியா, பங்களாதேஷ், மலேஷியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உள்ளிட்ட 15 தெற்காசிய நாடுகளை இது பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

* ஏழைகளுக்கு உதவும் சுய உதவிக்குழுக்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.

* வர்த்தக வங்கிகள் போன்ற நிதிநிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏழைகளுக்கு உதவும் குழுக்கள் போன்றவற்றுக்கிடையிலான நிலையான தொடர்புகளின் ஊடாக ஏழைகளுக்கு நிதிசேவைகள் கிடைப்பதை அதிகரித்தல்.

* ஆராய்ச்சி, கொள்கைபற்றிய உரையாடல், விவாதம், விழிப்புணர்வைக் கட்டியெழுப்புதல் மற்றும் தகவல் பகிர்வு என்பவற்றின் ஊடாக அரசாங்கங்களினதும், அரசசார்பற்ற நிறுவனங்களினதும் கொள்கைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் சலுகை வழங்குதல்.

இவ்வாறான வேலைத் திட்டங்கள் உள்ளிட்ட பல சேவைகளை இந்த 'ஏழைகளுடனான வங்கி' செய்துவருகின்றது.

# அல்லி உடனடி நூடில்ஸுக்கு சந்தையில் அதிக வரவேற்பு

அல்லி வழங்கும் உடனடி நூடில்ஸ் வகைகள் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. அவை பல்வேறு வகைகளில் கிடைப்பது ஒரு சிறப்பம்சமாகும். மரக்கறி நூடில்ஸ், பிளேன் நூடில்ஸ், சிக்கன் நூடில்ஸ், சிவப்புப் பச்சரிசி மற்றும் குரக்கன் நூடில்ஸ் என்பன அவற்றுள் அடங்கும்.

அல்லியின் புதிய உற்பத்தியான டக்கஸ் நூடில்ஸ் விசேடமாகச் சிறுபிள்ளைகள் மத்தியில் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். டக்கஸ் உடனடி நூடில்ஸ் இப்பொழுது பிளேன் மற்றும் இறால், கணவாய், மரக்கறி, கோழியிறைச்சி சுவைகளில் வழங்கப்படுகின்றது. சிவப்புப் பச்சரிசி மற்றும் குரக்கன் கலந்தவகைளிலும் கிடைக்கின்றது.

விசேட உணவு தயாரிப்பில் ஆர்வம் கொண்டுள்ளவர்களின் தேவைகளை நன்கறிந்துள்ள அல்லி நிறுவனம் சாதாரண பப்படத்தை மட்டுமல்லாது ஜம்போ அம்மாமி பப்படம், விசேட மசாலா பப்படம் என்பவற்றை ஒவ்வொருவரின் சுவைக்கேற்ப தயாரித்து வழங்குகிறது. இப்பப்படங்கள் சுவைமிக்கவையாக விளங்குவதற்குக் காரணம் நூற்றுக்கு நூறு வீதம் தூய உளுந்துபயன்படுத்தப்படுவதேயாகும்.

அல்லி சோஸ் வகைகளில் மிளகாய் சோஸும், தக்காளி சோஸும் பிரபல்யமானவை. சுவையும், சத்தும், தரச்சிறப்பும் மிக்கவையாக தயாரித்து வழங்கப்படும் நெல்லி, பெலி, மாம்பழம் மற்றும் பஷன் பழரச வகைகள் நம் நாட்டுப் பாவனையாளர்களினால் விரும்பித் தெரிவு செய்யப்படுகின்றன.

இந்த உற்பத்திகள் அனைத்துமே அவற்றின் உற்பத்தி முறைகளில் நிபுணத்துவஅறிவும், அனுபவமும் வாய்ந்த தேர்ச்சிபெற்ற அணியினரின் உதவியுடனேயே மேற்கொள்ளப்படுகின்றன. ஊழியர்களின் ஒத்துழைப்பும், பரஸ்பர நல்லுறவும் அல்லியின் வெற்றி இரகசியமாகும்.

நவீன தொழில்நுட்ப முறையில் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதாலும், கண்டிப்பான சுகாதார நியமங்கள் கடைப்பிடிக்கப்படுவதாலும் அல்லி உற்பத்திகள் எப்போதும் தரச் சிறப்பு வாய்ந்தவையாகவும் சுகாதார நலன் மிக்கவையாகவும் விளங்குகின்றன.

அல்லி Good Life உணவு வகைகள் தமது பெயருக்கேற்றவாறு மக்களுக்குப் போஷாக்களித்து அவர்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகோலும் உணவு வகைகளாகும். இந்த உணவுவகைகளுள் சிவப்புப் பச்சரிசி மா, குரக்கன்மா, சிவப்புப் பச்சரிசி நூடில்ஸ், குரக்கன் நூடில்ஸ், உள்நாட்டுப் பழவகைகள் கொண்டு தயாரிக்கப்படும் பழரச வகைகள் என்பன அடங்கும். உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து பெறப்படும் புதிய தானிய வகைகளும் புதுச்சுவைகுறையாத சத்துள்ள பழவகைகளும் மட்டுமே இந்த உணவுகளின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவது ஒரு விசேட அம்சமாகும்.

அல்லி கம்பனி (பிறைவேட்) லிமிடெட் இற்றைக்கு 43 வருடங்களுக்கு முன்னர் அதாவது 1962 ஆம் ஆண்டில் பீடி, சுருட்டு என்பவற்றை உற்பத்திசெய்து அல்லி என்ற வர்த்தகப் பெயரில் சந்தைப்படுத்திய ஒரு சிறிய தொழில் முயற்சிக்காக ஆரம்பிக்கப்பட்டது.

பாடசாலை ஆசிரியரான ஜனாப் எம்.ரிலுவான் என்பவரே இந்த நிறுவனத்தின் ஸ்தாபகர் ஆவார். தனியொருவராக அவர் ஆரம்பித்த இத்தொழில் முயற்சி, காலப்போக்கில் துரிதமாக விரிவடைந்து, புதிய உற்பத்தித் துறைகளில் பிரவேசித்து, இலங்கையில் மட்டுமின்றி வெளிநாட்டுச் சந்தையிலும் புகழ்மணம் பரப்பும் பாரிய தொழில் நிறுவனமாக வளர்ச்சி கண்டுள்ளது.

வியாபார நாணயம், அர்ப்பணித்த செயற்பாடு, விடாமுயற்சி, தரமுயர்ந்த உற்பத்திகளையே பாவனையாளர்களுக்கு வழங்க வேண்டுமென்ற ஆர்வம் என்பனவே இந்த முன்னேற்றத்திற்கு அடிப்படைக்காரணங்களாகும். அல்லி என்பது இன்மணம் பரப்பும் பரிசுத்தமான மலரின் பெயராகும்.

பீடி, சுருட்டு என்பவற்றின் உற்பத்தியுடன் ஆரம்பிக்கப்பட்ட இத் தொழில் முயற்சி இன்று சிறு பிள்ளைகளுக்கான பல்வேறு உணவு வகைகளை தயாரித்து வழங்கும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக விளங்குவது பெருமைக்குரிய விடயமாகும். அல்லி நிறுவனத்தின் தற்போதைய உரிமையாளர் ஜனாப் எம்.ஆர்.எம். முஸாதிக் ஆவார்.

ஜனாப் முஸாதிக் தனது தந்தை எம்.ரிலுவான் மறைவைத் தொடர்ந்து அவர் காட்டிய வழியையே பின்பற்றி நேர்மை, அர்ப்பணிப்பு, தரச் சிறப்பில் அக்கறை ஆகிய கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அல்லி நிறுவனத்தை மகத்தான முறையில் கட்டியெழுப்பி வருகிறார்.

பீடி வியாபார்த்தை அடுத்து அல்லி நிறுவனம் பப்படங்களின் உற்பத்தியை ஆரம்பித்தது. அல்லி பப்படம் அன்று முதல் இன்று வரை இலங்கை மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து வருவதோடு இலங்கையின் பப்படம் சந்தையில் சுமார் 90 சதவீத இடத்தைப் பிடித்து முன்னணியில் திகழ்கிறது.

அல்லி கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் இன்று சுமார் 550 ஊழியர்களைக்கொண்டு இயங்கிவருகிறது. அத்துடன் இந்த நிறுவனத்தின் பயனாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பத்தாயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு ஜீவனோபாய வழி கிடைத்துள்ளது.

# புதிய பரிமாணத்தில் வர்த்தகத் தீர்வு ரெலிகொம் நிறுவனம் வழங்கத்தயார்

நாட்டின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனமான ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பம் மற்றும் தொலைபேசி காரணிகளுக்கு மத்தியிலான வியாபாரத் தீர்வுகளைப் புதிய பரிமாணத்தில் தருவதற்குப் பெரிதும் கவனம் செலுத்துகின்றது.

ஸ்ரீ லங்கா ரெலிகொம்மின் ஒன்றிணைக் கப்பட்ட வர்த்தகத் தொடர்பாடல் தொழில்நுட் பத்தின்மூலம் நிறுவனங்களுக்கும் மற்றும் கம் பனிகளுக்கும் அவர்களின் வியாபார சம்பந்



தப்பட்டவைகளை வேகமாகவும் - நம்பிக்கையா கவும் - இலகுவாகவும் செய்துகொள்ள முடியும்.

ஸ்ரீ லங்கா ரெலிகொம்மின் நுட்பமான தீர்வு கள் மூலம் சர்வதேச தரத்திற்குச் சமனான சேவையினை வழங்குகின்றது. ஜப்பானின் NTT Communications Corporation நிறு வனத்தினதும் இலங்கையிலுள்ள தலைசிறந்த தொழில்நுட்பவியலாளர்களின் கூட்டு முயற்சியி னாலயுமே இதனைத் இத்தரத்திற்கு கொண்டுவர முடிந்தது. ஸ்ரீ லங்கா ரெலிகொம்மின் நுட்பமான தீர்வுகள் பற்றி ஸ்ரீ ல்ங்கா ரெலிகொம்மின் பிர தான நிறைவேற்று உத்தியோகத்தர் சுகெய் அனன் கருத்து தெரிவிக்கும்போது,

"நேரமும் தகவல்களும் மிகவும் முக்கிய மாகக் கருதப்படும் இவ்வுலகில் எமது கூட்டு நிறுவன வாடிக்கையாளர்களுக்கு இச்சேவை அவர்களின் சந்தை வாய்ப்புகளை அதிகரிக் கவும் வருமானத்தை அதிகரிக்கவும், அவர் களின் தகவல்களை நம்பகமாகவும், வேகமாக வும் செய்துகொள்ளவும் மிகவும் பயனளிக்கும்" எனத் தெரிவித்தார். இதனால் ஸ்ரீ லங்கா ரெலி கொம் மேலும் பலமான தொடர்பாடல் வழங்கு நராக அபரிமிதமான வளர்ச்சியினைப் பெறும்என அனன் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா ரெலிகொம்மின் நுட்பமான தீர்வு கள் அடுத்த தலைமுறைக்குத் தேவையான தரவு, குரல் மற்றும் வலையமைப்பு வசதிகளை இதன் மூலம் வழங்குகிறது. இச்சேவையினை வழங்கு வதற்கு உதவும் MPLS based IP backbone (Multi Protocol Label Switching) தொழில்நுட்பம் அமைந்திருப்பது நாடுதழுவிய ஸ்ரீ லங்கா ரெலிகொம்மின் அகல ஒளி இழை பட்டி வலையமைப்பிலேயே.

இவ் IP பின்னணி மூலம் IP - VPN, ADSL, Voice VPN's மற்றும் Broadband Centred Hosting போன்ற சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். மேலே குறிப்பிடப்பட்ட சேவைகளை வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப வழங்கு வதினை ஸ்ரீ லங்கா ரெலிகொம்மிடம் மாத்திரம் உள்ள இணையத்தரவு நிலையம் மூலம் மேற் கொள்ளப்படுகின்றது.

நாம் நமது சேவைகளையும் அகலப்பட்டி இணைப்பையும் இலங்கைக்கு வெளியே சர்வ தேச எல்லைகளுக்கு International Private Leased Circuits (IPLC) உபயோகித்து சீ-மீ-வீ ஆழ்கடல் மற்றும் செய்மதிப் பாதைகள் ஊடாக வழங்குகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா ரெலிகொம்மின் விசேட தொழில் நுட்பவியலாளர்கள் வாடிக்கையாளர்களின் தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்குத் தேவைப் படும் சரியான நவீன தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கும் நிறுவனமாகும்.

ஸ்ரீ லங்கா ரெலிகொம்மின் ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் வியாபார முயற்சிகளின் போது அதனைத் தகவல் தொழில்நுட்ப இணைப் புடன் விரிவாக்க இணைந்து தரமான அர்ப் பணிப்புடனான வலுமிக்க பங்காளியாக தொழிற்படும்.


**தலைமுடியைப் பாதுகாக்கும் உதிர்வதைத் தடுக்கும்**

**பயோட்டினெக்ஸ்-E**

**பயோட்டினெக்ஸ்-E** தலைமுடி உதிர்தல், உடைதல், நுனி வெடித்தல் ஆகியவற்றை முற்றாகத் தடுப்பதோடு சருமத்தில் சுருக்கம் விழுவதைக் குறைத்து அதனை மென்மையாகப் பாதுகாக்கும். விட்டமின் E, விட்டமின் H ஆகிய இரண்டுமே மிகச்சரியான அளவில் அடங்கியுள்ளதால் உங்கள் கேசத்திற்கும் சருமத்திற்கும் நிறைவான போஷாக்குத் தரும்.

**பயோட்டினெக்ஸ்-E** ஆரோக்கியமான கேசத்தையும் மென்மையான சருமத்தையும் பெறும் உங்கள் ஆசைக்கனவை நனவாக்க, தினமும் இரண்டு கெப்சூல் **பயோட்டினெக்ஸ்-E** எடுங்கள்.




**எச்சரிக்கை!**
போலி உற்பத்திகள் உள்ளதால் விட்டமின் E + H அடங்கிய **பயோட்டினெக்ஸ்-E** என்று கேட்டு வாங்குங்கள்

Wizards TMS

**அருமையான கூந்தல்... அழகான மேனி...**

இறக்குமதிசெய்து விநியோகிப்போர்:
ஆர்கெம்-கொழும்பு. தொலைபேசி :2470290


# செலிங்கோ காப்புறுதி சமூக சேவைகள் 'செலிங்கோ நவஜீவனம்' என்ற பெயரில்!

காப்புறுதித்துறை முன்னோடியான செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனம் கடந்த வாரம் அறி முகம் செய்துள்ள பல்வேறு சமூகத் திட்டங் களின் மூலம் கம்பனிகளின் சமூகப் பொறுப்பு பெரும் கவனத்தை ஈர்க்கவுள்ளது. சகல சமூகச் செயற்பாடுகளும் 'செலிங்கோ நவஜீவனம்' என்ற முத்திரையின்கீழ் கொண்டுவரப்படவுள்ளன. இதன்மூலம் அனைத்து சமூக நடவடிக்கைகளும் ஒருமுகப்படுத்தப்பட்டு சமூக பொறுப்புக்குப் புத்து ணர்வு வழங்கியுள்ளது.

பின்தங்கிய பிரதேசங்களில் வருடாந்தம் பல்வேறு சமூக நலத்திட்டங்களை அமுல்செய் வதன் மூலம் கணிசமான அளவு பணம் இதற் கென செலவிடப்படுகின்றது. செலிங்கோ நிறு வனம் சுயேச்சையாக இத்திட்டங்களை அமுல் செய்து வருகின்றது. தற்போது சமூகத்துக்கு வழங் கக்கூடிய பலன்களை மேலும் அதிகரிக்கச் செய் யும் வகையில் இந்த சமூக நலத்திட்டங்களில் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

இவ்வாறான சமூக நலத்திட்டங்களில் இவ் வாண்டு செலிங்கோ நிறுவனம் பெருந்தொகை பணத்தைச் செலவிடஎதிர்பார்த்துள்ளது. 'செலிங்கோ நவஜீவனம்' திட்டத்தினூடாக ஆழிப்பேரலை பாதிப்புக்குள்ளானவர்களுக்கு வீடுகளை நிர் மாணித்தல், பின்தங்கிய பகுதிகளில் பாடசாலை களை அபிவிருத்தி செய்தல், வரண்ட பிரதேசங் களில் குழாய்க் கிணறுகளை நிர்மாணித்தல், நீர் விநியோகத்திட்டங்கள் மற்றும் சுகாதார முகாம் கள் என பல்வேறு திட் டங்கள் ஒருங்கிணைக் கப்பட்டு முன்னெடுத் துச் செல்லப்படவுள் ளன.

செலிங்கோ நிறு வனம் அது பணிபுரியும் சமூகத்துக்கு ஆற்றவேண் டிய முக்கிய பணிகளில் ஒன்றாக கம்பனிகள் சமூகப் பொறுப்புத் திட் டத்தைக் கருதுகின்றது என்று செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறு வன பிரதம நிறைவேற் றுப்பணிப்பாளர் ஆர்.ரங்க நாதன் கூறினார்.

எவ்வாறாயினும் எமது முயற்சிகளின் நன்மைகள் மேலும் இலக்குவைக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். ஒரே கூரை யின் கீழ் சகல செயற் பாடுகளையும் ஒருங்கி ணைப்பதன் மூலம் நிலையான மற்றும் பரவலான சேவைகளை வழங்கமுடியும் என்று அவர் மேலும் கூறி னார்.

செலிங்கோ ஆயுள் காப்புறுதியின் சமூக பொறுப்பு மூலம் கிராமப் புறங்களிலும் முக்கியமாக கிராமியப் பாடசாலைகளுக்கும் மேலும் தண்ணீர் மற்றும் மின்சாரம் என்பன தேவைப்படும் இடங்களுக் கும் பாரியளவு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படும். நிறுவனத்தின் பாடசாலை அபிவிருத்தித் திட்டமானது கொனிக்கும்புகொல்லாவ, திஸ்ஸ மகாராம, திருகோணமலை மற்றும் உடிஸ்பத் துவ ஆகிய நான்கு கிராமிய பாடசாலைகளுக்கு அனுகூலமாக அமைந்துள்ளது.

செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனம் நொச்சியாகம, கொகுனாவ, ரணோராவ ஆகிய மூன்று கிராமங்களுக்கு ஏற்கனவே குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்துள்ளது. மேலும் தேசிய வளங்களில் இருந்து மின்சாரத் தைப் பெறாத குருநாகல் பிரதேசத்திலுள்ள கிராமமான தம்பூவவிற்கு மின்சாரம் வழங்கு வதற்கு நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தை அமுல் படுத்தியுள்ளது.

சமூகப் பொறுப்புத் திட்டத்தின் பெருமளவு நிதியானது இவ்வருடம் ஆழிப்பேரலை நிவாரணத் திட்டங்களில் முக்கியமாக வீடிழந் தோருக்கு வீடு அமைத்துக் கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. செலிங்கோ ஆயுள் காப்புறுதியானது ஆழிப்பேரலையால் பாதிக்கப் பட்டவர்களுக்கு 30 வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.